EVANGELICAL BIBLE COLLEGE OF WESTERN AUSTRALIA
சுவிஷேச வேதாகமக் கல்லூரி மேற்கு ஆஸ்திரேலியா

REVIVAL AND RENEWAL.
எழுப்புதலும் புதுப்பிக்கப்படுதலும்

BY

DR JOHN CAMERON MCEWAN
டாக்டர் ஜான் கேமரான் MC இவான்

[BOOK 113]
[புத்தக எண்: 113]

Revised 12 November 2012
திருப்பம் 12 நவம்பர் 2012

<u>இயேசுக்கிறிஸ்து யார்?</u>

பேராசிரியர் சைமன் கிரீன்லீஃப் எல்லா காலங்களுக்கும் தலைசிறந்த வழக்கறிஞராய் விளங்கிவருகிறார். அவரது "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” அநேக ஆண்டு காலங்களாய் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் எல்லாராலும்

ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலையான ஒழுங்குமுறை பரிசீலனைக்குரிய விஷயமாய் இருந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள ஒரு பல்கலைக் கலகத்தில் அவர் சட்டம் குறித்த பாடங்களைப் போதித்துக் கொண்டு இருந்த சமயத்தில், அங்குள்ள மாணவர்களில் ஒருவன் சரித்திரப் பூர்வமான ஒருவரை "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” மூலம் விவரிக்க முடியுமா என வினவினான். கிரீன்லீஃப் அம்மாணவனை நோக்கி விவரிக்க முடியும் என ஒத்துக்கொண்டவராய், அச்சரித்திரப் பூர்வமான நபர் யார் என அவனை நோக்கி வினவினார். அதற்கு அம்மாணவன் மறுமொழியாக, பரிசீலனைக்குரிய அந்நபர் இயேசுக்கிறிஸ்து என்றான். பேராசிரியர் கிரீன்லீஃப் ஒத்துக்கொண்டவராய் பரிசீலனைக்காக இயேசுக்கிறிஸ்துவை எடுத்துக்கொள்ள முன்வந்தார், அவர் தனது பரிசீலனையை முடித்துக்கொண்ட போது, அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் பேராசிரியர் கிரீன்லீஃப் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள எல்லா நீதி சார்ந்த அலுவலர் அனைவருக்கும் வெளிப்படையான ஒரு கடிதத்தை எழுதி அதில் தான் தனிப்பட்ட விதத்தில் இயேசுக்கிறிஸ்துவை கண்டுகொண்ட விதத்தை விவரித்து இருந்தார். இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த விஷயங்கள் சரித்திரப்பூர்வமாய் மிகத் துள்ளியமானவை என முழு நிச்சயத்துடன் ஆதாரங்களுடன் எழுதி அனுப்பினார். மட்டுமல்லாது இயேசுக்கிறிஸ்து மனிதரைவிட மேம்பட்டவர் என்றும், அவர் கடவுளோ அல்லது இல்லையோ என்பதை பரிசீலித்த போது, அவர் கடவுளைத் தவிர வேறு எவருமல்லர், என்பதை மிக உறுதியாய் ஆராய்ந்து கண்டுகொண்டேன். அவரைக் கடவுளாய் கண்டுகொண்ட மாத்திரத்தில் அவரை எனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டேன் என எழுதினார். ஆகவே நீதித்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு நபரும் "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” ஐ பயன்படுத்தும் பொழுது, அவரைக்குறித்து தவறாய் புரிந்துகொள்வதைத் தவிர்த்து, ஒருவேளை அவரை உங்களது சொந்த இரட்சகராய், ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் மேற்கூறிய பிரமாணத்தின் மூலம், அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்றும், சரித்திரப் பூர்வமாய் அவரைக் குறித்த விஷயங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மை என்பதையும், கண்டுகொள்ளுங்கள் என எழுதி முடித்தார்.

<u>நான் எவ்வாறு இரட்சிப்படைய முடியும்?</u>

மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருக்கும் இரட்சிப்பு என்பது கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

இரட்சிப்பு என்பது, மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், தேவனது அண்டசராசரத்தில், அனைவராலும் எடுத்துக்கொள்ளப் படக்கூடியதாயும் இருக்கிறது. பாவிகளின் இரட்சிப்பு என்பது, தேவன் பாவத்தை கண்டும் காணாமல், கடந்து செல்லும் காரியமாகாது. தேவன் பாவிகளை முற்றிலும், தமது நீதியின் அடிப்படையில், தனது தெய்வீக பரிசுத்த குணாதிசயத்தின் அடிப்படையில், இரட்சிக்கிறவராய் இருக்கிறார். இது ’கிருபை’ என அழைக்கப்படுகிறது. இது தேவனை மட்டும் சார்ந்ததாய் இருக்கிறது, இதற்கென மனிதன் எவ்வித கிரியையும் [புண்ணியக்கிரியைகள், தவக்கிரியைகள் போன்ற எதையும்] நடப்பிக்க

அவசியமில்லை. அளவிட முடியாத, பிரமாண்டமான, இவ்வண்ட சராசரத்தின் சிருஷ்டிப்பின் கிரியைவிட, தேவன் பாவிகளை இரட்சிக்கும் திட்டமானது, மிகவும் குறைவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. என்பதை நாம் உணரவேண்டிய வர்களாய் இருக்கிறோம். .

எப்படியிருப்பினும், தேவனுடைய இரட்சிப்பை ஒரு பாவி ஏற்றுக்கொள்வது என்பது வாழ்வில் மிக எளிதான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் ஐசுவரியவானாய் இருத்தல் அவசியமற்றது, ஞானமுள்ளவராகவோ, மற்றும் படிப்பறிவுள்ளவராகவோ இருத்தல் அவசியமற்றது. வயதோ அல்லது தோலின் நிறமோ இதற்கு எவ்விதமான தடையையும் கொண்டுவருவது இல்லை. தேவனுடைய மீட்பில் இருக்கும், எண்ணிமுடியாத நன்மைகளானது, மிக எளிதாய் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் அமைந்து இருக்கிறது, இப்பரந்த அண்டசராசரத்தில், ஒவ்வொருவரும் இதை அடைந்து கொள்வதற்கு விதிவிலக்கின்றி காணப்படுகின்றனர்.

நான் ஒரு கிறிஸ்துவை உடையவனாவது எவ்வாறு?

ஒரு எளிய படி எடுத்து வைப்பதை மூன்று பிரிவுகளாய் பிரிக்கலாம். முதலாவது, நான் ஒரு பாவியாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். (ரோமர் 3:23; 6:23; எசேக்கியேல் 18:4; யோவான் 5:24).

இரண்டாவதாக, பூரணமாய் இருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுடன் உறவுகொள்ளும் விருப்பத்தை உணருதல் வேண்டும், மற்றும் அவ்வாறு உறவுகொள்ள நான் பூரணமற்றவனாய் இருக்கிறேன் என்பதை உணருதல் வேண்டும், நான் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஒருவரே இரட்சகர் என்று கண்டுகொள்ள அவசியமாய் இருக்கிறது. (1 கொரி. 15:3; 1 பேதுரு 2:24; ஏசாயா 53:6; யோவான். 3:16).

மூன்றாவதாக, எனது சொந்த சுயசித்தத்தை பயன்படுத்தி, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை எனது இரட்சகராய் ஏற்றுக்கொண்டு, அவரை தனிப்பட்ட விதத்தில் அவர் எனக்காய் மரித்தார் என்று நான் விசுவாசித்து, எனது தனிப்பட்ட வாழ்வின் மூலமாய், அவரை, என் வாழ்விற்கு அவசியமான, தனிப்பட்ட ஒரு நபராக ஏற்றுக்கொள்ளுதல், அவசியமான ஒன்றாய் இருக்கிறது. (யோவான் 1:12; 3:36; அப். 16:31; 4:12).

இரட்சிப்பின் விளைவுகள்:

இதன் விளைவுகள் என்பது நம்புவதற்கறிய அற்புதமானதாய் இருக்கிறது:

- எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அகற்றப்பட்டன. (யோவான் 1:29),
- நான் தற்போது, நித்திய ஜீவனைப் பெற்று இருக்கிறேன் (1 யோவான் 5:11,12),
- நான் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாய் மாறி இருக்கிறேன் (2 கொரி. 5:17),
- பரிசுத்த ஆவியானவர், எனது சரீரத்தை தமது வாசஸ்தலமாய் அமைத்துக் கொண்டுள்ளார் (1 கொரி. 6:19),

• நான் ஒருபோதும் அழிந்து போவதில்லை (யோவான் 10:28-30).

இவ்வுண்மைகள் வாழ்வின் மிகப்பெரிய பரிமாற்றங்களாய் இருக்கின்றன. இதுவே எல்லா மக்களுக்குரிய இலக்காய் இருக்கிறது; இதுவே நமது வாழ்வின் மேலான நோக்கமாய் இருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றச் செய்யும் இவ்வெளிய போதனைகளால் உற்சாகப்படுத்தி, தேவனுடைய பரிசுத்த குடும்பத்தில் மறுபடி பிறந்து, நித்திய வாழ்வையடைய உற்சாகப்படுத்துங்கள். (மத். 11:28; யோவான் 1:12; அப். 4:12; 16:31).

© **Evangelical Bible College of Western Australia 2004** - PO Box 163 Armadale Western Australia 6992

Many other Christian resources are available freely from our internet web site: www.ebcwa.org.au and www.newstartbibleministries.org.au for weekly messages.

For further information contact Dr Peter Moses at PO Box 163 Armadale WA 6992 or email Brian Huggett brianhuggett@bigpond.com.au

We encourage you to freely copy and distribute these materials to your Pastor and friends. You only, need written permission from EBCWA if you intend using the materials in publications for resale. We encourage wide distribution freely!

எழுப்புதலும் மற்றும் புதிப்பிக்கப்படுதலும் -- இது எப்பொழுதும் அத்தியாவசியமான சபையின் தேவையாய் இருக்கிறது

தேவனது ஜனங்கள் புதுப்பிக்கப்பட்டு மறு சீரடையும் போது, தேவனது எழுப்புதலின் வல்லமையானது கட்டவிழ்த்துவிடப்படுகிறதாய் இருக்கிறது. சரித்திரப் பூர்வமாய் இப்படிப்பட்ட ’அசைவுகள்’ ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் மாற்றங்களை ஏற்படுத்தி நிறைவு பெற்றதாய் விளங்குகிறது, காரணம், தேவனது இறுதியான நோக்கம் என்ன என்பதை குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமையுள்ளவர்களாய் இருந்தனர். தேவனது மெய்யான திட்டத்தின்படி, மனிதனும், உலகமும் திரும்பவும் முன்சீர் அடைய வேண்டியதாய் இருக்கிறது.

"எழுப்புதல் குறித்துக் கற்றுக்கொள்ளுதல்" வரவிருக்கும் எழுப்புதலுக்குரிய ஆரம்ப அடையாளங்களைப் பகுத்தறிந்து நிதானிக்கச் செய்கிறதாய் இருக்கிறது. மட்டுமின்றி நம்மை அதற்கு ஆயப்படுத்துகிறதாய் இருக்கிறது. இதற்குப் பின் என்ன வரவிருக்கிறது என அறிந்துகொண்டு, தேவனையும், சரித்திரத்தையும் நாம்

முழுமையாய் அறிந்து கொள்ளாது, இடறுகுழியில் விழுவதைத் தவிர்க்கிறதாய் இருந்து, USA இறையியல் நிறுவனத்தின் பாடத்திட்ட கருத்திற்கு நேராய் வழி நடத்துகிறதாய் இருக்கிறது.

இப்பாடங்களை நாம் கற்றுக்கொள்ளும் போது, அவைகளை வேதாகம வசன வெளிச்சத்தில் நாம் கற்றுக்கொள்ளவிருக்கிறோம். அவைகள் 'போல்ட்' எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும். இவ்வாறு 'போல்ட்' எழுத்துக்களில் குறிப்படப்பட்டிருக்கும் வேதபகுதியை கண்டிப்பாக வாசித்து அறிந்து கொள்ளுதல் அவசியம். இதில் உள்ள அநேகக் குறிப்புகள், உபதேச பாடங்கள் அடங்கிய வேதாகமத் தலைப்புகள் புத்தகத்திலிருந்து (BTB) ஒப்பிட்டு காட்டப்பட்டுள்ளன. இப்பாடத்தில் அவைகள் உள்ளடக்கம் செய்யப்பட்டுள்ளபடியால், அவைகளை மிகவும் கவனமாய் வாசிப்பது மிகவும் அவசியம். ஒவ்வொரு வசனத்தையும் கவனமாய் வேதத்திலிருந்து ஜெபத்துடன் வாசித்தல் மிகவும் அவசியம்.

இப்பாடங்களை குழுவாய் கற்றுக்கொள்ள இருப்பீர்களானால், ஒவ்வொரு வசனங்களையும் கவனமாய் வாசித்து நிறுத்திவிட்டு, பின்னர் ஜெபித்து பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் ஒவ்வொரு கருத்துக்களையும் கொழுந்துவிட்டு எரியச்செய்யுமாறு செய்யுங்கள், இதை உங்கள் குழுவானது எழுப்புதல் அடைந்து புதுப்பிக்கப்பட இடமளியுங்கள். குறிப்பிட்ட கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் போது, பரிசுத்த ஆவியானவரின் அசைவைக் காண்பீர்களானால், பாடல்களைப் பாடத்துவங்குங்கள் அல்லது ஜெபிக்கத் தலைப்படுங்கள் அல்லது ஆராதனை செய்யுங்கள்.

இப்பாடம் ஏதோ கற்றுக்கொள்ளும் பாடமல்ல, யுகா யுகங்களாய் பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலைக் குறித்துக் கற்றுக்கொள்ளும் பாடமாய் இருக்கிறது. ஆகையால், ஆவியானவர்தாமே வல்லமையாய் உங்கள் மூலமாயும் உங்கள் சபையிலும் அசைவாட இடங்கொடுங்கள். இப்பாடப்புத்தக வாயிலாக, மிகவும் நேர்த்தியான விளைவுகள் உண்டாவது எங்கள் கல்லூரியின் வாஞ்சையாய் இருக்கிறது. -- நாங்கள் வாஞ்சிப்பதெல்லாம் அனுதினமும், அனைத்து பரிசுத்தவான்களும், பரிசுத்த ஆவியானவரால், உயிர்மீட்சியடையவும், புதுப்பிக்கப்படவும் வேண்டுமென்பதே! மரித்து, சுயநலவாதிகளாய் ஜீவிக்கும் (மாம்சீக விசுவாசிகள்) சபை விசுவாசிகள் அனைவரும், உயிர்மீட்சியடையவும், புதுப்பிக்கப்பட்டு அவர்களுக்களிக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதும் எங்களது வாஞ்சையும் விருப்பமுமாய் இருக்கிறது.

இப்பாடத்தை நாம் துவங்க இருக்கிறபடியால், மேற்சொன்ன கருத்துக்களின் முக்கியத்துவத்தை நினைவில் கொண்டு, கர்த்தரின் நோக்கத்தை அறிந்தவர்களாய், அனுதினமும் *<u>பரிசுத்தாவியானவரின் வல்லமையில் நிறைந்து, நடந்து கொண்டு</u>* ஒவ்வொரு நாளும் தேவனது நோக்கங்களின் மீது கண்ணோக்கமாய் இருந்து, நமது வாழ்விற்கான தேவ நோக்கம் இன்னதென அறிந்து, அதை நிறைவேற்றத் தலைப்படுதல் அவசியம். நாம் பூமியில் இருப்பதற்கான நோக்கம், தன்னைத்தானே முற்றிலுமாய் நமக்காக அர்ப்பணித்த அவரை ஆராதிப்பதும், சேவிப்பதுமாய் இருக்கிறது. தேவனது நோக்கமானது, நாம் ஒவ்வொருநாளும், ஆவியானவரின் வல்லமையால் புதுப்பிக்கப்பட்டு, ஒவ்வொரு நாளுக்குமுரிய குறிப்பிட்ட நமது

பணியை செய்து நிறைவேற்ற ஆவியானவரால் நடத்தப்படுதல் அவசியமாபதாய் இருக்கிறது. இது வாழ்வில் இடம்பெறாத பட்சத்தில், ஸ்தல சபையில் உள்ள சபை அங்கத்தினர் அவர்களது விசுவாசத்தில் குளிர்ந்து போய் அல்லது வெதுவெதுப்பானவர்களாய் விளங்குவர். இழந்து போனோரை இரட்சிக்கும் சபயின் ஊழியமானது இழக்கப்பட்டுப் போனதாய் இருக்கும், சபைக்கான தேவனது திட்டத்தில் தடுமாற்றம் உண்டாகும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் உண்டாகும் எழுப்புதல், அந்த ஸ்தலத்தில் உள்ள சபை மக்களது வாழ்வில் இல்லையானால், அது தெய்வீக சிட்சைக்குள்ளாய் கடந்து செல்லும், மற்றும் அது இருக்கிற இடம் தெரியாது போவதற்கும் வழியுண்டாகும்.

வெளிப்படுத்தின விஷேசத்தில் யோவான் மூலம் சபைகளுக்கு அளிக்கப்பட்ட கர்த்தரது செய்தியாய் இது இருக்கிறது. (**வெளிப்படுத்தல் அதிகாராம்** 2-3). இவ்விரு அதிகாரங்களையும் வாசிக்கும் போது, அமைதியுடன் இருந்து, கர்த்தர் சபைகளுக்கு அளிக்கும் சவால்களை இனங்கண்டு கொள்வோமாக. இவைகளில் ஒவ்வொரு சபையும் எவ்விதமாய் சரிசெய்யப்படுகிறது அல்லது ஊக்குவிக்கப்படுகிறது, எல்லா சபைகளும் எவ்வாறு ஆவிக்குரிய உயிர்மீட்சியடைந்து முழுமையான ஆவிக்குரிய ஜீவனை அடையும்படி வற்புறுத்தப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். இந்த ஏழு சபைகளும் அவைகளுக்குரிய செய்திகளும், எல்லா சரித்திரக்காலத்திற்குமுரியவைகளை நமக்கு சுருங்கக்கூறுகிறதாய் இருக்கிறது. அவர்களது பிரச்சனையானது, சரித்திர காலமுழுவதிலும், நேரிட்டதாய் விளங்குகிறது, மற்றும் அதே போன்ற பிரச்சனைகள் நம்மைச் சுற்றிலும் நிகழ்ந்து வருகிறதாய் இருக்கிறது, நீங்கள் இருக்கிற இடத்திலும், இப்படிப்பட்ட பிரச்சனைகள் மிகுந்த சபைகள் காணப்படுகின்றன, மற்றும் எழுப்புதலுக்கு அவசியமான அதே ஆவிக்குரிய தேவைகள் இப்படிப்படிப்பட்ட சபைகளுக்கு அவசியமாய் காணப்படுகிறதாய் இருக்கிறது.

நாம் கர்த்தரை ஆராதித்து, வளர்ந்து பெருகி மற்றும் அவரை சேவித்து வருகிறவர்களாய் இருக்கலாம், அல்லது நாம் கீழ்ப்படியாமையினால், பின்வாங்கினவர்களாய், தேவனது திட்டத்தை நிறைவேற்றாது, அவரது திட்டத்திலிருந்து அகற்றப்படும் அபாயத்தில் இருக்கிறவர்களாயும் இருக்கலாம். காலாகாலமாய் அநேகத் தனிநபருக்கும், சபைகளுக்கும் இது போன்ற காரியங்கள் நிகழ்ந்துள்ளன. சபை சரித்திரம் என்பது, தேவன் காலா காலமாய் எப்படிப்பட்ட கிரியைகளை செய்து வருகிறார் என்றும், கீழ்ப்படியாதோருக்கு அவர் அளித்துள்ள தண்டனைக் குறித்தும் விவரிக்கிறதாய் இருக்கிறது.

உலகில் அநேக இடங்களில், கிறிஸ்தவமானது, மலர்ந்து விருத்தியடைந்த பின்னர், அழிவடையத் துவங்கினதாய்க் காணப்படுகின்றன, இதைப் போன்ற காரணங்கள் எல்லா மக்களிடையே உண்மையானதாய் விளங்கி வருகிறது, மக்கள் குளிர்ந்து போய், தங்கள் வாழ்வில் விசுவாத்தைக் கடைபிடிக்க தவறுகிறவர்களாய் காணப்படுகின்றனர். மட்டுமின்றி சுவிஷேச விஷயங்களில் தவறினவர்களாய் சபையானது மரித்துப்போய்க் காணப்படுகிறதாய் விளங்கிவருகின்றன. இது தனிப்பட்ட ஆவிக்குரிய யுத்தம் குறித்த தலைப்பு சம்பந்தமாய் இருக்கிறது, நாம் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துதல், மற்றும் அவித்துப்போடுதல் போன்ற

காரியங்கள் குறித்து எச்சரிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம். **எபேசியர் 4:30, 1 தெசலோனிக்கேயர் 5:19.**

இப்பாடத்தினை நாம் கற்றுக்கொள்ள துவங்கும்போது, "மரித்த நிலையில் உள்ள சபைக்கான முதலுதவி" என்றை அழைக்கப்படுகிற பாடத்திற்குள் கடந்து செல்கிறவர்களாய் இருக்கிறோம். ஆவியானவரின் வல்லமையை முன்னிட்டு நாம் நடவாதபட்சத்தில், சபையானது வீழ்ச்சியுற்று, மரித்துப்போகிறதாய் இருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம், ஒரு போதும் சாட்சியற்ற நிலையில் இருந்த நமது வாழ்வில், பரிசுத்த ஆவியானவரின் அசைவால், சபையானது உயிர்மீட்சியடைந்து, நாம் நிறைவேற்றத் தவறியவற்றிலிருந்து, திரும்பத் துவங்குகிறவர்களாய் இருக்கிறோம். **மத்தேயு 28:18-20.**

மத்தேயு 7:13-14 ல் உள்ள இயேசுக்கிறிஸ்துவின் வார்த்தைகள் இப்பாடத்தினை துவங்கும்போது, நமக்கு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய், பிரதிபலித்துக் காட்டுகிறவைகளாய் இருக்கின்றன. எல்லா மனுக்குலம் முன்பாக, இரு வழிகள் காணப்படுகின்றன. இதில் தேவனது வழி, நமக்கு மாற்றுப்பாதையாய் அமைந்து காணப்படுகின்றன. முதலாவதாக, மிகப்பெரிய பிரிவுகளாய் விளங்குவது, இரட்சிப்படைந்தோர், இரட்சிப்படையாதோர், விசுவாசிகளாகிய நாம், நமது வாழ்விற்கான தேவனது திட்டத்திலிருந்து விழுந்து போனவர்களாய் காணப்பட்டு வருகிறோம். இரண்டாவது பிரிவானது பவுல் குறிப்பிடுகிறதாய் இருக்கிறது, அது ஆவிக்குரிய விசுவாசிகள் மற்றும் மாம்சீகத்துக்குரிய விசுவாசிகள், **1 கொரிந்தியர் 3:1-4**. மாம்சீகமாய் வாழ்வதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இது அறிக்கை செய்யாதபடி, பாவத்தால் ஆதிக்கம் செய்யப்பட்டு வாழும் கொரிந்தியரைக் குறிக்கிறதாய் இருக்கிறது.

தேவ தூதர்களின் முறண்பாடு என்பது, சாத்தானின் யுத்தமாய் இருந்து, இழந்து போகப்பட்டுள்ள ஆத்துமாக்களைக் குறித்ததாய் இருக்கிறது. இது இழந்து போனோர் இயேசுக் கிறிஸ்துவை அறிகிற அறிவை தடை செய்வதை மையமாய் கொண்டுள்ளதாயும் இருக்கிறது. கர்த்தருக்கு இருக்கும் திட்டத்தைப் போன்றே சாத்தானுக்கும், இரட்சிப்படைந்தோர், இரட்சிப்படையாதோர் இருதரத்தாரையும் குறித்த திட்டம் இருந்து வருகிறது. இரட்சிப்படையாதோரைக் குறித்த சாத்தானின் திட்டம், அவர்கள் மனக்கண்களை, சத்தியத்தை அறியவிடாது குருடாக்கி இருளில் வைப்பது, மற்றும் அவர்களது பாவத்தைக் குறித்த சத்தியத்தை அறியவிடாது தடை செய்வது, இரட்சகரை குறித்த சத்தியத்தை அறியவிடாது தடை செய்வது போன்றதாகும், இவைகள் அனைத்தையும் பரிசுத்த ஆவியானவர் தகர்த்தெறிந்து தடைகள் யாவையும் அகற்றிப்போடுகிறவராய் இருக்கிறார். **யோவான் 16:8-11, எபேசியர் 2:1-10.**

இரட்சிப்படைந்தோரைக் குறித்த சாத்தானின் திட்டம் என்னவெனில், கர்த்தருடன் உள்ள ஐக்கியத்திலிருந்து அவர்களைத் திசை திருப்புதல், பணம், அதிகாரம், பதவி, வேலை, அல்லது காரியங்கள், போன்றவைகள் மூலம் திசை திருப்பி வருகிறான் மட்டுமின்றி, முன்னணியில் உள்ள அனைவரையும் தாக்கும்படி எத்தனம் செய்கிறான், பாவத்தினை செய்யுமாறு சோதனைகள் மூலம் நம்மிடம் தாக்குதல்களை நடத்துகிறான். பரிசுத்த ஆவியானவரை அவித்துப்போடத்தக்கதாய்,

நம்மை குளிர்ந்து போக, மாம்சீகத்திற்குரியவர்களாய் வாழ, நியாயப்பிரமாணங்களை அனுசரித்து வாழும் மதத்தினைச் சார்ந்து வாழ ஊக்கமளிக்கிறவனாய் இருக்கிறான்.

சாத்தான் விசுவாசிகளை ஆவிக்குரிய ரீதியில் நடவாதபடி செய்வானேயானால், அவன் அவர்களை தோற்கடிக்கிறவனாய் இருக்கிறான். பரிசுத்த ஆவியானவர் சாத்தானைவிட வல்லமையில் பெரியவராய் இருக்கிறார். தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! **1 யோவான் 4:4**. இவ்வேத பகுதியினை ஒவ்வொரு நாளும், உங்கள் வாழ்வில் மேற்கோள் காட்டி வாழப்பிரயாசப்படுங்கள். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், சத்துருவின் சகல அதிகாரத்தையும் எதிர்த்து வாழும்படி நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இதை நாம் செய்யும்போது, நம் வாழ்வில் பாவத்துடன் ஈடுபட்டு, மனந்திரும்புதல் மூலம், (பாவத்தை அறிக்கை செய்வதன் மூலம்), ஆராதனையில் கர்த்தருக்கு அருகில் சேர்க்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம், ஜீவனுள்ள தேவனது வசனத்தால் அனுதினமும் போஷிக்கப்பட்டு, அவைகளைக் கைக்கொள்வதினால், நமது வாழ்நாளில் நாம் கட்டி எழுப்பப்பட்டு, வருகிறவர்களாய் இருக்கிறோம்.

அனுதினமும் ஆவிக்குரிய புதிதாக்குதல், அல்லது ஆவிக்குரிய நிலையில் எழுப்புதல் அடைவது என்பது, ஒருவிசுவாசியின் வாழ்வில், அவர்கள் பாவத்தன்மையிலிருந்து, பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெறக்கூடிய, ஆவிக்குரிய விடுதலையாய் இருக்கிறது. இப்பூமியில் நமது ஊழியத்தை நிறைவேற்ற, பரிசுத்த ஆவியானவர், நமது உள்ளத்தில் வாசம் செய்து, அளிக்கும் தேவ பெலத்தை முழுவதுமாய் சார்ந்து இருப்பது அவசியமாய் இருக்கிறது. கடந்த காலத்தில் நிகழ்ந்துள்ள பெரிய எழுப்புதல் குறித்து, கற்றுக்கொள்ள இருக்கிறோம், ஆனால் வேதாகமச் செய்தியானது மிகவும் தெளிவாக அளிக்கப்பட்டுள்ளது; பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மற்றும் வழிநடத்துதலைச் சார்ந்து இருக்குமாறு நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நாம் எந்த ஒரு தனிநபரையோ அல்லது சரித்திர சூழல்களையோ பிரதிபலித்து வாழுதல் கூடாது. தேவன் நாம் எழுப்புதல் அடைய "நாம் இருக்கிறபிரகாரமாகவே" அவரிடம் வருமாறு நம்மை அழைக்கிறவராய் இருக்கிறார்.

இவ்வித அடிப்படையான காரியமானது, தாவீது இராஜா, ஏத்தியனாகிய உரியாவின் மனைவி பத்சேபாளிடத்தில் பாவம் செய்த நிகழ்வு அற்புதமான விதத்தில் விவரிக்கப்படுகிறதாய் இருக்கிறது. **சங்கீதம் 51:1-10**. தாவீது தேவனுடன் தனது உறவை சரிசெய்து கொண்டார், இதினிமித்தம் தனது ஆவிக்குரிய வாழ்க்கை, மற்றும் தனது சேவை போன்றவற்றை திரும்பப் பெற்றுக்கொண்டதோடு, தேசத்திலும், தனது சொந்த வாழ்விலும், எழுப்புதலைக் கண்டு கொண்டார். எழுப்புதலைத் தேவன்; முதலாவது தெரிந்து கொள்வதில்லை, என்பதை நினைவில் கொள்க. தேவன் நாம் அனுதினமும், தமக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கு முன்னுரிமை அளிக்கிறவராய் இருக்கிறார். தேவன் இது குறித்து தாவீதுக்கு பாராமுகமாய் இருந்திருப்பாரேயானால், தாவீது இவ்வாறு ஜெபிக்க வேண்டிய அவசியமே இல்லாதிருந்திருக்கும், தாவீதுக்கு தேவன் நியமதித்திருந்த வழியை விட்டு வழிவிலகி ஜீவித்து, மாம்சீகப் பிரகாரமாய் நடந்து கொண்டது இதற்கு ஆதாரமாய்

விளங்குகிறது, இங்கு தாவீது பாவ அறிக்கை செய்து மனந்திரும்புதல் மூலம், அவர் திரும்ப உயிர்ப்பிக்கப்பட்டதை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம்.

அநேக சந்தர்ப்பங்களில் பெரிதான தீமைகள் மன்னிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம், விசுவாசிகள் கொடிய தீமைகளில் இருந்து திரும்ப மீட்டுக்கொள்ளப்பட்டதையும் நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். ஜனங்கள் இன்னும் உயிரோடிருக்கும் வரைக்கும் அவர்களைக் குறித்து நம்பிக்கை உண்டாயிருக்கிறது. நாம் அற்புதமான, இரக்கமும், கிருபையுள்ள தேவனை உடையவர்களாய் இருக்கிறோம். எசேக்கியேலின் நாட்களில், எழுப்புதலுக்கு மைய உதாரணமாய் இருப்பதைக் காண்கிறவர்களாய் இருக்கிறோம், அக்காலங்களில் வாழ்ந்த மக்கள் கொடிய பாவத்திலிருந்து இழுத்துக்கொள்ளப்பட்டனர். எரேமியா மற்றும் எசேக்கியேல் போன்றோரின் உண்மையான ஊழியத்தால் இது சாத்தியமாயிற்று. கலகக்காரரான ஜனங்களுக்கு, தேவனது வாக்குத்தத்தமானது, நேர்மறையாகவும், நம்பிக்கைக்குரியதாயும் இருக்கிறது.

எசேக்கியேல் 11:19 - "...அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்."

இப்படிப்பட்ட ஜனங்கள் அவர்களது பாவங்களைக் குறித்து ஒருபோதும் உணர்வில்லாதவர்களாய் இருந்தனர், அவர்களது பொல்லாப்புகளை குறித்த கர்த்தரது வேதனையை உணராதிருந்தனர், அவர்களுக்கு ஆவிக்குரிய ரீதியில் "இருதய மாற்று சிகிச்சையானது" அவசியமாய் இருந்தது. கர்த்தர்தாமே இதை அவர்களுக்கு அளிக்கிறவராய் இருந்தார், பல ஆண்டுகளாய் அவர்கள் கட்டி எழுப்பிவந்த, பாவ பழக்க தோஷங்களின் அமைப்பை சுட்டெரித்து, தேவன்தாமே அவர்களுக்கு சதையான இருதயத்தை கொடுப்பதாய் இருந்தது. இவ்வாறு செய்வதற்கு ஐம்பது முதல் எழுபது ஆண்டுகள் எடுத்துக்கொண்டது, ஜனங்கள் தங்களது பாவங்களை கைவிட்டு, புறஜாதிய தீமையான நடத்தைகளில் இருந்து திரும்பவும், அடிமைத்தனத்தில் இருந்த தேவ ஜனங்கள், செருபாபேல், யோசுவா, எஸ்றா, மற்றும் நெகேமியா போன்றோரின் தலைமைத்துவத்தில் எருசலேம் திரும்பி பரிசுத்த இருதயத்துடன், புறஜாதிய பழக்கவழக்கத்திலிருந்து விடுபட்டு, அதை திரும்பக் கட்டி எழுப்புகிறவர்களாய் தலைப்பட்டனர். விக்கிர ஆராதனை என்பது அதன் பின்னர் இஸ்ரவேலில் ஒரு பிரச்சனையாய் எழவில்லை.

ஆவிக்குரிய எழுப்புதல் என்பது, ஜனங்களது பகுதியில், ஆவிக்குரிய சிட்சையை ஏற்றுக்கொள்வதன் விளைவாய் இருக்கிறது, இக்காலங்களில் ஆவிக்குரிய வாழ்க்கைக்குரிய கர்த்தரின் போதனைகளை அவர்கள் மதித்து ஏற்றுக்கொள்வதையும் உள்ளடக்கியுள்ளது. அவர்கள் உருமாற்றமடைவது என்பது, பரிசுத்த ஆவியானவரின் கிரியையால் மட்டுமே சாத்தியமாகிறதாய் இருக்கிறது. இதுவே பாவத்திலிருந்தும், தீமையிலிருந்தும் மனந்திருந்தி ஆவிக்குரிய வாழ்விற்குள் கடந்து வரும், எல்லா ஜனங்களுக்கும், கர்த்தரது வாக்குத்தத்தமாய் இருக்கிறது, **ஏசாயா 1:21-27, 30:18-21, எரேமியா 16:15-21, ஓசியா 14:1-9, மீகா 7:5-8, கொலோசெயர் 3:1-11, தீத்து 2:11-14.**

இருதயம் புதிப்பிக்கப்படுவது குறித்த தேவனது வாக்குத்தத்தமானது, ஐக்கியத்தின் நோக்கமாயிருந்து, தேவனது பரிபூரண திட்டம் மற்றும் அவரது நோக்கத்திற்கு இசைய இருக்கிறதாய் இருக்கிறது. இதுவே வேதவசனங்கள் மூலமாய் செயல்படும் ஒரே காரியமாய் விளங்குகிறது, மனந்திரும்புதல், புதிப்பித்தலுக்குரிய கதவை திறப்பதாய் இருக்கிறது. எழுப்புதல் என்பது, மனந்திரும்புதல் மூலம் வருகிறதாய் இருக்கிறது, தேவனுக்கு எதிரான கலகக் குணமானது, வெளிப்படுத்தப்பட்ட தேவனது வார்த்தைக்கு இணங்கி அனுதினமும் அதற்குக் கீழ்ப்படிவதன் மூலம் நிகழுவதாய் இருக்கிறது. யோவான் 17ம் அதிகாரத்தில், தேவனது நோக்கம் மற்றும் அவர் மனுக்குலத்துடன் ஈடுபடுவது குறித்து அனைத்து காரியங்களும் இந்த ஜெபத்தில் முழுமையாய் காணப்படுகிறதாய் இருக்கிறது; நாம் அனைவரும் ஆவிக்குரிய நிலையில் "உயிர்ப்பிக்கப்படுவது" குறித்து, இங்கு கூறப்படுகிறது, தேவனது வல்லமை, அவரது திட்டம், மற்றும் அவரது நோக்கம் போன்றவற்றை இனங்கண்டு கொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்ள வழிநடத்துகிறதாய் இருக்கிறது. **உபாகமம் 30:1-6, எரேமியா 32:39-41, செப்பனியா 3:7-9, யோவான் 17:20-26, எபேசியர் 4:1-6, பிலிப்பியர் 2:1-7**.

தாவீது உரியா மற்றும் பத்சேபாளுடன் பாவவிஷயத்தில் போராடியதன் அவசியத்தை, சங்கீதம் 51:1-10 ல் நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். பவுல் இதைப் போன்றதன் அவசியத்தை, அனுதினமும் சந்தித்து, ஆவிக்குரிய உயிர்மீட்சியையும், மற்றும் எழுப்புதலையும் தனது பழைய பாவத்தன்மைக்கு எதிராய் சந்தித்தவராய் இருக்கிறார். **ரோமர் 7:14-8:2**. எழுப்புதல் என்பது பரிசுத்த ஆவியானவரின் கிரியையாய் இருக்கிறது, அவர் சுத்திகரிக்கப்பட்ட பாத்திரங்களைப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார், இதினிமித்தம் எழுப்புதல் என்பது, பாவம் மற்றும் தீமையுடன் ஈடுபட்டு, ஜனங்கள் அவைகளை, அவர்களது வாழ்வில் எதிர்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். **யாக்கோபு 4:7-10, 1 பேதுரு 5:5-9**.

எசேக்கியேல் காலத்தில் வாழ்ந்த ஜனங்கள், இன்றைய நாளில் வாழ்ந்துவரும் நம்மைப் போன்றே அவர்களும் வாழ்ந்து வந்தனர். பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்று, அதன் வல்லமையால் நடத்தப்பட வேண்டிய அவசியம் இருந்து வந்தது, நமக்குள் வாசமாயிருக்கும் தேவனது வல்லமையானது, பாவம் மற்றும் மரணம் இவைகளின் வல்லமையிலிருந்து நம்மை விடுவிக்கிறதாய் இருக்கிறது, இருப்பினும் அவைகளின் செயல் விளவுகள், நமது பழைய பாவ சுபாவத்தின் மூலம் நம்மில் தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரது ஜெயம் என்பது, குறிப்பிட்ட பூகோள எல்லைக்குள் வாசம்பண்ணும், பரிசுத்தவான்களின் வாழ்வில் நிகழுவதே, "எழுப்புதல்" என அழைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட எழுப்புதல், சரித்திரத்தில் இடம் பெற்று வந்ததாக நாம் காண்கிறோம். அவைகள் நிகழும்போது, தனிப்பட்டவர்கள் மற்றும் தேசீய ஆசீர்வாதங்களுக்குரிய கதவை திறக்கிறவர்களாய் இருக்கின்றனர். கர்த்தர் மீதுள்ள அன்பினிமித்தம், ஜெபத்துடன், நமது இருதயத்தில் எழுப்புதல் உண்டாக, நமது திருமண வாழ்வில் எழுப்புதல் உண்டாக, நமது குடும்பத்தில் எழுப்புதல் உண்டாக, நமது சபைகளில் எழுப்புதல் உண்டாக, மற்றும் நமது தேசத்தில் எழுப்புதல் உண்டாக, இப்பாடத்தினை கற்றுக்கொள்ள முயலுவோமாக.

எழுப்புதல் குறித்து நமது பாடத்திற்கான பொருளடக்கம்

அதிகாரம் 1 பரிசுத்த வேதாகமக் கண்ணோட்டத்தில், பாவம், இரட்சிப்பு, மற்றும் ஆவியானவர் குறித்த அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள்:

நமது இருதயத்தையும் மற்றும் சிந்தனையையும், வேதாகம எழுப்புதலுக்காக ஊற்றி ஆயத்தம் செய்தலுக்கான -- ஏழு அடைப்படை பிரதிபலிப்புகள்.

அதிகாரம் 2 அதிக பட்ச அழுத்தத்திற்குக் கீழாக இருக்கும் போது, ஏற்படும் எழுப்புதல் குறித்த, ஆய்வுபாடம் -- எசேக்கியேல் தீர்க்கதரிசியின், கிரியையும், மற்றும் அவரது பண்புகளும்.

அதிகாரம் 3 வேதாக எழுப்புதல்கள் -- வேதாகமத்தில் நிகழ்ந்துள்ள இருப்பத்து நான்கு எழுப்புதலைக் குறித்த கண்ணோட்டம்.

அதிகாரம் 4. சரித்திரத்தில் நிகழ்ந்த எழுப்புதல்களைக் குறித்த சிறப்பான பாடங்கள் -- எழுப்புதல் குறித்த மேலோட்டம் -- பதினாறாம் நூற்றாண்டு துவங்கி, இருபதாம் நூற்றாண்டு வரை, "பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதல் அலைகளைக்" காணுதல்.

அதிகாரம் 5 நாம் எங்கே இருக்கிறோம், மற்றும் நமது ஸ்தல சபை, நமது தேசம் எங்கே இருக்கிறது? இன்றைய அளவிலான சபைத் தலைவர்கள் அனைவருக்கும், நமது தேசத்தின் தேவைகள் என்ன என்பதை அறிந்து, நமது இருதயத்தையும், வாழ்க்கையையும் ஆயத்தப்படுத்துவதற்கான சவால்கள். -- செயல்படுத்துவதற்கான பனிரெண்டு அடிப்படைக் கருத்துக்கள்.

அதிகாரம் 1 - சில அடிப்படைக் கருத்துக்களும் மற்றும் விளக்கங்களும்.

பாவம், இரட்சிப்பு மற்றும் ஆவியானவர் குறித்து வேதாகமக் கண்ணோட்டத்தினை அடைதல்.

நாம் கற்றுக்கொள்வதற்கு அஸ்திபாரம் இடும் வண்ணம், வேதாகமத்தின் இறையியல் கருத்துக்கள் குறித்த திறவுகோள்கள் (வேதாகம உபதேசங்கள்) போன்றவற்றை எழுப்புதலுக்கான உதாரணங்கள் மூலம் காண்பதற்கு முன்னர், புரிந்து கொள்ளவேண்டியது அவசியமானதாய் இருக்கிறது. தேவன் கனப்படுத்தும் வழியில், மனஉணர்வுடன் வாழ்வதற்கு, நமது தன்மைகுறித்து நாம் புரிந்து கொள்ளுதல் அவசியமாய் இருக்கிறது, பாவத்தைக் குறித்த நமது மனப்பான்மை, தேவனது தன்மை மற்றும் அவரது குணாதிசயம், மற்றும் தேவன் நமது பாவத்திற்காக அளிக்கும் பரிகாரம், போன்றவற்றைக் குறித்து சரியாய் புரிந்துகொள்ளுதல் அவசியமானதாய் இருக்கிறது. எதிராளியின் "சதி ஆலோசனைகள்" குறித்து, அறியாமை உள்ளவர்களாய் இருத்தல் கண்டிப்பாய் தவிர்க்கப்படுதல் வேண்டும். **2 கொரிந்தியர் 2:9-11**, இவைகள் நமது நோக்கம், மற்றும் தேவனோடுள்ள நமது நடக்கை போன்றவற்றை திசைதிருப்புவதாய் இருக்கிறது.

நீங்கள் கொரிந்தியருக்கு எழுதப்பட்ட வேதபகுதியினை வாசிக்கும் போது, இப்படிப்பட்ட கேள்வியினை உங்களுக்குத்தானே கேட்டுக்கொள்ளுங்கள், எவ்வகையான சாத்தானின் தந்திரங்கள் குறித்து பவுல் இங்கு குறிப்பிடுகிறவராய் இருக்கிறார்? காலத்தாலும், சமயத்தாலும், அவனது உபாய தந்திரங்களை மாற்றி அமைத்தல் அரிது என்பதை சபை சரித்திரமானது வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது! கர்த்த்ருக்குப் பயனுள்ள தேவ ஊழியராய் இருப்பதற்கு, மீட்பின் பணியில் நமது கடமைகளை சிறப்பாய் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். நம்மை குறித்து நாம் சரியாய் அறிந்து கொள்ளுதல் வேண்டும், நமது சிருஷ்டிகர்த்தரும், இரட்சகருமாகிய தேவனை சரியாய் அறிந்து கொள்ளுதல் வேண்டும். இப்பூமியின் மீது நமது பணி என்ன என்பதை சரியாய் அறிந்து கொள்ளுதல் வேண்டும், மற்றும் நமது எதிராளியைக் குறித்தும், அவனது உபாயதந்திரங்களைக் குறித்தும், நம்மை அவன் திசை திருப்ப அவன் எடுக்கும் பிரயாசங்கள் என்னவென்றும் சரியாய் அறிந்திருத்தல் வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கிரமப்படுத்தப்பட்டுள்ள திறவுகோள் உபதேசங்களை இனங்கண்டுகொண்டு அதை முறையாய் கற்றுக்கொள்வோமாக. ஒவ்வொரு உபதேச கருத்துக்களில் கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை, வாசித்து, அதைப் பிரதிபலித்துக்காட்டுதல் அவசியம். ஒவ்வொரு வேத வசனங்களையும் வாசிக்கும் போது, உங்களை சரிசெய்யும்படி பரிசுத்த வேதவசனங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள், உங்களது தவறான அபிப்பிராயங்களை, வாசித்த வேதவசனங்களைக் கொண்டு சரி செய்து கொள்ளுங்கள். தேவனது வார்த்தையானது என்ன சொல்கிறது என்பதைச் சொல்வது எல்லோருக்கும் எளியதாய் இருக்கிறது, அதே வேதபகுதியானது, நமது தவறான கருத்துக்களையும், நமது நடத்தைகளையும் ஆழமான நிலையில் உணர்த்தி நம்மை சரிசெய்வதாய் இருக்கிறது. ஆவியானவரின் உணர்த்துதலுக்கு திறந்த மனதுடன் கீழ்ப்படிந்து,

ஒப்புக்கொடுத்து, நம்மை அவர் சரிசெய்த பின்னர், பிறரை உற்சாகப்படுத்த முற்படுவோமாக.

மிகப் பெரிய பரிசுத்தவான் ஒருவர், எந்த ஒரு வேதபகுதியானாலும் அதை எவ்வாறு வியாக்கியானிப்பது என்பது குறித்து, நல்ல பரீட்சையை அளித்துள்ளார். கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதில் அளிக்குமாறு, ஒவ்வொரு வேதாகம மாணவருக்கும், அவர் சவால் விடுகிறவராய் இருக்கிறார்.

1. எனது வியாக்கியானம், என்னைக் கர்த்தரிடத்தில் அதிகமாய் அன்புகூறச் செய்கிறதா?

2. எனது வியாக்கியானம், கர்த்தருக்குள் உள்ள என் சகோதரரின் மதிப்பை உணர்ந்து, கர்த்தருக்குள் அவர்களில் அதிகமாய் அன்புகூறச் செய்கிறதாய் இருக்கிறதா?

3. எனது வியாக்கியானம், இழந்துபோனோரது இரட்சிப்பைக் காணும்படி, எனக்குள் பெரிதளவில் வாஞ்சை அளிக்கிறதாய் இருக்கிறதா?

4. எனது வியாக்கியானம், சபைக்கடுத்த சேவைகளில் ஈடுபாடு கொள்ள அதிக அளவில் எனக்கு வாஞ்சை அளிக்கிறதாய் இருக்கிறதா?

5. எனது வியாக்கியானம் மாயமான பெருமையின்றி, கர்த்தருக்காக எதையாகிலும் செய்ய ஆயத்தத்தை அளிக்கிறதாய் இருக்கிறதா?

6. எனது வியாக்கியானம் எனது வாழ்க்கைக்கான தேவனது சித்தத்திற்கு, அனுதினமும் அற்பணித்து, அதையே நோக்கமாய் கொள்ளச்செய்கிறதாய் இருக்கிறதா?

கேட்கப்பட்ட ஒவ்வொரு கேள்விகளுக்கும் உங்கள் பதில் "ஆம்" என்று இருக்குமேயானால், உங்கள் வியாக்கியானமானது சரி என ஒத்துக்கொள்ளக்கூடியதாய் இருக்கிறது. நீதியின் கனிகளே, நம்மை தேவனது குமாரரும், குமாரத்திகளுமாக காண்பிக்கிறதாய் இருக்கிறது. நாம் தேவனில் அன்புகூறுகிறவர்களாய் இருப்பொமெனில், எல்லா காரியங்களிலும், அவரது ஊழியராய் இருப்பதைத் தேடுகிறவர்களாய் இருப்போம். வாழ்வில், நீதியின் கனிகள் இல்லாதபட்சத்தில், நாம் தேவனுடன் ஜீவனுள்ள உறவைப் பெற்று இருக்கவில்லை என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, எழுப்பதலின் அவசியத்திற்கு மாம்சீகம் தடையாகவும், அல்லது இரட்சிப்பற்றத் தன்மைக்கு இரட்சிப்பும் அவசியமாய் இருக்கும்.

மத்தேயு 7:13-23 ல் கர்த்தருடைய வார்த்தையை வாசியுங்கள். இரு காரியங்களை கருத்தில் கொள்ளவும். முதலாவது, முன்னுரையில் நாம் விவாவத்திற்கு எடுத்துக்கொண்ட இரு வழிகளைகளை உங்கள் கருத்தில் கொள்க. ஒவ்வொரு நபரும், தங்களது வழியினை தெரிவு செய்யவேண்டியவர்களாய் இருக்கின்றனர். தீமையான செயல்பாடுகளின் விளவுகளையும், முறையற்ற செயல்பாடுகளின்

விளைவுகளையும் அவர்களுக்கு முன்னதாகவே சொல்லவேண்டியதாய் இருக்கிறது. நித்தியத்திற்கடுத்த விஷயத்தில் ஒன்றும் செய்யாது இருத்தல், ஆக்கினைத்தீர்ப்புக்கு சமமாய் கருதப்படுகிறது, தாலந்துகளைப் புதைத்து வைத்த வேலைக்காரன் கண்டுபிடிக்கப்பட்டான். **மத்தேயும் 25:14-30.**

இரண்டாவதாக, எப்பொழுதும் தவறான தீர்க்கதரிசிகளும் மற்றும் போதகர்களும், உண்மை ஊழியரைவிட அதிகமாகவே இருந்து வருகின்றனர். நமது பகுத்தறிதலை நல்ல காரணங்களுக்காய் பயன்படுத்த வற்புறுத்தப்படுகிறவர்களாய் இருக்கிறோம். சத்துருவானவன், போலியான ஆவிக்குரிய தன்மையில் உவகை கொள்கிறவனாய் இருக்கிறான் என்பதைக் காண்கிறவர்களாய் இருக்கிறோம். இப்படிப்பட்ட போலியான மாய்மால ஊழியக்காரர், மத ஸ்தாபனங்களில் மலிந்து கிடக்கின்றனர். எல்லா பெரிய எழுப்புதல்களும், எதிர்ப்புகளுடன் இடம்பெற்றதாய் இருக்கின்றன. எதிராளியின் ஊழியரிடையே, முறண்பாடுகளை உருவாக்குவதிலிருந்து உருவாகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள், எசேக்கியேலின் காலத்தில் பெரும்பான்மையினராய் இருந்து வந்தனர். மட்டுமின்றி, வேதாகம மற்றும் சரித்திரப்பூர்வமான உதாரணங்கள் மூலமாய் இதைக் கற்றுக்கொள்ள இருக்கிறோம்.

கர்த்தரது வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்: "அவர்களது கனிகளால், நீங்கள் அவர்களை அறிவீர்கள்." ஆவியானவரின் வரங்களை போலியான நிலையில் சாத்தானால் பயன்படுத்த இயலும், அவன் தனது சொந்த வல்லமையால், பொய்யான அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து வருகிறான். **2 தெசலோனிக்கேயர் 2:9-12.** ஆவியானவரின் கனியைப் போலியாக்குவதில் சாத்தான் கடினப் பிரயத்தனங்களை செய்ய வேண்டியதாய் இருக்கிறது. அப்படிப்பட்ட கனிகள் சமாதான இருதயத்திலிருந்து, தேவனிடமிருந்து வருகிறதாய் இருக்கிறது. மற்றும் அவைகள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நிறைந்ததாயும் இருக்கிறது. இதைப்போன்ற கனியை அவன் போலியாக்குதல் என்பது, இயலாத காரியமாய் இருக்கிறது. இது பரிசுத்த ஆவியானவரின் கனியாய் இருக்கிறது, இவற்றை தேவனுடன் அற்பணிப்புள்ள வாழ்க்கை செய்வதாலும், பரிசுத்த வாழ்க்கை செய்வதாலும் கிடைக்கிறதாய் இருக்கிறது, இது ஒரு தேவனது பிள்ளைக்குரிய அடையாளமாய் விளங்குகிறது. இது போன்ற கனியானது போலியான கனியினால், வெளிப்படுத்த இயலாததாய் இருக்கிறது.

தேவனால் நமக்கு வைத்திருக்கும் சிறப்பானவைகளை அனுபவமாக்குவதற்கு, அனுதினமும் பரிசுத்த ஆவியானவரின் புதிதாக்குதல் அவசியமானதாய் இருக்கிறது. மட்டுமின்றி நமது சமுதாயம் புதிதாக்கப்படுவதற்கும், நமது தேசம் புதிதாக்கப்படுவதற்கும் இது அவசியமானதாய் விளங்குகிறது. கீழ்க்கண்ட, வேதாகமத்தின் உபதேசங்களை அனுதின வாழ்வில் கைக்கொள்ளுதல் அவசியமாய் இருக்கிறது. கீழ்க்காணும் சத்தியத்தில் ஒவ்வொரு கருத்தாக பார்க்கும்பொழுது, ஒவ்வொரு உபதேசக்கருத்தையும் நாற்பது நிமிடங்கள் குறைந்தபட்சம் செலவு செய்து, ஒவ்வொரு உபதேசத்தையும் தனித்தனியே வாசித்து அறிந்து கொள்ள இருக்கிறோம். இதினிமித்தம் ஒவ்வொரு உபதேசக் கருத்தையும் எல்லோரும் தெளிவாய் புரிந்துகொள்ள இது பேருதவியாய் இருக்கும். இந்தக் கையேட்டை

மட்டும் ஒரு சிறுகுழுவில் வாசிப்பீர்களானால், கூறப்பட்ட நேரம் எடுத்து, உபதேசங்களைப் புரிந்து கொண்டு, விவாதித்து, ஜெபித்து, அடுத்த கருத்திற்குச் செல்ல முயலுங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் செயல்பட்டு, தேவ வார்த்தையானது தனது பலனை உங்களில் அளிக்க, அவருக்கு உங்களை முழுமையாய் அற்பணித்து அவரை சார்ந்து இருக்க முயலுங்கள்.

<u>**புதுப்பிக்கப்படுவதற்கான ஏழு அஸ்திபார அடிப்படைக் கருத்துக்கள்:**</u>

<u>**1. வாழ்விற்கான வேதாகம அற்பணிப்பு. பாவம் மற்றும் தீமை போன்றவற்றின் உண்மையானத் தன்மையை புரிந்து கொண்டு, அவற்றைக் குறித்த உபதேசங்களைக் கைக்கொள்ளுதல் நமக்கு அவசியம். தேசத்தில், சமுதாயத்தில், தனிப்பட்டோரின் வாழ்வில் அதன் விளைவுகளை புரிந்து கொள்ளுதலும் அவசியம்.**</u>

பாவம்: மனிதனின் வீழ்ச்சி:

1 மனிதனின் வீழ்ச்சி ஆதியாகமம் 3 அதிகாரத்தில் இடம்பெறுகிறதாய் இருக்கிறது.

2. மனிதனுக்கு அளிக்கப்பட்ட சுயசித்தத்தை, சோதனைக்கு ஒப்புக்கொடுத்து, தேவனது கட்டளையை மீறிநடக்கிறவனான். (ஆதியாகமம் 2:16, 17, ஆதியாகமம் 3:1-8).ப்

3. அவர்களது கீழ்ப்படியாமையினிமித்தம், அவர்கள் அறியாமை மற்றும் பாவத்தன்மையற்ற நிலையில் இருந்து விழுந்து போனார்கள்.

4. அவர்களது வீழ்ச்சியின் விளைவாக, சர்வலோகப் பாவமானது மனுக்குலத்தின் சரீர பிறப்பின் மூலம், அவர்களுக்கு கடந்து சென்றதாய் இருக்கிறது. இதனால், முழு மனுக்குலமும்,, பாவத்தில் கருத்தரித்து, பாவத்திலே பிறக்கிறவர்களானார்கள் (சங்கீதம் 51:5, யோவான் 3:6, ரோமர் 5:12). பாவத்தன்மையானது, ஆணின் மூலம் வருகிறதாய் இருக்கிறது, நாமனைவரும் பாவத்தின் வல்லமையை சந்திக்கிறவர்களாய்க் காணப்படுகிறோம். நமது வாழ்வின் மீது ஆதிக்கம் செலுத்தும் பாவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட, பரிசுத்த ஆவியானவரது வல்லமையானது அவசியமாய் இருக்கிறது.

5. மரணம்: ஆவிக்குரிய மரணம் அல்லது தற்காலிக மரணம் என்பது பாவத்தின் விளைவாய் இருக்கிறது.

6. பாவத்துடன் தொடர்புள்ள பாடுகளானது, மனிதனுக்கும், மனுஷிக்கும் அளிக்கப்பட்டதாய் இருக்கிறது. ஆதியாகமம் 3:16-19. பாவம் சுற்றுச் சூழல்களையும் பாதிப்படையச் செய்கிறதாய் இருக்கிறது. (ரோமர் 8:20-22).

7. முதல் சுவிஷேச செய்தியானது, ஆதியாகமம் 3:15ல் கொடுக்கப்பட்டுள்ளது.

8. ஆதாம் மனுக்குலத்தின் பாவம் மற்றும் மரணத்தின் காரணராய் விளங்குகிறார். கிறிஸ்துவோ நீதி மற்றும் ஜீவனின் காரணராய் விளங்குகிறார். (ரோமர் 5:12-21, 1 கொரிந்தியர் 15:21,22, 45-49).

பாவம்: -- பழைய பாவ சுபாவம்

1. நாம் பிறக்கும் போது ஆதாமின் சுபாவங்களுடன் பிறந்து இருக்கிறோம், இச்சுபாவம், தேவனுக்கு விரோதமானதும், பாவத்துக்கு பகிரங்கமானதுமாய் இருக்கிறது. (எபேசியர்2:1, ரோமர்5:12).

2. பழைய பாவ சுபாவம் மனுக்குலத்தின் சரீர பிறப்பு முதல் அவர்களை பின்பற்றிசெல்கிறதாய் இருக்கிறது. (சங்கீதம்51:5,
1 தீமோத்தேயு 2:13, 14).

3. இதினிமித்தம் நாம் சரீரப் பிரகாரமான பிறப்பின்போதே ஆவிக்குரிய நிலையில் மரித்தவர்களாய் இருக்கிறோம். (ரோமர் 5:12).

4. பழைய பாவசுபாவத்திற்கான பெயர்கள்:
   a) மாம்ச இச்சை கலாத்தியர் 5:16.
   b) பழைய மனுஷன் எபேசியர் 4:22, கொலோசெயர் 3:9.
   c) மாமசத்துக்குரியவர்கள். ரோமர் 7:14
   d) பாவம் ரோமர் 5:12
   e) இருதயம் எரேமியா 17:9.
   f) அவயவம் கொலோசெயர் 3:5.

5. இரட்சிக்கப்பட்ட பின்னரும் விசுவாசி, தொடர்ந்து பழைய பாவசுபாவத்தைப் பெற்றவராகவே இருக்கிறார். (1 யோவான்1:8, 1 கொரிந்தியர்3:1).

6. விசுவாசி பாவ சுபாவ ஆதிக்கத்தின் கீழ் இருப்பாரானால் அவரை மாம்சீகத்திற்குரியவர் என அழைக்கப்படுகிறவராய் இருக்கிறார்.. (ரோமர் 7:14, 1 கொரிந்தியர் 3:1-3).

7. பாவசுபாவம் மெய்யாய் உருவாக்கப்பட்ட, கிறிஸ்தவ வாழ்க்கையை அதைரியப் படுத்துகிறதாய் இருக்கிறது. (ரோமர் 7:15).

8. பாவசுபாவம் இரண்டு தன்மைகளை உடையதாய் இருக்கிறது.
   a) பலவீனப் பகுதி - அக்கிரமம் பாவம் இவற்றிற்குள் நம்மைத் தள்ளுகிறதாய் இருக்கிறது. எபிரெயர் 12:1.

b) பெலப்படும் பகுதி - துறவர வாழ்வு, மற்றும் சுய நீதிக்குள்ளாக நம்மைத் தள்ளுகிறது ஏசாயா 64:6.

9. உயிர்த்தெழுந்த சரீரத்தில் பழைய பாவ சுபாவம் காணப்படவில்லை. (1 கொரிந்தியர் 15:56, பிலிப்பியர் 3:21,
1 தெசலோனிக்கேயர் 5:23).

10. பழைய பாவ சுபாவத்தின் மேல் ஜெயம் கொள்ள, பழைய ஜீவியம் மரித்ததை தீர்மானித்தல், தேவனுக்கு ஒப்புகொடுத்தல், பாவத்தை அறிக்கை செய்து, பரிசுத்த ஆவியானவரின் நிறைவை சார்ந்துகொள்ளுதல் வேண்டும். (ரோமர் 6:6,11, கொலோசெயர் 3:9-10).

<u>பழைய பாவத்தன்மையின் கனிகள்</u>

(These are the evidences that Satan has a "toe hold" in the life of the individual dominated by or characterized by the presence of these fruits of evil).

1. பழைய பாவத்தன்மையின் கனிகள் நான்கு வகைகளாய் இருக்கின்றன. (கலாத்தியர் 5:19-21).

a) பாலுணர்வு சார்ந்த பழைய பாவத்தன்மை.
b) மதம் சார்ந்த பழைய பாவத்தன்மை.
c) சமூகம் சார்ந்த பழைய பாவத்தன்மை.
d) தனிநபர் சார்ந்த பழைய பாவத்தன்மை.

2. பாலுணர்வு சாந்த பழைய பாவத்தன்மை:

a) வேசித்தனம் -- போர்னியா porneia -- வாழ்க்கை துணைக்கு அப்பாற்பட்ட பாலுறவு செயல்பாடுகள் அல்லது கள்ளத்தனமான பாலுறவு செயல்பாடுகள்.
b) அசுத்தம் -- அகதர்சியா akatharsia - அநாகரிகமான சகல வித செயல்பாடுகள் மற்றும் ஜனங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும் அசுத்தமான செயல்பாடுகள், இயற்கைக்கு மாறான பாலுறவு செயல்பாடுகள்.
c) காம விகாரம் -- அசல்கெய்யா aselgeia - கட்டுப்படுத்த இயலாத இச்சை -- ஜனங்கள் தங்களது சொந்த திருப்திக்காய் பாலுறவு கொள்ளுதல், தங்கள் சுய இன்பத்திற்காய் மற்றவர்களை பாலியல் பொருட்களாய் பயன்படுத்துதல். இப்படிப்பட்ட எல்லாப்பகுதிகளிலும் நாம் சோதிக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம் என பவுல் இனங்கண்டு கொள்கிறவராய் இருக்கிறார். மத்தேயு இப்படிப்பட்ட செய்கைகளை மனதால் சிந்திப்பதே பாவம் எனச் சுட்டிக்காட்டுகிறார்.

3. மதம் சார்ந்த பழைய பாவத்தன்மை:

a) விக்கிரக ஆராதனை -- எய்டோல்ட்ரியா eidoltria - தேவனை விட்டுவிட்டு மற்றகாரியங்களை ஆராதிப்பது.

b) பில்லிசூனியம் -- ஃபார்மகெய்யா pharmakeia - மந்திரம், ஜோஸ்யம், மதசம்பந்தமான சடங்குகள் மற்றும் மந்திர வித்தைகள்.
c) வெறுத்தல் -- எக்ட்ரோஸ் echtros - காரணமற்ற கட்டுப்படுத்த இயலாத கடுங்கோபம் கொள்ளுதல். யாரும் உங்களுடன் பேச இயலாத அளவுக்கு மித மிஞ்சிய கோபம் கொள்ளுதல்.
d) விவாதித்தல் -- எரிஸ் eris - சண்டையிடுதல் -- வேதாகம போதனை மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் குறித்து சர்ச்சை செய்து விவாதித்தல்.

4. சமூகம் சார்ந்த பழைய பாவத்தன்மை:
a) பொறாமை -- ஜெலஸ் zelos - நீங்கள் விரும்பும் மற்றொரு நபரிடத்தில் காட்டப்படும் வெறுப்புகலந்த கசப்புணர்வு. இது எல்லா பாவங்களுக்கும் தகப்பனாய் இருந்து செயலாற்றுகிறது.
b) கோபம் -- தெர்மாஸ் thermos - தலை சூடு பிடிப்பது அல்லது நிலைதடுமாறல். ஒரு நபர் கோபத்தை கட்டுப்படுத்த முடியாது இருப்பார் என்றால் அவர் இன்னும் பழைய பாவத்தன்மையின் வல்லமைக்குக் கீழாய் இருக்கிறார், அவர் பரிசுத்த ஆவியானவர் வல்லைமையில் இல்லை. இதைப்போன்ற பிரச்சனை சபை கூடுகையில் நிகழுமானால், நீங்கள் தேவனது வார்த்தையை பரிகாசம் செய்கிறவராய் இருப்பீர்.
c) கலகங்கள் - பிரிவினைகளை உண்டாக்குதல்.
d) தவறான உபதேசங்கள் -- இது கலகம் உண்டாக்குவதற்கு ஒரு படி முன்னிலையில் இருப்பது, பிரிவினைகளை உண்டாக்க மனதுள்ளவரின் செயல்பாடுகள். உதாரணம் KJV குழுவினர்கள். KJV ஐ மட்டும் தங்கள் வேதமாய்க் கொண்டு வேறுபிரிந்து வாழும் குழுவினர், KJV ஐ மட்டும் அடிப்படையாய்க் கொண்டு இருப்பீர்கள் என்றால், தற்காலத்தில் பல மொழியாக்கங்கள் மூலம் உண்டாகும் தீமைகளைவிட இன்னும் அதிகமான தீமைக்குள் விழுகிறவர்களாய் இருப்பீர்கள்.
e) தீமை -- இது பொறாமையுடன் கட்டப்பட்டு, மனக்கசப்பில் நங்கூரமிட்டு வாழும் ஜனங்களின் ஆத்துமாவை சாப்பிட்டுவிடுகிறதாய் இருக்கிறது.

5. தனிநபர் சார்ந்த பழைய பாவத்தன்மை:
a) குடிப்பழக்கம் - மெத்தால் - அளவுக்கு மீறி மது அருந்துவது ஒரு வியாதி அல்ல, அது பாவமாய் இருக்கிறது. இது சுதந்தரித்துக்கொள்ளப்பட்ட பெலவீனமாய் இருக்கிறது, உங்கள் தகப்பன் மது அருந்தும் பழக்கமுள்ளவராய் இருப்பாரானால், நீங்கள் ஒருபோதும் மதுவை தீண்டக்கூடாது, காரணம் அது குடும்பத்தில் ஒரு பெலவீனமாய் இருக்கிறது. உங்களை சோதனைக்குள்ளாக்கும் இடத்தைத் தவிர்த்து விடுங்கள். உங்களுக்கு குடிப்பழக்கத்தால் உண்டான பெலவீனம் இருக்கும் என்றால், அதை விட்டுவிட முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.
b) களியாட்டம் - ஜோமோய் jomoi - இதன் பொருள் உயர்த்தப்படும் நரகம், ஒரு மனிதன் அமையான சூழலை பொறுக்கா வண்ணம் எப்பொழுதும் சப்தம் மற்றும் ஆரவாரம் மிகுந்த சூழலில் மூழ்கிவிடுதல். இப்படிப்பட்ட வாழ்க்கை காலியாய் இருக்கிறது, நோக்கமில்லாமல் இருக்கிறது இதினிமித்தம், அவர்கள் தங்களது வாழ்க்கையினை ஒன்றன் பின் ஒன்றாய் பார்டிகளில் /

பொழுதுபோக்குகளில் செலவு செய்கின்றனர், பாவத்தைக்குறித்து அவர்கள் கவலை கொள்வதில்லை, வாழ்க்கை அனுபவிப்பதற்கு என்று அர்த்தமற்ற வாழ்க்கை நடத்துகின்றனர். நீங்கள் பாவம் செய்ய சோதனைக்குட்படும் போது, கர்த்தரை நினைத்துக் கொள்ளுங்கள். பவுல் இவைகளைக் குறித்துக் கவனித்து குறிப்பிட்ட பெலவீனங்களை குறித்து எழுதி எச்சரிக்கிறார்.

6. நாம் யாவரும் பெலவீனங்களைப் பெற்று இருக்கிறோம், அப்படிப்பட்ட பெலவீனங்களில் பாதுகாப்பு இல்லையெனில், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விழுகிறவர்களாய் இருப்போம். உங்களது பெலவீனங்களைக் குறித்து தெரிந்து கொள்ளுதல் வேண்டும், அதிலிருந்து காக்கப்பட பிரயத்தனம் செய்தல் வேண்டும். ஆவியில் நடந்துகொள்ளுதலே, இப்படிப்பட்ட காரியங்களை மேற்கொண்டு வாழ தேவனது மார்க்கமாய் இருக்கிறது.

<u>தீமை</u>

1. விளக்கம்: தீமை என்பது சாத்தானின் கொள்கையாய் இருந்து, தேவனின் உபதேசத்திற்கு எதிராய் மனிதரைத் செயல்படவைப்பதாய் இருக்கிறது. இதினிமித்தம் தீமை என்பது, சாத்தானின் கண்ணோட்டமாய் இருந்து, நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்களின் தொகுப்பாய் செயல்பட்டு வருகிறது, இதில் தேவனது கண்ணோட்டத்திற்கு இடமில்லாது இருக்கிறது. நமது எதிராளியின் கொள்கைகளை நாம் நன்கு அறிந்து இருத்தல் அவசியமாய் இருக்கிறது.

2. தீமை என்பது கெட்டதாய் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. தீமை என்பது, தேவன் உங்களுக்கு ஆயத்தப்படுத்தியுள்ள வழியிலிருந்து, வழிவிலகச் செய்யும் கொள்கையாய் இருக்கிறது.

3. தவறான மதம் என்பது மிகவும் ஒழுக்கநெறி மிக்கதாயும், மற்றும் துறவரமுள்ளதாயும் இருக்கலாம், (இது காண்பது மிகவும் "பரிசுத்தமானதாய்" தோற்றமளிக்கலாம்), ஆனால், இது ஜனங்களை தேவனின் வெளிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள சித்தத்திற்கும், தேவனது திட்டத்திற்கும் புறம்பே வழிநடத்துமேயானால், அது தீமையாய் இருக்கிறது.

4. தீமையானது "நன்மை" போன்ற பொய்த்தோற்றத்தில் காட்சியளிப்பதாய் இருக்கிறது. மக்கள் தங்களது "நற்கிரியைகள்" தேவனது பரிசுத்த எதிர்பார்ப்பை நிறைவு செய்கிறதாய் இருக்கிறது என நம்பி, தீமையான உபதேசத்தால் வஞ்சிக்கப்படுகிறவர்களாய் இருந்து வருகின்றனர். ரோமர் 7:19,20.

5. தேவனது வார்த்தை மட்டுமே, அதாவது வேதாகம் உபதேசம் மட்டுமே விசுவாசியை நன்மை மற்றும் தீமை இவற்றை வேறுபிரித்து புரிந்து கொள்ள உதவி செய்கிறதாய் இருக்கிறது. எபிரெயர் 3:13,14.

6. தேவனது வார்த்தையில் ஒரு ஆத்துமா தன்னை ஒருமுகப்படுத்தும்போது மட்டுமே, சாத்தானின் தீமையான கொள்கையின் வஞ்சனையிலிருந்து, மெய்யாக பாதுக்க இயலும். நீதிமொழிகள் 2:10-14, 3:7, 19:23.

7. தேவனது வார்த்தையைக் கைக்கொள்ளும் அறிவு மட்டுமே, தீமைக்கு மறுப்பு தெரிவித்து, அதை நடுநிலைப்படுத்துகிறதாய் இருக்கும். சங்கீதம் 54:5, ரோமர் 12:21, ஏசாயா 45.

8. ஒரு விசுவாசியின் பிரச்சனையானது, அனுதினமும் தேவனது வார்த்தையை ஏற்றுக்கொண்டு, அனுதினமும் அவர்களது, வாழ்வில் தெரிவு செய்தலில் விளங்கிவருகிறது. இதினிமித்தம் அவர்கள் தீமைக்கு எதிராய் பாதுகாக்க இயலுவதாக இருக்கிறது. தேவன் நமது தெரிவு செய்தலை கவனிக்கிறவராய் இருக்கிறார். நீதிமொழிகள் 11:18,19, 22:3, 24:1-4, எபேசியர் 5:16, 2 தெசலோனிக்கேயர் 3:2,3.

9. தீமையான மனிதருடன் கொள்ளும் உறவானது, விசுவாசியின் சிந்தனையை தவறான வழியில் செல்லச் செய்து, அவர்களது சாட்சிக்குரிய வாழ்வில், சந்தேகம் மற்றும் குழப்பங்களைக் கொண்டு வருகிறதாய் இருக்கிறது. ஏசாயா 5:20, 1 கொரிந்தியர் 15:23.

10. தேவனில் தீமை என்பதே இல்லை. சங்கீதம் 5:4, 1 யோவான் 1:5, 4:4.

11. தேவன் தீமையை நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார், மற்றும் இறுதி நியாத்தீர்ப்பின்போது, அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலில், அதை நிரந்தரமாய், ஆக்கினைத்தீர்ப்புக்குட்படுத்துகிறவராய் இருக்கிறார். சங்கீதம் 34:16, ஏசாயா 13:11, வெளிப்படுத்தல் 20:11ff

12. சபை யுகம் முழுவதிலும், சாத்தானின் பிரசன்னம் இவ்வுலகில் இருந்து வருவதால், தீமைக்குப் பதிலாக எல்லா காரியங்களிலும், கர்த்தரின் கரமானது இருந்து, அவர் இன்னும் தமது மகிமையுள்ள சிங்காசனத்தில் இருப்பதை தெரிவிப்பதய் இருக்கிறது.

13. சாத்தான் தனது காரியங்களை (தீமைகளை) தேவனிடம் "அனுமதியுடன்" செயல்படுத்திவருகிறான், நாம் கர்த்தரின் கரத்தில் இருக்கிறபடியால், நமக்கு பாதுகாப்பு இருக்கிறது. யோபு 1:6-12, நீதிமொழிகள் 16:3, 4, ஏசாயா 45 : 6, 7.

<u>கிறிஸ்தவ வாழ்க்கை: விசுவாசிகளின் சிட்சை</u>

1. ஒரு விசுவாசி தேவ சித்தத்திற்கு கீழ்படியாதிருக்கும்ப்போது, தெய்வீக சிட்சையானது அதன் விளைவய் இருக்கிறது.

2. உண்மையான பிள்ளைகள் அனைவரையும் தேவன் சிட்சிக்கிறார். உண்மையற்ற பிள்ளைகள் சிட்சையை அறியாதிருக்கிறார்கள்

(12:8; 1 பேதுரு 5:9-10).

3. தேவன் விசுவாசிகளை சிட்சிப்பதை கீழ்க்கண்ட வேதபகுதிகளில் காணலாம்.
   a) பழைய ஏற்பாடு (நீதிமொழிகள் 3:11-12)
   b) புதிய ஏற்பாடு (எபிரெயர்12:3-13; வெளிப்படுத்தல் 3:19).

4. தேவனது சிட்சை பற்றிய மனப்பான்மை (எபிரெயர் 12:3-15).
   a) fh;j;jUila rpl;iria mw;gkhf vz;zhNj> (வச 5).
   b) mtuhy; fbe;Jnfhs;sg;gLk;NghJ Nrhh;e;JNghfhNj.(வச 5).
   c) rpl;iriar; rfpf;fpwth;fshapUத்jy;வேண்டும் (வச 7).
   d) சிட்சகளின் மூலம் பயனடைதல் மற்றும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். (வச 11).

5. தேவனுடைய சிட்சையால் உண்டாகும் பலன்:
   a) சிட்சை விசுவாசிகளுக்கு ஆசீர்வாதங்களை அருளுகின்றது (சங்கீதம் 94:12)
   b) ஜீவியம் மாற்றப்படுகிறது (எபிரெயர் 12:11)
   c) சிட்சை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே (1 பேதுரு1:6,7)
   d) இது விசுவாசிகளின் நன்மைக்காய் இருக்கிறது (எபிரெயர் 12:10)

6. விசுவாசி மனந்திரும்ப மறுப்பானேயானால் சிட்சை மரணபரியந்தம் தொடரும் (1 கொரிந்தியர் 11:30-31, 1 யோவான் 5:16)

7. தெய்வீக சிட்சை ஒருபோதும் இரட்சிப்பு இழக்கப்படுவதை தெரிவிப்பதில்லை. கலாத்தியர் 3:26, 2 தீமோத்தேயு 2:11-13.

<u>கிறிஸ்தவ வாழ்க்கை -- சந்தேகம்</u>

1. நாம் சந்தேகப்படும் போது, தேவனுடன் நேர்மையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். ஆகையால் நாம் சந்தேகத்துடன் இடைப்பட்டு, நமது ஆவிக்குரிய முன்னேற்றம், மற்றும் கிறிஸ்தவப் பணிக்கு பங்கம் வருவிக்குமுன்னர், சரிசெய்து கொள்ளுதல் வேண்டும்.

2. ஒரு வெற்றுத்தாளில் உங்களது சந்தேகங்களை தெளிவாய் எழுதிக்கொள்ளுங்கள், அதற்கான பதில்கள் வரும்பொழுது அதைக் காண நீங்கள் ஆயத்தமுள்ளவர்களாய் இருப்பதற்கு இது ஏதுவுண்டாக்கும்.

3. சந்தேகங்களை தேவனுக்கு முன்னிலையில் அற்பணியுங்கள். தேவன் பதில் அளிக்கும் வண்ணம் வெளிப்படையாகவும் ஒளிவுமறைவின்றியும் தெரியப்படுத்துங்கள். நெகேமியா 1:4-11, மாற்கு 9:24.

4. உங்கள் கவலைகள் எல்லாம் அவர் மீது வைத்துவிடுங்கள் என வேதாகமம் கூறுகிறது, 1 பேதுரு 4:19, 5:7. கவலை என்பது நம்மைப்பற்றியதாய் இருக்கிறது.

5. ஒத்த வாக்கிய அகராதியில் உங்களது சந்தேகம் குறித்த வசனங்களைக் கண்டுபிடித்து அவைகள் என்ன கூறுகின்றன ஆராய்சி செய்யுங்கள். கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டு அதற்கான பதிலை கண்டறியுங்கள்.

a) வேதாகமம் சந்தேகம் குறித்து என்ன கூறுகிறது?

b) இந்த பாடங்கள் குறித்து வேதாகமம் எப்படிப்பட்ட திட்டவட்டமான அறிக்கையினைத் தருகிறது?

c) இப்படிப்பட்ட காரியங்களில் தேவனது வார்த்தையை நான் விசுவாசிக்கலாமா?

2. <u>தேவனது பரிசுத்த குணாதிசயம் மற்றும் அவரது பூரணத்தன்மை போன்றவற்றை புரிந்து கொண்டு அவற்றைக் கைக்கொள்ளுதல் வேண்டும்.</u>

<u>தேவன்: தேவனின் குணாதிசயங்கள்</u>

1. தேவன் மூன்று நபர்களாய் இருந்தபொதிலும், அவர்கள் மூவரும் ஒரே தன்மையுடையவர்களும், அல்லது குணாதிசயங்களைக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள்.

a) ஏகாதிபதி:
பிதா (எபேசியர் 1:11 , cf ஏசாயா 40:8, மத்தேயு6:10,எபிரெயர் 10:7, 9).
குமாரன் (யோவான் 5:21, வெளிப்படுத்தல்19:16).
பரிசுத்த ஆவியானவர் (1 கொரிந்தியர் 12:11 , cf எபிரெயர் 2:4).

b) நீதியுள்ளவர்:
பிதா (யோவான் 17:25)
குமாரன் (லூக்கா 1:35, எபிரெயர் 7:26, 2 கொரிந்தியர் 5:21).
பரிசுத்த ஆவியானவர்

c) நியாதிபதி
பிதா (யோபு37:23, cf 8:3)
குமாரன் (அப்போஸ்தலர் 3:14, யோவான் 5:22, வெளிப்படுத்தல் 19:11).
பரிசுத்த ஆவியானவர் (நெகேமியா 9:20)

d)அன்புள்ளவர்:
பிதா (யோவான் 3:16)
குமாரன் (எபேசியர்5:25, 1யோவான் 3:16)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 16:7-11, 1கொரிந்தியர் 2:10)

e) நித்திய ஜீவன்:
பிதா (யோவான் 5:26)

குமாரன் (மீகா5:2, cfயோவான் 1:1-2, 1 யோவான் 5:11).
பரிசுத்த ஆவியானவர் (ஏசாயா 48:16)

f)எல்லாம் அறிந்தவர்:
பிதா (எபிரெயர் 4:13, cfமத்தேயு 11:27, 1 பேதுரு 1:2)
குமாரன் (யோவான் 18:4, cf மத்தேயு 9:4, யோவான் 2:25, 1கொரிந்தியர் 4:5)
பரிசுத்த ஆவியானவர் (ஏசாயா 1:2, cf 1 கொரிந்தியர்2:11).

g) எங்கும் இருப்பவர்:
பிதா (2 நாளாகமம் 2:6)
குமாரன் (மத்தேயு 8:20, cf எபேசியர்1:23)
பரிசுத்த ஆவியானவர் (சங்கீதம் 139:7)

h) சர்வ வல்லமையுள்ளவர்:
பிதா (மாற்கு 14:36, cf 1 பேதுரு 1:5)
குமாரன் (எபிரெயர்1:3, cf மத்தேயு 24:30, 2 கொரிந்தியர் 12:9, பிலிப்பியர்3:21)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14:16)

i) மாறாதவர்
பிதா (எபிரெயர் 6:17, சங்கீதம் 33:11)
குமாரன் (எபிரெயர் 13:8)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14:16)

j) சத்தியம்:
பிதா (யோவான்7:28, யோவான் 17:3)
குமாரன் (1 யோவான் 5:20, cf யோவான் 1:14, 14:6, வெளிப்படுத்தல்19:11)
பரிசுத்த ஆவியானவர் (1 யோவான் 5:6, cf யோவான் 14:17, 15:26, 16:13)

தேவன்: விசுவாசிகளுக்கான ஆறுதல்.

1. தேவன் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார். கிறிஸ்தவராய் இருக்கும் உங்களுக்கு நிகழும் எந்த ஒரு காரியமும், உங்களை உருவாக்குவதற்கு ஏதுவான தருணங்களை அளிக்கிறதாய் இருக்கிறது. (1 கொரிந்தியர் 10:13).

2. தேவனது குணாதிசயம் நிலையானது.

(அ) தேவன் உங்கள் பட்சத்தில் இருந்தால் உங்களுக்கு விரோதமாய் இருப்பவன் யார்? (ரோமர் 8:31-34).

(ஆ) என்ன நேர்ந்தாலும் தேவனது அன்பானது நிலையானதாய் இருக்கிறது. (ரோமர் 8:35-39).

3. தேவனது வாக்குத்தத்தங்கள் அனைத்தும் பாதுகாப்பானவை, அவர் எப்பொழுதும் நம்முடனே இருக்கிறார். (மத்தேயு 28:19-20, எரேமியா 1:19).

4. தேவனது வல்லமையானது எப்பொழுதும் மாறுவதே இல்லை.

(அ) அவர் எப்பொழுதும் நம்மைக் காக்கிறவராய் இருக்கிறார். (யோவான் 10:29, 2 தீமோத்தேயு 1:12,).

(ஆ) தேவன் நம்மை ஒருபோதும் மறந்துவிடுகிறவர் அல்லர், அல்லது அவரது காக்கும் வல்லமையை அவர் இழந்து போனவரும் அல்லர். (யூதா 24).

(இ) நாம் ஐக்கியத்திலிருந்து விழுந்து போனவர்களாய் இருந்தாலும், நாம் இன்னும் இரட்சிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறோம். (2 தீமோத்தேயு 2:13).

5. நமது தேவைகளை தேவன் முன்னதாகவே அறிந்தவராய் இருக்கிறார், அவர் நமது தேவைகளை தக்கவேளையில் நமக்களிக்கிறவராய் இருக்கிறார். (பிலிப்பியர் 4:19, எபிரெயர் 4:16, எபேசியர் 3:12,).

6. தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் வல்லமையுடையவராய் இருக்கிறார். (2 கொரிந்தியர் 9:8)

7. தேவன் நமக்கு எல்லாவித கிருபையையும் நிறைந்து வழியும்படி செய்கிறவராய் இருக்கிறார். (எபேசியர் 3:20).

8. உண்மையான திடநம்பிக்கை மற்றும் ஆசீர்வாதம் இவற்றில் நாம் வளருகிறவர்களாய் இருத்தல் வேண்டும். (2 பேதுரு 3:18).

9. அவரது வார்த்தையினால் நாம் போஷிக்கப்படும் போது இவற்றை நாம் செய்கிறவர்களாய் இருப்போம். (யோவான் 6:29, 33, 63).

<u>3. நமது அனுதின வாழ்வின் தெரிந்துகொள்ளுதலில் ஆவியில் நடந்து கொள்ளுதலை தெரிந்து கொள்கிறோமா (ஆவிக்குரிய வாழ்வு), அல்லது பழைய பாவமனிதன் வல்லமையில் (மாம்சீக வழியில்) நடந்து கொள்வதை தெரிந்து கொள்கிறோமா?</u>

<u>கிறிஸ்தவ வாழ்க்கை: ஆவிக்குரியத் தன்மை</u>

1. எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறவராய் இருக்கிறார். அவருக்கு நமது வாழ்வை கட்டுப்படுத்தி நடத்த ஒப்புக்கொடுக்கும்

போது, ஆவியினால் நிரப்பப்படவேண்டும், அல்லது ஆவியில் நடக்கவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறோம்.

2. பரிசுத்தாவியானவரால் நிரப்பப்படுவது தடைபடுவது:

a) ஆவியானவரை துக்கப்படுத்துவதன் மூலம் இது பாவம் செய்யும் போது நிகழ்கிறது.

b) ஆவியை அவித்துப்போடுதல் மூலம் இது அவரது நடத்துதலுக்கு ஒப்புக்கொடுக்க தவறும்போது நிகழ்கிறது.

c) இது மாம்சீகத்தின்படி வாழ்தல் என அழைக்கப்படுகிறது. அல்லது மாம்சீகத்தால் கட்டுப்படுத்தப்படுவது அல்லது பழைய பாவ சுபாவத்தால் நடத்தப்படுவதை காட்டுகிறது.

3. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதை திரும்ப பெறுவது:

a) பாவத்தை அறிக்கை செய்வதன் மூலம் (1 யோவான்1:9).

b) தேவனுக்கு வாழ்வை அற்பணிப்பதன் மூலம் (ரோமர்12:1-2)

c) இதுவே ஆவிக்குரிய தன்மை என்றும் அல்லது பரிசுத்த ஆவியானவரால் கட்டுப்படுத்தப்படுவது என அழைக்கப்படுகிறது.

4. பரிசுத்த ஆவியானவர் மட்டுமே தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடிய நற்கிரியைகளை நம்மில் உருவாக்க முடியும் - நமது சொந்த பெலத்தாலோ முயற்சியாலோ தேவனை பிரியப்படுத்தமுடியாது. (ரோமர் 8:8-9, 1 கொரிந்தியர்3:10-15).

5. ஆவிக்குரிய விசுவாசி:

a) தேவனை பிரதிபலித்துக்காட்டுகிறார். (எபேசியர் 5:1, 1 யோவான் 3:9).

b) கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார். (யோவான் 7:39, யோவான் 16:14).

c) நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார். (ரோமர் 8:2-4, ரோமர்13:8).

6. வேதாகமத்தில் மனித வர்க்கமானது மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன:-

[அ] இயல்பான மனிதன்: - சரீரப்பிரகாரமாக ஒரு நபர் பிறந்து வாழ்கிறவராய் இருக்கிறார், ஆனால் அவர் திரும்பவும் உருவாக்கப்படாதவராய் இருக்கிறார். அப்படிப்பட்ட நபர் சூதுவாது அறிந்தவராயும், மிகவும் நாகரிகமானவராயும், அன்பு மற்றும் சாந்தமுள்ளவராயும் இருக்கலாம், ஆனால் அப்படிப்பட்ட நபர் ஆவிக்குரிய தனிச்சிறப்பைப் பற்றி முற்றிலும் அறியாதவராய் இருப்பர். (1கொரிந்தியர் 2:14) லவோதேக்கேய சபையில் உள்ள குளிர்ந்த நபருக்கு சமமானவர்கள்.

[ஆ] மாம்சீகத்துக்குரிய மனிதன்: - ஒரு நபர் திரும்வும் உருவாக்கப்பட்டவராய் அல்லது மறுபடி பிறந்து, ஆனால் அந்நபர் தொடர்ந்து தனது பாவ பாவசுபாவத்துடன் வாழ்ந்து வருகிறவர். இப்பகுதியில் அவர்களது செயல்பாடுகள் வளர்ச்சியற்ற குழந்தைத்தன கிறிஸ்தவ வாழ்வை

காட்டுகிறதாய் இருக்கிறது. (1 கொரிந்தியர் 3:1-4). இது வெதுவெதுப்பான நபராய் லவோதிக்கேயா சபைக்கு சமமாய் காணப்படுகின்றனர்.

[இ] ஆவிக்குரிய மனிதன்: - ஒரு நபர் திரும்ப உருவாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில், பொதுவாக வாழ்கிறவர்களாய் இருப்பர். இவர்கள் மனிதருக்கும் தேவனுக்கும் இடையே உள்ள காரியங்களை பகுத்தறிகிறவர்களாய் இருப்பர். (1 கொரிந்தியர் 2:11-13). அனுதின வாழ்வில், தேவனோடு ஐக்கியம் கொள்கிறவர்களாய் இருப்பர். (எபேசியர் 5:18-20). இப்படிப்பட்டோர் லவோதிக்கேயா சபையில் உள்ள அனலுள்ளவர்களுக்கு சமமானவர்களாய்க் கருதப்படுகின்றனர்.

7. மாம்சீக வாழ்வு:

[அ] விசுவாசி இரட்சிப்படைந்த பின்னரும், பழைய பாவத்தன்மையைப் பெற்று இருப்பது. (1யோவான் 1:8, ரோமர் 7:14,15).

[ஆ] பழை பாவசுபாவமானது, மிகமோசமானது. (எரேமியா 17:9).

[இ] பழைய பாவசுபாத்தினால் ஆதிக்கம் செய்யப்படும் விசுவாசி, மாம்சீகத்துக்குரியவர் என அழக்கப்படுகிறார். (1கொரிந்தியர் 3:1-3, ரோமர் 7:14).

[ஈ] பழைய பாவசுபாவமானது அதற்கேற்ற கிரியைகளை ஒரு விசுவாசியின் வாழ்வில் உருவாக்குகிறதாய் இருக்கிறது. (ரோமர் 7:15).

[உ] சரீர பிறப்பின் போதே, பழைய பாவசுபாவமானது அவர்களுடன் இடம்பெறுகிறதாய் இருக்கிறது. (சங்கீதம் 51:5).

[ஊ] இதினிமித்தம் நமது சரீர பிறப்பின்போதே, ஆவிக்குரிய நிலையில் மரித்தவர்களாய் இருக்கிறோம் எனத்தீர்மானிக்கப்படுகிறது. (ரோமர் 5:12).

[எ] பழைய பாவசுபாவமானது அநேக கருத்துக் கூறுகளை / அம்சங்களை உடையதாய் இருக்கிறது. இதன் பெலவீனப்பகுதியானது பாவத்தை உருவாக்குகிறதாய் இருக்கிறது, இதன் பெலமுள்ள பகுதியானது, மனித நன்மைகளை உருவாக்குகிறதாய் இருக்கிறது. இது துறவரம் அல்லது காமவிகாரத்திற்கு நேராக வழிநடத்துகிறதாய் இருக்கிறது. அநேக விதங்களில் துறவரம் என்பது ஆவிக்குரியதாய் கருதப்படுகிறது.

[ஏ] பழைய பாவசுபாவமானது உயிர்த்தெழுந்த சரீரத்தில் காணப்படவில்லை.

கிறிஸ்தவ வாழ்க்கை -- நடக்கை

1. சரீரப்பிரகாரமான நடக்கையானது, விசுவாசத்தில் நடக்கும் வாழ்க்கையாகப் பகுப்பாய்வு செய்யப்படுகிறது, இது படிப்படியாக அடியெடுத்து வைப்பதைக் காட்டுகிறது. ரோமர் 14:5-8 , எபேசியர் 5:15-21, யாக்கோபு 4:13-17.

2. ஆவியானவரால் தொடர்ந்து நிரப்பப்பட்டு, தேவனது வார்த்தையால் போஷிக்கப்படுவது, நடந்துகொள்வது என்பதற்கு ஒத்ததாய் இருக்கிறது.

3. சம நிலையினின்று விசுவாசி வழிவிலகும்போது, அவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகிறவர்களாய் இருக்கிறார்கள். ரோமர் 13:13.

4. ஏற்ற வேலைகளில் விசுவாசிகள் செயல்படுதல் மற்றும் அமைப்பு நடந்துகொள்ளுதலை உருவப்படுத்திக்காட்டுகிறதாய் இருக்கிறது. பிலிப்பியர் 3:18, எபேசியர் 4:17.

5. விசுவாசியானவன் பின்னோக்கி நடத்தல், அவர்கள் பின்வாங்கிச் செல்வதைப் பிரதிபலிப்பதாய் இருக்கிறது. எபேசியர் 4:17.

6. நாம் இவ்வாறு கேட்டுக்கொள்ளப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.

அ] ஆவியில் நடக்குமாறு.. கலாத்தியர் 5:16, 25.

ஆ] விசுவாத்தில் நடக்குமாறு.. 2 கொரிந்தியர் 5:7, கொலோசெயர் 2:6, 4:5

இ] உபதேசத்தில் நடந்து கொள்ளுமாறு.. 3 யோவான் 3.

ஈ] சத்தியத்தில் நடந்து கொள்ளுமாறு.. 2 யோவான் 4.

7. ஆவிக்குரிய தன்மையின் பகுப்பாய்வு நடந்து கொள்ளுதலாய் இருக்கிறது.

அ] மாம்சத்தின்படி நடவாதிருத்தல் (ரோமர் 8:4).
ஆ] அன்பில் நடந்து கொள்ளுதல் (எபேசியர் 5:2).
இ] புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளுதல். (ரோமர் 6:4).
ஈ] அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரமாய் நடந்து கொள்ளுதல். (எபேசியர் 4:1).
உ] கர்த்தருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளுதல். (கொலோசெயர் 1:10, 1 தெசலோனிக்கேயர் 2:12).
ஊ] பகலில் சீராய் நடத்தல். (ரோமர் 13:13).
எ] நற்கிரியைகளில் நடத்தல். (எபேசியர் 2:10).
ஏ] ஒளியில் நடந்து கொள்ளுதல். (எபேசியர் 5:8, 1 யோவான் 1:7).
ஐ] கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நடந்து கொள்ளுதல். (கொலோசெயர் 2:6).

ஒ] ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ளுதல். (எபேசியர் 5:15,16).

ஓ] நடந்து கொள்ள வேண்டியபிரகாரம் நடந்து கொள்ளுதல். (1 தெசலோனிக்கேயர் 4:1).

பரிசுத்த ஆவியானவர்: புதிய ஏற்பாட்டில் அவரது ஊழியம்.

1. அவிசுவாசிகளுக்கு அவரது ஊழியம்:
   a) தடைசெய்கிறவர் (2 தெசலோனிக்கேயர் 2:7). சபையுகத்தில் அவிசுவாசிகள் தடைசெய்யப்படாது இருப்பார்கள் என்றால் சாத்தானால் ஏற்படுத்தப்படும் ஒரு உலக அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும். சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு இது செயலாக்கப்படும்.
   b) கண்டித்து உணர்த்துதல் (யோவான்16:7-11).
      i) பாவம் (கண்டித்து உணர்த்தப்படுதல்) - அவிசுவாசத்தில் நிலைத்து இருக்கும் தடை..
      ii) நீதி - தேவன் முற்றிலும் நீதிபரராய் இருக்கிறார், மனிதன் தனித்தன்மையற்ற நீதியை உடையவனாய் இருக்கிறான் அவனது இரட்சிப்பிற்கு தேவனது நீதி அவசியமாய் இருக்கிறது.
      iii) நியாயத்தீர்ப்பு - சாத்தான் மற்றும் எல்லா அவிசுவாசிகளும் நியாயந்தீர்க்கப்பட்டு இருக்கின்றனர்.
      c)மறுபிறப்பு (யோவான்3:5).
      ஆவியில்லாத மனிதனால் ஆவிக்குரியவைகளை அறியமுடியாது. சுவிஷேசம் ஆவிக்குரியதாய் இருக்கிறது, பரிசுத்த ஆவியானவர் அவிசுவாசிக்கு சுவிஷேசத்தை உண்மையாக விளங்கப்பண்ணி, விசுவாசத்தின் மூலம் "மறுபிறப்பை" அந்நபரில் ஏற்படுத்துகிறார். (1 கொரிந்தியர் 2:14).

2. இரட்சிப்பில் விசுவாசிக்கு,
   a) மறுபிறப்படையச்செய்தல் (யோவான் 3:1-16, தீத்து3:5).
   b) ஞானஸ்நானம் (அப்போஸ்தலர்1:5, 1 கொரிந்தியர்12:13, எபேசியர்4:5)கிறிஸ்துவோடு இணைக்கப்பட மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் அங்கமாக ஞான்ஸ்நானம் பெறுகிறோம். இதை பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதுடன் குழப்பக்கூடாது.
   c) வாசம்பண்ணுதல் (ரோமர்8:9, 1 கொரிந்தியர்6:19, 20) ஒருவிசுவாசியின் இரட்சிப்பிலிருந்து அந்நபரில் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிறார்.
   d)முத்திரையிடப்படுதல் (2 கொரிந்தியர் 1:22, எபேசியர்1:13, 4:30). இந்த ஊழியம் தேவனுடன் உங்கள் எதிர்கால சம்பந்தப்பட்டது, இது நித்திய பாதுகாபுக்கு உத்திரவாதம் அளிக்கிறது..

e) ஆவிகுரிய வரங்களை பகிர்ந்தளித்தல்: (1 கொரிந்தியர்12:11). ஒவ்வொரு விசுவாசியும், இரட்சிப்பின் போது, கிறிஸ்துவின் சரீரத்தில் செயலாற்ற, ஆவிகுரிய வரங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

3. இரட்சிப்படைந்த விசுவாசிக்கு: (ஆவிக்குரிய நிலையில்)
பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் ஒருவர் இரட்சிப்படைந்த பின்னர், தேவன் அந்நபருக்கென நியமித்துள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வழிநடத்துது.
(எபேசியர் 2:10, 5:18).

a) பரிசுத்த ஆவியனவரால் நிரப்பப்படுதல் (ஆவிக்குரிய நிலையில் பாவங்களை அறிக்கை செய்தல் மூலம், வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் அவரால் நிரப்பப்படுகிறோம்.) (1 யோவான்1:9எபேசியர்5:18).

b) பரிசுத்த ஆவியானவரால் ஒரு விசுவாசி நிரப்பப்படும்போது, அவர் அந்நபரில் இயேசுக் கிறிஸ்துவின் குணங்களை உருவாக்குகிறார். (கலாத்தியர் 4:19, 5:22, 23)

c) கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறார். (யோவான்7:39, 16:14, 1 கொரி.6:19, 20).

d) நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார். (ரோமர்8:2-4).

<u>4. We must understand and apply Biblical Confession of Sin, and ensure we are letting the Holy Spirit truly loose in our lives. வேதாகம பாவ அறிக்கை மற்றும் பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வை கட்டப்பட்ட நிலையிலிருந்து தளர்த்திவிடுதல் போன்றவற்றை கைக்கொண்டு நாம் அதைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.</u>

<u>கிறிஸ்தவ வாழ்க்கை - அறிக்கை செய்தல் மற்றும் மன்னிப்படைதல்:</u>

1. மன்னிப்பு கிறிஸ்துவின் மரணத்தினால், நமக்குக் கிடைக்கிறதாய் இருக்கிறது (மத். 26:28, வெளி 1:5).

2. கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் அனைவருக்கும், தெய்வீக மன்னிப்பு என்பது, அவர்களது உரிமையாய் இருக்கிறது. (அப். 10:43, அப். 16:31).

3. பாவத்தின் தண்டனைக் கிரயமானது, கிறிஸ்துவால் சிலுவையில் கொடுக்கப் பட்டாயிற்று. (எபிரெயர் 9:22, 2 கொரிந்தியர் 5:21).

4. ஒரு விசுவாசி பாவம் செய்யும் போது, அவர் தேவனுடன் கொள்ளும் ஐக்கியம் பாதிக்கப்படுகிறதாய் இருக்கிறது. தேவன் இப்படிப்பட்ட பாவங்களை விசுவாசி, அறிக்கை செய்யும் போது, அவைகளை மன்னித்து, சுத்திகரிக்கிறார் மற்றும் அறியாமல் செய்த பாவங்களையும், அறிந்து செய்த பாவங்களையும் அவர்களுக்கு, அவர் மன்னிக்கிறவராய் இருக்கிறார். (1 யோவான் 1:9).

5. இயேசுக் கிறிஸ்து, நமது கிருபாதார பலியாய் இருக்கிறார். (1 யோவான் 2:1,2).

6. மனுஷர்களாகிய நாம் மன்னிக்கும் விஷயத்தில், தேவன் நமக்கு மன்னித்ததைப் போன்று, நாம் பிறரை மன்னிக்கக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளோம். (எபேசியர் 4:32). பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்போது மட்டுமே இது நிறைவேற்றப் படக்கூடியதாய் இருக்கிறது. (எபேசியர் 5:18, கலாத்தியர் 5:22,23).

7. ஐக்கியத்தைத் திரும்பப் பெறும் படிகள்:

a) உங்கள் செயல்பாடு யதார்த்தமாய் இருக்கிறதா என பரிசோதியுங்கள் (2 கொரிந்தியர் 14:5).

b) எதைக்காண்கிறீர்களோ அதன்படி செயல்படுங்கள் (ரோமர் 4:7-8).

c) எந்த பாவமானாலும், அவற்றை அறிக்கை செய்து, அதற்கு பரிகாரம் தேடுங்கள். (1 யோவான் 1:9, சங்கீதம் 66:18).

d) அறிக்கை செய்த பாவத்தை மறந்து விடுங்கள். குற்றமனசாட்சி உங்களைத் தொடராத வண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள். (பிலிப்பியர் 3:13-14, சங்கீதம் 103:10-12).

e) தற்போதுள்ள உங்கள் ஆவிக்குரிய நடக்கை குறித்துப் பட்டியலிடுங்கள். பாவத்தினால் சோதிக்கப்படும் பகுதிகளை மற்றும் அவைகள் உங்களை எளிதாய் மேற்கொள்ளும் சோதனைகளிலிருந்து விலகி இருங்கள். (எபிரெயர் 12:12,13).

f) தேவனுடன் ஒப்புரவான பின்னர், பிறருடனும் ஒப்புரவாகுங்கள். (யாக். 5:16).

g) முன்னேறிச் செல்லுங்கள் மற்றும் சீராய் வளருங்கள். (2 பேதுரு 2:17-18).

<u>பரிசுத்த ஆவியானவர்: - பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுதல்:</u>

1. பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியிலும் வாசம்பண்ணுகிறார். நமது வாழ்க்கையை அவர் நிரப்பும்படி (அல்லது முழுவதும் அவர் ஆண்டு நடத்தும்படி) கட்டளைப் பெற்றிருக்கிறோம். (எபேசியர் 5:18).

2. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது (ஆண்டு நடத்தப்படுவது) இவைகளினால் தடைசெய்யப்படுகின்றன.

a) ஆவியானவரை துக்கப்படுத்துவதால் (எபேசியர்4:30) - செய்யக்கூடாத பாவத்தை செய்வதால்.

b) ஆவியை அவித்துப்போடுவதால் (1 தெசலோனிக்கேயர்5:19) - செய்யவேண்டிய முக்கியமானவற்றை செய்யத்தவறுதல். (எரிகின்ற நெருப்பை அவித்தல், ஜுவாலை அகன்று போக அநுமதித்தல்)

3. தடைபட்ட பரிசுத்த ஆவியானவரின் நிறைவை, பாவங்களை அறிக்கை செய்வதன் மூலம், மற்றும் தேவசித்தத்திற்கு முழுமையாய் அற்பணிப்பது மூலம் திரும்பப் பெறலாம். .(1 யோவான் 1:9).

[தேவ கிருபை + பாவமன்னிப்பு + சுயசித்தத்தை, தேவனது திட்டத்திற்குள் அமைந்து, அவரது சித்தத்திற்கு அற்பணித்தல் + தேவ ஆவியானவருக்கு சுயசித்தத்தை அற்பணித்தல் => பரிசுத்த ஆவியானவரின் நிறைவு.]

4. ஆவியானவர், விசுவாசியின் வாழ்வில், கிறிஸ்துவில் உள்ள அதே குணங்களை உருவாக்குகிறார். (கலாத்தியர் 4:19, 5:22, 23, எபேசியர் 3:16, 17, பிலிப்பியர் 1:20, 21, 2 கொரிந்தியர் 3:3):

a) ஆவியின் கனி:

i) கலாத்தியர் 5:22-23 - அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்.

ii) ரோமர் 14:17 - நீதி, சமாதானம், சந்தோஷம்.

iii) கொலோசெயர் 3:12-15 இரக்கம், தயவு, மனத்தாழ்மை, பொறுமை, மன்னிப்பு, அனபு, சமாதானம், நன்றியுள்ளவராயிருத்தல்.

iv) 1 தெசலோனிக்கேயர்1:3 - விசுவாசம், அன்பு, பொறுமை, நம்பிக்கை.

b) கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாயிருத்தல் (Philippians 3:1, 4:4).
c)ஒருவரிலொருவர் அன்பு கூறுதல் (யோவான்15:12, ரோமர்12:10எபேசியர்5:2).
d)விசுவாசப்போராட்டம் (பிலிப்பியர் 1:27, யூதா3).
e)பாவத்தை புறம்பாக்குதல் (1 கொரிந்தியர் 5:7, எபிரெயர் 12:1).
f)பொல்லாங்காய் தோன்றுகிறவைகளைவிட்டு விலகுதல் (1 தெசலோ.5:22).
g)அநியாயத்தை சகித்தல் (1 கொரிந்தியர்6:7).
h) கோபத்தை அடக்குதல் (எபேசியர்4:26, யாக்கோபு 1:19).
i) ஒழுங்கற்று நடக்கிறவர்களை விட்டு விலகுதல் (2 தெசலோனிக்கேயர்3:6).
j)கர்த்தருக்கேற்ற கிரியைகளில் பெருகுதல் (1கொரிந்தியர் 15:58
1 தெசலோனிக்கேயர் 4:1).
k) நல்ல முன்மாதிரியைக் காண்பித்தல் (1 தீமோத்தேயு4:12, 1 பேதுரு2:12).
l)நன்மையை பின்பற்றுதல் (பிலிப்பியர் 4:8, 1 தீமோத்தேயு 6:11).
m)பரிசுத்தத்தைப் பூரணப்படுத்துதல் (2 கொரிந்தியர் 7:1, 2 தீமோத்தேயு 3:17)
n) கறைபட்டதை வெறுத்தல் (யூதா23).
o) உலகத்தை ஜெயித்தல் (1 யோவான்5:4-5).
p) சுவிஷேசத்திற்காக போராடுதல் (பிலிப்பியர் 1:27)
q) சத்துருவை மன்னித்தல் (ரோமர்12:20).
r) எல்லாரோடும் சமாதானமாயிருத்தல் (ரோமர் 12:18, எபிரெயர்12:14).
s) உபத்திரவப் படுகிறவர்களை விசாரித்தல் (யாக்கோபு 1:27).
t)அழுகிறவர்களுடனே அழுதல் (ரோமர் 12:15, 1 தெசலோனிக்கேயர்5:14).
u) கனம் பண்ண முந்திக்கொள்ளுதல் (ரோமர் 12:10).
v)அதிகாரத்தில் உள்ளவர்களுக்குக் கீழ்ப்படிதல் (ரோமர் 13:1-7).
w) போதுமென்ற மனதுடன் இருத்தல் (பிலிப்பியர் 4:11, எபிரெயர்13:5).
x)கர்த்தருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளுதல் (கொலோசெயர்1:10,
1தெசலோனிக்கேயர் 2:12).
y)புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளுதல் (ரோமர் 6:4).
z) வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுதல் (எபேசியர்5:8).
aa)கிறிஸ்துவை அவரது சரீரத்தில் மகிமைப்படுத்துதல் (பிலிப்பியர்1:20, 21).
bb) கிறிஸ்து இருதயத்தில் வாசமாய் இருத்தல் (எபேசியர்3:16,17)

cc) மனிதருக்கு முன்பாக தேவனை மகிமை படுத்தி வாழும் வாழ்க்கை முறை (2 கொரிந்தியர்3:3)

5. பரிசுத்த ஆவியானவரால் ஒவ்வொரு விசுவாசியும் நிரப்பப்படுவது இரண்டு யுகங்களில் மட்டும் நிகழக்கூடியதாய் இருக்கிறது..

a) சபை யுகம்: எபேசியர் 5:18, கலாத்தியர் 5:22,23.

b) ஆயிர வருட ஆழுகையின் போது: யோவேல் 2:28, 29. (characterized by ecstatics)

<u>5. We must understand and apply Biblical truth into our daily lives, and grow up in the Grace and the Knowledge of the Lord Jesus Christ. 2 Peter 3:18. அனுதின வாழ்வில் வேதாகம சத்தியத்தைக் கைக்கொள்ளுதல், மற்றும் கிருபையிலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளருதலை புரிந்து கொள்ளுதல் அவசியம்.</u>

கிறிஸ்தவ வாழ்க்கை:- ஆவியின் கனி

1. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது வாழ்வில் கனியை உருவாக்கும். (அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்) (கலாத்தியர்5:22-23) . "ஆவியின் கனி" என்பது ஒருமை வாக்கியம், இது குறிப்பிடத்தக்கது - எல்லா நற்பண்புகளும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்பொழுது ஒரே நேரத்தில் உருவாகின்றன.

2. நாம் இரட்சிக்கப்பட்டபின்னர் இப்பூமியில் இருப்பதன் நோக்கம் கனி கொடுப்பதற்காக (யோவன் 15:16, பிலிப்பியர் 4:17).

3. நாம் தேவனுடைய வார்த்தையை கேட்பதினால் கனி கொடுக்கிறோம். (மாற்கு4:20-28). மற்றும் அதன்படி செய்வதன் மூலம் கனிகொடுக்கிறோம். (எபிரெயர்4:2).

4. கனிகொடுக்கத்தவறும்போது, விசுவாசிக்கு தெய்வீக சிட்சைக்கு வழிவகுக்கும், மேலும் விசுவாசியின் அகால மரணம் கூட நேரிடலாம்.
(லூக்கா13:6-9 யோவான்15:2).

5. கனி கொடுத்தலின் அளவைக்கொண்டே நித்தியத்தில், பிரதிபலன்கள் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. (1 கொரிந்தியர் 3:10-15, 2 கொரிந்தியர் 5:10).

6. ஆவிக்குரிய வரங்களுடன் சம்பந்தப்படுத்தி, ஆவிக்குரிய கனியை குழப்புதல் கூடாது. வரங்கள் இவ்வேதபகுதிகளில் பட்டியலிடப்பட்டுள்ளன. (ரோமர் 12:6-8; 15:18-19; 1 கொரிந்தியர் 12:8,10; 1 கொரிந்தியர் 12:28-30; எபேசியர் 4:1).

7. ஒருவர் ஒரு கிறிஸ்தவரை அவர்களில் இருக்கும் கனியினால் அறிந்து கொள்ள இயலும். (மத்தேயு 7:16-20; லூக்கா 6:43-45; 1 யோவான் 3:10 & 11; யோவான் 15:8). முக்கியமாக அவர்களது அன்பினால், அவர்களை அறிந்து கொள்ள இயலும். (யோவான் 13:35). அவர்களில் இருக்கும் வரங்களைக் கொண்டு அவர்களை அறிந்துகொள்ளக்கூடாது, காரணம் சாத்தானும் அவர்களைப்போன்று போலியான / பொய்யான வரங்களை பயன்படுத்துகிறவனாய் இருக்கிறான். (2 தெசலோனிக்கேயர் 2:9).

8. எபிரேய உலகக் கண்ணோட்டத்தின்படி, இயல்பான கனிகளானது, ஆவிக்குரிய கனியை பிரதிபலிப்பனவையாய் இருக்கின்றன. ஆப்பிள் = அன்பு, திராட்சை = மகிழ்ச்சி, மாதுளை = சமாதானம். வேத ஒத்தவாக்கிய அகராதியில் இப்படிப்படிப்பட்ட கனிகள் குறிப்பிடப்பட்டுள்ளது, அவற்றை ஒத்துப்பார்த்து அதன் அர்த்தத்தை விளங்கிக்கொள்ளவும்.

9. கலாத்தியர் 5:22-23 ல் கூறப்பட்டுள்ள ஆவியின் கனியானது மூன்று பகுதிகளாய் பிரிக்கப்பட்டுள்ளன.

[அ] அன்பு, சந்தோஷம், சமாதானம் தேவனுக்கு நேராக செலுத்தும் கனியாய் இருக்கிறது.

[ஆ] பொறுமை, தயவு, நற்குணம் பிறருக்கு நேராக செலுத்தும் கனியாய் இருக்கிறது.

[இ] விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஒருவரது வாழ்வில் தன்னில்தானே உருவாகும் கனியாய் இருக்கிறது.

கிறிஸ்தவ வாழ்க்கை: முதிர்ச்சி

விசுவாசிகளின் வகைகள்:

1. ஆவிக்குரிய நிலைப்பாடு:
    - a) ஆவிக்குரிய விசுவாசி - ஒரு விசுவாசியின் உள்ளான நிலையில் பரிசுத்த ஆவியானவர் கட்டுப்பட்டு செய்தல் (ரோமர் 8:6b).
    - b) மாம்சீக விசுவாசி - ஒரு விசுவாசியின் உள்ளான நிலையில் பாவத்தனமை கட்டுப்பாடு செய்தல் (ரோமர்8:6a).

2. வளர்ச்சியின் அமைப்பு
    - a) குழந்தை - கிறிஸ்துவை இரட்சகராக தற்பொழுது ஏற்றுக்கொண்டவர்கள்.
    - b) வாலிபர் - சில உபதேசங்களைக் கற்றுக்கொண்டு அவைகளை கைக்கொள்ள அறியதிருக்கும் பருவத்தினர்.

c) முதிர்ச்சியடைந்தோர் - உபதேசங்களை அறிந்து அவைகளைக் கைக்கொண்டு மற்றும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு நீண்ட நேரத்தை தேவ சமூகத்தில் செலவு செய்பவர்கள்.

3. முதிர்ந்த தன்மை மற்றும் ஆவிக்குரிய தன்மைகளின் உறவு:

a) ஆவிக்குரிய தனமை முழுமையானது. பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கட்டுப்படுத்தலாம், கட்டுப்படுத்தாமல் இருக்கலாம். ஒருவர் சிறிதளவு மாம்சீகத்துக்கு இடம் கொடுத்தல் என்பது இல்லை. அவர் மாம்சீகத்துக்குறியவராய் இருப்பாரானால், அவர் ஆவிக்குரியவராய் இருக்கமுடியாது.

b) முதிர்ச்சியடைதல் ஆவிக்குரிய தன்மையினால் துரிதப்படுத்தப்படுகிறது, ஒரு குழந்தை விசுவாசி ஆவிக்குரியவராகவோ அல்லது மாம்சீகத்துக்குரியவராகவோ இருக்கலாம், முதிர்ந்த விசுவாசி ஒன்று மாம்சீகத்துகுரியவராய் இருக்க வேண்டும் அல்லது ஆவிக்குரியவராய் இருக்க வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை: நிலையானத்தன்மை:

1. தேவன் நம்மைக் காக்கவும், ஆசீர்வதிக்கவும் வல்லவராய் இருக்கிறார். (எபேசியர் 3:20, எபிரெயர் 7:25).

2. நிலையானத் தன்மையானது தேவனை நாம் அறியும்போது, மற்றும் அவரது வார்த்தையில் வளரும்போது, நமக்குக் கடந்துவருகிறதாய் இருக்கிறது, முதிர்ச்சியானது நிலையானத் தன்மையை கொண்டு வருகிறதாய் இருக்கிறது. (2 பேதுரு 3:18, 2 தீமோத்தேயு 1:12).

3. நிலையான விசுவாச வாழ்க்கையானது, ஒவ்வொரு நெருக்கமான சூழலிலும், அலசடிக்குள்ளாகிறது. இது உபதேசத்தினை வாழ்வில் கைக்கொள்ளாததால் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. (யாக்கோபு 1:6, எபேசியர் 4:14, வெளிப்படுத்தல் 3:8).

4. உபதேசமற்ற அபாயகரமான நிலையில், சாத்தானின் தந்திரங்களுக்கு எதிராக விசுவாசிகள், நிலையான தன்மையுடன் இருப்பது அவசியமாய் இருக்கிறது. கீழ்க்கண்ட காரியங்களில் நிலைத்திருக்க நாம் கேட்டுக்கொள்ளப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.

அ] விசுவாசத்தில் நிலைத்திருத்தல் 1 கொரிந்தியர் 16:13.

ஆ] சுயாதீன நிலையில் நிலைகொண்டிருத்தல். கலாத்தியர் 5:1 cf. ரோமர் 14:1ff, 8:9-13.

இ] ஒரே ஆவியில் உறுதியாய் நிற்றல். (குறுகிய மனப்பான்மையில்லாதிருத்தல்) பிலிப்பியர் 1:27.

ஈ] கர்த்தருக்குள் நிலைத்திருத்தல் (ஐக்கியத்தில்) பிலிப்பியர் 4:1.

உ] உபதேசத்தில் நிலைத்திருத்தல். 2 தெசலோனிக்கேயர் 2:5, 16,17.

5. விசுவாசத்தினால் நாம் நின்று, கர்த்தருடன் கொள்ளும் உறவில், பலமும், நிலைத்திருத்தலும் நெருங்கிய நிலையில் கடந்து வருகிறதாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 1:24, சங்கீதம் 59:17, 62:7, 144:1.

6. தேவன் நமது நிமித்தம், தமது சர்வ வல்லமையை உடையவராய் விளங்குகிறார். ஏசாயா 59:1.

7. தேவனது வல்லமையில் நமது விசுவாசமானது பாதுகாப்பாய் இருக்க வேண்டியதாய் இருக்கிறது, எல்லாக் காரியங்களிலும் இதனால் நாம் காக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம், இதினிமித்தம் நாம் நிச்சயமுள்ளவர்களாய் இருக்க வேண்டியது அவசியமானதாய் இருக்கிறது. 1கொரிந்தியர் 2:5, 1 பேதுரு 1:5, யோவான் 16:33.

8. பரிசுத்த ஆவியானவரின் கிரியையின் மூலம், நமது வாழ்க்கையானது அவரது வார்த்தையில் நிலைகொண்டிருக்கத் தேவன் செய்கிறவராய் இருக்கிறார். ரோமர் 14:4, யூதா 24.

9. பலமும், நிலையானத் தன்மையும் நமது வாழ்வில் இருக்கும் வேத வசனத்தால், பரிசுத்த ஆவியானவரின் தாக்கம் மூலம் வருகிறதாய் இருக்கிறது. உ.ம். சாராள். எபிரெயர் 11:11, பவுல். 2 கொரிந்தியர் 12:8-10.

10. நெருக்கங்களுக்குக்கீழ் ஒரு நிலையான விசுவாசியின் பக்கத்தோற்றம். 2 பேதுரு 1:3-16.

கிறிஸ்தவ வாழ்க்கை: முதிர்ச்சி - முதிர்ச்சியின் அடையாளங்கள் (ரோமர் 15:1-15).

1. பிறருக்கு உதவுதல் (வச 1-3). முதிர்ச்சியுள்ள விசுவாசி பெலவீனரின் பெலவீனத்தை தாங்குகிறவராய் இருப்பர். (வச 1; cf. கலாத்தியர் 6:2). முதிர்ச்சிக்குரிய பெலனில் பவுல், தன்னை ஒரு விசுவாசியாசியாக உட்படுத்திக்கொள்கிறவராய் இருக்கிறார்.

அ] முதிர்ச்சியடைந்த விசுவாசி இவ்வகையான குணங்களால் ருசுப்படுத்தப்படுகிறார்.

i) உபதேசத்தினை அறிந்திருத்தல்.

ii) வாக்குத்தத்தங்களை அறிந்திருத்தல்.
iii) பரிசுத்த ஆவியானவரால் நிரப்பட்டு ஜீவிப்பதில் அதிக நேரத்தை செலவளிப்பவராய் இருத்தல்.

ஆ] பெலவீனமான அல்லது முதிர்ச்சியற்ற விசுவாசி:
i) ஒரு புதிய விசுவாசியாய் இருப்பர்.
ii) தேவனது வார்த்தையை சரிவர அறியாத விசுவாசியாய் இருப்பர்.

இ] முதிர்ச்சியுள்ள விசுவாசி பெலவீனரின் பெலவீனங்களை கீழ்க்காணும் விதங்களில் தாங்குகிறவராய் இருப்பர்:
i) தேவனது வார்த்தையைக்குறித்த விவரங்களை அளிக்கிறவராய் இருப்பர். (உபதேசம், வாக்குத்தத்தம், வழிமுறை போன்றவற்றைக் கற்றுக்கொடுப்பவராய் இருப்பர்) இதை அவர்களுக்குத் தனிப்பட்ட நிலையில் கற்றுக்கொடுப்பர்.
ii) அவர்களுக்கு அளிக்கும் அறிவுரைகள் வேதத்தின் அடிப்படையில் இருக்கும்.
iii) மற்றவர்களது பிரச்சனைகளுக்கு பரிகாரம் காண்பது, அவர்கள் கூறுவதை கூர்ந்து கவனித்து, பொறுமையுடன் கவனித்து, கிருபையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் இருக்கும்.

ஈ] முதிர்ச்சியுள்ள விசுவாசி, தன்னில்தானே திருப்திகொள்கிறவர் அல்லர். (வச. 1,2.)
i) இவர் தனது சுயத்தைப் போஷிப்பவர் அல்லர் அல்லது மற்றவர்களுக்கு உதவி செய்வதை காண்பித்துக் கொண்டுத் திரிகிறவரும் அல்லர். பிறருக்குச் செய்யும் நன்மையானது சுய மகிமைக்காய் அல்லாது தேவமகிமைக்காய் இருத்தல் வேண்டும்.
ii) கிறிஸ்து இதற்கு எல்லாவற்றிற்கும் மேலான உதாரணமாய் இருக்கிறார். (வச. 3).

கிறிஸ்து தனக்கே விருப்பமுள்ளவராய் நடந்துகொள்ளவில்லை. நமக்கு ஒருபோதும் இல்லாத அளவுக்கு, அவர் மனிதனாய் இருந்தபோது நெருக்கங்களை சந்தித்தவராய் இருந்தார். பழைய ஏற்பாட்டில் இவ்வாறு கூறப்படுகிறது, "உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது, உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது." (சங்கீதம் 69:9). நமது பாவங்களை கிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்தபோது, மிகுந்த நெருக்கங்களுக்கு உட்பட்டார்.

2. தேவனது வார்த்தையைக்குறித்த அறிவு (வச. 4)

அ] பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் மட்டுமே வேதவசனங்களாய், ரோமர் நிரூபம் எழுதப்பட்ட சமயத்தில் இருந்தது. பகுக்கப்பட்ட வேதாகமமானது இப்பொழுது நிறைவுக்கு வந்தது.

ஆ] தேவ வார்த்தைக்கான நோக்கம்.

i) கற்றுக்கொள்ளுதலுக்கு - தேவன் நாம் உபதேசங்களை அறிந்து விருப்பமுள்ளவராய் இருக்கிறார்.

ii) பொருமைக்காக - விசுவாசம் நீண்ட தூரம் பயணிக்கக்கூடியதாய் இருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விசுவாசிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

iii) ஆறுதலுக்காக - வாழ்வின் கடினமான சூழலிலும், சோதிக்கப்படுகிற காலங்களிலும் ஆறுதல் அவசியமாய் இருக்கிறது.

iv) நம்பிக்கைகாக - எதிர் காலத்திற்காக நம்பிக்கை அவசியமாய் இருக்கிறது. விசுவாசிகள் எங்கு சென்று கொண்டிருக்கிறார்கள் என்கிற அறிவுடையவர்களாய் இருத்த வேண்டும்.

.

3. நடத்தைகள் (வச 5-6).

விசுவாசிகள் தெய்வீகக் கண்ணோட்டத்தில் மற்றவர்களைக் காணுதல் வேண்டும், "ஒருவர் மற்றொருவரை, ஏக மனதுடன் காணுதல் வேண்டும்." இரட்சிப்பிற்குப் பின்னர் அவர்களது ஒரே நோக்கம், "ஒரே மனதுடனும், ஒரே வாயினாலும் தேவனுக்கு மகிமை கொண்டு வருதல் வேண்டும்." (வச. 6.) தெய்வீகக் கண்ணோட்டத்தில் மட்டுமே, இது சாத்தியமாகும்.

i) நாமனைவரும் கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம். நாம் கிறிஸ்துவின் விரோதிகளாய் இருக்கும்போது, அவர் நமக்காய் மரித்தார் (ரோமர்5:8).

ii) நாமனைவரும் ஒரேவிதமான ஆவிக்குரிய சிலாக்கியங்களையும் மற்றும் செயல்படும் கடமைகளையும் பெற்று இருக்கிறோம். (ஆவிக்குரிய வரங்களைத் தவிர).

iii) ஒவ்வொரு விசுவாசியும் பாவ சுபாவத்தினை உடையவர்களாய் இருக்கின்றனர், அவர் அதை வித்தியாசமான வழிகளில் அதை வெளிக்காட்டுகிறவர்களாய் இருக்கின்றனர்.

iv) நாமனைவரும் ஒரேவிதமாய் ஆவிக்குரிய தன்மையை பெறுகிறவர்களாய் இருக்கிறோம், (பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெறுவதும் ஒரேவிதமாய் இருக்கிறது) மற்றும் அனைவரும் கர்த்தருடைய வார்த்தையினால், ஒரேவிதமாய் வளருகிறவர்களாய் இருக்கிறோம்.

v) தேவன் ஒவ்வொரு விசுவாசியையும் ஒரேவிதமாய் நேசிக்கிறவராய் இருக்கிறார், தற்காலிக ஐக்கியத்தில் இருக்கிறோமோ அல்லது இல்லையோ அவரது அன்பானது எல்லோர் மேலும் சமசீரான நிலையில் இருக்கிறது.

4. கிருபையின் அடிப்படையிலான ஐக்கியம். (வ. 7)

அ] கிறிஸ்து ஒருவரை ஏற்றுக்கொள்வதைப் போன்று, விசுவாசிகள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஆ] தேவ மகிமைக்காய் அவர் அவர்களை, கிருபையில் ஏற்றுக்கொண்டார்.

5. இஸ்ரவேல் மற்றும் சபை இவற்றிற்கிடையே உள்ள வேற்றுமைகளைப் புரிந்துகொள்ளுதல். (வச. 8-12).

அ] கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் கீழ் தேவ ஊழியராய் இருந்தார். (வச 8).

i) நியாயப்பிரமாண யுகத்தில் கிறிஸ்து பிறந்து, ஊழியம் செய்து, மரித்து அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்து, பரமேறிச் சென்றார்.

ii) இதினிமித்த அவர் சொன்ன அனைத்தும் (மத்தேயு 16 மற்றும் யோவான் 14-17, தவர) மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பிரசித்தப்படுத்துவதாய் இருந்தது. மட்டுமின்றி, நான்கு நிபந்தனையற்ற உடன்படிக்கைகளை இஸ்ரவேலருக்கு உறுதிசெய்கிறதாய் இருந்தது, இஸ்ரவேலின் எதிர்கால இராஜவாக அவர்களுடன் இருப்பதைப் பற்றியதாய் இருந்தது. அவர் அளித்த சில அடிப்படைக் கருத்துக்கள், கிறிஸ்தவ வாழ்வின் வழியாக, நிருபங்களில் திரும்ப குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆ] நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னர் (வச 9) யூதர்களை ஆசீர்வதிக்கும்படியாக ஆபிரகாமின் மற்றும் பாலஸ்தீன உடன்படிக்கைகள் வாக்குத்தம் செய்யப்பட்டன, மட்டுமின்றி புறஜாதியர் தேவனது இரக்கங்களை அறிந்து, அவரை மகிமைப் படுத்துவண்ணம் இது இருந்தது.

இ] பவுல், இயேசுக்கிறிஸ்துவானவர், ஈசாயின் குமாரனாகிய தாவீதின் வேராய் இருந்து புறஜாதியாரின் மீதும் ஆழுகை செய்வதாய் பழைய ஏற்பாட்டு மேற்கோள்களை எடுத்துக் கூறுகிறார். (சங்கீதம் 18:49; உபாகமம் 32:43; சங்கீதம் 117; ஏசாயா 11:1-10).

6. விசுவாசத்தை உரிமையாக்கிக் கொள்ளுதல். (வச 13).

அ] நம்பிக்கையின் தேவன், விசுவாசிகளை சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும், அவர்கள் விசுவாச வட்டத்திற்குள்ளாக நிரப்புகிறவராய் இருக்கிறார். விசுவாசம் இதற்கு வழி அமைத்துக் கொடுப்பதாய் இருக்கிறது.

ஆ] விசுவாசமானது, இரட்சிப்பு, ஐக்கியத்திற்குள்ளாக திரும்பச் சேர்ப்பது, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது, உபதேசம், வாக்குத்தத்தங்கள் போன்றவற்றை உரிமையாக்கிக் கொள்கிறது.

7. கிருபையின் செயல்பாட்டை அறிந்துகொள்ளுதல். (வச 14,15).

அ] முதிர்ந்த விசுவாசியானவன், அவன் பெற்றிருப்பதெல்லாம் தேவனது கிருபையால் என உணருகிறவனாய் இருக்கிறான். அவன் தனது வாழ்வை கிருபையின் அடிப்படையில் செயல்படச் செய்கிறவனாய் இருக்கிறான்.

ஆ] கிருபையானது ஒருவிசுவாசியின் வாழ்வில் கீழ்க்கண்டவற்றில் வெளிப்படுகிறதாய் இருக்கிறது:

i) இரட்சிப்பு (எபேசியர் 2:8,9)
ii) ஜெபம் (எபிரெயர் 4:16)
iii) பாடுகள் (2 கொரிந்தியர் 12:9)
iv) வல்லமை வெளிப்படுத்துதல் (2 தீமோத்தேயு 2:1).

v) வளர்ச்சியும் நிலைத்திருத்தலும் (2 பேதுரு 3:18)

vi) திரும்பச்சேர்த்துக்கொள்ளப்படுதலும், ஐக்கியமும் (எபிரெயர் 12:15; 1 யோவான் 1:9)

vii) கிரியை செய்தல் (1 கொரிந்தியர் 15:10; 2 கொரிந்தியர் 6:1; 9:9)

viii) வாழ்விற்கான கிறிஸ்தவ வழி (2 கொரிந்தியர் 1:12; எபிரெயர் 12:28).

6. We must understand and apply the love of God for the lost and the rebellious, and reach out to them in loving concern. We must also understand the strategy and tactics of the one who opposes every good work. கலகம் செய்கிறவர்கள் மற்றும் இழந்து போனோர் மீது தேவ அன்பை காட்டுதலும், அவர்களை அன்புடனுடனும், கரிசனையுடனும், சந்தித்து தேவ அன்பை விளங்கச் செய்தல் குறித்து அறிந்துகொண்டு, தேவ அன்பைக் கைக்கொள்ளுதல் அவசியம். மற்றும் ஒவ்வொரு நற்கிரியையும், எதிர்த்து கிரியை செய்துவரும் சாத்தானின் உபாய தந்திரங்களை அறிந்து, புரிந்துகொள்ளுதல் அவசியம்.

கிறிஸ்த வாழ்க்கை: சுவிஷேசம் அறிவித்தல்:

1. எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாயிருக்கிறோம். அவிசுவாசிகளுக்கு பெருந்தன்மையுடன் சுவிஷேசத்தை கொடுக்கவேண்டும். (அப்போஸ்தலர் 1:8, 2 தீமோத்தேயு4:5).

2. சாட்சிகளாயிருப்பது இருவகைப்படும் - உதடுகளால் (2 கொரிந்தியர் 5:18-21) மற்றும் ஜீவியத்தால் (2 கொரிந்தியர் 3:3).

3. சுவிஷேசம் என்பது "நற்செய்தி."

4. பாவம் ஒரு பொருட்டல்ல, இயேசு எல்லா பாவங்களுக்காய் சிலுவையில் மரித்தார். பாவத்திற்கான அபராதம் செலுத்தப்பட்டாயிற்று. இப்பொழுது நீ உனது பாவங்களுக்காய் இயேசுக்கிறிஸ்து மரித்தார் என்றும் உனக்கு ஜீவனை அளிக்கும்படி மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டாரென்று அவரை நம்புகிறாயா? ஜனங்கள் இயேசுக்கிறிஸ்துவை சார்ந்து இருப்பதை அல்லது தங்கள் சொந்த நற்கிரியைகளை சார்ந்து இரட்சிக்கப்படுவதை தெரிந்துகொள்கிறார்கள். (ரோமர்8:1, 9-30-33)

5. சுவிஷேசத்தைக் கேள்விப்படாத புறஜாதிகளின் நிலை என்ன?

a) தேவன் முற்றிலும் பட்சபாதமற்றவர், ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

b) வரையறையற்ற பிராயச்சித்தம் (கொலோசெயர் 2:14,15)

c) தேவசித்தம் - ஒருவரும் கெட்டுப்போகக் கூடாது (2 பேதுரு3:9)

d) மனிதனின் எதிர்மறையான சித்தம் - தேவனைப்பற்றிய உணர்வு - சுவிஷேசக் கேள்வி.

6. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின்றி சாட்சியாயிருப்பது இயலாத காரியம்.(யோவான்16:8-13) பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதல்

a) பாவம்: காரணம் அவிசுவாசம்.
b) நீதி. காரணம் சுய நீதி மேலிடுவதால்,
c) நியாயத்தீர்ப்பு: காரணம் சாத்தான் நியாயந்தீர்க்கப்பட்டமையால் (மத்தேயு25:41)

7. இயல்பாக மனிதர் சுவிஷேசத்தைப் புரிந்துகொள்ள பரிசுத்த ஆவியானவர் தேவைப்படுகிறார். (1 கொரிந்தியர்2:14)

8. சாட்சிபகருவதற்கு வேதாகமம் ஒப்பற்ற உபகரணமாய் விளங்குகிறது. (1 கொரிந்தியர் 15:3, 4)

9. வேதாகம அடிப்படையில் சாட்சிபகருதல் (1 தெசலோனிக்கேயர் 2:1-12)

a) மெய்யான தொடர்பு (வச 1)
b) எதிர்ப்புகள் இருப்பினும் சுவிஷேசத்தை அளித்தல் (வச 2)
c) சுவிஷேசம் எவ்விதக் காரியங்களுடனும் ஒத்துப்போகக்கூடாது (வச 3)
d) சுவிஷேசம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசியை தேவன் பரீட்சிக்கிறார். மனிதர்களால் வரும் மகிமையை தேடக்கூடாது. (வச 4)
e) இச்சகமான வார்த்தைகள் சுவிஷேசத்தின் ஒரு பகுதியாய் இருக்கக்கூடாது.(வச 5-6)
f) சுவிஷேசம் அளிக்கப்படும்போது மனிதபுகழ்ச்சிக்காய் இருக்கக்கூடாது, எவ்வித எதிர்பார்ப்பு மற்றும் கிரயமின்றி சுவிஷேசம் அறிவிக்கப்படவேண்டும். (வச 9)
g) சுவிஷேசம் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் (வச 10) சீஷர்கள் உருவாக்கப்பட்டு, மற்றும் போதனைகளால் அவர்களை வளர்ந்தோங்கச்செய்ய வேண்டும், (வச 11) புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய நிலையில், தங்களில் பெலன்கொள்ள இது ஏதுவுண்டாக்கும். (வச 10-12)

10. நீங்கள் கட்டாயம் சாட்சிபகருதல் வேண்டும். (ரோமர்1:14-16): நீங்கள் சுவிஷேசம் அறிவிக்க கடனாளிகளாய் இருக்கிறீர்கள் (வச 14), எப்பொழுதும் ஆயத்தமாய் இருத்தல் வேண்டும் (வச 15) நீங்கள் வெட்கப்படக் கூடாது (வச 16).

11. ஆத்தும ஆதாயம் செய்யுங்கள், தர்க்கிக்காது இருங்கள், சுவிஷேசத்தை மட்டும் அறிவியுங்கள், வழிவிலகாதிருங்கள்.

12. நாம் மனிதர்களை (மனிதர்களாகிய மீன்களை) பிடிக்கிறவர்களாய் இருக்கிறோம். மத்தேயு4:19

a) மீன்பிடிகாரர்கள் மீன்பிடிக்க கற்று இருத்தல் அவசியம். நீங்கள் ஆவியில் நடத்தல் வேண்டும், மற்றும் சுவிஷேசத்தை அறிந்திருத்தல் அவசியம்.

b) மீன்பிடிகாரர்கள் மீன்கள் எங்குள்ளதோ அங்கு செல்வர். அவிசுவாசிகளுடன் நீங்கள் தொடர்புடையவர்களாய் இருக்கவேண்டும், அப்படி இருப்பதன் மூலம் நீங்கள் அவர்களுக்கு சாட்சிபகர ஏதுவுண்டாகும்.
c) மீன்பிடிகாரர்கள் பொறுமையுடன் இருப்பர். பரிசுத்த ஆவியனவர் அவிசுவாசியை ஆயத்தப்படுத்தி, முற்றிலும் அவரை நம்பச்செய்யும் வரை அநுமதிக்கவேண்டும்.
d) மீன்பிடிகாரர்கள் ஒவ்வொருவகையான மீனுக்கும் அவைகளை கவர்ந்து இழுக்கும் ஆகாரத்தை அறிந்திருப்பர். அவிசுவாசிகளிடம் அவர்களது தன்மைக்கேற்ற சுவிஷேச அனுகுமுறையில் வளைந்து கொடுத்து செல்ல அறிந்திருக்க வேண்டும்.
e) மீன்பிடிகாரர்கள் மீன்கள்மீதே கவனம் செலுத்துவர், மீன்கள் உள்ள குளத்தின் மீது அல்ல, நமது அடிப்படை நோக்கம் ஜனங்கள் இரட்சிப்படைவதே - இவ்வுலகில் உள்ள தீமையானது தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும்.

தேவ தூதர்கள் -- சாத்தானின் உபாயங்களும் மற்றும் அவனது தந்திரங்களும்.

சாத்தானின் உபாயங்கள்:

தேவதூதர்களின் ஆலோசனைக்காக, தேவன் தமது பணியாளர்களை அழைக்கிறபோது, சாத்தானானவன் அவர்களை குழப்பத்திற்குள்ளாக்கி, அவர்களது மனக்கண்களைக் குருடாக்கி, தேவனது திட்டத்திலிருந்து அவர்களை அகலும்படி செய்கிறவனாய் இருக்கிறான். அவன் இதை தனது வஞ்சக ஆவியினால் செய்கிறவனாய் இருக்கிறான். அவிசுவாசிக்கு, சுவிஷேசம் சென்றடையாத வண்ணம் செய்கிறவனாய் இருக்கிறான், உபதேசமானது விசுவாசியை சென்றடையாதவண்ணம் செய்து, அவர்கள் வளர்ச்சியின்றி, குன்றி, மரித்துப்போன நிலையில் காணப்படும்படி செய்கிறவனாய் இருக்கிறான்.

அவனது மற்ற உபாயமானது, இஸ்ரவேலரை கொலை செய்வது, மற்றும் அவர்களைப் பகைப்பதன் மூலம், அவர்களை வேரோடு அகற்ற முயற்சிப்பது ஆகும். கிறிஸ்து யூதர்களை தற்போதுள்ள, சீயோன் இயக்கத்திற்காக அல்ல, அவர்தாமே தனது ஜனங்களை கூட்டிச் சேர்த்துவருவதை அறிகிறவர்களாய் இருக்கிறோம். சாத்தான் யூதர்களை முற்றிலுமாய் அழித்துவிடுவானேயாகில், அவன் தேவனது திட்டத்தையும் அழித்துவிடுகிறவனாய் இருப்பான்.

சாத்தானின் தந்திரங்கள்:

சாத்தான் தனது உபாயங்களை நிறைவேற்றும்படிக்கு அவன், இப்படிப்பட்ட யுக்திகளை பயன்படுத்துகிறவனாய் இருக்கிறான். சாத்தானின் தந்திரங்கள், யோவான் 8:44ல் கொடுக்கப்பட்டுள்ளன. அவன் பொய்யனும், பொய்யுக்குப் பிதாவுமாய் இருக்கிறான். சிலவேளைகளில் சாத்தானின் பொய்களில், போதுமான அளவிற்கு சத்தியம் அமையப்பெற்று, அஜாக்கிரதையாய் இருப்பவர்களை

வஞ்சகத்திற்குள்ளும், தவறான போதனைகளுக்குள்ளும் விழும்படி செய்கிறதாய் இருக்கிறது. அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனும், பொய்யனுமாய் விளங்கிவருகிறான். வார்த்தையாகிய கிறிஸ்துவானவர் மட்டுமே, சத்தியமும், யதார்த்தமுமானவராய் இருக்கிறார். எந்த ஒரு மனிதர் சத்தியத்தைப் புறட்ட எத்தனிக்கிறாரோ அம்மனிதர் சாத்தானுக்காக பணியாற்றி வருகிறவராய் இருக்கிறார். கிறிஸ்தவத்தைப் புறக்கணிப்பது, சத்தியத்தை புறக்கணிப்பதற்கு சமமாய் இருக்கிறது. எம்மதமும் சம்மதம் என்பது தவறான கருத்தாய் இருக்கிறது.

இன்றைய அளவில் கிறிஸ்தவர்கள், வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் சரிவர முன்னேறத் தவறி வருகிறார்கள், இதினிமித்தம் தலைமைத்துவத்துவத்தை இப்படிப்பட்ட பகுதிகளில் உரிமைபாராட்ட இயலாதவர்களாய் இருக்கின்றனர், மற்றும் அவிசுவாசிகளுக்கு கடமை தவறியவர்கள், தண்டம் கட்டிவருகின்றனர். இப்படிப்பட்ட பகுதிகள் இலக்கியம், சரித்திரம், தத்துவம், இசை, விஞ்ஞானம் போன்றவைகளில் வெளிப்பட்டு தேவனை விட்டு திசைத் திருப்புகிறவைகளாய் இருக்கின்றன.

ஒரு கிறிஸ்தவர், வாழ்க்கைக்கு ஒத்துவராதவைகள் மீது வெற்றிகொள்கிறவராய் இருத்தல் வேண்டும், இக்காலங்களில், சாத்தானானவன் முறண்பாடான காரியங்களினால் மக்கள் இனத்தை குழப்பத்திற்குள்ளாக்கி வருகிறான், சிருஷ்டிப்பா, பரிணாமமா, creation versus evolution, relativism versus absolute values, internationalism versus nationalism. சர்வதேசக் கொள்கைப் பகுதிகளில் அவன் யுத்தம் மற்றும் சொற்போர் / கலகங்களுக்குக் காரணமாய் இருந்து வருகிறான்.

சாத்தான் விசுவாசியை குழப்பத்திற்குள்ளாக்க முயன்று வருகிறான். ரோமர் 6:6-11 வேதபகுதியில், பாவத்தன்மையானது உங்களில் ஆழுகை செய்யாதிருப்பதாக எனக் கூறுகிறதாய் இருக்கிறது. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அவன் உங்களை விட்டு ஓடிவிடுவான் என நாம் அறிவுறுத்தப்படுகிறவர்களாய் இருக்கிறோம். சில வேளைகளில், நாம் எதிர்த்து நிற்கும்போது, அது செயல்பாடின்றி போகிறது, காரணம் அத்தகைய சோதனையானது நம்மில் உள்ள பாவத்தன்மையிலிருந்து நமக்கு நேரிடுகிறதாய் இருக்கிறது. நமது சூழ்நிலைக்குத் தக்கவாறு, பொருத்தமான வசனங்களை கைக்கொள்வதன் மூலம் இப்படிப்பட்ட சோதனைகளை மேற்கொள்ள இயலும்.

தெய்வீக வழிநடத்துதலிலிருந்து, சாத்தானானவன் நாம் வழிவிலக எத்தனம் செய்கிறவனாய் இருக்கிறான். பூகோள ரீதியான தேவசித்தத்திலிருந்து சாத்தான் தவறான சூழலுக்குள் வழிநடத்தி, இரத்தசாட்சியாய் மரிக்கும் அளவிற்கு வழிந்தடத்துகிறவனாய் இருக்கிறான். இப்படிப்பட்டவைகளை கர்த்தரின் நேரத்தில் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். லூக்கா 4:11ல் காண்கிற வண்ணம், சாத்தான் வேதவசனங்களை தவறாய் பயன்படுத்துகிறவனாய் இருக்கிறான். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை சாத்தானானவன் சோதிக்கையில், சங்கீதம் 91:10,11 ஆகிய வசனங்களைத் தவறாய் மேற்கோள்காட்டி, சோதனைக்குட்படுத்தினான் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

தேவனது பிள்ளைகள் வேதவசனங்களை எழுதியபோது, அவர்கள் வெறுமையான சிந்தையுடன் அமர்ந்து கொண்டிருக்கவில்லை. அவர்கள் தங்களது மனதை பரிசுத்த ஆவியானவருக்கு அற்பணித்து, அவர் என்ன எழுதும்படி பணித்தாரோ அவைகளை எழுதினார்கள். அவர்கள் தரிசனங்கள் மற்றும் சொப்பனங்களைக் கண்டபோது, அவர்களது சிந்தனையானது மாற்றுவழியில் செல்லாதிருந்தது. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து, பவுலை ஆறுதல்படுத்தியபோது, அவர் தனது சிந்தனை சக்தியைப் பயன்படுத்துகிறவராய் இருந்தார்.

2 கொரிந்தியர் 11 ல் ஊழியர்கள், சாத்தானின் தூதுவர்களாய் செயல்படக்கூடும் எனப்பார்க்கிறோம். சாத்தானின் தாக்குதலின் ஒரு பகுதியாய் இருப்பது என்னவெனில், மக்கள் தங்களது உள்ளான நிலையை மட்டும் கண்ணுற்று, தங்களது ஸ்தானமானது பிதாவின் வலது பக்கம் இருப்பதைக் காணத் தவறுகிறவர்களாகிவிடுகின்றனர். பாடுகளுடனும், வியாதிகளுடனும் வாழும் தேவனது பிள்ளைகள், அதன் காரணம் தேவ நோக்கம் அதில் அடங்கியுள்ளதா அல்லது சாத்தானின் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளார்களா என தீர்மானிப்பது கடினமான ஒன்றாய் இருக்கிறது. இது பகுத்தறிதலுக்கு கடினமான காரியமாய் இருந்து வருகிறது.

கண்கவர் வெளிப்பாட்டின் வழிமுறைகளானது, தேவ வசனத்தை வாசிப்பது மற்றும் கைக்கொள்வதிலிருந்து கவனச்சிதறல்களை உண்டாக்குவதற்காய்ப் பயன்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது.

கிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லை, மற்றும் அவர் மெய்யாய் மனிதனோ அல்லது தெய்வீகத்தன்மையுடையவரோ அல்லர் என்கிற தவறான உபதேசத்துக்கு எதிராக, வேதவசனங்களை மிகவும் கவனத்துடத்துடன் போதித்துவருகிறவர்களாய் இருக்கிறோம்.

சுவிஷேசம் சம்பந்தப்பட்ட நிலையில், விதைக்கிறவன் உவமையில், விதைக்கப்பட்ட விதைகளை பறவைகள் இறங்கிவந்து பட்சித்துப்போடுவது சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆராதனையில், உணர்ச்சியற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதன் மூலம், தேவனை நித்தனைக்குட்படுத்துவதாய் இருக்கிறது. மத்தேயு 16ல் கிறிஸ்து பேதுருவின் ஆர்வத்தை அறிந்து, அவரை தனக்குப் பின்னாகச் செல்ல கட்டளையிடுகிறதைப் பார்க்கிறோம், தேவனது வார்த்தையை உறுதிபடுத்தவிடாது, சாத்தானின் செயல்பாடுகள் பேதுருமூலம், தவறாய் பயன்படுத்தப்பட்டதை இங்கு காண்கிறோம். அப்போஸ்தலர் 5ல், சாத்தானானவன், அனனியா, சப்பீராள் இருதயங்களை நிரப்புவதைக் காண்கிறோம். அவன் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் தனது கிரியைகளை நடப்பித்து வருகிறவனாய்க் காணப்படுகிறான்.

பின்னர், சபையில் நிகழ்ந்து வரும் சாத்தானின் உபாயங்களையும் மற்றும் அவனது தந்திரங்களையும் காண்கிறவர்களாய் இருக்கிறோம். ஆவிகளிடத்தில் குறி கேட்டல், மற்றும் இயற்கைக்கு முறணான தவறான கொள்கைகள், போன்றவற்றைக் கிறிஸ்தவர்கள் பொழுதுபோக்கு விளையாட்டாக செயல்படுத்துதல் கூடாது. உபாகமம் 18:9ல், யூதர்கள், ஆவிகளிடத்தில் குறிகேட்டல், மற்றும் இயற்கைக்கு

முறணான தவறான கொள்கைகளை பின்பற்றுதல் கூடாது என எச்சரிக்கப்பட்டு வந்தனர். சபைக்குரிய முக்கிய தாக்குதல் இன்றைய அளவில், பாரம்பரிய சமயக் கோட்பாடுகள் மூலமல்ல. ஆனால் ஆவிகளிடத்தில் குறிகேட்டல், மற்றும் மேற்கத்திய மதங்கள் மற்றும் போதை வஸ்துக்களால் உண்டாகிறதாய் இருக்கிறது. இது ஆத்துமத்தின் மனநிலையை முறிவுறச் செய்கிறதாய் இருக்கிறது. இவ்வகையான செயல்பாடுகளால், ஒரு நபர் பிசாசுகளின் ஆதிக்கத்திற்குள்ளாக வழிநடத்தப்படுகிறவராய் இருக்கிறார்.

தேவ தூதர்கள்: சாத்தானின் எழுப்புதல்:

1. சாத்தான் சுவிஷேசகர்களை பெற்றுள்ளான். (2 கொரிந்தியர் 11:13-16).

2. இப்படிப்பட்ட சாத்தானின் சுவிஷேசகர்கள், வேறொரு சுவிஷேசத்தை பிரசங்கித்து வருகின்றனர். (2 கொரிந்தியர் 11:3-4, கலாத்தியர் 1:6-9).

3. ஒவ்வொரு சாத்தானின் எழுப்புதலுக்கு பிண்ணனியில், சாத்தானது உபதேசமானது விளங்கிவருகிறது. (1 தீமோத்தேயு 4:1).

4. சாத்தான் திருவிருந்து மேஜையை உடையவனாய் இருக்கிறான். (1 கொரிந்தியர் 10:19-22).

5. சாத்தானது மத அமைப்பில், போலியான நீதியானது விளங்கி வருகிறது. (மத்தேயு 23:1-36).

6. சாத்தானின் எழுப்புதலில், அவன் கரியப் புகைப்படலங்களால் கிறிஸ்துவின் மகிமையை மறைக்கிறவனாய் விளங்குகிறான். (2 கொரிந்தியர் 4:3-4).

7. சாத்தான் தேவதூதர்களது ஸ்தாபன அமைப்பை உடையவனாய் இருக்கிறான். (எபேசியர் 6:12).

எதிராளியின் இப்படிப்பட்ட உபாய தந்திரங்களை அறிந்து கொண்டதன் மூலம், நமது பொறுப்பு என்னவாய் இருக்கிறது? ஜெபத்தின் மூலம் அவனது வஞ்சகத்தினை கட்டிப்போட வேண்டியவர்களாய் இருக்கிறோம். துதி ஆராதனை மூலம், அவனது வஞ்சகங்களில் இருந்து, நமக்குக் கிடைத்திருக்கும் ஜெயத்தை அறிவிக்கிறவர்களாய் இருக்கிறோம்.

<u>7. We must understand and apply the principles of Christian service and serve the Lord with all our heart, our mind, our spirit and all our physical energy. கிறிஸ்தவ சேவைக்கான அடிப்படைக்கொள்கைகளை கைக்கொள்வதும், புரிந்துகொள்ளுதலும் நமக்கு</u>

அவசியமானதாய் இருக்கிறது, நாம் நமது முழு இருதயத்தோடும், முழு மனதுடனும், முழு ஆவியுடனும், நமது முழு சரீர பெலத்துடனும் கர்த்தருக்கு சேவை செய்தல் மிகவும் அவசியமாய் இருக்கிறது.

கிறிஸ்தவ வாழ்க்கை: சேவித்தல்

1. நமது வாழ் நாள் முழுவதும் நம்மை அற்பணித்து, தேவனை சேவிப்பது நமது கடமையாய் இருக்கிறது. (ரோமர் 12:1).

2. அவரை சேவிப்பதில் முழு மனது என்பது மிகவும் அவசியமாய் இருக்கிறது. நியாதிபதிகள் 5:2, 8:25,ஏசாயா 1:19, 2 கொரிந்தியர் 8:3.

3. பெரிய காரியங்களில் ஆற்றப்படும் சேவை, சிறிய காரியங்களில் உள்ள உண்மையைப் பொறுத்ததாய் இருக்கிறது.

4. ஒரேவிதமான வாழ்வும், நெருக்கங்களும் சரியான மனப்பான்மையுடன் உருமாற்றமடையச்செய்யும் தருணங்களாய் இருக்கின்றன. (மத்தேயு 6:33).

5. நாம் செய்யும் ஒவ்வொன்றையும் கர்த்தருக்காய் செய்ய வேண்டும். (கொலோசெயர் 3:17).

6. கிறிஸ்துவுக்கு செய்யப்படும் சேவையானது, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதாயும், மனிதரால் அங்கீகரிக்கப்படுவதாயும் இருக்கவேண்டும். (ரோமர் 14:18).

7. நமது கிரியைகள் நிறைவேற்றி முடிக்கப்படக்கூடியதாய் இருக்கவேண்டும். யோவான் 4:34, 17:4, அப்போஸ்தலர் 20:24, 2 தீமோத்தேயு 4:7.

8. கிறிஸ்துவின் முன்மாதிரி. மத்தேயு 20:28, லூக்கா 22:27, பிலிப்பியர் 2:7.

9. நமது சேவையின் தன்மைகள்:
   - a) எதிர்பார்க்கப்படுகிதாய் இருக்கிறது எபிரெயர் 12:28.
   - b) உடனடியாய் செயலாற்றப்படுதல் வேண்டும். மத்தேயு 21:28.
   - c) மிகுதியாய் இருக்கிறது 1 கொரிந்தியர் 15:58.
   - d) தகுதியைப்பொருத்து இருக்கிறது. மத்தேயு 25:22, லூக்கா 12:48.
   - e) தேவனோடு ஒத்துழைப்பதாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 6:1.
   - f) தனிப்பட்டநிலையில் இருத்தல் வேண்டும் (லூக்கா 16:13).
   - g) ஆவியின் வல்லமையில் இருக்கவேண்டும். (ரோமர் 1:9).
   - h) தெய்வபயத்துடன் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். (எபிரெயர் 12:28).
   - i) அன்பினால் ஏவப்படவேண்டும். (கலாத்தியர். 5:13).

10. சேவிப்பது என்பது:

a) கிறிஸ்துவைப் பின்பற்றுவது. (யோவான் 12:26).

b) அவருக்காய் எல்லா கிறிஸ்தவர்களும் சேவை செய்கின்றனர். (கொலோ. 3;24).

c) சேவை தேவனுக்கு செய்வதாய் இருக்கிறது. (அப்போஸ்தலர் 27:23).

11. சேவிப்பதற்கு அவசியமானவைகள்:

a) விக்கிரகங்களைவிட்டு விலகியிருத்தல் (1 தெசலோனிக்கேயர். 1:9).

b) உபவாசித்தலும், ஜெபமும் (லூக்கா 2:37).

c) தேவ வசனத்தைப்போதிப்பது (அப்போஸ்தலர் 6:1-4).

12. சேவையின் ஆதாயங்கள்:

a) தேவனை மகிமைப்பதுத்துகிறது மத்தேயு 5:16, யோவான் 15:8.

b) வாழ்வில் பெருக்கத்தை ஏற்படுத்துகிறது 1 தீமோத்தேயு 6:18-19.

c) பிரதிபலிக்கும் முன்மாதிரியை கொடுக்கிறது தீத்து 2:7.

d) மற்றவர்களின் பணியை ஊக்குவிக்கிறது. எபிரெயர் 10:24.

e) பிறர்நலத்தில் அக்கரை கொள்ளச்செய்கிறது லூக்கா 10:36-37.

f) வாழ்வின் பாரங்களை இலகுவாக்குகிறது கலாத்தியர் 6:2,16.

g) அன்பை நிலைநாட்டுகிறது யோவான் 21:15-17.

h) விசுவாசத்தை நிலைநாட்டுகிறது. யாக்கோபு 2:17-18, 1 பேதுரு 2:12.

i) கிறிஸ்துவைப்போன்றது. யோவான் 13:12-15.

13. சேவகனின் முன்மாதிரி: (ஆதியாகமம் 24).

a) தன் எஜமானின் சொல்தவறாது செயல்படுதல்.(வச.2-9)நாம் தேவனுக்குக் காத்திருக்கவேண்டும், அவரது நேரத்திற்கு முந்திக்கொள்ளக்கூடாது.

b) எஜமான் அனுப்பிய இடத்திற்குச் சென்றான். (வச.4,10). பூகோள ரீதியாக தேவனுடைய சித்தத்தில் இருத்தல் வேண்டும்.

c) எஜமான் சொன்னதை செய்தான். செயலாற்றும்படி ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் பணியை வைத்திருக்கிறார், நமது பணிக்குரிய பகுதியில் கவனம் செலுத்த வேண்டும். வழிவிலகி செல்லக்கூடாது.

d) அவன் ஜெபத்துடனும், நன்றியுடனும் காணப்பட்டான். நாம் எப்பொழுதும் நம் வல்லமை எங்கிருந்து வருகிறது என உணர்ந்துகொள்ளுதல் வேண்டும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், செழிப்பையும் அடையும்போது பெருமை கொள்ளக்கூடாது.

e) அவன் தொடர்ந்து செயல்படுகிறதில் கவனமுள்ளவனாய் இருந்தான். (வச.17-18, 21).நாம் சுவிஷேசவேலையில் கவனமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். (ரோமர் 1:14-16).

f) தன்னைக்குறித்து எதையும் பேசாமல் தன் எஜமானனைக்குறித்து பேசினான். நாம் என்னவாய் இருக்கிறோம் நாம் யாராய் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல, கிறிஸ்து என்னவாய் இருக்கிறார் அவர் யார் என்பதே மிகமுக்கியமானதாய் இருக்கிறது.

g) உண்மையான காரியத்தைக்கூறி சரியான முடிவெடுத்தான். (வச.49)நாம் சுவிஷேசத்தையும், மற்ற உபதேசங்களையும் தெளிவாய் அறிவித்து, விளைவுகளை எதிர்பார்க்கவேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை -- தலைமைத்துவ சேவகம்:

1. ஆதியாகமம் 24 ம் அதிகாரத்தில் பெயரிடப்படாத ஒரு வேலைக்காரனைப் பார்க்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை நடப்பிக்கும் மாதிரி சேவகனுக்கு இந்நபர் சித்தரிக்கப்படுகிறவராய் இருக்கிறார்.

2. மாதிரி சேவகன் தனது எஜமானக்குரியதை கைவசப்படுத்திக் கொள்கிறவன் அல்ல. (வச. 2-9). நாம் கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், அவரது வேளைவருமுன்னர் முந்திக்கொள்ளுதல் கூடாது.

3. மாதிரி சேவகன் தனது எஜமான் எங்கு அனுப்புகிறாரோ அங்குசெல்கிறவனாய் இருக்கிறான். (வச 4, 10). நாம் தேவனது பூகோள ரீதியான தேவ சித்தத்திற்குள் இருத்தல் வேண்டும்.

4. மாதிரி சேவகன் தன் எஜமான் சொன்னதைத் தவிர்த்து வேறு எதையும் செய்யாதவனாய் இருந்தான். ஒவ்வொரு விசுவாசியும் செய்து நிறைவேற்றும்படி, தேவன் குறிப்பிட்ட பணியை அவர்களுக்கு நியமித்துள்ளார். தேவன் நமக்கு நியமித்துள்ள பணியில் கவனம் செலுத்துகிறவர்களாய் இருத்தல் வேண்டும், அதனின்று திசைதிரும்புதல் கூடாது.

5. மாதிரி சேவகன் ஜெபிக்கிறவனாயும் மற்றும் நன்றியுள்ளவனாயுமிருக்கிறான். நமது வல்லமை எங்கிருந்து வருகிறதாய் இருக்கிறது என்பதை அறிந்துணர்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், மற்றும் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் செழிப்புண்டாகும் காலங்களில் பெருமையடைதல் கூடாது.

6. மாதிரி சேவகன் தொடர்ந்து செயல்படுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தான் (வச. 17-18, 21). நாம் சுவிஷேச ஊழியம் செய்வதில் கண்ணும் கருத்துமாய் செயல்படுதல் வேண்டும். (ரோமர் 1:14-16).

7. மாதிரி சேவகன் தனக்கானவைகளை பேசாது, தனது எஜமானுக்குரியவைகளை மட்டும் பேசுகிறதை காண்கிறோம். நாம் யாராய் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல, கிறிஸ்து யாராய் எப்படிப்பட்டவராய் இருக்கிறார் என்பதை பிறருக்கு எடுத்துக்காட்டுவதே அதிக முக்கியமானதாய் இருக்கிறது. (வச. 22, 34-36).

8. மாதிரி சேவகன் தெளிவான தீர்மானம் எடுக்க அவசியமானவற்றையும், மற்றும் உண்மையான பிரச்சனையை மட்டுமே கூறுகிறவனாய் இருந்தான். (வச 49). நாம் சுவிஷேசத்தையும் மற்றும் மற்ற உபதேசங்களையும் தெளிவுடன் அளித்து அதன் விளைவை எதிர்பார்க்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

<u>போர்வீரன்: எபேசியர் 6 ம் அதிகாரத்தில் உள்ள கிறிஸ்தவப் போர்வீரன்</u>

1. பொதுவான வேதபகுதி: எபேசியர் 6:11-17.
இவ்வேதபகுதி ஒரு ரோம போர்வீரன் அணியும் போர் ஆயுதங்களைக்குறித்து கூறுகிறது, இப்போர் ஆயுதங்களை ஆவிக்குரிய ரீதியில் எவ்வாறு பகுத்து புறிந்துகொள்வது என கீழே பார்ப்போம்:

2. போர் ஆயுதங்களின் உபயோகம் எபேசியர் 6:11 "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்ளுங்கள்" எபேசியர் 6:11a. "தரித்துக்கொள்ளுங்கள்" (ENDUO Gk) எனப்போதிக்கப் படுகிறோம். இதன் கிரேக்கப்பொருள் "அணிந்துகொள்ளுதல்" - இது கிறிஸ்தவ போர்வீரனுக்கு தேவனால் கொடுக்கப்படும் கட்டளையாய் இருக்கிறது. நாம் "உடுத்திக்கொள்ளுதல் வேண்டும்" அல்லது "அணிந்து கொள்ளுதல் வேண்டும்". "சர்வாயுத வர்க்கம்" (PANOPLIA Gk) - "தேவனுடைய" (THEOS Gk) - சர்வாயுத வர்க்கத்தினை அளிப்பவர் தேவனாய் இருக்கிறார்.
தேவனுடைய சர்வாயுத வர்க்கம் எபேசியர் 6:14-17. இவைகளில் காணப்படும் ஆயுதங்கள் பின்வருமாறு.

a) சத்தியம் என்னும் இடைக்கச்சை. எபேசியர்6:14a
b) நீதியென்னும் மார்கவசம் எபேசியர் 6:14b.
c) ஆயத்தம் என்னும் பாதரட்சை எபேசியர் 6:15.
d) விசுவாசம் என்னும் கேடகம் எபேசியர் 6:16.
e) இரட்சண்யம் என்னும் தலைச்சீரா எபேசியர் 6:17a
f) ஆவியின் பட்டயம் எபேசியர் 6:17b.

அடிப்படைக் கோட்பாடுகள்:

i) ரோம போர்வீரன் இவ்விதப் போர் ஆயுதங்களை தனது தற்காப்புக்காகவும் மற்றும் போரிடுவதற்காகவும் அணிந்து கொள்வான்.
ii) ஒரு ரோம போர் வீரன் மிகவும் ஒழுக்கசீலனாய் இருந்தபோது, அவன் உலகை ஆள்பவனாய் இருந்தான்.
iii) ஒரு ரோமப் போர்வீரன் ஒழுங்கீனமாய் இருந்த போது, அவனது சாம்ராஜ்ஜியம் சரிவடைந்து வீழ்ச்சிக்குள்ளானது.
iv) ஒரு ரோமப் போர்வீரன் வரத்தில் ஏழு நாட்களும் ராணுவ தளத்திலேயே இருந்தான்.

3. ஆவிக்குரிய பகுப்பாய்வு:

a) கிறிஸ்தவ போர்வீரர்களாகிய நாம் சர்வாயுத வர்க்கத்தை தனது தற்காப்பிற்காகவும் மற்றும் பாதுகாப்பிற்காவும் அணிந்துகொள்ள வேண்டும்.

b) கிறிஸ்தவ வாழ்வில் நாம் மிகவும் ஒழுக்கத்துடன் இருப்போமானால், நமது யுத்தத்தில் நாம் மிகவும் சிறப்பாய் செயல்படுவோம்.

c) நாம் கிறிஸ்தவ வாழ்வில் ஒழுங்கு இன்றி அல்லது சாட்சியின்றி விசுவாச துரோகிகளாய் வாழ்வோமெனில் நமது சாட்சிக்குரிய வாழ்வில் சரிவடைந்து, ஆவிக்குரிய யுத்தத்தில் படுகாயமடைந்து பலவீனராய் விளங்குவோம்.

d) கிறிஸ்தவ போர்வீரன் யுத்தக் களத்தில் வாரத்தில் ஏழு நாளும் இருக்கவேண்டும். பகுதி நேர போர் வீரனால் ஆற்றல் மிக்க போர்வீரனாய் இருக்கமுடியாது.

"பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாக இருக்கவேண்டும்" "நிற்கவேண்டும்" (HISTEMI (Gk) ”ஹிஸ்டமி’ இதன் அர்த்தம் உங்கள் ஸ்தானத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும். நாம் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறோம், நமது போராயுதங்களை தரித்துக்கொண்டு, சத்துருவுக்கு எதிராய் நமது ஸ்தானத்தை பிடித்துக்கொண்டு நிற்றல் வேண்டும். "தந்திரங்கள்" (METHODEIA DIA Gk) -மெத்தோடியா டையா இந்த கிரேக்கச்சொல்லின் அர்த்தம் தந்திரம், வஞ்சனை அல்லது மோசம்போக்குதல். "பிசாசின்" (DIABOLOS Gk).டயாபோலோஸ் இக்கிரேக்கச்சொல்லின் அர்த்தம் பிசாசு.

இதினிமித்தம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொண்டு, நமது ஸ்தானத்தில் சத்துருவின் தந்திரங்களுக்கு எதிராக உறுதியுடன் நிற்றல் வேண்டும்.

அடிப்படைத் தத்துவங்கள்: இவ்வாறு நாம் பிசாசின் தந்திரங்களை புரிந்துகொண்டு, கிறிஸ்தவ போர்வீரராய் ஆவியின் பட்டயமாகிய தேவவசனத்தை பயன்படுத்தி அவனை எதிர்க்க வேண்டும். (வச 17)

4. சத்துரு / எதிராளி (எபேசியர் 6:12).

"Vnddpy;> khk;rj;NjhLk; ,uj;jj;NjhLky;y> Jiuj;jdq;fNshLk;> mjpfhuq;fNshLk;> ,g;gpugQ;rj;jpd; me;jfhu NyhfhjpgjpfNshLk;> thdkz;lyq;fspYs;s nghy;yhj Mtpfspd; NridfNshLk; ekf;Fg; Nghuhl;lk; cz;L."

"போராட்டம்" - மல்யுத்தம் (HE PALE ESTIN Gk)ஹி பேலஸ்டின் இதன் கிரேக்கப்பொருள் கைகளால் மல்யுத்தம் செய்வது போட்டிகளில் நடைபெறும் மல்யுத்தம் போன்றல்ல. "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல" - மனித வர்க்கத்தின் மற்ற நபரோடு அல்ல,

a) துரைத்தனங்கள் (ARCHE Gk)’ ’ஆர்க்கே’ இதன் கிரேக்கப்பொருள் ஆழுகை செய்யும் பிசாசுகள்:-

b) அதிகாரங்கள் (EXOUSIA Gk) ’எக்ஸௌசியா’ இதன் கிரேக்கப்பொருள் அதிகாரத்துடன் உள்ள பிசாசுகள், பிசாசுகளின் ராணுவத்தில் உள்ள அதிகாரிகள்.

c) இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதி (KOSMOKRATOR Gk) - ’காஸ்மோக்ரட்டர்’ இதன் கிரேக்கப்பொருள் உலகை ஆழும் பிசாசுகள், தானியேலில் நாம் காணும் அரசாங்கத்திற்கு நெருங்கின நிலையில் செயல்படும் பிசாசுகள் (தானியேல் 10:13, 20).

d) வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் (PNEU MATIKOS PONERIA Gk) 'நியூ மேடிகோஸ் பொனேரியா' இதன் கிரேக்கப்பொருள் பிசாசுகளின் ராணுவம்.

இதன்படி, நமது யுத்தம் ஆவிக்குரிய சத்துருக்களுடன் என்பது தெளிவாகிறது. எபிரெயர் 2:7 ன் படி நாம் தேவதூதர்களுக்கு கீழானவர்கள் எனப்பார்க்கிறோம். ஆனபடியால், நாம் நமக்கு மேலுள்ள சத்துருக்களின் மீது ஜெயம் பெறும் வண்ணம், நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை பெற்று அதைத் தரித்துக்கொள்ளுதல் மிகவும் அவசியம். .

5. ஆயத்தமாயிருத்தல் (எபேசியர் 6:13).

"Mifahy;> jPq;FehspNy mitfis ePq;fs; vjph;f;fTk;> rfyj;ijAk; nra;JKbj;jth;fsha; epw;fTk; jpuhzpAs;sth;fshFk;gbf;F> NjtDila rh;thAjth;f;fj;ijAk; vLj;Jf;nfhs;Sq;fs;."

இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்து, பரமேறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறபடியால், சாத்தான் அவருடைய சந்ததியுடன் யுத்தம் செய்வதை தவிர்த்து, தனிப்பட்ட விசுவாசியுடன் யுத்தம் செய்கிறவனாய் இருக்கிறான். நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை சார்ந்து இருக்கவேண்டும் என்பது, மாபெரும் கட்டளையாய் இருக்கிறது, இருப்பினும், அநேக விசுவாசிகள் சில ஆயுதங்களையோ, அல்லது எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டதால், அதன் விளைவாக அநேகர் படுகாயமுற்று காணப்படுகின்றனர்.
மறுபடி ஒருமுறை கூட தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்ள உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

6. சத்தியம் என்னும் அரைக்கச்சை (எபேசியர் 6:14a, ஏசாயா 11:5).

"rj;jpak; vd;Dk; fr;iria cq;fs; miuapy; fl;bdth;fshAk;>"

ரோம அரைக்கச்சை அகலமான தோலினால் ஆனது இதில் பட்டயம் வைக்கும் உறை இருக்கும், மற்றும் உணவு பொருட்கள், இதர போர்த்தளவாடங்கள் பொறுத்துவதற்கு வளையங்கள் காணப்படும். மற்றும் இதில் தோலினால் ஆன குறுக்கு பெல்ட் தோல்களில் மாட்டப்பட்டு அரைக்கச்சையில் பொறுத்தத்தப்பட்டிருக்கும், மற்று அடிவயிறு பாதுகாக்கப்பட உலோகத்தகடுகள் மற்றும் தோலினால் பின்னப்பட்ட பெல்ட்டும் இதனுடன் பொறுத்தப்பட்டிருக்கும். ஆகவே போர்வீரனுக்கு இது ஒரு அத்தியாவசியமான அடிப்படை ஆயுதங்களில் ஒன்றாய் விளங்குகிறது.

அடிப்படைத் தத்துவங்கள்: நமது அடிப்படையான தற்பாதுகாப்பு, சத்தியம் அடங்கியுள்ள தேவனுடைய வார்த்தை ஆகும். ஆவியின் பட்டயமாகிய வாக்குத்தத்தங்கள் பாதுகாப்புடன் அரைக்கச்சையில் தொங்கவேண்டும். தேவனுடைய சத்தியத்தில் எவ்வளவுக்கதிகமாக நம்பிக்கை வைக்கிறோமோ, சத்துருவுக்கு எதிராய் அது நமக்கு மிகப்பெரிய பாதுகாப்பை அளிக்க வல்லதாய் இருக்கிறது.

7. நீதி என்னும் மார்க்கவசம்: (எபேசியார் 6:14b, ஏசாயா59:17).

"ePjpnad;Dk; khh;f;ftrj;ijj; jhpj;jth;fshAk;@" மார்க்கவசம் (THORAX Gk) 'தொராக்ஸ்' வழக்கமாய் இது தோலினால் செய்யப்பட்டு அதன் மீது உலோகத்தகடுகள்

பொருத்தப்பட்டிருக்கும், அந்தஸ்தில் உயர் அதிகாரிகளுக்கு உலோகத்தகடுகளுக்குப் பதிலாக வெள்ளி அல்லது பொன் தகடுகளால் இது செய்யப்பட்டிருக்கும். இது பார்ப்பதற்கு கையில்லாத கோட்டு போன்று காணப்படும், அரைக் கச்சை மார்க்கவசத்தை உறுதியாய் அதன் ஸ்தானத்தில் இருக்க உதவியாய் இருக்கும். இது ஓர் போர்ச்சேவகனின் மிக முக்கியமான சரீரப்பகுதியை பாதுகாக்கின்றது.

அடிப்படைத் தத்துவங்கள்: கிறிஸ்துவின்நீதி நம்மைப் பாதுகாக்கின்றது. நாம் அவரது நீதியில் மட்டும் நிற்கிறவர்களாய் இருக்க வேண்டும். கிறிஸ்து தமது நீதியை சிலுவையில் நமக்காய் தந்தருளினார். (2 கொரிந்தியர் 5:21). பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதன் மூலம், அவரது நீதியினால் நாம் தொடர்ந்து காக்கப்படுகிறோம். (எபேசியர் 5:18).

8. ஆயத்தம் என்னும் பாதரட்சை (எபேசியர்6:15, ஏசாயா52:7).

"rkhjhdj;jpd; RtpNr\j;jpw;Fhpa Maj;jk; vd;Dk; ghjul;iriaf; fhy;fspNy njhLj;jth;fshAk;@"

பாதரட்சை(CALIGAE Gk) 'கலிகே' இது 15 மி மி (1/2") கனமுள்ள தோலினால் அடிப்பாதத்தில் ஆணிகள் பொருத்தப்பட்டு, கணுக்கால் மணிக் கட்டோடு பொருந்தக்கட்டுமாறு தோலினால் ஆன கயிறுகளுடன் இருக்கும். நல்ல நேர்த்தியான பாதரட்சை ஓர் காலாட்படைப் போர்ச்சேவகனுக்கு மிக மிக அவசியம், இன்றைய அளவிலும் (நவீன ஆயுதங்கள் நிறைந்த இக்காலத்திலும்) ஓர் போர்ச் சேவகனுக்கு நேர்த்தியான பாதரட்சைகள் மிக அவசியமாய் விளங்குகிறது.

அடிப்படைத் தத்துவங்கள்: ஆவிக்குரிய அர்த்தத்தில் பாதங்கள் சேவை செய்வதைக் காட்டுகிறது. பாதங்கள் நம்மை சத்துருவிடம் நடத்திச் செல்கிறது. சமாதானத்தின் சுவிஷேசம் சத்துருவின் மீது நேரடித்தாக்குதலை நடப்பிக்கிறது. சமாதானம் என இவ்விடத்தில் காணப்பதுவது, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள ஒப்புரவாக்குதலைக் காட்டுகிறது. (ரோமர்1:14-16, 2 கொரிந்தியர் 5:18-20).

9. விசுவாசம் என்னும் கேடகம்: (எபேசியர்6:16; 1 யோவான்5:4).

"nghy;yhq;fd; va;Ak; mf;fpdpah];jpuq;fisnay;yhk; mtpj;Jg;Nghlj;jf;fjha;> vy;yhtw;wpw;Fk; Nkyhf tpRthrnkd;Dk; Nflfj;ijg; gpbj;Jf;nfhz;lth;fshAk; epy;Yq;fs;."

ரோமர்களின் கேடகம் (THUREOS Gk) 'துரெயோஸ்' கதவு போன்ற வடிவில் ஒட்டவைக்கப்பட்ட அட்டையில் கேன்வாஸ் அல்லது கன்றுக்குட்டியின் தோலினால் பொதியப்பட்டிருக்கும், அதன் மேல் மற்றும் கீழ் ஓரங்கள் இரும்பினால் பாதுகாக்கப்பட்டிருக்கும். ஒரு ரோம போர்சேவனுக்கு இது ஓர் தற்காப்பு ஆயுதமாய் விளங்கினது. கேடகத்தை ஓர் போர்வீரன் இழப்பானேயானால் அவனுக்கு மரணம் என்பது உறுதி.

அடிப்படைத் தத்துவங்கள்: : கிறிஸ்தவ போர்வீரனின் கேடகம் என்பது வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு, மற்றும், தேவனுடைய வார்த்தைகளை அடிப்படையாக அமைத்துக்கொண்ட வாழ்வில் சீராய் நடப்பது ஆகும். நாம் நமது விசுவாசத்தை பயன்படுத்தவில்லையானால், ஆவிக்குரிய வாழ்வில் படுகாயமுற்று காணப்படுவோம். விசுவாசம் என்னும் கேடகத்தைப் பயன்படுத்த நாம் 7000

வாக்குத்தத்தங்களை சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும், மற்றும் ஏசாயா 41:10; 1 கொரிந்தியர் 10:13; 1 யோவான்4:4.இவ்வசனங்களில் காணப்படும் வாக்குத்தத்தங்களையும் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்.

10. இரட்சண்யம் என்னும் தலைச்சீரா: (எபேசியர்6:17a; ஏசாயா59:17).

",ul;rzpankd;Dk; jiyr;rPuhitAk;>"

ஒவ்வொரு ரோம போர்ச்சேவகனும், உலோகத்தாலான தலைக்கவசத்தை (PERIK Gk) 'பெரிக்' அணிய வேண்டும், இது வழக்கமாய் வெண்கலத்தால் செய்யப்பட்டு இரும்பினால் மூடப்பட்டிருக்கும். இது சரீரத்தின் மிக முக்கிய உறுப்பான தலையை பாதுகாக்கிறது.

அடிப்படைத் தத்துவங்கள்: : கிறிஸ்துவின் போர்வீரனாவதற்கு முன்பு, அவர் மறுபடி பிறந்தவராய் இருத்தல் வேண்டும். அவர் இரட்சண்யம் என்னும் தலைச்சீராவை அணிந்து கொள்ளவேண்டும். சாத்தான் தந்திரங்களில் ஒன்று, விசுவாசியை, தனது இரட்சிப்பை இழந்து விட்டதாய் உணர வைப்பது. ஒரு விசுவாசி இரட்சிப்பின் நிச்சயத்தை இழப்பார் என்றால், அவர் தனது இரட்சண்யமாகிய தலைச்சீராவை அணியவில்லை என்பது அர்த்தமாகிறது, அவர் அவ்வாறு இருப்பார் என்றால், மிகவும் மோசமான நிலைக்கு உள்ளாகி சத்துருவால் மிகவும் கொடுமையாக தாக்கப்படுவதற்கு உள்ளாவார்.

11. ஆவியின் பட்டயம்: (எபேசியர் 6:17b).

"Njttrdkhfpa Mtpapd; gl;laj;ijAk; vLj;Jf;nfhs;Sq;fs;."

பட்டயம் என்பதன் கிரேக்கச்சொல் MACHAIRA 'மச்சரியா' ரோம போர்வீரனின் குறுவாள். பட்டயம் நெருங்கிய அளவில் யுத்தம் செய்யும் போது, பயன்படுத்தப்படக்கூடிய ஆயுதம். அது தனது உறையிலிருந்து வெளியே எடுக்கப்படும் போது மட்டுமே, அதிக பலனுள்ளதாய் இருக்கும்.

அடிப்படைத் தத்துவங்கள்: பட்டயம் உறையில் இருக்கும் வரை பயனற்றதாய் இருக்கும், அதை வெளியே எடுத்து யுத்தக்களத்தில் சத்துருவை தோற்கடிக்கும் போதே அதன் முழுபயனும் பெறப்படுகிறது, நாம் இதினிமித்தம் நமது சத்துருவை ஜெயங்கொள்ள அடிப்படையான தேவ வாக்கியங்கள், வாக்குத்தத்தங்கள், மற்றும் உபதேசங்கள் இவைகளை கவனமாய் பயன்படுத்துதல் வேண்டும்

கிறிஸ்தவ வாழ்க்கை: பிரதிபலன்களும் மற்றும் கிரீடங்களும்:

1. வேதாகமத்தில் பிரதிபலன்கள் மற்றும் இரட்சிப்பு இவை இரண்டும் மிகக்கவனமாக வேறுபிரித்துக் கூறப்பட்டுள்ளது. இரட்சிப்பு என்பது இலவசம், தேவனிடமிருந்து கிடைக்கும் ஈவு. பிரதிபலன் என்பது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் புகழ்ச்சிக்கேதுவாக ஆற்றப்படும் சேவையின் விளைவாய் இருக்கிறது.

2. இரட்சிப்பு - இழந்து போனோருக்கு அளிக்கப்படும் இலவச ஈவு. (எபேசியர்2:8-9, ரோமர்6:23, யோவான்4:10). நித்திய ஜீவன். (யோவான் 3:36, யோவான் 5:24, யோவான் 6:47).

3. பிரதிபலன் - இது கர்த்தருக்காக உண்மையுடன் உழைக்கும் இரட்சிக்கப்பட்டோருக்கு அளிக்கப்படுவது. (1 கொரிந்தியர் 9:24, 25, வெளிப்படுத்தல்22:12). - இது கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பில் பகிர்ந்தளிக்கப்படும். (1கொரிந்தியர் 3:11-15, 2கொரிந்தியர் 5:10, ரோமர்14:10).

4. கிரீடங்களான பிரதிபலன்கள்:-

a) மாசற்ற கிரீடம் - இச்சையடக்கத்தில் உண்மையுள்ளோருக்கு. (1கொரிந்தியர் 9:24-27).

b) மகிமையின் கிரீடம். - உபத்திரவங்களில் உண்மையுள்ளோருக்கு. (1 பேதுரு5:4).

c) ஜீவ கிரீடம் - பாடுகளின் கீழ் உண்மையுள்ளோருக்கு (யாக்கோபு1:12, வெளிப்படுத்தல்2:10).

d) நீதியின் கிரீடம் - சாட்சியில் உண்மையுள்ளோருக்கு. (2 தீமோத்தேயு 4:8).

e) மகிழ்ச்சியின் கிரீடம் - உண்மையாய் உழைத்தவர்களுக்கு (1 தெசலோனிக்கேயர்2:19, 20, பிலிப்பியர்4:1).

<u>ஏழு அஸ்திபார அடிப்படைத் தத்துவங்களது சுருக்கம்:</u>

1. அற்பணிப்புள்ள வாழ்க்கை. பாவம் மற்றும் தீமை இவற்றின் மெய்த் தன்மை மற்றும் தனிப்பட்ட வாழ்வில் அவைகள் ஏற்படுத்தும் விளைவுகள் போன்றவற்றை புரிந்துகொண்டு, உபதேசத்தினை கைக்கொள்ளுதல் நமக்கு மிகவும் அவசியம்.

2. தேவனது பூரணத்தன்மை, மற்றும் அவரது பரிசுத்த குணாதிசயம் இவற்றை நமது அறிவாற்றலால் புரிந்து கொண்டு, இவற்றிற்கடுத்த உபதேசங்களைக் கைக்கொள்ளுதல் நமக்கு அவசியம்.

3. நமது அனுதின வாழ்வில், ஆவியில் நடந்து கொள்வதைத் தெரிந்து கொள்கிறோமா (ஆவிக்குரியவைகளை) அல்லது பழைய மனிதனின் வல்லமையில் நடந்து கொள்வதை தெரிந்து கொள்கிறோமா (மாம்சீகத்துக்குரியவைகளை) என்பதை குறித்து புரிந்து கொண்டு ஜீவித்தல் வேண்டும்.

4. வேதாகம ரீதியிலான பாவ அறிக்கை செய்து, பரிசுத்தாவியானவர் மெய்யாகவே நமது வாழ்க்கை அடிமைத்தனத்தை தளர்த்துவதை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

5. அனுதின வாழ்வில் வேதாகம சத்தியத்தை கைக்கொண்டு, கிருபையிலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளருதல் வேண்டும். 2 பேதுரு 3:18.

6. இழந்து போனோர் மற்றும் கலகக்காரர் இவர்கள் மீது தேவ அன்பைக் காட்டி, இவர்களை அன்புக் கரிசனையுடன் ஆதாயப்படுத்திக்கொள்ள முயலுதல் வேண்டும். ஒவ்வொரு நல்ல காரியங்களையும் எதிர்த்து தடை செய்து வரும், எதிராளியின் உபாய தந்திரங்களை புரிந்து கொண்டு செயல்படுதல் வேண்டும்.

7. கிறிஸ்தவ சேவையின் அடிப்படை தத்துவங்களை கைக்கொண்டு அவற்றை சரிவர புரிந்து கொண்டு, முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆவியுடனும், மற்றும் முழு பெலத்துடனும் கர்த்தருக்கு சேவை செய்தல் வேண்டும்.

NOTES

<u>அதிகாரம் 2</u>

<u>அதிகாரம் 2 - அதிகபட்ச நெருக்கங்களுக்குக் கீழ் உண்டாகும் எழுப்புதலைக் குறித்த பகுப்பாய்வு:</u>

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் கிரியைகளும் மற்றும் அவரது தனித்தன்மையும்.

தேவனது குணாதிசயங்களை புதிய விதத்தில் பாராட்டுவதன் மூலம் எழுப்புதல் ஆரம்பமாகிறது:

எசேக்கியேல் 1:1-3. கர்த்தரது முக்கிய ஊழியக்காரர்கள் அனைவரைப் போன்று, முழுமையாய் ஊழியத்தைத் துவங்கு முன்னர், ஆயத்தம் அவசியமாய் இருக்கிறது. இவரது வாழ்வில், கேபார் நதியண்டையிலே (இது இராஜரீக நதி என பாபிலோனில் அறியப்படுகிறது) ஐந்து ஆண்டுகாலங்கள் அடிமையாய் பணியாற்றினார். எரேமியாவைப் போன்று, எசேக்கியேலும், வாழ்க்கைப் பாதையில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் நடந்து கொள்ள சவால் விடுகிறவராய் இருக்கிறார்.

அநேக விசுவாசிகள் இப்படிப்பட்ட கடினமான சூழல்களில், எதிர்ப்பு தெரிவிக்கிறவர்களாய் காணப்படுகின்றனர், எதுவுமே தங்களுக்கு நிகழாததைப் போன்று உணருகிறவர்களாய் இருக்கின்றனர். சாதாரண அமைதியான சூழல்களில், ஜெபம், பொறுமை, தீர்மானங்கள் போன்றவற்றைக் குறித்து பெரிதளவில் கற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். ஒன்றுமே நிகழாத அமைதியான நேரம்

நம் அனைவருக்கும் இருக்கத்தான் செய்கிறது. அக்கால வாழ்வில், குறிப்பிடத்தக்கவிதத்தில் எதுவுமே நடக்காமல் இருக்கிறது. இப்படிப்பட்ட சமயங்களில், தேவனது வசனங்களைக் கைக்கொண்டு, கர்த்தர் திறந்த வாசலை ஏற்படுத்தும் வரை காத்திருத்தல் வேண்டும்.

பவுலுக்கு இதைப் போன்ற நேரம் ஏற்பட்ட போது அரேபியாவிலும், தர்சு பட்டணத்திலும் அவற்றைக் கழித்தார். இதற்குப் பின்னர், அவருக்கு அந்தியோகியா பட்டணத்தில் அனுகூலமான வாசல் திறக்கப்பட்டு, மற்ற எல்லா அப்போஸ்தலரைவிட அதிக அளவில் சேவை செய்ய அவருக்கு அனுகூலம் உண்டானது. **அப்போஸ்தலர் 9:20-25, 29-30, கலாத்தியர் 1:16-24**. இப்படிப்பட்ட காலங்களில் பவுல் அசதியாய் இருந்து விடவில்லை. எசேக்கியலின் வாழ்விலும் இது போன்ற சூழலே சம்பவித்தது. நமக்கு தெளிவான வழிநடத்துதல் கிடைக்கும் வரைக்கும் அமைதியாய் அடங்கி இருத்தல் அவசியம். எசேக்கியேல், தனது அனுதின ஆகாரத்திற்காய் கடினமாய் உழைக்க நேர்ந்தது, அதன் நடுவே சாட்சிபகருகிறவராய் இருந்தார், கற்றுக்கொள்கிறவராயும், பரிசுத்தமான, ஒழுக்கமுள்ள வாழ்க்கை செய்கிறவராயும் காணப்பட்டார். இப்படிப்பட்ட குறுகிய காலத்தில், சிறிய காரியங்களில் ஆயத்தப்படத்துவங்கி, அவருக்கு திறக்கப்பட்ட பெரிய காரியங்களில் ஈடுபடத்துவங்கினார். சிறிய காரியங்களில் தவறுவது, இளம் விசுவாசிகளின் வாழ்வில் கர்த்தரது சேவைக்குத் தடையைக் கொண்டுவருகிறதாகிவிடுகிறது. ஞாயிறு பள்ளி, வேதாகம வகுப்புகள், ஜெபக்குழுக்கள், வாகனங்களை பரமாரித்து பாதுகாத்தல் போன்ற எளிய சேவையில், உண்மையாய் இருக்கத் தவறுகிறவர்களாய் இருக்கின்றனர்.... **மத்தேயு 25:23-30**, லூக்கா 16:10-15, 19:14-26.

கர்த்தரிடத்தில் உண்மையாய் அன்பு கூறுவோமெனில், அவரது ஜனங்களுக்கு நம்மால் இயன்ற சேவையினை செய்கிறவர்களாயிருப்போம். கர்த்தருடைய மக்களுக்கு சேவை செய்யாதபட்சத்தில், கர்த்தரிடத்தில் நாம் அன்பு கூறாதவர்களாய் இருக்கிறோம். நாம் அனுதினமும் சேவை செய்து, வேதாகமத்தைக் கற்றுக்கொண்டு, ஜெபிக்காதவர்களாய் இருப்போமெனில், கர்த்தர் நம்மை உபயோகிக்க இயலாது போய்விடும். இது சபையில் மற்றும் தேசத்தில் எழுப்புதலைக் கொண்டு வருவதற்கு தடையாய் அமைந்துவிடும். தேவன் ஆயத்தமுள்ள தன் ஸ்தானத்தில் இருக்கும் ஊழியர்களைப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார்.

குறிப்பு: - கருத்தரங்கின் போது, இங்கே கூறப்பட்டுள்ள அனைத்து வசனங்களையும் வாசிக்க அவசியமில்லை. போல்ட் டைப்பில் உள்ள வசனங்களை மட்டும் வாசித்தால் போதுமானது. மற்ற வசனங்களை உங்களது சொந்த வேதபாட தியானத்தின் போது வாசிக்கலாம். போதனை வகுப்பில் இப்பாடத்தினை போதிக்கும் போது, போல்ட் டைப்பில் உள்ள வேத வசனங்களை மற்றும் ஒவ்வொரு வேதவசங்களையும் வாசிக்கலாம்.

கர்த்தரால் நியமிக்கப்பட்ட காலத்தில், எசேக்கியேல் தனது ஊழியத்தினை ஆரம்பித்தார். இக்காலகட்டத்தில் கள்ளத்தீர்க்கரிசிகளின் பெருக்கமானது தேசத்தில்

வளர்ந்து வந்தது, மட்டுமின்றி இவர்களைக் கடிந்து கொண்டு கண்டனம் செய்யும் வண்ணம் எரேமியாவிடமிருந்து எழுதப்பட்ட கடிதம் வந்தடைந்த சமயமாய் இருந்தது. அதுவே கர்த்தரின் அடையாளமாய் இருந்து, எசேக்கியேல் சத்தியத்தைப் பிரசங்கித்து, தனது தெளிவான அழைப்பை புரிந்து கொள்ளும் சந்தர்ப்பமாயும் இருந்தது. அவர் பாபிலோனின் கள்ளத்தீர்க்கதரிசிகளை, நேரடியாக எதிர்க்கத் தலைப்பட்டார், அவர்கள் சிறைப்பட்ட மக்களை, திரும்பவும் எருசலேமிற்கு நேராக திசைதிருப்பி, சீக்கிரத்திலே அடிமைத்தனம் முடிவுக்கு வர இருக்கிறது, யோயாக்கீனுடன் எருசலேம் திரும்பி சிங்காசத்தைத் திரும்ப வசப்படுத்திக் கொள்ளுங்கள் என தீர்க்கதரிசனம் உரைத்தனர். இக்காலத்தில் இவரது தீர்க்கதரிசனப் பணியானது, எரேமியாவின் கடிதம் பாபிலோனில் கிடைக்கப்பெற்றபோது துவங்கிற்று. எரேமியா 28:1-29:23.

வட இராஜ்ஜியத்தை அசீரியர்கள் படையெடுத்து வந்தபோது, ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில், தீமை செய்துவந்த கள்ளதீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்து, தவறான நம்பிக்கையை அளித்தது போலவே, யூதேயாவில் உள்ள பாவிகளுக்கு தவறான நம்பிக்கையை 100 ஆண்டுகளுக்குப் பின்னர் அளிக்கப்பட்டது. கள்ளத் தீர்க்கதரிசிகள் அவர்களது செய்தியினால் அறியப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். அத்தகைய செய்தியானது, மாம்சீகத்தில் வாழக்கூடிய மனிதனரின் வாஞ்சைக்குப் பொருத்தமாய் அமைந்து இருக்கும். மாம்சீகமாய் வாழ்கிற மனிதருக்கு ஒர் செய்தியானது கோரிக்கை விடுக்குமானால், அது தவறான செய்தியாய் இருக்கிறது என அறியப்படுகிறது.

சாத்தான் பரிசுத்தம் மற்றும் பாவத்திலிருந்து மனம் திருந்துதல் குறித்து, எவ்வித எதிர்பார்ப்பின்றி, தனது செய்தியை மக்களுக்கு அளிக்கிறவனாய் இருக்கிறான். அவன் இரத்தம் சிந்துதல் இல்லாமல் ஆசீர்வாதம் அடையும்படியான செய்தியினை ஆதிமுதற்கொண்டு அவன் பிரசங்கித்துவருகிறவனாய் இருக்கிறான். ஆதியாகமம் 4:1-15. தேவதூதர்கள் -- சாத்தானின் உபாயமும் மற்றும் தந்திரங்களும் என்கிற உபதேச சத்தியங்களை திரும்ப ஒரு முறை கற்றறியுங்கள். சாத்தான் நற்செய்தியை விரும்புகிறவனாய் இருக்கிறான். ஆனால் அவனது செய்தியானது வஞ்சகம் மிகுந்ததாயும், பாவத்தைக் குறித்த சத்தியத்திலிருந்து திசைதிருப்பக்கூடியதாயும், தேவனது சேவைக்கு அவசியப்படும் பரிசுத்தத்தை அலட்சியம் செய்து, நியாயத்தீர்ப்பை வருவிப்பனவாயும் இருக்கின்றன. மனிதரின் பெருமை குறித்து சாத்தான் முறையீடு செய்கிறவனாய் இருக்கிறான், இந்த இடத்தில் அதுவே சரியாய் இடம்பெறுகிறதாய் இருக்கிறது, மதியீன இராஜவாகிய சிதேக்கியா மற்ற இராஜாக்களுடன் சதிஆலோசனை செய்து, நெபுகாத்நேச்சாரிடம் பொய் சொல்லுகிறவனாய் காணப்படுகிறான். எரேமியா 24:3ff, 27:3ff, 51:59ff.

எசேக்கியேலும், எரேமியாவைப் போன்றே தேசத் துரோகியாய் கருதப்பட்டார், அவரது ஆரம்ப செய்திகள் ஜனங்களால் உதாசீனப்படுத்தப்பட்டது, இது குறிப்பிட்ட நிலையில் கர்த்தரது வழிநடத்துதலாய் இருந்தது, எசேக்கியேல் ஜனங்களின் கவனத்தை ஈர்க்க புதுவகையான வழிமுறைகளைக் கையாளுகிறவராய் காணப்படுகிறார், இதினிமித்தம் அவரது செய்திகள் அநேகம் நடித்துக் காட்டப்பட்டன. இப்படிப்பட்ட விநோமான நடிப்பானது, ஜனங்களை அவரிடம் கூட்டிச் சேர்க்கிறதாய் இருந்தது, பின்னர் அவர் நேரடியாக கர்த்தரின் செய்தியை

ஜனங்களுக்குக் கூறுகிறவராய் இருந்தார். எருசலேம் பட்டணமும், தேவாலாயமும் இடிக்கப்படும் வரைக்கும் அவர் மிகவும் பிரபலமடையாதவராகவேக் காணப்பட்டார். அவர்கள் சிறையிருப்பில் இருந்த போது, சகல உண்மைகளும் வெளிவரத்துவங்கின, கள்ளத் தீர்க்கதரிசிகளது பொய்யின் யதார்த்தத்தை ஜனங்கள் கண்டு கொள்ளத்துவங்கினர். இவ்வாறு ஐந்து ஆண்டுகாலங்கள், அவர் ஆயத்தமான பின்னர், இறுதியில் அவர் ஏற்றுக்கொள்ளப்படு முன்னர், ஆறு ஆண்டு காலங்கள் பிரசங்கிக்கிறவராய் இருந்தார். (கி.மு. 597 - 592 கி.மு - 586 கி.மு.)

எசேக்கியேல் ஜனங்களது வெறுப்பை மட்டும் சந்திக்கவில்லை, அவரது தனிப்பட்ட வாழ்வில், அவரது மனைவியின் மரணத்தையும் சந்தித்தவராய் இருந்தார். எசேக்கியேல் 24:16-17. எரேமியாவைப் போன்றே எசேக்கியேலும் ஜனங்களின் பாடுகளில் பங்கெடுக்கிறவராய் இருந்தார். உருவாக்கப்பட்ட கட்டளைகளும், சட்டதிட்டங்களும் இருந்தபோதிலும், அவர் தேசியப்பற்றை ஏற்றுக்கொள்கிறவராய் இருந்தார், இக்காலக்கட்டங்களில், அவர் புறதேசத்தினரின் வல்லமைக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, அதற்கு அடங்கி செல்கிறவராய் விளங்கினார். தனது சொந்த தேசத்தின் மீதுள்ள அன்பை மற்றும், அதன் தேசிய விடுதலையை அனுமதியாமல், சுய தீர்மானத்துடன் காணப்பட்டார். தனது ஜனங்கள் உன்னத ஆவிக்குரிய உண்மையை அறிந்து வாழ வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிறவராய் இருந்தார்.

எசேக்கியேல், தனது வாழ்வில் மிகுதியான சிரமங்களை அனுபவித்தவராய் காணப்பட்டார், இது அவரது பாவத்தின் விளைவால் அவருக்கு நேரிட்டவைகள் அல்ல, அவரது தேசத்தின் பாவங்களால் அவருக்கு நேரிட்டவைகளாய் இருந்தன. அவரது பாடுகள் மூலம், கர்த்தரின் மகிமையானது யுகா யுகாங்களுக்குக் காட்டப்படுகிறதாய் இருக்கிறது. **யோவான் 9:1-5**. இன்றைய உலகில், "செழிப்பு சுவிஷேசம்" [“prosperity gospel”] அநேகரால் பிரசங்கிக்கப்பட்டு வரப்படுகின்றன. சரீரப்பிரகாரமாக மற்றும் பொருளாதார நிலையில் நீங்கள் செழிப்படையாதவர்களாய் இருப்பீர்களேயானால், நீங்கள் இன்னும் பாவத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள், தேவன் எதிர்பார்க்கும் நிலைக்குக் கீழாக வாழ்கிறவர்களாய் இருக்கிறீர்கள் எனப் போதித்து வருகின்றனர். இது எரேமியா தீர்க்கதரிசன ஆகம வியாக்கியானப் பகுதியில் இது குறித்த காரியங்கள் பல இடங்களில் விவரிக்கப்படுகின்றன. (Refer to the EBCWA CD for the Jeremiah and full Ezekiel Commentary). **எபிரெயர் 11:30-40**, வேதபகுதியையும் ஒப்பிட்டுப்பாருங்கள், இதில் இருபது வகையான "ஆசீர்வதிக்கப்பட்ட" பரிசுத்தர்களைக் காண்கிறோம், இதில் பத்து நபர்கள் அவர்களது காலத்தில் செழிப்பைக் கண்டவர்கள், மற்ற பத்து பேர் பாடுகளையும், துன்பங்களையும் அனுபவித்தவர்கள், இவர்கள் அனைவரும் நித்தியத்தை சுதந்தரித்தவர்களாய் விளங்குகின்றனர்.

இவர் காலத்தில் வாழ்ந்த எரேமியாவைப் போன்றே, எசேக்கியேலும் பெரிய அளவில் பொருளாதார நன்மைகளையோ மற்றும் இதர சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களையோ பெற்றிருக்கவில்லை, இவர் தனக்கு தேவன் நியமித்த பாதையில் மன நிறைவுடன் சென்றார். இதினிமித்தம் இவர் மற்றவர்களை நூறாண்டு காலம் ஆசீர்வதிக்க நேரிட்டது. இவர் தனது ஆத்துமாவை திருப்தி

செய்யும் பரலோக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்று மன நிறைவுடன் வாழ்ந்தவராய் விளங்குகிறார். **எபேசியர் 1:3, 2 தீமோத்தேயு 4:18**, எபிரெயர் 3:1, 11:13-16, 12:18-25.

இது மற்ற வேதாமகப்பாடங்களைப் போன்றே, இது மற்றொரு வேதபாடமாய் இருக்கிறது, இது மறுபடியும், மறுபடியும் கர்த்தரின் ஜனங்கள் விஷேசித்தவர்கள் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதை நிரூபணம் செய்கிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட நிலையானது இவ்வுலகில் அல்ல ஆவிக்குரிய இவ்வுலக வாழ்வில் இப்படிப்பட்டவர்களாய் இருப்பதை நிரூபணம் செய்கிறதாய் இருக்கிறது. மட்டுமின்றி இவ்வுலகில் உள்ள ஆசீர்வாதங்கள் பொருத்தமற்றதாய் இருப்பதை நினைவு படுத்துகிறதாய் இருக்கிறது, இது தற்காலிகமானதாய் இருப்பது குறிப்பிடத்தக்கது! சாத்தான் நிரந்தரமில்லாத ஆசீர்வாதங்களில் வாஞ்சையுள்ளவனாய் இருக்கிறான். கர்த்தர் நித்தியமும், நிரந்தரமுமான நமது ஆசீர்வாதங்களில் வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார். நாம் தேவனுடனும் அவரது வல்லமையான தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலருடன் நிலைத்திருப்போமாமக. **பிரதிபலன்களும் மற்றும் கிரீடங்களும்** என்ற வேதபாடத்தை ஒப்பிட்டுப்பார்க்க.

எசேக்கியேல் இராஜரீக ஓடை அருகில் (கேபார் ஆற்றின் கரையில்) Royal Canal (River Chebar) பாபிலோன் பட்டத்தினத்திற்கு வெளியே அமைந்திருந்த ஓர் ஸ்தலத்தில், மற்ற கைதிகளுடன் ஆறு வருட காலங்கள் (கி.மு. 591) தனது சொந்த வீட்டில் வசித்து வந்தார், எரேமியா தீர்க்கதரிசியின், சொற்கேட்டு சிறையிருப்பின் போது, மிகக்கவனமாய் தங்களுக்கென 70 நீண்ட ஆண்டுகாலங்கள் அடிமைத்தன வாழ்க்கையை வாழ்வதற்கேற்ற சொந்த வீட்டினைக் கட்டி அங்கே வாழத்தொடங்கினார். எரேமியா 29:4-15, 28, எசேக்கியேல் 8:1.

இவர் யோயாக்கீன் இராஜாவுடன் சிறைபிடிக்கப்பட்டபோது, இருபத்தைந்து வயது நிரம்பிய வாலிபராய் இருந்தார். எரேமியா தீர்க்கதரிசியின் செய்தியால், தொடப்பட்ட தானியேலைப் போன்று, இவரும் அமைதியுடன் சிறைவாச அடிமைத்தனத்திற்கு அடக்கத்துடன் சென்று அனுபவிக்க தன்னை ஒருமுகப்படுத்திக்கொண்டார். கர்த்தர் எரேமியா, எசேக்கியேல், தானியேல் இம்மூன்று பெரிய தீர்க்கதரிசிகளையும், தனது காலத்தில் வாழ்ந்த தேவ ஜனங்களின் இக்கட்டு காலத்தில், தங்களுக்கு தேவன் நியமித்திருந்த பாதையில் மகிழ்வுடன் சென்று, பெரிய தாக்கங்களை ஜனங்களின் வாழ்வில் ஏற்படுத்தும் வகையில் தேவன் அவர்களைப் பயன்படுத்தினார்.

இதைப் போன்றே, இச்சம்பவத்திற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, இஸ்ரவேல் மற்றும் யூதேயா தேசத்தில் அசீரியர்களால் உண்டான நெருக்கங்களின் போது, நான்கு தீர்க்கதரிசிகளை தேவன் எழுப்பி, ஜனங்கள் மனந்திருந்தவும், இரட்சிப்படையவும் செய்தார், அவர்கள் ஏசாயா, ஓசியா, ஆமோஸ், மீகா என்பவர்களாவர்.

நெருக்கப்படுகிற காலங்களில், கர்த்தர் தமது ஜனங்களுக்கு உபதேசங்களை அளித்து காப்பாற்ற சித்தமுள்ளவராய் இருந்தார், சத்தியம் மட்டுமே தமது ஜனங்களை இக்கட்டுகளில் இருந்து விடுவிக்கிறதாய் இருக்கிறது. யோவான் 10:10. கர்த்தர் ஒரு

சபையை மற்றும் ஒரு தேசத்தை உயிர்ப்பிக்கும் பொழுது, பல இடங்களில் வாழும் எண்ணிக்கைக்குட்படாத மக்களை ஒரே நேரத்தில் அசையச் செய்கிறவராய் இருக்கிறார். இதினிமித்தம் தேவ ஊழியர்கள் ஒருவருக்கொருவர் தைரியமாய் ஊக்கத்துடன் செயல்பட வழியுண்டாகிறதாய் இருக்கிறது. தேவனது மற்றும் அவரது சபையின் மகிமைக்காய் பிற சகோதரருடன் இணைந்து செயல்பட, இது நமக்கு சவாலாய் இருக்கிறது.

எசேக்கியேல் தனது 30 வயது தொடங்கி அவரது 57வது வயது வரை பிரசங்கிக்கிறவராய் இருந்தார். இவரது இறுதிகால செய்தியானது, இவர் தனது ஊழியத்தை துவங்கிய பின்னர், இருபத்தேழு ஆண்டுகாலங்களாய் பிரசங்கித்தவைகளாய் இருந்தன. பாரம்பரிய கூற்றின்படி, கோரேஸ் இராஜாவின் தாக்கீது பிறப்பதற்கு சிலகாலம் முன்னர்வரை இவர் ஊழியம் செய்ததாக குறிப்பிடப் படுகிறது. இவர் தனது அறுபதாம் வயதாகும் ஆரம்பகாலத்தில் மரித்தார் என கூறப்படுகிறது, இவர் தேவ ஜனங்கள் சிறையிருப்பிலிருந்து எருசலேம் திரும்புவதைக் காணும் முன்னர் மரித்துப் போனதாய் பாரம்பரியம் கூறுகிறது. இவர் தனது செய்தியைக் கூறினார், அதன்படி வாழ்ந்து காட்டினார், மற்றும் தனது செய்தியனைத்தையும் சிறையிருப்பின் போது, எழுதித் தீர்த்தார், பின்னர் அமைதியாய் சரித்திரத்திலிந்து அமைதியாய் வெளியேறினார். இதைப் போன்றே நமது கடைமையும் அமைகிறதாய் இருக்கிறது, இறுதிவரை அவற்றை நிறைவேற்றித் தீர்க்கவேண்டியதாய் இருக்கிறது. தேவனது ஊழியர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருந்தபோதிலும், காலாகாலங்களில் அவர்களது "வெற்றியானது" தோற்றத்தில் மறுதலிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

எசேக்கியேல் மற்றும் எரேமியா போன்றோர் "செழிப்பு சுவிஷேசம்" “prosperity gospel” த்திற்கு முன்மாதிரிகளாய் இல்லை, பாபிலோனிய வல்லமையின் ஆதிக்கத்தின் கீழ், வாழ்ந்து மரித்தவர்களாய் விளங்குகின்றனர். மட்டுமின்றி பல ஆண்டு காலங்கள் தங்களது சொந்த ஜனங்களின் வெறுப்பிற்கு உள்ளானவர்கள், மட்டுமின்றி எசேக்கியேல், தனது திருமணவாழ்வின் ஆரம்பகாலத்திலேயே மனைவியை மரிக்கக் கொடுத்து தனிமைய அனுபவித்தவராய் விளங்குகிறார். இவருக்குப் பிள்ளைகள் இல்லாதிருந்தது, இதினிமித்தம் இவரது சந்ததியினர் கோரேஸின் தாக்கீது பிறப்பிக்கப்பட்ட பின்னர் செல்ல இயலாவராய் காணப்பட்டனர். இவரும் எரேமியாவைப் போன்றே, நித்திய ஆசீர்வாதங்களுக்கு பங்குள்ளவராய் திகழ்கிறார். நாமனைவரும், அவரது விசுவாசப் பிள்ளைகளாய், அவரது வார்த்தைகளைப் பகிர்ந்தளிக்கிறவர்களாய் விளங்கிவருகிறோம். இவர் பெரிய ஆவிக்குரிய குடும்பத்தினைப் பெற்றவராய் இருக்கிறார். பரலோகில் இவருக்கு பூமிக்குரிய வல்லமை, ஐசுவரியம், அங்கீகாரம் அல்லது மரபு பிண்ணடியார்கள் இல்லை எனப் புலம்பப்போவது இல்லை.

இப்படிப்பட்ட காரியங்கள் மீது கண்ணும் கருத்துமாய் இருப்பவர்களை, சாத்தானால் வஞ்சிக்க இயலும். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவர்களாகி, சாத்தானால் வஞ்சித்து ஏமாற்ற இயலாத ஆவிக்குரிய பிரதிபலன் மற்றும் கிரீடங்கள் மீது கண்ணோக்கமாய் இருந்து, அவன் திசைதிருப்பி, பூமிக்குரிய செழிப்பினாலும், ஆசீர்வாதங்களாலும் நம்மை வஞ்சியாதபடி, மற்றும் நமது பரலோக ஆசீர்வாதங்களைத் திருடி நம்மை வழிவிலகாதபடி செய்ய, கவனமுள்ளவர்களாய்

இருப்போமாக. **மத்தேயு 6:25-34, 20:25-28, மாற்கு 10:29-31, 1 தீமோத்தேயு 4:8-9, 2 தீமோத்தேயு 4:6-8.**
நாம் நித்திய மெய்யான காரியங்கள் மீது கண்ணோக்கமாய் இருக்கிறபடியால், இவ்வுலகில் கர்த்தருக்காய் பயனுள்ளவர்களாய் மாறி, உலகப்பிரகாரமான அநித்திய செழிப்பினால், சாத்தான் மக்களை வஞ்சித்து, கர்த்தரின் மக்களை திசைதிருப்புவதிலிருந்து விலகி இருப்போமாக.

எசேக்கியேல் 1:4. இதோ, வடக்கேயிருந்து புசல்காற்றும் பெரிய மேகமும் அதோடே கலந்த அக்கினியும் வரக்கண்டேன்; அதைச் சுற்றிலும் பிரகாசமும், அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய சொகுசாவின் [the colour of amber] நிறமும் உண்டாயிருந்தது.

இங்கு காணப்படும் ஒவ்வொரு தோற்றங்களும் தேவனது வல்லமையை குறித்துப் பேசுகிறதாய் இருக்கிறது, அவரது மாட்சிமை மற்றும் அவரது இரகசியம் போன்றவற்றை வெளிப்படுத்துகிறவைகளாய் விளங்குகின்றன. ஜனங்கள் மற்றும் அவர்களது நடவடிக்கைகள் மீது உள்ள அவரது தீர்மானங்களையும், அவர்களது பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பையும், அவரது வல்லமையானது கண்ணோக்கமாய் கொண்டுள்ளதை விளங்கிக்கொள்ள செய்கிறதாய் இருக்கிறது. வடதிசையிலிருந்து வீசிய, புயல்காற்றின் வல்லமையின் தோற்றம், பெரிய அக்கினி கலந்த மேகத்தின் தோற்றம், இதற்கு முன் தேவனது நியாயத்தீர்ப்பைக் குறித்து பேசுகிறதாய் இருந்தது. சங்கீதம் 18:7-15, 50:3, 97:1-6, 104:1-7, ஏசாயா 21:1ff, எரேமியா 1:13-14, 4:6, 6:1, 23:19, 25:9, 32. ஆபகூக் 1:8-9. இத்தோற்றங்கள் கர்த்தர் தமது கோபாக்கினையை ஜனங்கள் மீது ஊற்றுவது தெளிவாய் அர்த்தம் கொள்ளப்படுகிறது. இத்தோற்றங்கள், மோசே சீனாய் மலையில் தேவனை சந்தித்தபோது, அவர் விவரித்த தோற்றங்களுக்கு ஒப்பாய்க் காணப்படுகின்றன. யாத்திராகமம் 19:16-19. 24:16-18. இப்படிப்பட்ட காட்சியால், நாம் அனைவரும் தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார் என நினைவு படுத்தப்படுகிறோம். **எபிரெயர் 12:29.**

எசேக்கியேல் 1:27 - 28 அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக்கண்டேன்; அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல், கீழெல்லாம் அக்கினிமயமாகவும் அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன். 28. மழை பெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப்பிரகாசம் காணப்பட்டது; இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன்; அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன்.

சிங்காசனமும் அதைச் சுற்றிலும் இருந்தப் பிரகாசமும், "வானவில் சிங்காசனத்திற்கு" சில அடைமொழிகளைக் கொடுக்கிறதாய் இருந்தது. அதன் நிறமானது பிரகாசமுள்ள உலோகமானது ஒளிர்விடுகிறதை காட்டுகிறதாய் இருந்தது, இது போன்ற உலோகத்தகடுகளை பண்டைய காலத்தில் கண்ணாடியாக பயன்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. அக்கினியானது எப்பொழுதும்,

பரிசுத்தம், சுத்திகரிப்பு, செயல்பாட்டிற்கான வல்லமை இவைகளை உட்கருத்தாக கொண்டுள்ளது. சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர், தேவதூதருக்கு ஒப்பானவராய்க் காணப்படுகிறார், அதன் சக்கரங்கள் பரிசுத்தத்தம், சுத்திகரிப்பு, அளுகை செய்யும்போது விளங்கும் தேவனது வல்லமை போன்றவற்றைப் பிரதிபலிப்பதாய் இருக்கிறது, யாத்திராகமம் 24:17, தானியேல் 7:9-14, வெளிப்படுத்தல் 1:10-18.

வெளிப்படுத்தின விஷேசத்தில் யோவான் தானியேல் மற்றும் எசேக்கியேல் இவர்களது தரிசனத்தில் கண்ட வெவ்வேறு தரிசனங்களை, பத்மு தீவில் தான் கண்ட தரிசனத்தில் ஒருங்கிணைக்கிறவராய் இருப்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது, காணக்கூடிய அந்த ஒருவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவாய் இருக்கிறார், இவர் <u>பூமியெங்கும் ஆளுகை செய்யக்கூடிய நியாதிபதியாய்</u> இருக்கிறார். இதுவே எழுப்பதலுக்கான அத்தியாவசியமான உண்மையாய் இருக்கிறது.

சிங்காசனத்திற்கு மேல் கண்ட வானவில்லானது, பொதுவாக எல்லா சந்தர்ப்பங்களிலும் பொதுவாய் சிங்காசனத்திற்கு மேலாக காணப்படுகிறதாய் இருக்கிறது. அதைச் சுற்றிலும் மற்றும் அதன் பின்புறமும் உள்ள பிரகாசமானது, ஆழமான நிறங்களையும், மற்றும் பிரகாசத்தையும் அளிப்பதாய் இருக்கிறது. இதற்குமுன் கண்டிராத அளவுக்கு, மகிமை பொருந்தினதாய் இங்கு காணப்படும் வானவில்லானது தோற்றமளிப்பதாய் இருக்கிறது. யோவான் இப்படிப்பட்ட தேவதூதர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் சிங்காசனத்தை, இங்கு எசேக்கியேல் தரிசிக்கிறவராய் இருக்கிறார். வெளிப்படுத்தல் 4:1-3, 10:1-4. சில வியாக்கியான நூல்கள் கூறும், சிங்காசனத்தை நகர்த்தும் சக்கரங்கள், அதன் சிறகுகள் தேவதூதரின் சிறகுகளாய் இருந்து அதை நகரச்செய்வது அவசியமற்றதாய் இருக்கிறது. இங்கு மூன்றுவிதமான மூலக்கூறுகளைத் தனித்தனியேக் காண்கிறோம், (தூதர்களான ஜீவிகள், சக்கரங்கள் மற்றும் சிங்காசனத்தில் வீற்றிருப்பவர்), இருப்பினும் அவைகள் ஒரேதோற்றமாய் காட்சி அளிக்கின்றன, எசேக்கியேல் இவற்றை தொடர்வரிசையாக காண்கிறவராய் இருக்கிறார். அவர் இத்தரிசனத்தை நித்தியத்தின் கால அவகாசத்தில் காண்கிறவராய் இருக்கிறார். எசேக்கியேலின் தரிசனத்தை நாம் படிக்கும்பொழுது, அவர் விவரிக்கும் தரிசனமானது, இக்கால அவகாசத்தை குறித்து நாம் சரிவர புரிந்து கொள்ள இயலாததாய் செய்கிறது.

வானவில்லானது, தேவன் இப்பூமியை மறுபடியும் ஜலத்தினால் அழிக்கப்போவதில்லை என்கிற வாக்குத்தத்தத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இருப்பினும், இதற்குமுன் இப்பூமியை சந்தித்த மேசியாவால், ஆளுகை செய்யப்படவிருப்பதை இது காட்டுகிறதாய் இருக்கிறது. இது முக்கியம் வாய்ந்த நம்பிக்கையாய் இருக்கிறது, பாபிலோனிய படையெடுப்பானது, இறுதியானதும் மற்றும் வெளிப்பாடுள்ளதாகவும் சில தேசங்கள் தப்பி மீந்திருப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாத முரட்டாட்டம் செய்த தேசங்கள் அனைத்தும் பூமியிலிருந்து நிரந்தரமாய் அகற்றப்பட்டதை இது காட்டுகிறதாய் இருக்கிறது. இதை வானவில் அடையாளமானது, தெளிவுற கூறுகிறதாய் இருக்கிறது. இது சிருஷ்டிகரும், இரட்சகருமான தேவனை

புறக்கணித்தவர்களின் அழிவைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இதில் கொஞ்சம் பேர்மாத்திரம் மீந்திருந்தவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் "சிறையிருப்பின் பேழையிலிருந்து" விடுவிக்கப்பட்டு, மீட்கப்படுகிறவர்களாய் இருப்பதையும் காட்டுகிறதாய் இருக்கிறது. பாபிலோனின் சிறையிருப்பிற்குள்ளாகச் சென்றவர்கள் அனைவரும் விடுவிக்கப்படுகிறவர்களாய் இருந்தனர். "நோவாவின் காலத்தில்" காணப்பட்ட வானவில்லானது, ஜலப்பிரயளத்திற்கு பின்னுள்ள காலத்தில், முக்கியமான சின்னமாக விளங்குகிறதாய் இருக்கிறது, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிப்பை மனந்திருந்துதல் மூலம், தேவனின் கிருபையால் பெற்றுக்கொள்வது மீந்திருப்போருக்குரியதாய் இருக்கிறது.

நோவாவின் நாட்களைப்போன்றே, வான வில்லானது, ஜலப்பிரளயத்திற்கு பின்னுள்ள உலகில் முக்கிய அடையாளமாய் விளங்கி வருகிறது, இது கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இரட்சிப்பை; மனந்திருந்துதல் மூலம் பெற்று, தேவ கிருபையால் மீந்திருப்போருக்கு ஒப்பனையான செயலாய் விளங்கி வருகிறது. தேவனது திட்டத்தை; மீந்திருப்போர் தங்களுக்கென ஏற்றுக்கொள்ளும்போது, எழுப்புதல் கடந்து வருகிறதாய் இருக்கிறது.

எசேக்கியேல் கண்ட தரிசனத்தின் இறுதிப்பகுதியானது, முக்கியம் வாய்ந்ததும், முழுமையான தரிசனத்தைப் புரிந்து கொள்ள திறவுகோளாகவும் விளங்குகிறது. எசேக்கியேலுக்கு தரிசனமான இராஜாதி இராஜாவும், கர்த்தாதி, கர்த்தருமானவர் பரலோகில் தமது சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டது குறித்து அவருக்கு நினைவு படுத்தியது என்னவெனில், சிறையிருப்பின் போது, பூமியிலிருந்த தாவீதின் சிங்காசனமானது விரைவில் காலியாகப்போகிறது, அதன் முடிவாக உண்மையான "தாவீதின் குமாரன்" அந்த சிங்காசனத்தில் அமர்ந்து, தேவனாய் இருந்து பூமி முழுவதையும் எருசலேமிலிருந்து ஆளுகை செய்யப்போகிறார் என்கிற சத்தியத்தை எடுத்துக் கூறுகிறதாய் இருக்கிறது. சங்கீதம் 78:70, 89:1-4, 132:11-18, சகரியா 12:7ff, மத்தேயு 9:27, 21:9, 15, 22:41-46, வெளிப்படுத்தல் 22:16.

தேவன் இன்னும் தமது சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார் என்பதைக்காண்பதற்கு, பாபிலோனிய அதிகாரத் தலைமைத்துவம் யூத மக்களுக்கு முக்கியம் வாய்ந்ததாய் இருந்தது, இஸ்ரவேலின் இராஜாக்கள் தங்களது சுய இன்பத்தை தங்களது சிம்மாசனத்தில் அனுபவித்து, தேவனுக்குக் கீழ்ப்படியாது போனபடியால் அகற்றப்பட்டுப்போயினர். இஸ்ரவேலர் சீக்கிரத்தில் பூமிக்குரிய இராஜாவை இழந்து தவிக்கப் போகிறார்கள், தெய்வீக வம்சாவழியில் அனைவரும் கரைப்பட்டு போன போதும், ஒரு நித்திய இராஜா இன்னும் தமது சிங்காசனத்தில் அமர்ந்து இருக்கிறார், பாபிலோனிய இராஜா அவருக்கு முன்பாக வணங்குவான். தானியேல் 2:46-49, 3:28-29, 4:34-37.

எசேக்கியேல் இங்கே தரிசனத்தில் காணும் சிருஷ்டிகரும் இரட்சகருகமான தேவனது மகிமைக்கு முன்னதாய், அவர்கள் அனைவரும் முகம்குப்புற விழுந்து அவரை வணங்குகிறவர்களாய்க் காணப்படுகிறார்கள். இங்கே தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பது என்பது சரியான பிரதிச்செய்கையாய் இருக்கிறது, மற்றும் கர்த்தருக்கும், தீர்க்கதரிசிக்கும் உள்ள உறவை இத்தரிசனம் யதார்த்தப்படுத்தி நிரூபணம் செய்கிறதாய் இருந்தது. முற்றிலும் தாழ்மையுடன் கர்த்தரை

வணங்காதவர்கள், சத்தியத்தின்படியுள்ள கர்த்தரை காணதவர்களாய் இருக்கின்றனர்.

சத்தியத்தின்படியுள்ள கர்த்தரைக் காணுப்போது, எழுப்புதல் துவங்குகிறதாய் இருக்கிறது. தீர்க்கரிசி என அழக்கப்படுகிற ஒருவர், தன்னையே மிகைப்படுத்தி, தனது தரிசனங்களை உரத்த குரலில் எடுத்துரைப்பார் எனில், அப்படிப்பட்டவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளாய் இருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்களின் குரலுக்கு செவிகொடாதிருங்கள்! சர்வவல்லவரைத் தரிசித்து, முகம்குப்புற விழுந்து, மரித்துப்போனவர்களைப் போல, தேவனது மாட்சிமைக்கு முன்னதாய் மூழ்கிப்போய், பரலோகையும், பூமியையும் ஆளுகிற இராஜாதி இராஜாவுக்கு முன்பாக தாழ்மைப் படுகிற தீர்க்கதரிசியே உண்மைத் தீர்க்கதரிசியாய் இருக்கிறார். ஆதியாகமம் 17:3, லேவியராகமம் 9:22-24, தானியேல் 8:17-18, 10:7-11, 16-17, மத்தேயு 17:5-8, அப்போஸ்தலர் 9:3-7, வெளிப்படுத்தல் 1:17-18.

எழுப்புதல் என்பது, இராஜாதி இராவும், கர்த்தாதிக் கர்த்தாவுமானவரை ஆராதித்து பணிந்துகொள்ளும்போது மற்றும் அவரது வார்த்தையை மிகக் கவனமாய் எடுத்துக்கொள்ளும்போது துவங்குகிறதாய் இருக்கிறது. நாம் அவரது வார்த்தையை கவனமாய் எடுத்துக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் மிகவும் கவனமாய் நம்மூலம் கிரியை நடப்பிக்கிறவராய் இருக்கிறார். **யோவான் 15:7-14, 16-17**.

எசேக்கியேல் 2:3 அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, எனக்கு விரோதமாய் எழும்பின கலகக்கார ஜாதியாகிய இஸ்ரவேல் புத்திரரிடத்திற்கு நான் உன்னை அனுப்புகிறேன்; அவர்களும் அவர்கள் பிதாக்களும் இந்நாள்வரைக்கும் எனக்கு விரோதமாய்த் துரோகம் செய்தார்கள்.

எசேக்கியேலுக்கு இப்பொழுது, கர்த்தர் தனக்களித்த பணிக்குரிய தன்மையானது எடுத்துரைக்கப்படுகிறது. எசேக்கியேல் சிறையிருப்புக்கு அனுப்பப்பட்டவராய் இங்கு காண்கிறோம், இஸ்ரவேல் மக்களின் நடத்தையினிமித்தம் கர்த்தர் தனது வார்த்தைகளை மறைத்துப் பேசாது, எசேக்கியேலை தனது சேவகனாய் இருக்க எதிர்பார்க்கிறார். இவரும் மோசேயைப் போன்று கீழ்ப்படிதலுக்கு, நிபச்சொல்லை பெறுகிறவராய் காணப்படுகிறார். எண்ணாகமம் 20:10, 32:13-15, உபாகமம் 9:18-24, எஸ்றா 9:7, நெகேமியா 9:16-31. இதைப்போன்றே கர்த்தரும், சீஷர்களுக்கும், நமக்கும் ஊழியத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதலின் மெய்யான எதிர்பார்ப்புகள் என்ன என்பதை தெளிவுபடுத்துகிறவராய் இருக்கிறார். **மத்தேயு 24:9**, மாற்கு 13:13, லூக்கா 21:17, **யோவான் 15:18-27.**

யோவான் சுவிஷேசத்தில், 15:18-27 வரையுள்ள வேதபகுதியில், பகைக்கப்படுவதை தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டு பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுகின்றனர், இவ்வனுபவத்தை கர்த்தரும் தன்னுடன் இணைப்படுத்திக் காட்டுவதைக் காண்கிறவர்களாய் இருக்கிறோம். நமது சிநேகிதரால் பகைக்கப்படும் பொழுது, அதுவே ஆவிக்குரிய வல்லமையைப் பெறக்கூடிய சாத்தியக்கூறுகளை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. யூதமக்கள் லட்சாதி லட்சமாய் பெருகிக்கொண்டே சென்றவர்கள், அவர்கள் தங்களது சொந்த தேவனைப் புறக்கணித்த காரணத்தால் மிகவும் சொற்பமாய் ஆயிரமான ஜனங்களாய் குறைவுபடத்துவங்கினர். கர்த்தருக்கு

விரோதமாய் கலகம் செய்யும்போது, அது அழிவைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. .

எசேக்கியேல் நல்ல குழுவினருடம் இருந்து கொண்டு, தான் சொல்வதைக் கேட்கமறுப்போரிடம் பேசுகிறவராய்க் காண்கிறோம். இதைப்போன்றே கடந்த நூற்றாண்டுகளில், அநேக தீர்க்கதரிசிகளும், பிரசங்கிமார்களும் செயல்பட்டுவந்தனர் என்பது மறுக்க இயலாத காரியமாய் விளங்குகிறது. இப்படிப்பட்ட காரியங்களில், போதகர்களாகிய நாம், கர்த்தருடைய வார்த்தையை நினைவு கூர்ந்தவர்களாய், எழுப்புதலில் களிகூருகிறவர்களாதல் வேண்டும். சத்தியத்தை மிகவும் உண்மையுடனும், தாழ்மையுடனும் போதிக்கும்போது, அதைரியப்பட்டுப்போகக்கூடாது. ஏசாயா 6:8-10, எரேமியா 1:7-10, 7:1-5, 25:3-7, 26:2-9, 36:18-24, மாற்கு 12:1-11. தேவனது பரிசுத்த ஆவியானவரால் உயிர்பிக்கப்பிக்கப்படும் ஒருவர் கூட கெட்டவர்கள் அல்லர். அவர்கள் இன்னும் உயிருடன் இருப்பார்களேயானால், அவர்களுக்காய் ஊக்கமாய் ஜெபித்தல் அவசியம். காரணம் இன்னும் அவர்களை குறித்து நம்பிக்கை இருக்கிறது. நாம் சத்தியத்தை சத்தியமாய் பிரசங்கிக்காதவரையில், எழுப்புதலானது தாமதிக்கிறதாகவே இருக்கும்.

எசேக்கியேல் 2:4 - 5 அவர்கள் கடினமுகமு முரட்டாட்ட இருதயமுமுள்ள புத்திரர்; அவர்களிடத்திற்கு நான் உன்னை அனுப்புகிறேன்; கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைக்கிறார் என்று அவர்களோடே சொல்லு. 5 கலகவீட்டாராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, தங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசி உண்டென்கிறதை அவர்கள் அறிய வேண்டும்.

இதைப்போன்றே கர்த்தரும் கூறுகிறவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களாய் இருக்கின்றனர். அவரை அவமதிக்கிறவர்களாயும், அவரது வார்த்தைகளையும் அவரது சேவகரின் வார்த்தைகளையும் அவமதிக்கிறவர்களாயும் காணப்பட்டனர். அவர்கள் "அவமரியாதை செய்கிறவர்களாய்" விளங்கினர். இவ்வார்த்தையானது இவ்வாறு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது: "கடின முகமுள்ளவர்கள்" இதன் பொருள் ஜனங்கள் தங்களது முகத்தை பேசுகிறவருக்கு விரோதமாய் வைத்துக்கொள்ளுதல் என்பதாகும்.

இதை இன்றைய அளவில் கூறுவோமெனில், ஜனங்கள் தங்களை எல்லாவிதத்திலும் "அடைத்துக்கொள்கிறவர்களாய்" காணப்படுகின்றனர்; அவர்களுக்கு கூறப்பட்ட வார்த்தைகளை புறக்கணித்துப்போடுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் முகமும், இருதயமும் சத்தியத்திற்கு விரோதமாய் கடினப்பட்டு இருக்கிறது. உடனடியான சந்தோஷத்தை அளிக்கும் பொய்யை தெரிவு செய்து கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். பாலியல் ஒழுக்கக்கேடுகளில் சிக்கி தவிக்கும் விசுவாசிகளுக்குத் தொடர்ந்து ஆலோசனை அளித்தும், அவர்கள் தொடர்ந்து அவ்வித ஒழுக்கக்கேடான செயல்களில், செயல்பட்டுவருகிறவர்களாய் காணப்படுகின்றனர். சீர்திருத்துதலுக்கு எதிராக தங்களது முகங்களையும், இருதயத்தையும் வைத்துக்கொள்கிறார்கள், காரணம் அவர்கள் தங்களது பாவபழக்கவழக்கங்களில் மகிழ்வு கொண்டு, அதன் விளைவுகளைக்

கண்ணோக்காது, தங்களது பாவ காரியங்களில் மகிழ்வுடன் இருக்கவிரும்புகிறவர்களாய் கணப்படுகின்றனர். நீதிமொழிகள் 21:29.

எசேக்கியேலுக்கு தனது பணி என்ன என்பது, தெளிவானபோது, பெரும்பாலானோர் தனது செய்தியை ஆரம்பத்தில் கேட்க முற்றிலும் மறுக்கிறவர்களாய் இருந்தனர், மற்றும் அவருக்கு விரோதமாய் கடினப்பட்டு, அவரது வார்த்தைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்தனர். இதை எசேக்கியேல் எவ்வளவேனும் பொருட்படுத்தாதவராய்க் காணப்பட்டார். இதினிமித்தம் அவர் தன்னையே நொந்து கொள்ளவோ, குற்றப்படுத்திக்கொள்ளவோ துணியவில்லை. இவரது அணுகுமுறையில், இவர் கூறியதில் எவ்வித மாற்றத்தையும் இவர் காணவில்லை. கர்த்தர் இவருக்குச் சொன்ன எல்லாவற்றையும் சரியாக சொன்னார், இவரைக் கேட்பவர்கள் தங்கள் முகத்தைக் கடினப்படுத்தியது குறித்து இவர் கவலை கொள்ளவில்லை.

.

இது முறையாக செய்தி அறிவிப்பதற்கான கொள்கை அறிவுரையல்ல, ஆனால் கர்த்தருடைய மந்தையை மேய்க்கும், போதகர்களாகிய நாம் கேட்டறிய வேண்டிய அறிவுரையாய் இருக்கிறது. இன்றைய அளவில் நாம், நமது செய்திமூலம் அநேக மாற்றங்கள் நிகழவில்லையானால், நமது அணுகுமுறைகளை மாற்றி செய்தியளிக்க ஊக்குவிக்கப்படுகிறோம். எசேக்கியேலும், இப்படிப்பட்ட ஜனங்களுக்கு செய்தியை எடுத்துக்கூற பலதரப்பட்ட வழிமுறைகளை கையாண்டார் எனப்பார்க்கிறோம். (இவர் பிரசங்கித்தார், அறிவித்தார், நடித்துக் காட்டினார், நாடகவடிவில் நடித்துக்காட்டினார்) ஆனால் செய்தியோ எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை.

இந்த தேவமனிதன், இன்றைய அளவில் நமக்கு ஒரு முன்மாதிரியாய் இருக்கிறார், கர்த்தர் இவருக்கு சொன்ன ஒவ்வொரு காரியத்திலிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். சில சந்தர்ப்பங்களில் கர்த்தருடைய ஜனங்கள் நடுவே எவ்வித நேர்மறையான காரியங்களையும் நாம் கண்டுகொள்ளாதிருக்க நேரிடும், இருப்பினும் எப்படியாயினும் சத்தியத்தை பிரசங்கிக்கும் பணி நமக்கு அளிக்கப்பட்டுள்ளதை நாம் ஒரு போதும் மறந்து போகக் கூடாது, ஜனங்கள் தங்களுடன் தேவனது சேவகர் ஒருவர் இருந்தார் என்பதை அறிந்து கொள்ளும்படி செய்தல் வேண்டும். அவர்கள் தேவனது வார்த்தையை அறிந்தவர்களாயும், பரிசுத்த ஆவியானவர், அதன் மூலம் அவர்களுக்கு உணர்த்துதலை அளிக்கக்கூடியதாயும் இருந்ததை அறிதல் அவசியம். மத்தேயு 10:12-16, யோவான் 16:8-11, அப்போஸ்தலர் 13:46, 2 கொரிந்தியர் 2:14-17. ஜனங்களில் மாற்றத்தைக் கொண்டுவருபவர் பரிசுத்த ஆவியானவர், நமது தூண்டுதலாலும், சாதூர்யத்தாலும் அல்ல.

தேவனுடைய பிள்ளைகள் தேவனது வார்த்தை கேட்க மறுக்கும்போது, அவர்கள் தேவனுடய சிட்சைக்கு உட்படுகிறவர்களாகின்றனர். இதுபோன்றே போதகர்களும் போதிப்பதை நிறுத்தும்பொழுது, இரட்டிப்பான சிட்சைக்குள்ளாகிறவர்களாகிறார்கள். லூக்கா 12:47-48, யாக்கோபு 3:1-2. நாம் கர்த்தருக்கு வெளிச்சம் கொடுக்கிறவர்களாய் இருக்கிறோம், நாம் சத்தியத்தை அறிவிப்பதன் மூலமும், அதன்படி வாழ்வதன்

மூலமும் எல்லாருக்கும் முன்பாக நமது வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது. மத்தேயு 5:14, யோவான் 8:12, பிலிப்பியர் 2:14-16, 1 யோவான் 1:5-10.

எசேக்கியேல் 2:6 மனுபுத்திரனே; நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம்; அவர்கள் வார்த்தைகளுக்கும் அஞ்சவேண்டாம்; நெரிஞ்சல்களுக்குள்ளும், முள்ளுகளுக்குள்ளும் நீ தங்கியிருந்தாலும், நீ அவர்கள் வார்த்தைகளுக்குப் பயப்படாமலும் அவர்கள் முகத்துக்குக் கலங்காமலுமிரு, அவர்கள் கலக வீட்டார்.

கர்த்தரிடமிருந்து நமக்களிக்கப்படும் செய்தியானது, நமது கண்கள் எப்பொழும் கர்த்தரையே நோக்கிக் கொண்டு இருத்தல் வேண்டும். நமது கண்களை ஜனங்கள் மீதோ, நம்மைச் சுற்றியுள்ள பிரச்சனைகள் மீதோ பதித்தல் கூடாது. எபிரெயர் 12:1-3. நாம் கர்த்தரால் ஒரு செயலைச் செய்யக் கட்டளை பெறும்போது, அதைத் துணிவுடன் செய்தல் வேண்டும். காரணம் அவரது கட்டளையில் பராமரிப்பும், பாதுகாப்பும் அடங்கியிருக்கிறது. தேவனது வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்குப் பயப்படுதலோ, அஞ்சுதலோ, கூடாது, நாம் பயப்பட வேண்டியது எதற்கென்றால், நமது கர்த்தர் விரும்பாத காரியங்களில் ஈடுபடும்போது மட்டுமே. இதைச் சொல்வதற்கு எளிதாயும், புரிந்துகொள்ள எளிதாயும் இருந்தபோதிலும், இதைக் கைக்கொள்ளும்போது, மிகவும் கடினமான காரியமாய் இருக்கிறது. நமது சபை அங்கத்தினரால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, அல்லது வெறுத்து புறம்பாக்கப்படுவது என்பது எளிதான காரியமாகாது. இப்படிப்பட்ட நேரங்களில், கர்த்தரின் வழிநடத்துதலையே, எளிதில் சந்தேகிக்க நேரிடுகிறதாய் இருக்கிறது.

எல்லாவற்றையும் இழந்து தவிக்கையில், சாதாரண மனுஷீக பயமானது, செல்லும் பாதையில் நமக்கு முன் வந்து நம்மை அச்சுறுத்துகிறதாய் இருக்கிறது. இழந்து போனவைகளைக் குறித்த பயமானது சாதாரணமான ஒன்றாய் இருக்கிறது, போதகர்கள் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பயப்படுவதைக்குறித்து அசட்டையாய் எண்ணுதல் கூடாது. இப்படிப்பட்ட காரியங்கள், மனித வர்க்கத்தில் அடிப்படையான காரியமாயிருந்து, நாம் "மனிதக் குமாரர்களாய்" இருக்கிறோம் என்பதை நமக்கு நினவு படுத்துகிறதாய் இருக்கிறது. நாம் இன்னும், ஆதாமின் பெலவீனங்களால் பாதிப்புக்குள்ளாகிறவர்களாய் இருக்கிறோம். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஆவிக்குரிய வல்லமையில் நடக்கத்தவறுகிறவர்களாய் இருந்து வருகிறோம். 1 யோவான் 4:15-19 இவ்வேதபகுதியானது உற்சாகப்படுத்தும் வேதபகுதியாய் இருக்கிறது. பயத்துக்குரிய பரிகாரமானது இவ்வேதபகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய அன்பை நெருங்கி ஜீவிப்பதும், அவரது அன்பில் இளைப்பாறுவதும், கர்த்தர் அளிக்கக்கூடிய, பூரணப் பராமரிப்பாகவும், பாதுகாப்பாகவும், நமது வாழ்வின் திட்டத்திற்குள்ளாக இருக்கிறது, மட்டுமின்றி நம் வாழ்நாள் எல்லாம் இது போன்ற சந்தர்ப்பங்களில் நம்முடன் சதா காலமும் இருக்கிறதாய் இருக்கிறது.

அநேகப் பெரிய பரிசுத்தவான்களுக்கு, இப்படிப்பட்ட ஊக்கப்படுத்துதல் அவசியமாய் இருக்கிறது, காரணம் அவர்கள் பாவத்தை எதிர்ப்பது போலவே, பயத்தை எதிர்க்கவும், அதைப் புறக்கணிவும் அவசியமாய் இருக்கிறது. ஒரு நபருக்கு கட்டளை அளிக்கப்படுகிறபோது, பேசப்படுகிற காரியத்தில் அந்நபர் விழுந்து

கிடப்பதை நம் நினைவில் இருத்திக்கொள்வது முக்கியமானதாய் இருக்கிறது. **எசேக்கியேல் பயப்பட்டவராய் காணப்படுகிறார், அவரைப் போன்றே நாமும் இது போன்ற சந்தர்ப்பங்களில் பயப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.**! இதுவே நமது பயத்துடன் ஈடுபடவேண்டிய காரியமாய் இருக்கிறது, பயம் தன்னில் தானே பாவமில்லாததாய் இருக்கிறது அது நம்மில் பாவத்தை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது.

யூத மனோதத்துவ நிபுணரான Dr Viktor Frankl, அவர்களது கூற்றை நான் தனிப்பட்டவிதத்தில் பாராட்டுகிறவனாய் இருக்கிறேன், இவர் Auschwitz சிறையிருப்புக்கூடாகச் சென்று தண்டனை அனுபவித்தவராய் இருக்கிறார். "உங்கள் வாழ்வில் சில காரியங்கள் நிகழுமென்றால், நீங்கள் மனந்தளரக்கூடாது, காரணம் இழப்பதற்கென்று ஒன்றுமில்லை." [He says, “There are some things, that if that happen to you and you don’t lose your mind, it is only because you didn’t have one to lose!”] அநேகப் பெரிய மனிதர்கள் பயத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள் மற்றும் எசேக்கியேலைப் போன்று இவர்களும், பயப்படுகிற காலங்களில் தைரியப்படுத்தப்பட்டும் இருக்கின்றனர், இதைப் போன்ற ஆறுதலை நாமும் பெற்றுக்கொள்வோமாக. கிதியோன் பயந்தவனாய் காணப்படுகிறான். நியாதிபதிகள் 6, எலியா பயந்தவனாய் காணப்படுகிறான். 2 இராஜாக்கள் 1:15. தாவீது பல சந்தர்ப்பங்களில் பயந்தவராய்க் காணப்படுகிறார் மற்றும் பயத்திலிருந்து விடுபட்டவராகவும் விளங்குகிறார், ஏசாயா பயப்பட்டவராய்க் காணப்படுகிறார். ஏசாயா 51:12. எரேமியாவும், எசேக்கியேலைப் போன்று, உற்சாகப்படுத்தப்படுகிறார். எரேமியா 1:8, 17-19.

முட்களும், குறுக்கும் வீழ்ச்சியையும், பாவத்தினால் உண்டான சாபத்தையும் நினைவுபடுத்துகிறது. இப்படிப்பட்ட காரியங்கள் நமது தோட்டத்தில் நிறைந்து காணப்படுமேயானால், மற்றும் அது நமது வாழ்வில் பிரச்சனைகளைக் கொண்டுவருமேயானால், அதற்காக நாம் கண்ணீர் சிந்தாது, கர்த்தரிடம் அது குறித்து வினவாது, ஆதியாகமம் 3:17 ம் வசனத்திற்கு நமது வேதத்தைத் திருப்பிக்கொண்டு அதில் கூறப்பட்டுள்ள சத்தியத்தை நினைவு கூறக்கடவோம், நாம் விழுந்து போன உலகில் ஜீவிக்கிறவர்களாய் இருக்கிறோம், கர்த்தரின் இரண்டாம் வருகையில் முழு பூமியையும் அவர் ஆழுகை செய்யும் போதுதான் இந்நிலை மாறுகிறதாய் இருக்கும். அது வரை இது போன்ற அனுபவம், நமக்கு இயல்பானதாய் இருக்கிறது.

எசேக்கியேல் முட்களின் அனுபவத்தை தனது வாழ்வில் சந்திக்க நேர்ந்தது, அடிமைத்தன நுகத்தின் கீழாக வேலை செய்து ஜீவனம்செய்ய வேண்டியதாய் இருந்தது. இது நமது காலத்தில் ஒரு பல்கலை கழக பட்டதாரி, ஒரு போதகராய் பணிசெய்வதற்கொப்பாக இருக்கிறது. இவர் தனது குழந்தைகளற்ற மனைவியின் மரணத்தை எதிர்கொள்ள வேண்டியதாய் இருந்தது, சில சந்தர்ப்பங்களில் தனது நண்பர்களையும் இழக்க நேரிட்டது. பாவம் மற்றும் மரணத்தின் மீது கர்த்தருக்கு இருந்த வருத்தங்களை உணர்ந்து, அவரது பாடுகளில் பங்கேற்க வேண்டியதாய் இருந்தது. பாடுகள் துக்கங்களின் ஊடாக, கர்த்தருடன் நெருங்கிய ஐக்கியம் கொள்கிறவராய் இருந்தார். மற்றும் பாவம், மரணம் இவைகளின் பாடுகளிலும் பங்கேற்கிறவராய் இருந்தார். இதைப்போன்றே தேவ ஊழியரும் விழுந்து போன

மனுக்குலத்தின் வருத்தத்தில், பங்கேற்கும் இரட்சகரைப் போன்று மனதுருக்கம் நிறைந்தவர்களாய் காணப்படுதல் அவசியம்.

அநேகர், வாழ்வில் மகிழ்ச்சி நிறைவுடன் எல்லா நேரங்களிலும் கடந்து செல்கிறவர்களாய் இருக்கின்றனர், அவர்களுக்காக மகிழ்வுடன் காணப்படுகிறவர்களாய் இருக்கின்றனர், ஆனால் கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட தேவஊழியர் அப்படிப்பட்டவர்கள் அல்லர், என வேதாகமத்தில் காண்கிறோம். தேவ ஊழியர் பாடுகள், வருத்தங்களை அனுபவிக்கிறவர்களாய் இருந்தனர், இருப்பினும் அவைகள் ஊடாக மகிழ்வுடன் இருக்கின்றவர்களாய் இருக்கிறார்கள். கீழ்க்காணும் வசனங்களை நாம் ஏற்கனவே கண்டிருந்தும் அவைகளை மறுபடியும் இங்கு வாசிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ஏசாயா 53:3-8, 2 கொரிந்தியர் 1:5-7, எபேசியர் 6:14-20, பிலிப்பியர் 1:20, 28, 3:10, 2 தீமோத்தேயு 1:7, யாக்கோபு 5:10, 1 பேதுரு 2:19, 4:13.

மக்களில் சிலர், தேள்களைப் போலிருந்து, தங்கள் வால்களில் உள்ள கொடிய வேதனை நிறைந்த விஷத்தினால், கொட்டுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் பெரிதளவில் அசௌகரியங்களையும், உணர்ச்சி வசமான மனப்பாரங்களையும், வேதனைகளையும் அளிக்கிறவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களால் நேரிடுபவைகளைக் குறித்து, கலக்கமடையவோ, அவர்களது தீமையான வார்த்தைகள் நிமித்தம், மற்றும் அவர்கள் செயல்பாடுகள், பார்வைகள் நிமித்தம் மனங்கலங்கவோ, வருத்தப்படவோ அவசியமில்லை. போதகர்களுக்குரிய கொடிய தாக்குதல்கள் தாங்கள் பராமரிக்கும் மந்தையிலிருந்து அவர்களுக்கு நேரிடுகிறதாய் இருக்கிறது. மந்தையில் உள்ள இப்படிப்பட்டவர்கள், நல்ல விசுவாசிகளாய் இருப்பர், ஆனால் அவர்கள் மாம்சீகத்துக்குரியவர்களாயும், கீழ்ப்படியாதவர்களுமாய் இருப்பர், அல்லது அவர்கள் சாத்தானுக்குரியவர்களாய் இருந்து, சபைக்குள் மாய்மாலம் செய்கிறவர்களாய் காணப்படுவர், இப்படிப்பட்டவர்கள் மீது நீங்கள் கர்த்தரின் மிகுந்த அன்பையும், கரிசனயும் காட்டுவதற்கு பதிலாக, இவர்கள் பெரிய அளவில், உங்களுக்கு வேதனையளித்து, உங்களைப் பாதிப்புக்குள்ளாக்குகிறவர்களாய் இருப்பர்.

போதகர்களாகிய நீங்கள் மனக்கலக்கம் அடைய அவசியமில்லை, நீங்கள் சிறந்த ஐக்கியத்தில் இருக்கிறீர்கள், ஆகையால் கர்த்தரின் அன்பை நெருங்கிச் சார்ந்து இருங்கள், கவனமாய் உங்கள் மந்தையைக் காத்துக்கொண்டு, அதன் மீது கரிசனை உள்ளவர்களாய் இருங்கள். உங்களை நீங்களே நிலைவரப்படுத்திக் கொள்ளுங்கள், நித்தியமான சத்தியத்தில் நிலைவரப்படுங்கள், மாம்சீகத்திற்குரியவர்கள் மற்றும் தீமை செய்பவர்கள், தங்கள் வெறுப்பை காட்டட்டும், ஆனால் நீங்கள் தேவ அன்பில் நிலைகொண்டிருங்கள், கர்த்தரின் நியாயத்திற்காக பொறுமையுடன் காத்திருங்கள். கர்த்தர்தாமே இப்படிப்பட்டவர்களுடன் இடைபட்டு நியாயம் செய்கிறவராய் இருக்கிறார். நீதிமொழிகள் 30:5-6, 11-14, ஏசாயா 51:7-8, எரேமியா 18:18-23, ஆமோஸ் 7:8-17, எபிரெயர் 11:24-29, 1 பேதுரு 3:13-20.

எசேக்கியேல் 2:7 - 8. கலகக்காரராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு. 8

மனுபுத்திரனே, நீ அந்தக் கலகவீட்டாரைப் போலக் கலகக்காரனாயிராமல், நான் உன்னோடே சொல்லுகிறதைக் கேள், உன் வாயைத் திறந்து நான் உனக்குக் கொடுக்கிறதைப் புசி என்றார்.

சரித்திரப் பூர்வமாய் எப்பொழுதும், உண்மையான தீர்க்கதரிசிகளைவிடக் கள்ளத்தீர்க்கதரிசிகள் அதிகமாகவே காணப்படுகிறவர்களாய் இருந்து வந்தனர். நேர்மறையாய் தான் விரும்பும் காரியங்களைவிட எதிர்மறையான காரியங்களே அதிகமாய் இருந்து வந்தன, இருப்பினும் நமது அழைப்பின் படி, சத்தியத்தை எதிர்மறையானவற்றுடன் அறிவிப்பது தகுதியற்றதாய் இருக்கிறது. சத்தியத்தைக் கேட்போரைக்குறித்து பரீட்சித்துப்பார்த்தலும், மற்றும் அவர்களை ஆராய்ந்து அறிந்து கொள்ளுதலும், நமது கடமைகளில் ஒன்றாய் இருக்கிறது. நமது கடமையானது, சத்தியத்தை அறிவிக்க வேண்டியதாய் இருக்கிறது, கேட்போர் அதைக் கொண்டு நியாயந்தீர்க்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். நமது கடமை நியாயந்தீர்ப்பது அல்ல, கர்த்தருடைய வார்த்தையே அவர்களை நியாயந்தீர்க்கிறதாய் இருக்கிறது, மற்றும் அவர்கள் உண்மையில் யார் என்பதைக் கண்டுகொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது, நமது கடமையானது, நமக்கு அளிக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவது மட்டுமே, அவர்களது தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு சத்தியத்தை அறிவியுங்கள்.

அவர்கள் அதை கேட்கிறார்களோ இல்லையோ, உண்மையுடனும், மனத்தாழ்மையுடனும் சத்தியத்தை அறிவிப்பது நமது கரிசனையாய் இருக்கட்டும். இந்த நாட்களில் நமது பிரசங்கத்தைக் கொண்டு நம்மை அளவிடுகிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் நமது ஊழியத்தை நியாயந்தீர்க்கிறவர்களாயும் இருக்கின்றனர். நமக்களிக்கப்பட்ட சத்தியத்தை, உண்மையுடனும், தெளிவுடனும், புரிந்து கொள்ளும் வகையில், முழுமையாக அறிவிக்க வேண்டியது நமது தலையாய கடமையாய் இருக்கிறது. எரேமியா 1:14-30, 23:28, 26:2, யோனா 3:2, 2 தீமோத்தேயு 4:1-5.

எசேக்கியேலைப் போன்று எல்லாப்போதகர்களும், ஒரு குறிப்பிட்ட காரியத்தில் கண்ணோக்கமாய் இருத்தல் வேண்டும், அது கர்த்தருக்காக பாராட்டப்படும் அன்பு மற்றும் அவருக்குக் கீழ்ப்படிதலாகும், மற்றும் அவரது செய்தியை நிச்சயித்துக் கொண்டு அதை எப்பொழுதும் தெளிவுடன் அறிவிப்பதாகும். தேவ ஊழியர் தேவனது வார்த்தையை கேட்டல் வேண்டும், அவைகளை சரியாய் புரிந்து கொள்ளுதல் வேண்டும், அதற்கு எவ்விதத்திலும் முறண்பட்டு கலகம் செய்தல் கூடாது. ஆவியானவருக்குள் நடந்து கொள்ளுதல் அவருக்குரிய சவாலாய் இருக்கிறது. முற்றிலும் கர்த்தரது வெளிப்பாட்டிற்கு கீழ்ப்படிதல் அவசியமானதாய் இருக்கிறது..

பின்னர் கர்த்தர், தரிசனத்திற்குள், ஒரு சுருளை அளித்து அதை உண்ணும்படி பணிக்கிறதைக் காண்கிறோம். இது காண்பதற்கு வினோதமான செயலாய் இருக்கிறது. நமது பாணியில் கூறுவோமெனில், தரிசனத்தில் ஒரு பெரிய வேதாகமக் கைப்பிரதியை உண்பதற்கு சமமாய் இருக்கிறது. இந்தத் தரிசனம் ஒரு ஆவிக்குரிய வழிநடத்தலை அளிக்கிறதாய் இருக்கிறது, தேவனுடைய வார்த்தையை உணவாக வயிற்றுக்குள் எடுத்துச் செல்லப் பணிக்கப்படுகிறார். அதை முழுவதுமாய் ஜீரணித்து, அதன் ஒவ்வொரு பகுதியையும் உறிஞ்சி,

வார்த்தையின்படி வாழ வேண்டும். பின்னர் தேவனது வார்த்தையை அறிவித்தல் வேண்டும். அவர் தேவனது வார்த்தையினால் போஷிக்கப்பட்டு, ஆவிக்குரிய வளர்ச்சியை அடைந்து, தேவனுடன் உள்ள உறவில் முதிர்ச்சியடைந்து, பின்னர் அவர் எல்லா சூழ்நிலைக்கேற்றவாறு அவரது பணிசெய்யத் தகுதியுள்ளவராதல் வேண்டும்.

எழுப்புதல் என்பது, நம்மை நாம்மை நாமே இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள காரியத்திற்கு அற்பணிக்கும் பொழுது மட்டுமே உருவாகிறதாய் இருக்கிறது. தேவன் நம்மை, அவரை நம்புவதற்கும், அவருக்குக் கீழ்படிவதற்கும் அழைத்து இருக்கிறார். அவர் மீது கண்ணோக்கமாயிருந்து, ஜெபத்திலும், ஆராதனையிலும் தரித்திருந்து, தமது ஜனங்களை தேவ வார்த்தையினால் போஷிக்க மற்றும் கேட்போர் அனைவருக்கும் சத்தியத்தை அறிவிக்க நம்மை அழைத்து இருக்கிறார். ஆடுகளின் உண்மையுள்ள மேய்ப்பன் வெறுக்கப்படத்தக்க ஆடுகளை ஒதுக்கித் தள்ளுவதில்லை. இங்கு நாம் தேவனுடைய மந்தைக்கு பணிவிடை செய்யும்படி இருக்கிறோம். சில வேளைகளில் கர்த்தருடைய ஆடுகள் மிகவும் எரிச்சலடையச் செய்கிறதாய் இருக்கும். கர்த்தரது பரிசுத்த வார்த்தையிலிருந்து, அவர் அவரது ஆடுகளுக்கு ஆயத்தம் செய்து வைத்து இருக்கும் ஆகாரத்தை தொடர்ந்து பணிவுடன் அவைகளுக்கு அளிக்க, நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எசேக்கியேல் 3:16 ஏழு நாள் முடிந்த பின்பு, கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: 17 . மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன், நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக.

எசேக்கியேல், தனது புத்திக்கு அப்பாற்பட்ட வெளிப்பாட்டைக் கண்டபின்னர், அமர்ந்திருக்க வேண்டியதாய் இருந்தது. (வச 15) ஏழு நாட்களுக்குப் பின்னர் கர்த்தர் அவருடன் பேசினார். ஒரு முறைகூட நாம், அவரது தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்பட்ட, கர்த்தரது கிரியைகளுக்கடுத்த சத்தியத்திற்கு முன், கொண்டு வந்து நிறுத்தப்படுகிறோம். சரியான இடத்தில் அமர்ந்து பணி செய்யும் முக்கியமான தேவப் பணியாளருக்குக் கூட, குறிப்பிட்ட வெளிப்பாடு என்பது அபூர்வமான ஒன்றாய் இருக்கிறது, தீர்க்கதரிசியானவர் அநேக நாட்களை அமைதியான ஜெபத்தில் கழித்த பின்னரே, குறிப்பிட்ட வெளிப்பாடு அவருக்கு கிடைப்பது சாத்தியமாயிற்று.

கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது அவசியம், அவர்கள் தங்களது போலியான வெளிப்பாடுகளை திறந்து காட்டி, அவைகளைத் தங்களது சொந்த அறிவின்படியும், யோசனையின்படியும், "கர்த்தர் சொல்லுகிறதென்னவென்றால்" என எடுத்துரைக்கிறவர்களாய் இருக்கின்றனர், அவ்வாறு உரைப்பது தங்களது சொந்த வீணான வார்த்தைகளாய் இருக்கிறது, அவைகள் கர்த்தரிடமிருந்து கிடைக்கப்பட்டவைகள் அல்ல. எசேக்கியேல் புத்தகத்தில் இதைப் போன்று, கள்ளத்தீர்க்கதரிசிகள் உரைத்த அநேகப் பொய்யான தீர்க்கதரிசனங்களை நாம் மாதிரிகளாய் காணமுடியும். எரேமியா புத்தகத்திலும்,

இதைப்போன்ற கள்ளத்தீர்க்கதரிசிகளைக் காணலாம். தேவ ஜனங்கள் நெருக்கப்படுகிற காலங்களில், சாத்தான் தனது ஜனங்களைக்கொண்டு, தேவ ஜனங்கள் மத்தியில் பெருங்குளப்பங்களை உண்டுபண்ணுகிறவனாய் இருக்கிறான்.

கர்த்தரின் அழைப்பின் தன்மையானது, இப்பொழுது எசேக்கியேலுக்கு எடுத்துரைக்கப்படுகிறது, அவர் "நகர காவலாளியாக" அறிவிக்கப்படுகிறார். வரப்போகிற கொடிய அழிவைக் குறித்து முன் எச்சரிப்பளிப்பது அவரது கடமையாய் இருந்தது. எசேக்கியேல் தேவனின் உன்னத அழைப்பைப் பெறுகிறவராய் இருக்கிறார், இப்படிப்பட்ட அழைப்புடன் நமது அழைப்பையும் நினைவுகூருவோமாக. தேவன் ஆவிக்குரிய வரத்தினை அளிக்கிறவராய் இருக்கிறார், ஆவிக்குரிய அழைப்பையும் அளிக்கிறவராய் இருக்கிறார், அவ்வழைப்பை நிறைவு செய்ய வல்லமையையும் அளிக்கிறவராய் இருக்கிறார். **1 கொரிந்தியர் 12:7-13**. நமது வாழ்வில் கர்த்தருடைய அழைப்பைத் தாழ்மையுடன் தேடுவோமாக, நமது அழைப்பை இனங்கண்டு கொள்வோமாக, அதை நிறைவேற்ற அவரது வல்லமையை நாடுவோமாக. ஆவிக்குரிய கிரியைகளை நடப்பிக்க, பரிசுத்த ஆவியானவரது வல்லமையால் மட்டுமே சாத்தியமாகிறதாய் இருக்கிறது, கர்த்தரது மகிமைக்காக, நமது சொந்த மனித பெலத்தில், எந்த ஒரு கிரியையும் நாம் செய்ய இயலாது, அவ்வாறு செய்வோமெனில், அது நமது மகிமைக்கேதுவாய் வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

தேவனின் அழைப்பானது, அவரது முழு பராமரிப்பை நமக்களிக்கிறதாய் இருக்கிறது, அவர் நமக்கு பகிர்ந்தளிக்கும் வரங்களானது, கர்த்தரின் நாம மகிமைக்காய் உபயோகித்து, சபையைக் கட்டி எழுப்பப் பயன்படுத்துதல் வேண்டும். அப்போஸ்தலர் 2:4, ரோமர் 12:1-8, 1 கொரிந்தியர் 12:28-30, எபேசியர் 4:11. நமக்கு அவசிமான அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், இவ்வுலக வாழ்வில் கர்த்தரை சேவிப்பதற்கு பயன்படுத்துமாறு அளிக்கப்பட்டுள்ளன. நெருக்கங்களின் நடுவே அளிக்கப்படும் அவரது பராமரிப்புகள், அவருக்கு முன்பாக அமர்ந்து, மகிழ்வுடன் ஆழ்ந்து சிந்தனை செய்து, பரிசுத்தமும், சுத்திகரிப்பும் அடங்கியுள்ள தேவனது வார்த்தையை, பாவத்தால் நிரப்பப்பட்டு, அறியாமையில் வாழும் மனுக்குலத்திற்கு அளிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவரது வார்த்தையானது, பட்டயமாய் செயல்பட்டு, சாக்குபோக்குகளையும் தவறான முக்கியத்துவங்களையும், எல்லாவித மதியீனமான ஆசைகளையும், வெட்டி சாய்க்கிறதாய் இருக்கிறது, அவருக்குமுன்பாக நம்மை, எவ்வித சாக்குப்போக்குமின்றி நிர்வாணமாக்கி நமது கீழ்ப்படியாமையை வெளிப்படுத்துகிறதாயும் இருக்கிறது. தேவனது வார்த்தையானது, தேசத்தைப்பற்றிய, உண்மையானவற்றை உணரும்படி செய்து, உளக்குமுறலில் "உஷ்ணத்தை" உருவாக்குகிறதாய் இருக்கிறது. தேவனது வார்த்தையின்படி சேவை செய்கிற ஊழியக்காரராகிய நம்மையும் அவரது வார்த்தையானது வெட்டுகிறதாய் இருக்கிறது, பின்னர் அது பிறரையும் வெட்டி சுத்திகரிக்கிறதாய் இருக்கிறது. 2 தீமோத்தேயு 3:16-17, எபிரெயர் 4:11-13.

கர்த்தரது ஊழிய பணிக்கு மறு அற்பணம் செய்வோமாக, முதலாவதாக, கர்த்தரின் பட்டயம் நம்மில் செயல்பட்டு, அது நம்மை வெட்டுவதை ஏற்றுகொள்வோமாக,

கர்த்தர் மாய்மாலத்தை வெறுக்கிறார், முதலாவது, நமது ஈடுபாடுகளோடு அவருடன் அமரும்படி அவர் விரும்புகிறார், இதினிமித்தம் நாம் சுத்திகரிக்கப்பட்ட பாத்திரமாகி, மற்றவர்களது மாய்மாலத்தை வெட்டி சுத்திகரிக்க, பயன்படும் சுத்தமான பாத்திரமாய் பயன்படுத்த அவர் விரும்புகிறார். நாம் மாய்மாலமுள்ளவர்களாய் மாயம் செய்வோமெனில், பிறரது மாய்மாலத்திலிருந்து அவர்களை சுத்திகரிப்பது அரிதான காரியமாய் இருக்கும். எசேக்கியேல் சத்தியத்துடன் கர்த்தருக்கு முன்பாக ஏழு நாட்கள் காத்திருந்து, பேசுவதற்கு ஆயத்தமாக வேண்டியதாய் இருந்தது. யோபு 2:13, 42:2-6, 10, எரேமியா 23:9-12, ஆபகூக் 3:16-19.

கர்த்தரின் சேவையில் நாம், சுத்திகரிக்கப் பட்ட பரிசுத்த பாத்திரமாய் விளங்கி அவரது சத்தியத்திற்கு சேவகராய் விளங்குதல் வேண்டும். இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ள வசனங்களின் கிரமப்படி, அவைகளை வாசித்தறியுங்கள், எசேக்கியேலைப் போன்று, கர்த்தருடன் அமர்ந்து, நமது வாழ்வில் அவரது எதிர்பார்ப்புக்கு இணங்கி செயல்படுதல் வேண்டும். ரோமர் 9:19-24, 2 கொரிந்தியர் 4:5-9, 2 தீமோத்தேயு 2:20-26, எபிரெயர் 9:21-22, வெளிப்படுத்தல் 2:26-29.

குறிப்பு: -- இக்கருத்தரங்கு சத்தியத்தியங்களை திரும்ப வாசித்து, கொடுக்கப்பட்டுள்ள வேதாகமக் குறிப்பு ஒவ்வொன்றையும் முழுமையாய் மறுபரிசீலனை செய்யுங்கள்.

எசேக்கியேல் 3:18 சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் செல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும், இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பலியையோ உன் கையிலே கேட்பேன்.

எல்லாமனிதருக்கும் சத்தியத்தை அளிப்பதற்கான கடமையுணர்வைப் பெற்றுள்ளோம், அவர்கள் எவ்வளவு கெட்டவராய் இருப்பினும் நாம் சத்தியத்தை அவர்களுக்கு அளிக்க கடமைப் பட்டுள்ளோம். நீதிமொழிகள் 14:32. நாம் சில மக்களைக் காணும்போது, அவர்கள் மிகவும் தீங்கானவர்கள், அவர்களை நான் வெறுக்கிறேன், அவர்களுடன் நான் பேசுவதே கிடையாது எனக் கூறலாம். கொடிய மனிதரை எச்சரிக்கத் தவறுமெனில், அவர்களது மரணத்தைக் குறித்து, கர்த்தர் நம்மிடம் விசாரிக்கிறவராய் இருக்கிறார். இன்னொரு வகையில் கூறுவோமெனில், நாம் நியாயந்தீர்க்கப்பட்டு, சிட்சைகளைப் பெறுபவர்களாய் இருப்போம், இப்படிப்பட்ட செய்கைக்குரிய பிரதிபலனை இழந்து போகிறவர்களாய் இருப்போம். ஏசாயா 3:10-11, லூக்கா 13:1-5.

நாம் சத்தியத்தினை விடாப்பிடியாகவும், மனதுருக்கத்துடனும் இழந்து போனோருக்கு அறிவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். யோனா நினிவே மக்களுடன் இவ்வாறு நடந்து கொண்டார், அவர் அவ்வாறு நடந்து கொண்டது நல்ல காரணத்திற்காய் இருந்தது. அசீரியர்கள் தனது குடும்பத்தினரையும், தனது தேசமக்களையும் பெரிதளவில் படுகொலை செய்திருந்தனர், இருந்தபோதிலும்

கர்த்தர் அவனைக் கடிந்து கொண்டார் எனப்பார்க்கிறோம். கொடிய மனிதர் மனந்திரும்ப எச்சரிப்பு அளிக்கும் விஷயத்தில், நமது நிர்விசாரம் குறித்து கர்த்தர் நம்மைக் கடிந்து கொள்கிறவராய் இருக்கிறார், யோனா 3:10 – 4:11.

ஒரு வேளை நாம் இரட்சிப்பைக் குறித்து அறிவிக்கும் விஷயத்தில் நிர்விசாரமாய் இருப்போமெனில், நாம் நமது இரட்சிப்பை இழந்து போவது இலை, ஆனால் நாம் அது குறித்து நியாயம் விசாரிக்கப்படுகிறவர்களாய் இருப்போம். நாம் பெற்ற இலவச இரட்சிப்பு, நமக்கு மட்டும் உரியதாய் இராமல், முழு மனுக்குலமும் அதைப்பெற்றுக்கொள்ள வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது. கொடிய பாவியான, சவுல் [பவுல்] என்கிற ரபீ இரட்சிப்படைந்திருந்தார், ஆகையால், நீங்கள் சந்திக்கும் எப்படிப்பட்ட கொடியரும் சத்தியத்தை மறுதலித்து விடுவர் என்பதற்கில்லை. 1 தீமோத்தேயு 1:15-17, 1 யோவான் 1:9 - 2:2. சவுல் பவுலாய் மாறியது போன்று, ஆவியானவர் மூலம், ஜெபத்துடன் சத்தியமானது அறிவிக்கப்படும்பொழுது, எப்படிப்பட்ட கொடியரும் சந்திக்கப்பட்டு மனந்திரும்புகிறவர்களாய் இருக்கின்றனர்.

எசேக்கியேல் 3: 19 நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற் போவானாகில், அவன் தன் துமார்க்கத்திலே சாவான் நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்.

ஒரு தீர்க்கதரிசியோ, போதகரோ, அல்லது சுவிஷேசகரோ சத்தியத்தை அளிக்கும் போது, அதைப் பெற்றுக்கொள்பவர்கள் சத்தியத்திற்கு செவிகொடுப்பது என்பது அவர்கள் கடமையாய் இருக்கிறது. நமக்கு பணிக்கப்பட்ட பணியை செய்து முடித்து, சுத்த மனதுடனும், மிகவும் துள்ளியமாய் செய்து முடிக்கும் போது, அதற்கு அவர்கள் செவிகொடுப்பார்களோ இல்லையோ என்பது அவர்களது கடமையாய் இருக்கிறது. நீதிமொழிகள் 29:1, எரேமியா 42:19-22, 44:4-6, லூக்கா 10:8-12, எபிரெயர் 2:1-3, 12:24-25. சுவிஷேசத்தைப் பிரசங்கித்து, அதற்கு ஜனங்கள் செவிகொடுத்து இரட்சிப்படைவார்களௌனில், அது சுகந்த வாசனையான நறுமணமாய் இருக்கிறது. ஜனங்கள் சுவிஷேச செய்தியை ஏற்க மறுத்து, அதை அளித்தவரையும், அவரது செய்தியையும் புறக்கணிப்பார்களேயானால், அது அவர்களுக்கு மரண வாசனையாய் இருக்கிறது, இதைக் குறித்து இயேசுவும் நமக்கு எச்சரிப்பளித்துள்ளார். யோவான் 13:16, 15:18-25, 2 கொரிந்தியர் 2:14-17, 1 யோவான் 3:11-15.

எசேக்கியேல் 3: 20 அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும் போதும், நான் அவன் முன் இடறலை வைக்கும்போதும், அவன் சாவான், நீ அவனை எச்சரிக்காதபடியினாலே, அவன் தன் பாவத்திலே சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை, அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.

நாம் அனைவரும் சோதனைகளை சந்திக்க நேரிடலாம், அவைகளில் சிக்கிக்கொண்டு விழுந்தும் போகலாம். சோதனைக்கு விதிவிலக்கானவர்கள் நம்மில்

ஒருவரும் இல்லை. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் நாம் நடந்து கொள்ளத் தவறும்போது, நாம் பாவத்தில் விழும்படியான ஏதுவுண்டாகிறது. தாங்கள் சோதனைக்கு அப்பாற்பட்டவர்கள் எனக் கருதுவோர், சோதனையில் விழுகிறவர்களாய் இருக்கின்றனர். அவ்வாறு கூறுகிறவர்கள் ஏற்கனவே பெருமையிலும், அகம்பாவத்திலும் விழுந்து கிடக்கிறவர்களாய் இருக்கின்றனர், இப்படிப்பட்டவர்கள் பெரும்பாதகத்துக்குள்ளாகி, பாவத்தில் விழுகிறவர்களாய் இருக்கின்றனர். நீதிமொழிகள் 10:8, 11:2, 16:17-19, 1 கொரிந்தியர் 4:11-12, 9:24-27, 10:12, 1 தீமோத்தேயு 3:6-7.

நமது வாழ்வில் என்ன நிகழ்ந்தாலும், நாம் பயமின்றி இருத்தல் வேண்டும், ஆனால் பாவத்திற்கும், தீமைக்கும் நாம் எப்பொழுதும் பயப்பட்டு, நம்மை அதற்கு நீங்கலாக்கித் தப்பிக் காத்துக்கொள்ளுதல் வேண்டும், காரணம் இதற்கு காரணமானவன், எவனை விழுங்கலாமோ என வகை தேடி அலைகிறவனாய் இருக்கிறான். 1 பேதுரு 5:6-11. பாவத்துக்கும் அதன் விளைவுக்கும் பயப்படாதவர்கள், இறுதியில் பாவத்தில் விழுகிறவர்களாய் இருப்பர்.

இப்படிப்பட்ட காரியங்களில் நமக்கு எவ்வித விதிவிலக்குமில்லை, அனுதின கிறிஸ்தவ வாழ்க்கைக்குரிய கட்டளைகளானது தெளிவாய் அளிக்கப்பட்டுள்ளது, ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும், பிசாசானவனுக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுதல் வேண்டும், சத்தியத்திற்காய் நிற்றல் வேண்டும். ஜெபத்தில் கர்த்தருக்கு நெருங்கி வாழ்தலும், துதித்தலும், வேதாகமத்தை முறையாய்க் கற்றுக்கொள்ளுதலும், எதிராளியை தோற்கடிக்கவும், பாவத்தை மேற்கொள்ளவும் வழிநடத்துகிறதாய் இருக்கிறது. ஒரு பரிசுத்தவான் இவ்வாறு கூறுகிறவராய் இருக்கிறார், "இவ்வுலக சோதனைகளுக்கும், உங்களுக்கும் இடையில் சிலுவை கடந்து வரட்டும், இல்லையேல் இவ்வுலகமானது, உங்களுக்கும், சிலுவைக்கும் இடையே கடந்து வரும்." உபதேசபாடம் "நடந்து கொள்ளுதல்" "WALKING" ஐ . ஒப்பிட்டுப் பாருங்கள்.

மதியீனமான பரிசுத்தவான்களுக்கு முன்பாக, கர்த்தர் "தடைக் கற்களை" வைக்கிறவராய் இருக்கிறார், தவறான பாதையில் செல்லாதபடி தடுத்து நிறுத்துவதற்காக இப்படி செய்கிறார், மனந்திருந்தி, அவரது வழிநடத்துதலை கண்டுகொள்ள மறுபடியும் நம்மை முழங்காலுக்கு அனுப்புகிறவராய் இருக்கிறார். மதியீன பரிசுத்தவான்களை நாம், தீமை செய்யும் அவிசுவாசிகளை எச்சரித்து புத்திசொல்லுவதைப் போன்று, எச்சரித்து புத்திசொல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம். "அவர்கள் வேதபாடத்திற்கு வரவில்லை, அவர்களைக் குறித்து எனக்கு எவ்வித கவலையோ அக்கறையோ கிடையாது" எனக்கூறுதல் கூடாது. தேவன் அவர்களைக் குறித்து கரிசனை உள்ளவராய் இருக்கிறார், நீங்களும் நானும் அப்படிப்பட்ட வெறுப்புக்குரிய, மதியீனமுள்ள பரிசுத்தவான்களை, அவிசுவாசிகளை நாம் சந்தித்து நமது கடமைகளை நிறைவேற்றுவது போன்று இவர்களுக்கும் நமது கடமையை செய்ய நாம் கடன்பட்டவர்களாய் இருக்கிறோம். நமக்கு எப்பொழுதெல்லாம் கர்த்தர் ஆவிக்குரிய காரியங்களை எடுத்துக் கூற தருணம்

அளிக்கிறாரோ அத்தருணங்களைப் பயன்படுத்திக் கொண்டு சத்தியத்தை அவர்களுக்கு அளித்தல் வேண்டும்.

ஒரு நீதிமான் மரிக்கும் போது, அப்படிப்படிப்பட்டவர் கீழ்ப்படியாதவராய் இருந்து மரித்துப்போவாரானால், அப்படிப்படிப்பட்டவர் நாம் அழைக்கிறபடி, "மரணத்துக்கேதுவான பாவத்தில் விழுந்துள்ளார்" என்கிறோம். (இதைக் குறித்த உபதேச பாடத்தினை ஒப்பிட்டுப் பார்க்க). இப்படிப்பட்ட நபரின் கடந்த கால, நீதியானது, ஒன்றுமில்லை என்கிறதாகிறது, அவர்கள் கர்த்தரைவிட்டகன்று வெகுதூரம் சென்று, இப்பூமியிலிருந்து அகற்றப்பட்டவர்களாகிவிடுகின்றனர். தமக்கு சொந்தமானவர்கள் சத்திய பாதையைவிட்டு அகலும் போது, கர்த்தர் அவர்களுக்கு விரோதமாய் செயல்படுகிறவராய் இருக்கிறார், கர்த்தரின் போதகர்களாகிய நாமும், அப்படிப்பட்டவர்களை கடிந்து கொண்டு எச்சரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவ்வாறு செய்வதினால் அப்படிப்பட்டவர்களின் இரத்தபலிக்கு நீங்கலாகி காக்கப்படுகிறோம். அப்போஸ்தலர் 5:1-11, 1 தெசலோனிக்கேயர் 5:14, யூதா 20-25. எழுப்புதலும் அதைத் தொடர்ந்து வரும் ஆசீர்வாதங்களும், நாம் கர்த்தர் எதிர்பார்க்கும் பரிசுத்தம், போதக கடமைகள், நேர்மையாய் நடந்து கொள்ளுதல் போன்றவற்றை கவனமாய் செயல்படுத்தும்பொழுது நமக்களிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

கர்த்தர் தடைக்கற்களைக் குறித்து பேசுகிறவராய் இருக்கிறார். முதன்முறை இதை நாம் ஏசாயா 8:11-15 வரையுள்ள வேதபகுதியில் கண்டுகொள்ளலாம். கர்த்தரது பிரசன்னமும் அவரது செய்தியும், எல்லா மனிதருக்கும் நினைப்பூட்டப்படுகிறதாய் இருக்கிறது. இதினிமித்தம் இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கு எதிர்த்து நிற்கிறவர்களாய் விளங்கிவருகின்றனர், ரோமர் 9:31-33, 1 கொரிந்தியர் 1:22-25, 1 பேதுரு 2:4-8.

கர்த்தர் நமது வாழ்வின் மூலைக்கல்லாய் இருக்கிறார், அவரை நாம் மகிமைப் படுத்துதல் வேண்டும் அல்லது அவர் நமக்கு இடறுவதற்கேதுவான கன்மலையாகிறவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட செய்தியை நாம் கண்டிப்பாய் பிரசங்கிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்; நாம் கர்த்தரது குடும்பத்தைச் சார்ந்தவர்களும், அவர் நமது வாழ்வின் மூலைக்கல்லாகவும் இருக்கிறார். நாம் நமது விடாப்பிடியான பாவத்தில் மூழ்கி அழிவைத் தேடிக்கொள்ளாதிருப்போமாக!

எசேக்கியேல் 4:12 அதை வாற்கோதுமை அடையைப் போல் சாப்பிடுவாயாக; அது மனுஷனிலிருந்து கழிந்த கஷ்டத்தின் வறட்டிகளால் அவர்கள் கண்களுக்கு முன்பாகச் சுடப்படுவதாக. 13 அதற்கு ஒத்தபடியே இஸ்ரவேல் புத்திரர், நான் அவர்களைத் துரத்துகிற புறஜாதிகளுக்குள்ளே தங்கள் அப்பத்தைத் தீட்டுள்ளதாகச் சாப்பிடுவார்கள் என்று கர்த்தர் சொன்னார்.

இதைப்போன்ற செயல்பாடுகள், எல்லா மிருகங்களும் மரித்துப் போன நிலையில் செய்யப்படுகிறதாய் இருக்கிறது; அப்பத்தை சாப்பிடுகிறவர்கள் மிக மோசமான நிலையில் தீட்டுப்படக்கூடியதை இது காட்டுகிறதாய் இருக்கிறது. எசேக்கியேல் ஒரு ஆசாரியனாய் இருந்தார், அவர் தனது மலஜலாதி சேகரிப்பை உலரவைத்து, அதினால் நெருப்புண்டாக்குவது என்பது, தவிர்க்கப்படக்கூடியதும், மிக மோசமான

செயலாய் இருக்கிறது. ஜனங்கள் அனைவரும் காணக்கூடிய நிலையில் இதைச் செய்தார். மோசேயின் நியாயப்பிரமாணப்படி இது தவிர்க்கப்படக்கூடிய செயலாய் இருக்கிறது. இருந்த போதிலும், இங்கு இது அடிப்படை சத்தியத்தை போதிக்க, கர்த்தரால் கட்டளையிடப்படுகிறதாய் இருக்கிறது. லேவியராகமம் 5:1-3, 7:21, உபாகமம் 23:10-14.

இது செயல்படுத்த ஒரு அருவருக்கத்தக்கதான காரியமாய் இருந்தபடியால், எல்லா ஜனங்களும் இதைக்குறித்து பேசுகிறவர்களாய் இருந்தனர், இப்படிப்பட்ட அருவருப்பான காரியத்தை செய்கிற ஆசாரியரைக் குறித்து பேசுகிறவர்களாய் இருந்தனர். எசேக்கியேல் இப்படிப்படிப்பட்ட அருவருப்பான காரியத்தினை, கண்டுகொண்டு நின்ற ஜனங்கள், இதன் பொருள் என்ன என்பதை வினவினர், அதற்கு மறுமொழியாக அதன் பொருளை எசேக்கியேல் விளக்கி கூறுகிறவராய் இருந்தார், இதைப் போன்றே கர்த்தர் அவரை வழிநடத்திய ஒவ்வொரு செயல்பாடும் இருந்து வந்தது. எசேக்கியேல் இதைப்போன்று 390 நாட்கள் செய்யுமாறு கட்டளை பெற்றார்! அப்பத்தை சுடும்படி பயன்படுத்தப்பட்ட உலர்ந்த மலத்தின் வாசனை மிகவும் மோசமானதாய் இருந்தது அதினால் சுடப்பட்ட அப்பமானது கறைபடிந்ததாயும், தீட்டுப்பட்டதாயும் இருந்தது.

எசேக்கியேல் தனக்குக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் இப்படிப்பட்ட அப்பத்தை வாழ்த்தி அதை உண்டுவந்தார். இதன் மூலம் அறிவிக்கப்பட வேண்டிய செய்தியானது, அறிவிக்கப்படும் வரைக்கும் அவர் உறுதியாய் இருந்து பாடு அனுபவிக்கிறவராய் இருந்தார், தேவனது மதியீனமான ஜனங்கள் சத்தியத்தினை அறிந்துகொள்ள எப்பேர்பட்ட கிரயமானாலும், எல்லாப் போதகர்களும் செலுத்தி தீர வேண்டியவர்களாய் இருக்கின்றனர். **குருத்துவத்திற்கு இப்படிப்பட்ட மேன்மை மிக்க காரியம் எதுவுமில்லை, என்ற போதிலும் சத்தியத்திற்காக மட்டும் இப்படிப்பட்ட மேன்மை உடையதாய் இருக்கிறது**. இது கர்த்தரின் கட்டளையாய் இருக்கிறது இது தீர்க்கதரிசிக்கு கர்த்தரின் கட்டளையாய் வெளிப்பட்டு இருக்கிறது. இதைக் கைக்கொள்ள மிகவும் கடினமானதாய் இருந்தபடியால் இதைக் கர்த்தர் சற்று மாற்றி அமைத்து கொடுத்ததை வசனம் 15ல் நாம் காணலாம்.

எசேக்கியேல் 6:6 உங்கள் பலிபீடங்கள் நிர்மூலமும், பாழுமாகும்படிக்கும், உங்கள் நரகலான விக்கிரங்கள் தர்க்கப்பட்டு, ஓய்ந்து, உங்கள் சிலைகள் வெட்டுண்டு, உங்கள் கிரியைகள் குலைந்து போகும்படிக்கும், உங்களுடைய சகல வாசஸ்தலங்களிலுமுள்ள பட்டணங்கள் நிர்மூலமும், உங்கள் மேடைகள் பாழுமாகும். 7 கொலைசெய்யப்பட்டவர்கள் உங்கள் நடுவில் விழுவார்கள்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்.

இப்படிப்பட்ட ஜனங்கள், புறஜாதிய மதத்தினரின் கொள்கைகளுடன் ஒத்துப் போனவர்களாய் இருந்தனர், இவர்கள் "அதிர்ஷ்டம்" போன்ற குறிபார்த்தலுக்கு தங்களை அர்ப்பணித்து, செழிப்பு, வளம் போன்ற காரியங்களுக்கு தங்களை அர்ப்பணித்தவர்களாய் இருந்தனர். இன்றைய அளவில் கிறிஸ்தவர்களும் நாள், நட்சத்திரம், ஜோஸியம் போன்ற பழக்கவழக்கம், மற்றும் "Feng Shui " அதிர்ஷ்டம்

போன்றவற்றில் ஈடுபடக் காரணம் என்ன? இது கடந்த காலத்தில் ஆழமாய் ஊறிப்போன காரியமாய் நமக்குள் விளங்கி வருகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட காரியங்களுக்கு விலகி ஓடி அவற்றை எதிர்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். 1 கொரிந்தியர் 6:18, 10:14, 1 தெசலோனிக்கேயர் 5:22, 1 தீமோத்தேயு 6:10-11, யாக்கோபு 4:7.

அவர்கள் தங்கள் வீட்டில் வசதிவாய்ப்புடன் இருத்தலில் கவனம் செலுத்துகின்றனர், அவர்கள் ஐசுவரியத்தை விரும்புகின்றனர், மற்றும் இன்பகரமான நாட்களை வாஞ்சிக்கின்றனர், ஒருவரும் அவர்களது ஒழுக்கக்கேடான செயல்பாடுகளில் குறுக்கிடக் கூடாது, மற்றும் அவர்களது பாலியல் தொடர்பான செயல்பாடுகளில் குறுக்கிடக்கூடாது என எதிர்பார்க்கின்றனர். அவர்கள் முற்பிதாக்களைப் போன்றே, எகிப்தின் "வெங்காயம் மற்றும் வெள்ளைப்பூண்டு" போன்றவற்றின் மீது தவனமுள்ளவர்களாய் இருந்தனர். சாலமோனைப் போன்ற இச்சைகளுக்கடுத்த காரியத்தில், எவ்வித தடையுமின்றி அவர்கள் இருதயம் அவைகளைப் பின்பற்றிச் செல்கிறதாய் இருந்தது. அவர்களது வாழ்க்கை முறையினை இவர்களும் விரும்புகிறவர்களாய் இருந்தனர் -- கர்த்தர் அவர்களில் பரிசுத்தத்தை விரும்புகிறவராய் இருக்கிறார், மற்றும் தனது பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார். எண்ணாகமம் 11:5-10, உபாகமம் 17:16-20, 1 இராஜாக்கள் 10:22-29, 11:1-10.

இப்படிப்பட்ட வாழ்க்கைமுறையானது, தங்களைச் சுற்றிலும் உள்ள தேசங்களின் இச்சைகளுக்கேற்றப் பழக்கவழக்கங்களை தங்கள் வாழ்க்கைமுறையாய்க் கொண்டு வாழ்வதாய் இருக்கிறது. பிறரைப்போன்று, நாம் செல்வந்தராய் வாழும்படி நாம் அழைக்கப்படவில்லை, அவர்களைவிட முற்றிலும் மாறுபட்ட நிலையில், அவர்களுக்கு சாட்சியாய் இருக்கும் வண்ணம் கர்த்தர் நம்மை அழைத்துள்ளார். நாம் அவர்களை பரலோகிற்கு நேராய் தங்களது கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்படியாய் அழைக்கப்பட்டுள்ளோம்.

தேவனது ஜனங்கள் இவ்வுலகின் ஐசுவரியத்தால் மதிமயங்கி வழிவிலகும்போது, அவர்களை பரலோகக் காரியங்களால் திசைதிருப்ப வேண்டியவர்களாய் இருக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் ஏற்கனவே, விக்கிரக ஆராதனைக்குள் நுழைந்து, இவ்வுலக பொருட்களை ஆராதிக்கிறவர்களாய் தேவனுக்கு இரண்டாம் இடத்தை அளிக்கிறவர்களாய் விளங்கிவருகின்றனர். இரு உலகிற்கும் தக்கவாறு வாழும் வாழ்க்கையின் விளைவானது, மரணமமும், அழிவுமாய் இருக்கிறது. நாம் பிரத்தியேகமாய் இவ்வுலக வழிபாடுகளிலும், கவலைகளிலும் சிக்கிக்கொள்ளக்கூடாது என எச்சரிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம். 2 தீமோத்தேயு 2:3ff, தீமையாய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகியிருக்க போதிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம். Refer back to the doctrinal studies on CHRISTIAN LIFE – SERVICE, and MODEL SERVANT

எசேக்கியேல் 6:10 இந்தத் தீங்குகளையெல்லாம் தங்களுக்கு நேரிடப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய நான் விருதாவாய்ச் சொன்னதில்லையென்று அறிந்து கொள்வார்கள் என்றார். 11 கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்; நீ உன் கையில் அடித்து, உன்

காலால் தட்டி, இஸ்ரவேல் வம்சத்தாருடைய சகல பொல்லாத அருவருப்புகளினிமித்தமும் ஐயோ! என்று சொல், அவர்கள் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் விழுவார்கள்.

வசனம் 10 நமக்கு நினைப்பூட்டுவது என்னவெனில், இந்த ஜனங்களை பாவம் செய்ய அனுமதித்தது கர்த்தர்தாமே என எண்ணினர், மற்றும் அவர் அவர்களை நியாயம்தீர்ப்பதே இல்லை எனக்கருதி வந்தனர். இப்படிப்பட்டத் தவறானக் கண்ணோட்டம் நமது நாட்களிலும் நிலவி வருகிறது, மக்கள் ஜனங்களிடத்தில் "அன்பு கூறுகிற" தேவனைக் குறித்து கூறிவருகின்றனர், இவ்வாறு அவர்கள் கூறுவதிலிருந்து, கர்த்தர் பாவத்தை ஒருபோதும் நியாயந்தீர்க்கிறவர் அல்லர் எனப்பொருள்படுகிறதாய் இருக்கிறது முடிவில் அனைவரும் மன்னிப்பைப் பெற்று, இறுதியாய் அனைவரும் பரலோகில் காணப்படுவர், குடும்பத்தில் காணப்படும் தீமை செய்யும் அங்கத்தினர் ஒருவாறு சுத்திகரிக்கப்பட்டு நல்லவர்களாகிவிடுவர் எனக்கருதி வருகின்றனர்.

இப்படிப்பட்ட மனத்தோற்றத்தின் படியுள்ள மதமானது, ஆரம்ப காலந்தொட்டே நிலவி வருகிறதாய் இருந்தது. எசேக்கியேல், எரேமியா நாட்களில் தவறாய் கருதப்பட்டது போன்றே இந்நாட்களிலும் தவறாய்க் கருதப்பட்டு வருகிறது, இப்படிப்பட்ட தவறான கருத்துக்களைப் பின்பற்றுவோர் அநேகராய் பெருகிவருகின்றனர். இன்றைய நாட்களில் வசித்து வரும் மக்களில் பெரும்பான்மையானோர், மறுமை வாழ்க்கையில் நம்பிக்கை வைப்பவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் "எல்லாம் மறுமை வாழ்வில் சரியாகிவிடும்" என்ற நம்பிக்கையுடையோராய் காணப்படுகின்றனர். பரலோகில் அவர்கள் வாசம் செய்யும் போது, பாவத்திற்கான எவ்வித கிரயமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, பாவமும், தீமையும் கருத்தில் கொள்ளப்படவில்லை. **எரேமியா 5:12-14, 44:16-19**. இங்கு காணப்படுவது, காயீன் ஸ்தாபித்த இரத்தம் சிந்துதலில்லாத மதமாய் அன்றிலிருந்து இன்று வரைக் கருதப்பட்டு வருகிறது, சாத்தானின் முக்கியமான சூழ்ச்சி என்னவெனில், அவன் எப்பொழுதும் மனிதரிடம், "அதைப் பொருட்படுத்த அவசியமில்லை, தேவன் இதையெல்லாம் கண்டு கொள்ளமாட்டார்." எனக் கூறுகிறவனாய் இருக்கிறான். இது சாத்தானின் வஞ்சகமும், பொய்யுமாய் இருக்கிறது, மனிதரை மரணத்திற்கேதுவாய் வழிநடத்துகிறதாய் இருக்கிறது. இதை நாம் சரிசெய்தாக வேண்டும், இல்லையேல் அந்நபர் சாத்தானால் ஏமாற்றப்பட்டு நரகிற்குச் செல்கிறவராய் இருப்பர். தேவ தூதர்கள் -- சாத்தானின் எழுப்புதல் போன்ற உபதேச வேதபாடத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும். மற்றும் **எசேக்கியேல்** 6:19, 7:3, 7:6-9. ஒப்பிட்டுப் பார்க்க.

எசேக்கியேல் 8:12 அப்பொழுது அவர் என்னை நோக்கி மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார்.

மிகவும் அதிர்ச்சிக்குள்ளான காரியம், பழைய புறஜாதிய விக்கிரகங்களை தேவாலயத்திற்குள் மறைத்து வைத்திருந்தது அல்ல, உண்மையான அதிர்ச்சி என்னவெனில், எழுபது தலைசிறந்த மனிதர்கள் அவற்றை ஆராதிப்பதற்கென பயன்படுத்தினர் என்பதாகும். இவர்கள் இஸ்ரவேலரின் சனகரிம் சங்கத்தினர் எனக்கூறலாமா? இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கரங்களில், தூபக் கலசத்துடன் காணப்பட்டனர், இவர்கள் யோசியாவின் காலத்தில் எழுப்புதலை வழிந்தடத்திய ஷெப்பானின் குமாரர்களால், வழிநடத்தப்பட்டனர். 2 இராஜாக்கள் 22:3, 14. இந்தக் குடும்ப சந்ததியில், கர்த்தருக்கும் அவரது தீர்க்கதரிகளுக்கும் முன் நேர்முறையாய் நடந்து கொண்டவர்களாய் இருந்தனர். (எரேமியா 29:3, 36:10, 39:14, 40:5.) சிலர் இங்கு காண்பது போல் தீமை செய்கிறவர்களாய் இருந்தனர். குடும்பங்கள் தேவனது வார்த்தையின் சத்திய அடிப்படையில் பிரிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். இவர்கள் இரு பக்கத்திலும் நித்தியமாய் பிரிக்கப்பட்டவர்களாய் திகழ்ந்தனர். சத்தியம் எப்பொழுதும் குடும்பத்தினரையும், நண்பர்களையும் பிரிக்கிறதாய் இருக்கிறது. சத்தியம் சுயத்தை மையமாய் கொண்ட ஒவ்வொன்றையும் பிரிக்கிறதாய் இருக்கிறது, சிலர் எப்பொழுதும் நித்திய பிரதி பலனைவிட தற்காலிக இன்பத்தை தெரிவு செய்கிறவர்களாய் விளங்கி வருகின்றனர். மத்தேயு 10:34-39.

இப்படிப்பட்டவர்கள் ஒவ்வொருவரின் கரங்களிலும், சென்சாரை உடையவர்களாய் இருந்தனர். இத்தகைய சென்சார் ஆசாரியர்களை மட்டும் வேறுபடுத்துகிறதாய் இருந்தது. எண்ணாகமம் 16 ம் அதிகாரத்தில், கோரா, தாத்தான், அபிராம் போன்றவர்களின் மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது, இவர்களுக்கு உரிமையில்லாது இருந்தபோதிலும், தூப வர்க்கத்தைக் கர்த்தருக்கு முன்பாக இடும்படியாகத் துணிந்தனர். ஆராதித்தல் என்பது, தெய்வீகமானதும், வேதாகம ரீதியிலும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாய் இருந்தது, இது யாத்திராகம காலத்து நாட்களில் நிகழ்ந்த சம்பவமாய் இருக்கிறது. எசேக்கியேல் காலத்தில் இப்படிப்பட்ட மனிதர்கள் தெய்வீகமானவர்களாகவோ அல்லது வேதாகம ரீதியிலோ கர்த்தரை ஆராதித்தவர்களாய் இல்லை எனப்பார்க்கிறோம்.

இரு குழுவினரும் இஸ்ரவேலின் தேவனை ஆராதிப்பதாய் கூறினர், இவர்கள் அவ்வாறு செய்த போது, தங்கள் சொந்த வழியில் அவற்றைப் புறஜாதிய வழிகளில் செய்தனர், இவ்வாறு செய்து எல்லா ஆராதனையும், சிருஷ்டி கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாய் இருக்கிறது என வாதிட்டனர். வாதிட்ட ஒவ்வொருவரும், அவரவர் தங்கள் சொந்த வழியில் ஆராதித்தனர். அவர்கள் செய்தது என்னவெனில், நாம் காண்கிறபடி காயீனின் வழியில் அவற்றைச் செய்தனர். அவர்கள் பாவப்பரிகாரத்திற்கு இரத்தம் சிந்துதலை புறக்கணித்தனர். பாவம் ஒன்று இருக்கிறது என்ற அறிவையே அவர்கள் புறக்கணிக்கிறவர்களாய் இருந்தனர். மோசேயின் நியாயப்பிரமாணம் ஆசாரியர்கள் செய்யவேண்டியனவற்றைப் பற்றி, தெளிவுபட கூறப்பட்ட அறிவுரைகளைப் புறக்கணித்தனர், தாங்கள் செய்வதே சரியென திமிர்பிடித்து, தாங்கள் செய்யத்தகாதவற்றை செய்தனர்.

இதை வாசிக்கும் நாம் நினைவூட்டப்படுவது என்னவெனில், நாம் அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவர்கள் செய்ததைப் போன்று நாமும் செய்தல் கூடாது. அவர்கள், தேவன் எதையுமே கண்டுகொள்வதில்லை என

செயல்பட்டனர், ஆனால் அவர் எல்லாவற்றையும் காண்கிற தேவனாய் இருக்கிறார். இருதயத்தின் சிந்தனைகளையும், யோசனைகளையும் கூட அவர் அறிகிற தேவனாய் இருக்கிறார். சங்கீதம் 51:6, 73:11, 94:7-12, ஏசாயா 29:15. எசேக்கியேல் ஜனங்களை உண்மையான விசுவாசத்திற்கு நேராக வழிநடத்தியது போன்று, அனுதினமும் நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவரது அபிஷேகத்தின் வாசல் திறக்கப்பட்டு, நமது ஜனங்கள் நடுவே எழுப்புதல் உருவாக தேவனை நோக்கி ஜெபிப்போமாக.

<u>அதிகாரம் 3 - வேதாகம எழுப்புதல்கள்</u>

<u>இருபத்து நான்கு வேதாகம எழுப்புதல்கள் குறித்த ஒரு மேற்பார்வை:</u>

ஒவ்வொரு எழுப்புதலைக் குறித்த வேதாகம முன்மாதிரிகளை அறிந்து கொள்ள சமயம் ஒதுக்குவோமாக, கீழ்க்கண்டவாறு கேள்விகளை வினவி அதற்கான பதிலைக் காண விழைவோமாக.

1. எழுப்புதலுக்கு வழிநடத்தும், ஆயத்தமாக்கப்பட்ட விசுவாசியின் கடமை என்ன?

2. எழுப்புதலில் கர்த்தரின் பங்கு என்ன? பரிசுத்த ஆவியானவர் ஜனங்கள் நடுவே என்ன செய்து கொண்டிருக்கிறார்?

3. எழுப்புதலுக்கு ஜனங்களிடம் எதிர்பார்க்கப்படுவன எவை? அவர்களது விசுவாசம் எவ்வாறு கிரியைகளை நடப்பிக்கிறதாய் இருக்கிறது அவைகள் எவ்வாறு வெளிக்காட்டப்படுகிறதாய் இருக்கிறது?

4. நமது கலாச்சார அடிப்படையில், இப்படிப்பட்ட அடிப்படைக் கருத்துக்களை எவ்வாறு நடைமுறைபடுத்துவது?

நேரம் எடுத்து ஒவ்வொரு பகுதியாக வாசித்துப்பாருங்கள். நீங்கள் குழுவாய் இவைகளைக் கற்றுக்கொண்டிருப்பீர்களானால், மேற்சொன்ன கேள்விகளை உங்கள் குழுவினரிடம் கேட்டு ஒவ்வொரு எழுப்புதலை குறித்து குழுவாய் விவாதியுங்கள், மற்றும் இதைப் போன்ற மற்றப் பயனுள்ள கேள்விகள் உண்டானால் அவைகளையும் கேட்டு விவாதியுங்கள். ஒவ்வொரு எழுப்புதல் குறித்த பாடங்களை, உங்கள் சொந்த சமுதாயத்தினர் நடுவே எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்தும், அவர்கள் நடுவே அமையப்பெற்ற சபைக்குரிய தேவை என்ன என்பதைக் குறித்தும் ஆலோசனை செய்து ஜெபியுங்கள். உங்கள் சூழலுக்குத் தக்கவாறு, பரிசுத்த ஆவியானவர்தாமே, எழுப்புதலை நடைமுறைக்கு கொண்டுவருவராக.

வேதாகமத்திலிருந்து எழுப்புதல்கள்:

இருபத்து நான்கு வேதாகம எழுப்புதல்கள் மற்றும் மறுமலர்ச்சியானது பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

1. யாக்கோபு -- பெத்தேலில் இருந்து திரும்பும்போது, யாக்கோபு தனது வீட்டார் அனைவரையும் நோக்கி, தங்கள் நடுவே இருக்கும் அந்நிய தேவர்களை அகற்றிவிட்டு, குளித்து முழுகி, அவர்களது வஸ்திரங்களை மாற்றும்படி கட்டளைக் கொடுத்தார். அந்நிய தேவர்கள் நெருப்பினால் சுட்டெரிக்கப்பட்டன, பின்னர் யாக்கோபு கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினார். (ஆதியாகமம் 35:1-4).

2. மோசே -- இந்த எழுப்புதல், இஸ்ரவேலர்கள், தேவனின் வல்லமை மிக்க செயலாய், சிவந்த சமுத்திரம் இரண்டாய் பிளந்ததைக் கண்டபோது, நிகழ்ந்தது. மோசே இஸ்ரவேலரை, மோசேயின் பாடலுடன் அதற்கு மோசேயின் சகோதரி இசை அளிக்க, தேவன் அவர்களை உலர்ந்த தரைமார்க்கமாய் வழிந்தடத்தினார். (யாத்திராகமம் 14:31-15:21).

3. சாமுவேல் -- இவர் தேசத்திற்கு அறிவுரை கூறி, தவறான கடவுள்களை அகற்றி, மெய்யான ஒரே உண்மை தேவனை வழிபட, ஜனங்களை ஆயத்தப்படுத்தினார் (1 சாமுவேல் 7:3-6).

4. தாவீது -- முதன் முறையாக உடன்படிக்கைப் பெட்டியானது, எருசலேமுக்குள் கொண்டு வரப்பட்ட போது. (1 நாளாகமம் 15:25-28, 16:1-43, 29:10-25).

5. தாவீது -- தான் எதிர்காலத்தில் கட்டவிருக்கும் தேவாலயத்திற்கான வஸ்துக்களை பிரதிஷ்டை செய்த போது. (1 நாளாகமம் 29).

6. சாலமோன் -- தேவாலயத்தை கட்டிமுடித்து அதை பிரதிஷ்டை செய்த போது. (2 நாளாகமம் 7:1-3).

7. ஆசா -- விக்கிரகங்களையும், சோதோமியரையும் தேசத்தைவிட்டு அகற்றிய போது. (1 இராஜாக்கள் 15:11-15).

8. யோசபாத் -- தேவாலயத்தைச் சுத்திகரித்து, மற்றும் லேவிய ஆசாரியத்துவத்தை பரிசுத்தம் செய்ததினால், எழுப்புதலுக்கு காரணமானார். (2 நாளாகமம் 19).

9. எலியா -- கர்மேல் மலை மீது, பாகாலின் தீர்க்கதரிசிகளுடன் போட்டி செய்து முடித்த பிறகு ஏற்பட்ட எழுப்புதல். (1 இராஜாக்கள் 18:21-40).

10. யெகூ -- பாகால் வணக்கம் மற்றும் அவர்களது விக்கிரக தோப்பு, ஆலயங்கள் போன்றவற்றை முற்றிலும் அழித்துத் தீர்த்தபோது ஏற்பட்ட எழுப்புதல். (2 இராஜாக்கள் 10:15-28).

11. யோய்தா -- பிரதாண ஆசாரியராகிய இவர் விக்கிரகங்களை விட்டு திரும்பும்படி, ஜனங்களை உடன்படிக்கை செய்யும்படி செய்து, தேவனை ஆராதிக்க செய்தது மூலம் ஏற்பட்ட எழுப்புதல். (2 இராஜாக்கள் 11:17-20).

12. எசேக்கியா -- தேவாலயத்தை சுத்திகரித்ததின் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல். (2 நாளாகமம் 29-31).

13. மனாசே -- இந்த துன்மார்க்க இராஜா விசுவாசியானபோது, விக்கிரகங்களை முற்றிலும் அழித்து நிர்மூலமாக்க கட்டளைக் கொடுத்தபோது ஏற்பட்ட எழுப்புதல். (2 நாளாகமம் 33:11-20).

14. யோசியா -- தேவாலயத்தை சுத்திகரித்தபோது, நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டுபிடிக்கப்பட்டு, அதை இராஜாவுக்கும் மற்றும் பொது ஜனங்கள் முன்னிலையில் வாசித்தபோது, அதன் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல். (2 இராஜாக்கள் 22-23).

15. எஸ்றா -- இஸ்ரவேலர் புறஜாதிய பெண்களை விவாகஞ்செய்திருந்தபடியால், அவர்களை விட்டு வேறுபிரிய எஸ்றா பிரசங்கித்ததன் விளைவாக ஏற்பட்ட எழுப்புதல். (எஸ்றா 9-10).

16. நெகேமியா -- எருசலேமின் மதில்களைக் கட்டிமுடித்தபின்னர், எஸ்றா ஜனங்கள் அனைவரின் முன்னிலையில் தேவ வசனத்தை வாசித்து, போதனை செய்தபோது, பெரிய எழுப்புதல் உண்டானது. (நெகேமியா 13).

17. யோனா -- இவர் எதிர்மறையான எண்ணமுடையவராயிருந்தும், இவரது பிரசங்கமானது, பெரிதான மனமாற்றத்தை ஏற்படுத்தி, நினிவே பட்டணத்தில் வாழ்ந்து வந்த அசீரியர்கள் நடுவே பெரிய எழுப்புதலை உண்டாக்கிற்று. (யோனா 3).

18. எஸ்தர் -- ஆமான் தனது பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டு, யூதர்கள் மனந்திருந்திய போது ஏற்பட்ட எழுப்புதல். (எஸ்தர் 9:17-22).

19. யோவான் ஸ்நானகன் -- மேசியாவின் வருகையைக் குறித்து பிரசங்கித்து, ஜனங்களை மனந்திருந்துமாறு பிரசங்கித்தபோது ஏற்பட்ட எழுப்புதல். (லூக்கா 3:2-18).

20. இயேசு -- சமாரிய ஸ்திரீயுடன் பேசிமுடித்த பின்னர், சமாரியாவில் ஏற்பட்ட எழுப்புதல். (யோவான் 4:28-42).

21. பிலிப்பு -- இவர் தேவனது இராஜ்ஜியத்தைக் குறித்து சமாரியாவில் செய்த பிரசங்கத்தினால், அங்கு ஏற்;பட்ட எழுப்புதல். (அப்போஸ்தலர் 8:5-12).

22. பேதுரு -- பெந்தெகொஸ்தெ நாளில் இவரது பிரசங்கத்திற்கு பின்னர் ஏற்பட்ட எழுப்புதல். (அப்போஸ்தலர் 2).

23. பேதுரு -- லித்தாவிலே ஐனேயா என்கிற மனிதனை குணமாக்கிய போது, லித்தாவிலும், சாரோனிலும் ஏற்பட்ட எழுப்புதல். (அப்போஸ்தலர் 9:32-25).

24. பவுல் -- மூன்றாவது மிஷனரி பயணத்தின் போது எபேசுவில் நிகழ்ந்த எழுப்புதல். (அப்போஸ்தலர் 19:11-20).

எழுப்புதலுக்கு பிண்ணனியில் உள்ள அடிப்படைக் காரியங்கள் குறித்து இயேசு பேசினார், தேவனது வார்த்தைக்கு ஜனங்களின் பிரதியுத்தரம் குறித்து, மத்தேயு 13:16-32, 36-43 வேதபகுதியில் காணலாம்

NOTES

<u>அதிகாரம் 4 - பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க எழுப்புதல்கள்</u>

சில எழுப்புதல்களைக் குறித்த மேற்பார்வை -- 16 ம் நூற்றாண்டு முதல் 20 ம் நூற்றாண்டு வரை "ஆவியானவரின் எழுப்புதல் அலைகளை" கண்டுகொள்ளுதல்.

கர்த்தரின் சபையின் மீது, யுகா யுகமாய், பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலை நாம் கற்றுக்கொள்ளும் போது, வேதாகம நாட்களிலும் அதே நிகழ்ந்துள்ளது எனக் கண்டுகொள்ள இயலும். பிரிட்டன் மற்றும் அமெரிக்க ஐக்கிய தேசங்களில் நிகழ்ந்த எழுப்புதலில் ஆவியானவரின் அசைவாடுதலைக் குறித்து சுருங்கிய மேற்பார்வையை, இப்பாடத்தில் காண இருக்கிறோம். சரித்திரத்தில் இடம் பெற்ற இவ்வெழுப்புதல்களை, உங்கள் சபை, பட்டணம் மற்றும் தேசத்தில் பிரதிபலிக்க முயலுங்கள்.

என் வாழ்வில் கடந்த ஐம்பது ஆண்டுகாலங்களாக, பலதரப்பட்ட நிலையில் "ஆவியானவரின் அசைவாடுதல்கள்" எனது சபையில் நிகழ்ந்துள்ளதை நான் கண்டு இருக்கிறேன். சபையின் ஆரோக்கியமானது, சபைத்தலைவர்களின்

உண்மைத்தன்மையினால், கடந்த காலத்தில் பாதுகாக்கப்பட்டு, எழுப்புதலுக்கும், உயிர்மீட்சிக்கும் வழி வகுத்ததாய் இருக்கிறது. இக்கால கட்டத்தில் எனது பகுதியாகிய, Blockhouse Bay, here in Auckland, New Zealand, ல் பரிசுத்த ஆவியானவரது அசைவாடுதல் பெரிதளவில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது.

1. 1920 ல் "Green Bay Mission" ஸ்தாபிக்கப்பட்டு, ஒரு தனிப்பட்ட மனிதனின் தரிசனத்தாலும் அவரது சொத்தாலும், சபையைக் கட்டியெழுப்பி, ஆரம்பகால பிரசங்கியார்களை பொருளாதார ரீதியாக தாங்கி, அதன் விளைவாக அநேகர் இரட்சிப்புக்குள்ளாக கடந்து வரவும், அந்த வட்டாரங்களில், சுவிஷேச சாட்சிகளை ஸ்தாபித்து உறுதியான மற்றும் நிலையான ஸ்தாபனமானது உருப்பெற்றது.

2. இவ்வட்டாரத்தில் WW II அவர்கள் பல ஆண்டுகளாக போதித்து வந்த வேதாகம சத்தியங்கள் மூலம், இவ்வட்டாரத்தில் உள்ள சபையானது வளர்ந்து பெருகத் துவங்கியது, இவர் தேவனுக்குப் பயந்த வேதாகம பண்டிதராய் இருந்து, போதகராய் இப்பகுதியில் உள்ள சபையில் பிரசங்கிக்கத் துவங்கினார். இப்பகுதியில் உள்ள சபையானது; சிறிய அளவில் இருந்தது, தேவனது வார்த்தையை தொடர்ந்து இம்மக்கள் கேட்கத்துவங்கினர், வாரத்தின் மத்திய பகுதியில் சபையில் ஜெபக்கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு நிகழ்ந்து வந்தது, இந்த ஜெபக்கூட்டத்தில், கர்த்தருக்காய் ஜெபத்தில் காத்திருந்து, அதைத் தொடர்ந்து சிறப்பான வேதபாடம் முறையாக போதிக்கப்பட்டது.

3. 1950 ல் ஆக்லாண்ட் பட்டணத்தில் பில்லிகிரகாம் அவர்கள் சுவிஷேச படை முயற்சி கூட்டத்தின் மூலம், பெரிய அறுவடையானது இடம் பெற்றது. அக்கால கட்டத்தில் நான் ஒரு சிறு பையனாய் இருந்து, நடந்த நிகழ்வினை இன்றும் என் நினைவிற்குக் கொண்டு வருகிறவனாய் இருக்கிறேன். ஒரு வார காலமாய் கால் பந்து மைதானத்தில் நிகழ்ந்த கூட்டத்தில் கலந்து கொண்டு, நள்ளிரவில் மகிழ்ச்சியுடன், பேருந்துகளில் வீடு திரும்பும் மக்கள் திரள் கூட்டத்தை நினைவு கூறுகிறேன். இங்கு ஏற்பட்ட எழுப்புதலின் விளைவாக, சிறுவர் ஞாயிறு பள்ளியானது துவங்கப்பெற்று, ஏறத்தாள 500க்கும் அதிகமான சிறுவர்கள் வாரந்தோறும் ஞாயிறுபள்ளியில் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர்.

4. சுவிஷேச ஊழியத்திற்கான படை முயற்சி கூட்டம் ஒன்றை அமெரிக்க பிரசங்கியார் ஒருவர், 1960 ல் ஒழுங்கு செய்திருந்தார், அதில் இளம் வாலிப நண்பர்கள் கர்த்தருக்குள்ளாய் வழிநடத்தப்பட்டனர். சபைக்கு புதிய ஆற்றலை அளிக்கும் வகையில், இளம் வாலிபர் வேதபாடம் அமைந்திருந்தது. ஐம்பதிற்கும் அதிமான இளம் வாலிபர்கள் காலை ஐக்கிய சிற்றுண்டி அருந்திவிட்டு, தொடர்ந்து வேதபாட வகுப்பில் கலந்து கொண்டனர், இது ஒவ்வொரு ஞாயிறன்றும் ஐக்கிய சிற்றுண்டி முடிந்தபின்னர், தேவனது வார்த்தைகளை அவர்கள் மிகவும் கவனமாய்க் கற்றுக்கொள்வதாய் இருந்தது.

5. 1960 ம் ஆண்டு இறுதியில், கரிஸ்மேட்டிக் எழுப்புதலானது சபைகளில் உருவாகத்துவங்கியது, ஸ்தல ஆங்லிக்கன் சபையில், மறுபடி பிறக்கும் வல்லமையும், பேப்டிஸ்ட் சபைகளின் விரிவாக்கமும் இதன் விளைவால் உருவாகின. இத்தகைய எழுப்புதலானது, 1990 ம் ஆண்டு வரை நீடித்தது, இதைத்

தொடர்ந்து ALPHA seminars நடைபெற துவங்கியது, இத்தகைய எழுப்புதல்கள் "புதிய ரீதியில் ஆவியானவரின் அசைவாடுதலுக்கு" வழி வகுத்தன. சமுதாயத்தில் சபையானது விரிவடையத் துவங்கி, அநேகர் இரட்சிப்படைந்தனர்.

6. தற்போது, வாராந்திர வேதபாடம் செல் குருப்களில் நிகழ்ந்து வருகிறது (இது ஜான் வெஸ்லி அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட அணுகுமுறையாக இருக்கிறது -- இது குறித்து கீழே கற்றுக்கொள்ளவிருக்கிறோம்) இது சபைக்கு வல்லமை அளிக்கக் கூடிய அணுகுமுறையாய் விளங்கி வருகிறது, வேதாகம அடிப்படையிலான வேதபாடமானது, பரிசுத்தவான்களை பெலப்படுத்தி, ஆவியானவரின் அசைவாடுதலுக்கு வழி நடத்துகிறதாய் இருந்து வருகிறது.

கர்த்தரின் அடுத்த கட்ட அசைவாடுதலை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கிறோம். இதுவே எல்லாவிசுவாசிகளின் சரியான மனநிலையாய் இருந்து வருகிறது, அனுதினமும் கர்த்தரின் உயிர்மீட்சியை நமது ஆவிக்குரிய வாழ்வில் நாம் தேடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். மற்றும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு ஆவிக்குரிய ஜீவியம் செய்வதற்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். வரப்போகிற எழுப்புதலில் நமது பங்கை சரிவர செயல்படுத்த ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும் எங்களது ஸ்தல சபையில், இரு காரியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறவர்களாய் இருக்கிறோம், முறையான வேதபாட போதனை மற்றும் ஒழுங்காய் தவறாது, பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலுக்காய் ஏறெடுக்கப்படும் உறுதிவாய்ந்த ஜெபம்

இதை மனதில் கொண்டவர்களாக, 1520 முதல் 1920 வரையிலான சரித்திரப் பூர்வமான எழுப்புதல்களை காணப்போகிறோம். இக்காலக் கட்டத்தை நான் தெரிவு செய்ததற்கான காரணம் என்னவெனில், இக்கால சபை சரித்திரமானது, எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாய் இருந்து, எழுப்புதலைக் குறித்து தொடர்ந்து கற்றுக்கொள்ள வகை செய்கிறதாய் இருக்கிறது.

1. மறுமலர்ச்சியானது இங்கிலாந்து தேசத்தை சந்தித்தல்:

பரிசுத்த ஆவியானவரது பெரிய அசைவாடுதலைப் போன்று, எந்த ஒரு தனிமனிதனுக்கும் மகிமை செல்லாது, ஒவ்வொரு சகோதரனும், சகோதரியும் ஆவியினால் நிரப்பப்பட்டு, கீழ்ப்படிதலுள்ள விசுவாசிகளாய் தங்களது பங்கை நிறைவேற்றுகிறவர்களாய் இருந்தனர். LOLLARDS என்னும் குழுவினரே முதலாவது எழுப்புதலுக்கு அஸ்திபாரமிட்டவர்களாய் விளங்கினர். ஜான் விக்லிஃப் (1329-1384) அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட preaching lay order ஆனது, முதலாவது ஆங்கில மொழிபெயர்ப்பு வேதாகமத்தை, சாதாரண மக்களுக்கு அவர்களது தாய் மொழியில் கற்றுக்கொடுத்து, இரட்சிப்புக்கு ஏதுவான தேவனது வார்த்தையானது அவர்களுக்கு முறையாய் அளிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான Lollards கள் இரத்த சாட்சியாய் தங்கள் ஜீவனை அற்பணித்தனர், ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தல சபைகள் அவர்களை வண்முறையாய் கண்டனம் செய்து, உபத்திரவப்படுத்தினர்.. இவர்களது அற்புத செயல்பாட்டை பரலோகம் மட்டுமே, கேட்டு, இழந்து போனோர் சந்திக்கப்பட்டு, இங்கிலாந்துக்கு எழுப்புதலை கொண்டு வந்ததை முழுமையாய் அறிவிக்கிறதாய் இருக்கிறது. எபிரெயர் 11:32-40.

விக்லிஃப் அவர்களது அற்புத செயல்பாடான, சாதாரண மக்களது தாய் மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்த்ததும், அதைத் தொடர்ந்து ஜான் டிண்டேல் அவர்கள் 1520 ல் புதிய ஆங்கில மொழி பெயர்ப்பை விக்லிஃப் அவர்களது மொழிபெயர்ப்பு முயற்சியை நிறைவு செய்வதாய் இருந்தது. 1536 ல் டிண்டேல் அவர்களது குரல்வளையானது நெறிக்கப்பட்டு, உயிருடன் Brussels என்ற இடத்தில், இங்கிலாந்தின் எட்டாவது ஹென்றியால் கொடூரமாய் கொலை செய்யப்பட்டார். அவர் மரிக்கும் போது கூறிய இறுதி வார்த்தையானது, "கர்த்தாவே இங்கிலாந்து மன்னரின் கண்களைத் திறந்தருளும்" என்று கூறி மரித்தாராம்.

டிண்டேல் அவர்களது மரணத்தில் வருத்தப்படக்கூடிய காரியம் என்னவெனில், இவர் கொலை செய்யப்படுவதற்கு முன்னரே, இங்கிலாந்து தேசத்தில், சில ஆங்லிக்கன் பேராயர்களால் மறுமலர்ச்சி துவங்கிவிட்டது, இருப்பினும், அவர்களால், இவர் கொலை செய்யப்பட்டதை தடுத்து நிறுத்த இயலாது போய்விட்டது. அவர்கள் மன்னரின் விவாகரத்தை பயன்படுத்திக் கொண்டு, ரோமன் கத்தோலிக்க ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, இங்கிலாந்தின் தேசிய சபையை ஸ்தாபித்தனர். பின்னர் அவர்கள் ஜெப புத்தகத்தை திரும்ப எழுதினர். ஆங்கில மொழியிலான வேதாகமத்தை பிரசுரித்து வெளியிட்டனர். (இவ்வேதாகமானது டிண்டேல் அவர்களின் வேலைப்பாடாய் இருந்தது.) சபைகளில் மக்கள் இரட்சிப்படைய, அவர்களது பிரசங்கங்களை மறு ஒழுங்கு செய்தனர். கொடிய எதிர்ப்புகள் இருந்த போதிலும், புதியதாய் அங்கீகாரம் செய்யப்பட்ட சபைகளில் இருந்து பழைய குருமார்கள் விலகிவிட்டனர், அந்த நூற்றாண்டில், அநேக பரிசுத்தவான்கள் தங்களது விசுவாசத்திற்காய் மரணத்தை சந்திக்க நேரிட்டது.

1534 முதல் 1553 வரை மறுமர்ச்சியானது, சபைகளில் மலரத்துவங்கியது. ரோமன் கத்தோலிக்க அரசியான மேரி பதவிக்கு வந்த பின்னர், மறுமலர்ச்சிக்கு தடைவிதித்து, எழுப்புதலைக் கொண்டுவந்த தலைவர்களை உபத்திரவப்படுத்தத் துவங்கினாள். எழுப்புதலுக்கு முன்னோடியான பிஷப்புகளை, உயிருடன் கம்பங்களில் கட்டி எரித்தாள். அவ்வாறு உயிருடன் எரிக்கப்பட்டவர்கள் 500 க்கும் அதிகமானோராய் இருந்தனர். இருதரப்பிலும் தங்கள் கொள்கைகளை விட்டுக்கொடாவண்ணம் போராடி வந்தனர், இறுதியில் வேதாகமம் மட்டுமே வெற்றி சிறக்கிறதாய் இருந்தது.

அரசி மேரி 1558 ல் மரணமடைந்தாள், முதலாம் எலிசபெத் பட்டத்திற்கு வந்தார்கள், பரிசுத்த வேதாகமமானது, மறுபடியும் உயர்த்தப்பட்டு, அந்த நூற்றாண்டில் சுவிஷேசத் திருச்சபைகள், பெரிதளவில் வளர ஆரம்பித்தன. இலண்டன் மாநகரில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் அப்பி சிற்றாலய வளாகத்தில் இரு அரசிகளும் அடக்கம் செய்யப்பட்டனர், இவர்களது நித்தியத்தின் முடிவானது வெவ்வேறாக இருந்தது.

2. ப்யூரிட்டன்ஸ் 1580 முதல் 1680 வரை: [THE PURITANS 1580s – 1660s.]

ப்யூரிட்டன்ஸ் என அழைக்கப்படும் குழுவினரால், "ஆவியானவரின் அசைவாடுதல்" அடுத்தபடியாக எழத்துவங்கியது. இவர்கள் கலப்பின குழுவாய் திகழ்ந்தனர், இவர்களில் அநேகர், ஜெனிவாப் பட்டணத்தைச் சார்ந்த ஜான் கால்வின், அவர்களது

ஊழியத்தால், சந்திக்கப்பட்டவர்களாய் இருந்தனர். இவர்கள் பரிசுத்தமாய் வாழும் வாழ்க்கையை, அதிகம் விசுவாசித்தனர், ஜெபத்தில் உள்ள வல்லமையானது, தேவனது வார்த்தையை உயர்த்திக் காட்டுவது, இதற்கு வழிநடத்தக்கூடும் என விசுவாசித்தனர். ஆங்கில மற்றும் ஸ்காட்டிஷ் சமுதாயத்தில், ஆவிக்குரிய உயிர்மீட்சியடைய கர்த்தர் இவர்களைப் பயன்படுத்தினார். இத்தேசங்களில், மற்றும் கிழக்கு அமெரிக்காவில், அநேக சபைகளை நிறுவும்படி கர்த்தர் இவர்களுக்கு அனுக்கிரகம் செய்தார்.

அடுத்த நூற்றாண்டில் அவர்களது எழுப்புதலின் வல்லமையானது நலிவடையத் துவங்கியது, அவர்கள் மதரீதியான காரியங்களில் குளிர்ந்து காணப்பட்டனர். பரிசுத்தாவியானர் அவிந்து போன நிலையில், அதிக அளவின சபைகளில் காணப்பட்டார், இவ்வாறு அவர்களது இயக்கமானது நலிவடைந்தது. அவர்கள் நடுவிலும், கொஞ்சம் பேர் மீந்தவர்களாய் ஆவிக்குரிய நிலையில் ஜீவனுள்ள விசுவாசிகளாய் விளங்கி வந்தனர். கர்த்தர் அட்லாண்டிக்கின் இரு பக்கங்களிலும், எழுப்புதல் சக்தியினை எழும்பப்பண்ணினார். பழைய ப்யூரிட்டன் இயக்கத்திற்கு மெய்யான ஆணிவேராய் இது திகழ்ந்தது.

3. 18 ம் நூற்றாண்டின் "பெரிய எழுப்புதல்"

1690 ம் ஆண்டு சரித்திரத்தில் "ஆய்வுப்பயணம் மேற்கொள்ளும் யுகம் / புதிய கண்டுபிடிப்புகளின் யுகம் என அறியப்படுகிறது. அல்லது "வளர்ச்சி காணும் யுகம்" எனவும் அறியப்படுகிறது, விஞ்ஞான ரீதியிலும், பூகோள ரீதியிலும் அநேகப் புதிய கண்டுபிடிப்புகள் இந்த யுகத்தில் இடம் பெற்றன. இரட்சிப்படையாத மனிதர் இக்காலக்கட்டத்தில் வியப்பிற்கும், செல்வாக்கிற்கும் உள்ளானார்கள், இரட்சிப்படைந்த மனிதர், இக்காலக்கட்டத்தில், வியப்பிற்குள்ளானது மட்டுமின்றி, அதினிமித்தம் வழிதப்பிச் செல்ல ஆரம்பித்தனர். பெருமையானது அனைவரையும், வழி தவறச் செய்கிறதாய் இருந்தது. பாலியல் பாவங்களுக்கும் மற்றும் இதர பாவ சந்தோஷங்களுக்கும், செல்வந்தர்களாலும், ஆதிக்கத்திலிருந்தவர்களாலும் அதிகமாய் ஊக்கமளிக்கப்பட்டன. இவர்கள் அன்றைய சமுதாயத்தை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்கிறவர்களாய் விளங்கினர். ரோமர்களின் கண்டுபிடிப்பின் பிரகாரம், மக்களுக்கு போதுமான, ஆகாரம், மதுபானம், பொழுதுபோக்கு இருந்தால் அவர்கள் கலகம் செய்யாது இருப்பர், அதிகாரத்தில் இருப்பவர்களை எதிர்க்காமல், அவர்களது கட்டுப்பாட்டிற்குள் அடங்கி இருப்பர் என்பதனை அறிந்திருந்தனர்.

கர்த்தர் சாட்சிகள் இல்லாது ஒருபோதும் இருந்ததில்லை, பரிசுத்த ஆவியானவர், அட்லாண்டிக்கின் இரு பக்கங்களிலும், மரித்துப்போன, சடங்காச்சாரமான மதப்பிண்ணனியில், ஆவிக்குரிய நிலையில் வல்லமை குன்றி காணப்பட்ட சபைகளின் மத்தியில், அடுத்த கட்ட எழுப்புதலைக் கொண்டுவர அவர்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார். மதிப்பிற்கும், பண்பாட்டிற்குமுரிய மதத்தினைக் குறித்து, பரலோகில் உள்ள தேவன், பிசாசின் மதங்களைக் குறித்து ஆர்வமற்றவராய் இருந்தார், அத்தைகைய மதமானது, நாம் எசேக்கியேலில் கண்ட மதத்திற்கு ஒப்பானதாய் இருக்கிறது.

1720 ல் பலதரப்பட்ட ஸ்தாபனங்களில், வித்தியாசமான ஸ்தலங்களில் இருந்து வந்து, அமெரிக்க தேசத்தில் பிரசங்கித்த பிரசங்கியார்கள் மூலம், எழுப்புதல் ஆரம்பமாகத் துவங்கியது. அவர்களது பெயர்கள் இப்பொழுது அறியப்படாது இருந்தபோதிலும், தேவனுக்கு அவர்களது பெயர்கள் பிரசித்தமாய் இருக்கிறது. அவர்களில் நினைவு கூறப்படுபவர்கள், யோனத்தான் எட்வர்ட்ஸ், ஜியார்ஜ் ஒயிட்ஃபீல்ட், மற்றும் வெஸ்லி சகோதரர்கள், ஜான் மற்றும் சார்லஸ் போன்றோர்கள் ஆகும்.

யோனத்தான் எட்வர்ட் அவர்கள், எழுப்புதலின் பயணத்தை எழுதி, "ஜேர்னல்" ஒன்றை பிரசுரம் செய்தார், அது பின்னாட்களில், சபைகளை உற்சாகப்படுத்தும் வகையில், உலக அளவில் விநியோகம் செய்யப்பட்டது. அந்த ஜேர்னல் எல்லோருக்கும் கிடைக்கும் வகையில், மலிவு விலை புத்தகமாய், சத்தியத்தைப் பரப்பும் நோக்குடன் பிரசுரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டது. ஜீவனுள்ள தேவனது வார்த்தையைப் பரப்பும்படி இன்றைய அளவில் நாம் பயன்படுத்தும் தொழில் நுட்பங்களைப் போன்று, அன்றைய தினங்களில் வாழ்ந்த பிரசங்கியார் அன்றைய நாட்களுக்குரிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தினர்.

அவர் தனது ஜேர்னலில் குறிப்பிடும்போது, எழுப்புதலானது 1723 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் தேதி அன்று ஆரம்பமானது என்றார். இந்த நாளில் அவர்; தான் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெற்றதாகவும், அந்நாளில், தன்னை முழுவதுமாய் தேவனுக்கென்று அற்பணித்ததாகவும், தனது ஜேர்னலில் குறிப்பிட்டுள்ளார். இந்த அற்பணிப்பின் போது, முறையான வேதபாடத்தினாலும், ஜெபத்தாலும் தான் உருவாக்கப்பட அற்பணித்தார், அந்த ஆண்டு முழுவதிலும், ஒவ்வொரு நாளும், அவர் பதினான்கு மணி நேரத்தை இதற்காக செலவிட்டார். நார்தம்டன் [Northampton] என்கிற இடத்தில் உள்ள சபையில், ஆவியானவரின் அசைவுண்டாகி, அச்சபையானது எழுப்புதலடைய, பத்து ஆண்டு காலங்கள் தான் பயிற்சி பெற்று, பிரசங்கம் செய்ததன் பயனால் உண்டானது.

1740 ம் ஆண்டு ஜியார்ஜ் வைட்ஃபீல்ட் அவர்கள் பிரிட்டனிலிருந்து வந்து, திறந்தவெளி மைதானத்தில் ஒரு படை முயற்சிக் கூட்டத்தை ஒழுங்கு செய்தார். (இது போன்ற படைமுயற்சிக் கூட்டத்தினை 1737 ல் பிரிட்டனில் முன்னோடி படை முயற்சிக் கூட்டமாய் நடத்தி முடித்திருந்தார்.) இங்கு அவர் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் 20,000 பேர் கலந்து கொள்ளும் வண்ணம் ஒழுங்கு செய்யப்பட்டது. அங்கு ஏற்பட்ட எழுப்புதலானது, சபைகளையும் தாண்டி, சமுதாயத்திற்குள் செல்கிறதாய் இருந்தது, எல்லா சபைகளும் வேதவசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் துவங்கினர், பரிசுத்த ஆவியானவருக்கு திறந்த மனதாய் தங்களது வாழ்வை அற்பணித்தனர், ஸ்தாபனங்களில் பிளவுண்டாயிற்று. ஜனங்கள் எழுப்புதலுக்கு திறந்த மனமுள்ளவர்களாய், புதிய சபைகளையும், குழுக்களையும் ஸ்தாபிக்க தலைப்பட்டனர்.

ஒயிட்ஃபீல்ட் அவர்கள் குறிப்பிடும் போது, பழமைவாத சபைகள், எழுப்புதலுக்கு வெளியே நிற்கலாயின. "சபையினர் மரித்துப்போய் காணப்படுவதன் காரணம், மரித்துப்போன நிலையில் உள்ளவர்கள் அவர்களுக்கு பிரசங்கம் செய்வதலாகும்." நார்தாம்டன் பட்டணத்தில், பெரிய எழுப்புதலுக்குக் காரணமான ஜோனத்தன்

எட்வர்ட் அவர்களை தங்களது சபை குருவாக 1750 ஏக மனதாய் தெரிவு செய்தனர், அதன் பின்னர் அவர் தனது ஊழியப் பணித்தளத்தில், எட்டு ஆண்டுகாலங்கள் அமெரிக்க இந்தியர்கள் மத்தியில் மிஷனரியாக பணியாற்றினார். இந்த உண்மையை நினைவில் கொள்ளுதல் அவசியம், தேவனது மக்கள் எப்பொழுதும் எழுப்புதலை வரவேற்கிறவர்களாய் இருக்கின்றனர். மற்றவர்கள் ஒரு எதிர்பார்ப்புமின்றி, வல்லமை இல்லாது, கடமைக்காய் செயல்படும் மதத்தினை பின்பற்ற விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர்.

இக்கால கட்டத்தில் ஏற்பட்ட மகா எழுப்புதலுக்குக் காரணமாய், இன்னும் இரண்டு முக்கியமான மனிதர்கள் இருந்தனர், அவர்கள் வெஸ்லி சகோதரர்கள் என அறியப்பட்டனர், ஜான் வெஸ்லியும், சார்லஸ் வெஸ்லியும் இவ்விரு சகோதரர்கள் ஆவர். இவ்விருவரும் பல்கலைகலகத்திற்குச் சென்று, "ஹோலி க்ளப்" இயக்கத்தை ஆரம்பித்தனர். இக்கிளப்களில் மக்கள் குழுமி தங்கள் தேசத்தின் பாவ நிலையை உணர்ந்து, சபையானது இதற்கான வருத்தத்தைத் தெரிவிக்கிறதாய் இருந்தது. இப்படிப்பட்ட காரியங்களை உண்மையாய் செய்தனர், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படாத லீகலிஸ்டுகளாகவும், மதவாதிகளாயும், மிகவும் கவனமுள்ளவர்களாயும் இருந்தனர். இவ்விரு மனிதரும் தங்கள் லீகலிஸத்துடன் ஆங்க்லிகன் ஊழியத்திற்குள் சென்று ஊழியர்களாய் பணியாற்றினர்.

இது அழிவைக் கொண்டுவருகிறதாய் இருந்தது. இவர்கள் முதலாவது, அட்லாண்டிக் புயலை சந்திக்க நேரிட்டது, தங்களது கப்பலானது மூழ்கிவிடுமோ என்கிற அச்சம் இவர்களை மேற்கொள்கிறதாய் இருந்தது. மொரேவிய மிஷனரி குழுவினர், இவர்கள் அக்கப்பலில் பயணம் செய்தவர்களாய் இருந்தனர், இவர்கள் பயமற்ற நிலையில் இருந்தனர், இவர்களது விசுவாசமானது, திமிர் பிடித்த இளம் ஆங்க்லிகன் கிளர்ஜிகளை கடிந்து கொள்வதாய் இருந்தது. ஜியார்ஜியாவில் இருந்தபோது, ஜான் அவர்கள் ஒரு ஐசுவரியமுள்ள இளம் பெண்ணிடத்தில், காதலில் விழுந்தார். இதனால் அவர் தனது வாழ்வில் வெகுவாய் பாதிப்புக்குள்ளானார். இவர் ஆங்க்லிகன் அல்லாத விசுவாசிக்கு, அடக்க ஆராதனை செய்ய மறுத்துவிட்டார். மற்றும் ஜனங்களுடன் தர்க்கித்து, லீகலிச கொள்கைகளை, சபை ஆராதனைகளில் வலியுறுத்தினார். அவரைவிட்டு விலகிச்சென்றவர்களுடன் ஐக்கியம் கொள்வதை மறுக்கிறவராயும் காணப்பட்டார்.

இவர் அவமரியாதைக்குள்ளானவராய் அமெரிக்க காலனிகளை விட்டு வெளியேற நேரிட்டது. இவர் அறிந்திருந்தும், வல்லமையற்ற தெய்வீகத்தை அமைத்துக் கொண்டார். **2 தீமோத்தேயு 3:1-6.** இவர் இரட்சிக்கப்படாத தேவ ஊழியராய் இருந்தார், பாவத்திற்காக வேதனையை தெரிவிக்கிறவராய் இருந்தார், பரிசுத்தத்தை வாஞ்சிக்கிறவராயும் இருந்தார், ஆனால் மன்னிக்க மனமற்றவராய் இருந்தார், தனது வாழ்வில் தேவனது வல்லமை இன்னதென்பதை அறியாதவராய் காணப்பட்டார். இவர் அமெரிக்க தேசத்தில் உள்ள "இந்தியர்களின் இரட்சிப்பிற்காக" அங்கு கடந்து சென்றார், இவர் திரும்பும்போது, ஜான் வெஸ்லியை இரட்சிப்பது யார்? என்கிற கேள்வியானது கேட்கப்பட்டது. இவர் மதவாதியாய் திகழ்ந்த அவிசுவாசியாய் விளங்கினார். தேவனது அற்புதமான கிருபையால் இரட்சிப்பிற்குள்ளானார். இவரது சகோதரனாகிய சார்லஸ் இரட்சிப்படைந்த மூன்று தினங்களுக்குப் பின்னர் இவர் இரட்சிக்கப்பட்டார். இச்சம்பவம் மே மாதம் 24 ம் தேதி 1738 ம் ஆண்டு, லண்டன்

மாநகரில் வைத்து நடைபெற்றது. மார்டின் லூத்தர் அவர்கள் எழுதிய, ரோமர் நிருப விளக்கவுரையின் முகவுரையை, ஒரு பாமற மனிதன் வாசிக்க இவர்கள் கேட்டபோது இது அவர்கள் வாழ்வில் நிகழ்வதாய் இருந்தது.

வெஸ்லி அவர்கள் தேவனது இரக்கத்திற்கும், கிருபைக்கும், தன்னை முழுமையாய் அற்பணித்தார், தேவன் ஒருவரை மட்டும் முழுமையாக நம்பினார், அவர் தனது படிப்பு, பட்டம் இவைகளை சார்ந்திருக்கவில்லை, வேறு எந்தஒரு காரியத்தையும் சார்ந்திருக்கவில்லை, இயேசுக்கிறிஸ்து தனக்காக சிந்தின இரத்தத்தில் மட்டும், அசைக்கமுடியாத நம்பிக்கையை வைக்கலானார். அந்த இரவில் நிகழ்ந்ததை அவர் இவ்வாறு விவரிக்கிறவராய் காணப்படுகிறார், "அல்டர்ஸ்கேட் தெருவில் நடைபெற்ற சமுதாய கூடுகைக்கு, விருப்பமற்றவனாய் சென்றேன், அங்கு மார்டின் லூத்தர் அவர்கள் ரோம நிருபத்திற்கு எழுதிய முன்னுரையை ஒருமுறை வாசிக்கக் கேட்டோம்." கிட்டத்தட்ட ஒன்பது மணிக்கு 15 நிமிடத்திற்கு முன்னால், கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால், தேவன் இருதயத்தில் கிரியை செய்யும் போதுள்ள மாற்றத்தினை குறித்து விவரித்தார். எனதுள்ளத்தில் விநோதமான நிலையில் எச்சரிக்கப்பட்டேன். நான் கிறிஸ்துவில், எனது இரட்சிப்பிற்காய், என் முழு நம்பிக்கையையும் வைத்திருப்பதை உணர்ந்தேன். என் பாவங்கள் என்னிலிருந்து எடுக்கப்பட்ட நிச்சயம் எனக்களிக்கப்பட்டது, மட்டுமின்றி நியாயப்பிரமாணத்தினால் உண்டாகும் பாவம் மற்றும் மரணம் போன்றவற்றிலிருந்தும் இரட்சிப்படைந்ததையும் உணர்ந்தேன்.

இதற்கு பின்னர் அவர் ஜெர்மனி தேசத்திற்கு புறப்பட்டுப் போய், அங்குள்ள மொரேவியர்களின் வீடுகளை சந்தித்தார். பின்னர் இவர் எல்லாப்போதகர்களையும் கூட்டிச்சேர்த்து, 1739 ம் ஆண்டு, ஜனவரி மாதம் 01 ம் தேதியன்று முழு இரவு ஜெபம் ஒன்றை ஒழுங்கு செய்து, இக்கூட்டத்தில் ஜெபித்து தேவனைத் துதித்து, புதிய ஆண்டில் செய்யவிருக்கும் சேவைக்கான, கிருபைகளைப் பெற்றுக்கொள்ளவும், எழுப்புதலடையவும், உற்சாகமளிக்கவராய்க் காணப்பட்டார். அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் அசைவாடினார். அவர்கள் இழந்து போன மக்களைக் குறித்த பாரத்தையும், தேவ அழைப்பைக் குறித்த உறுதிப்பாட்டையும், கர்த்தரது சரியான வேளை குறித்தும் அறிந்துகொண்டனர்.

ஒயிட்ஃபீல்ட் அவர்கள் ஏற்கனவே துவங்கியிருந்த திறந்த வெளி பிரசங்கத்தின் மாதிரியை எப்பொழுதெல்லாம் சபைகள் அவர்களுக்கு அடைக்கப்பட்டதோ அச்சமயங்களீல் அவர்கள் பின்பற்றினர். ஜான் வெஸ்லி அவர்களது தகப்பனாரின் பழமை வாய்ந்த சபையை, அதிகாரத்தில் இருந்த மதவாதிகள் அவரைச் சபையில் பிரசங்கிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டபோது, அவர் தனது தகப்பனாரின் சமாதி மீது நின்று பிரசங்கம் செய்தார். 30,000 க்கும் அதிகமானோருக்கு, அத்தேசத்தில் அவர் விளையாட்டு அரங்கத்தில் பிரசங்கம் செய்தார். 250,000 மைல்கள் குதிரை மீது சவாரி செய்து அத்தேசத்தில் பிரசங்கம் செய்துள்ளார், அநேம் முறை அமெரிக்க இந்தியர்களைச் சந்தித்து, அங்கு நிகழ்ந்து வந்த எழுப்புதலில் இவரும் பங்கு வகிக்கிரவாய் இருந்தார். 1739 முதல் 1791 வரை அவர்களுக்கு இவர் பிரசங்கம் செய்தார்.

ஜான் வெஸ்லி அவர்கள் அர்மீனியக் கொள்கையைப் பின்பற்றுகிறவர், ஒயிட்ஃபீல்ட் அவர்கள் கால்வினிஸக் கொள்கையைப் பின்பற்றுகிறவராய் இருந்தும், இவ்விருவரும் கர்த்தரை அதிகமாய் நேசிக்கிறவர்களும், இறையில் வித்தியாசமுடையவர்களாய் இருந்தும் இவர்கள் ஒருவரை ஒருவர் அளவுக்கு அதிகமாய் நேசிக்கிறவர்களாய் விளங்கினர். ஒயிட்ஃபீல்ட் அவர்கள் ஜான் வெஸ்லி அவர்களிடம், அடக்க ஆராதனை ஞாபகார்த்த கூட்டத்தில் பிரசங்கம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். காரணம் தனது லீகலிஸ கால்வினிஸத்தினால் அதிக அளவில் எண்ணச்சிதறல்கள் இவருக்கு ஏற்பட்டிருந்தது, கால்வினிஸக் கொள்கைக்காரர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள் அல்லர். ஒற்றுமை என்பது இருவரின் ஊழியத்தின் கனியாய் விளங்கியது. சில உபதேசவிஷயங்களில் அவர்களால் ஒத்துப் போக இயலவில்லை என்ற போதிலும், ஒருமித்து இவர்கள் கர்த்தருக்கு மகிமையை கொண்டு வருகிறவர்களாய் விளங்கினர். மற்றும் இவர்களது காலத்திலும் அதற்கு முன்னரும் பெருமையானது ஊழியர்களை அழித்து சின்னபின்னமாக்கியதை இவர்கள் மனதில் கொண்டவர்களாய் அதற்கு இடமளியாது, தங்களைக் காத்துக்கொண்டனர்.

சார்லஸ் வெஸ்லி அவர்கள், ஜான் வெஸ்லி அவர்களுடன் மெத்தொடிஸ்ட் ஆலயத்தில் பிரசங்கம் செய்தார், அவ்வாலயம் பர்ன்ஹில் என்னுமிடத்தில் லண்டன் மாநகரில் அமையப்பெற்றுள்ளது, இன்றைய அளவில் இவ்வாலயம் பிரசித்தி பெற்றதாயும் அநேகர் கண்டு செல்லும் புனித ஸ்தலமாயும் விளங்கி வருகிறது. ஜான் வெஸ்லி அவர்கள் இவ்வாலயத்தின் பின் பாகத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இவரது அன்னை சூசன்னா அவர்களது கல்லறை ஆலயத்திற்கு எதிரேயுள்ள கல்லறை தோட்டத்தில் அடக்கம் செய்திருப்பதை இன்றும் நீங்கள் கண்டு கொள்ளலாம். சார்லஸ் வெஸ்லி அவர்கள் 7000 க்கும் அதிகமான பாடல்கள் மற்றும் ஞானப்பாட்டுக்களை எழுதியுள்ளார்கள், இவைகள் மெத்தொடிஸ்ட் சபையின் பாடல்களாய் இன்றைய வரையிலும் கருதப்பட்டு வருகின்றன. ஞாயிறு பள்ளியில் இவர் இசைத்த, இவரது ஆர்கன், இவரது பாடல்கள் எழுதப்பட்டு, சபைக்கு அருகாமையில் இன்றைய அளவிலும், பாதுகாக்கப்பட்டு வருகிறது. லண்டன் மாநகருக்கு சுற்றுலா செல்லும் பயணிகள், இச்சபையை சந்திக்காமல் இருந்ததில்லை. அவர்கள் வெஸ்லி அவர்களது வீட்டின் வழியாக நடந்து, இவ்விரு மா மனிதருக்கு அஞ்சலி செலுத்தி, இவர்களது பர்ன் ஹில் ஃபீல்ட் ல் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் கல்லறையைக் கண்டு செல்கிறவர்களாய் இருக்கின்றனர்.

ஜான் வெஸ்லி அவர்களது படுக்கை அறையை, அவரது ஜெப அறையாக பயன்படுத்தினார், அவரது மேஜையின் மீது திறந்த வேதாகமம் எப்பொழும் திறந்த வண்ணமாகவே இருக்கும், ஒவ்வொரு நாளும் காலை 4 மணி முதல் 6 மணி வரை வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் அங்கு செலவு செய்வார். அவரது இல்லத்தைப் பார்வையிடச் சென்றிருந்தபோது, எனது மூத்த குமாரத்தியை அழைத்துச் சென்றிருந்தேன், அப்பொழுது அவளுக்கு வயது பதின்மூன்று. நாங்கள் வெஸ்ட்மினிஸ்டர் அப்பி, மற்றும் பழைமை வாய்ந்த சபைகளையும் சந்தித்தோம், நாங்கள் ஜான் வெஸ்லி அவர்களது ஜெப அறையில் நின்று கொண்டிருந்தபோது, என் மகளிடம் நீ எவ்வாறு உணர்கிறாய் என வினவினேன். அவள் மிகுந்த

அமைதியான குரலில், என் வாழ்வில் நான் இதுவரைக் கண்டிராத வியப்பிற்குரிய இடமாய் இது இருக்கிறது என்றாள்.

அங்கிருந்து லண்டன் வால் சாலைக்குச் சென்றோம், அங்கு செயிண்ட் பால் கத்தீட்ரலுக்குச் சென்றோம். அங்கு பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது, என் மகளிடம் இன்னொரு கேள்வியைக் கேட்டேன், "அபி, மிகவும் பரிசுத்தமான இடம் என கூறுமளவிற்கு எந்த இடம் இருக்கிறது என நீ எண்ணுகிறாய் என்றேன்? அவள் தனது கண்களில் வியப்புநிறைவுடன் பதில் அளித்தாள், "அது ஜான் வெஸ்லி அவர்களது ஜெப அறை" என்றாள். அந்த தேவ மனிதன் மரித்து இருநூறு ஆண்டுகள் கழிந்த பின்னரும், இன்னும் அவ்வறையில் அவரது ஜெபத்தின் நறுமணம் கமழ்கிறதாய் இருக்கிறது. ஜெபம் பரிசுத்தாவியானவரின் வல்லமையைக் கட்டவிழ்க்கிறதாய் இருக்கிறது, அந்த வல்லமையே பிரிட்டன் மற்றும் அமெரிக்காவை மாற்றி அமைப்பதாய் இருந்தது, என விசுவாசிக்கிறேன். அது கடந்த இருநூறு ஆண்டுகளாய், உலகத்தலைமைத்துவ நாடுகளாக விளங்கச் செய்து வருகிறது. தெய்வீக வல்லமை பொருந்திய ஜெபத்தை, நாம் ஒருபோதும் தரக்குறைவாய் எண்ணாதிருப்போமாக.

4. மிஷன்களின் எழுப்புதல்:

கடந்த சில ஆண்டுகளாய் பிரதாண முக்கிய சபைகளில், மிஷன் செயல்பாடுகள் முடங்கி கிடக்கிறதாய்க் காணப்பட்டு வருகிறது. அதே சமயம், உலகின் புதிய இடங்களில், மிஷன்கள் ஸ்தாபிக்கப்பட்டுவரும் பெரிய எழுப்புதல்கள் நிகழ்ந்து வருகின்றன, என்பது கண்டறியப்பட்டு வருகிறது. உலகின் பழமை வாய்ந்த காரியங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. வெஸ்லி அவர்களது மரணத்திற்குப் பின் பத்து ஆண்டுகள் கழித்து, மிஷன் சொஸைட்டிகள் மலரத்தொடங்கின, சிறைவாச மறுமலர்ச்சி, அடிமை ஒழிப்பு இயக்கங்கள், வேலை பிரமாணங்களுக்குரிய மறுமலர்ச்சி, ஐரோப்பிய பட்டணங்களில், அனாதை இல்ல ஊழியங்கள், கிரேட் பிரிட்டனில் உள்ள பழமைவாத பல்கலைகலத்தில் “NON-conformists” எனக் கூறி, வேதாகப்படிப்பை நிரகாரிக்கும் நிலையில், உள்ளூர் ஊழியர்களுக்கு ஆரம்ப வேதாகமப் பாடங்களைக் கற்றுக்கொடுக்க வேதாகம கல்லூரி ஊழியங்கள் போன்றவைகள் எழுந்தன.

அமெரிக்கா தேசத்தில், பெரிய பல்கலைகலகங்களில், பெரிய எழுப்புதல்கள் மூலம் இரட்சிப்படைந்தோரை ஊழியங்களுக்காகவும், மிஷன்களுக்காகவும் பயிற்றுவிக்க, பயிற்சி மையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகள் அனைத்தும் அடுத்து, அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் எழும்பவிருக்கும் பெரிய எழுப்புதல் அலைகளை சமாளிக்க அஸ்திபாரங்களாய் விளங்கிவருகின்றன.

5. 1860 லிருந்து நவீன கால உலகம் வரை:

ஆரம்பகால திறந்தவெளி சுவிஷேசகர்கள், அமெரிக்க தேசத்தில் மற்றும் யுனைட்டட் கிங்டத்தில், "கூடார ஊழியங்களை" கட்டி எழுப்பி, அங்கு சுவிஷேசப் பிரசங்கங்கள் வாரக்கணக்கில் அங்குள்ள சமுதாயத்தினருக்கு பிரசங்கிக்கப்பட்டு வந்தன. ஜனங்கள் "பாவத்திற்காக பெருமூச்சு எழுப்புகிறவர்களாய் இருந்தனர்"

மற்றும் கர்த்தரின் வல்லமையை நாடி தங்கள், தீயபழக்கவழக்கங்கள், மற்றும் போதை வஸ்துக்களுக்கான அடிமைத்தனத்திலிருந்து விடுபட ஒப்புக்கொடுக்கிறவர்களாய் விளங்கினர். தேவனால் அழைப்பு பெற்ற சுவிஷேசகர்கள் உயர்த்தப்பட்டனர். முறையாய் வேதாகமத்தைக் கற்றுக்கொள்ளுதல் ஸ்தாபிக்கப்பட்டன, மற்றும் ஜனங்கள் பெரிதான அர்த்தமுள்ள பிரசங்களை நாடித் தேடி ஓடத்துவங்கினர், அவர்கள் ஆவிக்குரிய ஆகாரத்திற்காய் பசிதாகமுள்ளவர்களாய் காணப்பட்டனர்.

வாரத்தின் மத்தியப் பகுதியில் நிகழும் ஜெபம் மற்றும் வேதபாடமானது, சபைகளில் தேவனது வல்லமையை விளங்கச் செய்கிறதாய் இருந்தது, மற்றுமின்றி அது தங்களது சொந்த சமுதாயத்தினரை சந்திக்கும்படி வழி நடத்தியதோடு மட்டுமின்றி, உலகலாவிய மிஷன் ஊழியங்களுக்கு ஆதரவு அளிக்கவும் முன்வரச் செய்தது. சபைகள் பெரிதளவில் வளர்ந்து விருத்தியடைந்தன, வேதாகமத்தைக் குறிப்பாக கற்றுக்கொள்ளும் ஆர்வம் அதிகரித்தது, வேதாகமத்தை மிகவும் ஜாக்கிரதையாய் கற்றுக்கொள்ளுமாறு, அநேக வேதாகமக் கல்லூரிகள், மற்றும் இறையியல் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகள் எண்ணிக்கையில் பெருகின.

டி. எல். மூடி அவர்கள் இக்காலக்கட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவராய் விளங்கினார். சிக்காக்கோ பட்டணத்தில் பெரிய சபையை ஸ்தாபித்தார், மற்றும் தொடர்ச்சியாய் பல வேதாகமக் கல்லூரிகளை நிறுவினார். மற்றும் அச்சகங்கள், பாரா சர்ச் ஸ்தாபனங்கள் [para-church organizations} போன்றவைகள் சமுதாய முன்னேற்றம் கருதி ஸ்தாபிக்கப்பட்டன. ஜெர்மனி தேசத்தில் ஆரம்பமான தாராளவாத இறையியல் [liberal theology] கிறிஸ்தவத்திற்கு, சாத்தானின் தாக்குதலாய் உருவெடுக்கத் துவங்கியது, இவ்வகையான இறையியல், வேதாகமத்தின் சரித்திர உண்மைகளை மறுதலித்தது, அதே சமயத்தில் கர்த்தர் ஸர் வில்லியம் ராம்சே போன்ற அறிஞர்களை எழுப்பி, வேதாகமத்திற்கு நல்ல சரித்திர பிண்ணனியம் உண்டு, உண்மை சரித்திர நிகழ்வுகள் உண்டு என மெய்ப்பிக்கும்படி செய்தார். நல்ல இறையியல் வல்லுனர்கள் எழும்பி, தீமையான கருத்துக்களையும், வதந்திகளை பரப்புபவர்களைக் கடிந்து கொண்டு, கண்டனம் செய்யத் துவங்கினர். அசுஜா தெரு எழுப்புதல் [The Azusa Street Mission Revival] ஆரம்பமான போது,
1906 ல் அது நவீன கால பெந்தெகொஸ்தே இயக்கமாய் உருவானது, அது மூன்று வருட கால அவகாசத்தில், அதில் கலந்து கொண்டோருக்கு ஆவிக்குரிய மறுமலர்ச்சியை அளிப்பதாய் விளங்கியது.

சாத்தான்; சபை மீது கடுந்தாக்குதல்களை மேற்கொண்டான், யூத மக்களையும் இருபதாம் நூற்றாண்டில் மிகவும் கடுமையான நிலையில் தாக்கிவந்தான். இரு உலக மகா யுத்தங்கள், யூத இன படுகொலை, வேதாகமக் கல்லூரிகளில், அத்துமீறி நுழைந்த தாராளவாத இறையியல் உபதேசங்கள் [liberal theology] போன்றவை சுவிஷேச ஊழியங்களை அநேக ஸ்தாபனங்களில் அடியோடு வேரறுக்கத் துவங்கிவிட்டது. எங்கெல்லாம் இத்தகைய உபதேசம் சென்றதோ அங்கெல்லாம் இத்தகைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டவர்களின் நடுவே, மரித்து குளிர்ந்து போன நிலையை உருவாக்கிற்று, அதே சமயம், இரு ஜீவனுள்ள, ஆவியினால் நிரப்பப்பட்ட நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. தாராளவாத உபதேசங்களை தழுவின ஸ்தாபனங்கள் மற்றும் வேதாகமத்தை முழுமையாய் விசுவாசித்து வளர்ந்த

குழுக்கள் இவைகளின் புள்ளிவிபர கணக்கை ஒப்பிட்டுப்பாருங்கள். பில்லி கிரகாம் படைமுயற்சி கூட்டங்கள், 1960 மற்றும் 1990 லும் ஏற்பட்ட கரிஸ்மாட்டிக் எழுப்புதல்கள், சபைகளையும் அதன் அங்கத்தினரையும் சவால் விட்டு எழுப்பி விடுகிறதாயும், பரிசுத்தாவியானவரின் வல்லமையால் நிறைந்த வாழ்வு செய்ய வழிநடத்துகிறதாயும் இருந்தன.

உலகலாவிய தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊழியங்கள், 1990 ல் முழு உலகையும் நிரப்புகிறதாய் இருந்தது, சத்தியத்தையும், கள்ளத்தீர்க்கதரிசிகளின் பொய்யையும் அது கொண்டுவருகிறதாய் மற்றும் அநேக விசுவாசிகளை சென்றடைகிறதாயும் இருந்தது. இணைய தளங்கள் 2005 ல் ஒவ்வொரு வீடுகளிலும், பெரிதளவில் ஆக்கிரமிப்பு செய்தது, மலிவு விலையில் உருவாக்கப்பட்டு விற்கப்பட்ட, கணணிகளும், CD reader களும், இவைகள் குறைந்த பட்சம் $100-00 USD by 2009. ல் விற்பனையானது. இன்றைய அளவில் மிகவும் எளிதான முறையில் தவறாய் வழிநடத்தப்படவும், திசைமாறி செல்லும் வாய்ப்புகளானது பெருகியும் வருகின்றன.

இதுவரையில்லாத அளவுக்கு, நமது சகோதரர்கள், பகுத்தறிவு உள்ளவர்களாயும், பரிசுத்த ஆவியானவரின் நிறைவுடன் வாழும் வாழ்க்கை செய்யவேண்டியதாய் இருக்கிறது. இக்கால கட்டத்தில், வேதவசனங்களை ஒவ்வொரு சபையிலும் கைக்கொண்டு வாழுதல், பெரிதான எழுப்புதலுக்கு வழிவகை செய்வதாய் இருக்கிறது. இதுவரை நாம் கைக்கொண்டுவருகிற எல்லா வேதபாடங்களையும், கலாச்சார அடிப்படையில் கற்றுக்கொண்டவைகளையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய வேண்டிய அவசியம் இக்காலக்கட்டத்தில் ஏற்பட்டுள்ளது. நமது சபையில் சரித்திர ரீதியான பாடங்களைக் கைக்கொள்ளும் முன்னர், நவீன கால எழுப்புதல்களைக் காணவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

1990 கௌதமாலா பட்டணம் (Harold Caballeros அவர்களது கூற்றுப்படி) GUATEMALA CITY 1990 (As told by Harold Caballeros)

தாங்கள் புதிதாய் அமைத்த சபையின் வளாகத்திற்குப் பின்பகுதியில், அவர்கள் ஒரு பெரிய மண்மேட்டைக் கண்டனர், அது புரதாண மண்மேடாயும், அதில் சர்ப்ப தேவதையை புறஜாதிய மக்கள் வழிபட்டு வந்த பிண்ணனியத்தைக் கண்டுகொண்டனர். அச்சர்ப்ப தேவதையை Quetzacoatl என அழைத்துவந்தனர். இது கி.மு. 200 ம் ஆண்டில், இம்மண்மேடானது கையால் கட்டப்பட்டதாய் இருந்தது, இது, 30 மீட்டர் அகலமுள்ளதாயும், 15 மீட்டர் உயரமானதாயும், 21 கிலோ மீட்டர் நீளமுள்ளதாயும் அமைக்கப்பட்டது. சபையானது, கௌதமாலா பட்டணமானது இத்தேவதைக்கு பிரதிஷ்டை செய்யப்பட்டதை உணர்ந்து கொண்டது. இதை உணர்ந்து கொண்ட சபையானது, கீழ்க்கண்டவாறு திட்டமிட்டு ஜெபிக்க தலைப்பட்டது.

1. ஆவிக்குரிய இராணுவத்தை பட்டியலிட்டு அவர்களை "ஜெப வீரர்கள்" (பரிந்து பேசி ஜெபிப்பவர்கள்) என அழைத்தது. இவர்கள் கௌதமாலா பட்டணத்திற்காய் ஒருநாளில், ஒரு மணி நேரம் போராடி ஜெபிக்க வேண்டும். யோவான் 16:8-11

வேதபகுதியின் படி, ஜனங்கள் இருளில் இருந்து வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட ஜெபிக்க கேட்டுக்கொள்ளப்பட்டனர். மட்டுமின்றி கெளதமாலா தேசத்தை, கர்த்தராகிய இயேசுவுக்கு பிரதிஷ்டை செய்து ஜெபித்தனர், மற்றும் அவர்கள் "கெளதமாலாவின் தேவன் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து" என அறிக்கையிட்டு ஜெபித்தனர். கொலொம்பியாவில் காளி பட்டணத்தில், 60,000 ஜெப வீரர்கள் ஒன்று கூடி, சூனியக்காரரின் ஸ்டேடியம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, பட்டணத்திற்காய் அங்கு ஜெபிக்கத் துவங்கினர், மற்றவர்கள் அப்பட்டணத்தைச் சுற்றி நின்று ஜெபிக்கத் துவங்கினர் -- எழுப்புதல் ஆரம்பமானது!

2. பிசாசுகளின் ஆதிக்கத்தை இனங்கண்டு கொண்டனர், அவைகள் அப்பட்டணத்தில், கர்த்தருக்கு எதிராக அணிவகுத்து நிற்பதைக் கண்டு கொண்டனர். அவைகளை ஜெபத்தின் மூலம், இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் எதிர்த்து கடிந்து கொண்டனர். அதன் மூலம் சுவிஷேசத்தடைகளைத் தகர்த்தனர், சுவிஷேச ஊழியத்திற்கான கட்டுக்களை கட்டவிழ்த்தனர். இவர்கள் இத்தகைய சவால்களில் சற்றும் தளராது செயல்பட்டனர், கர்த்தரை இவர்கள் இறுகப் பிடித்துக்கொண்டு, சத்துருக்கள் இறுகப்பிடித்துக் கொண்டிருந்தவைகளை தளர்த்தினர். .எபேசியர் 6:12, 2 கொரிந்தியர் 4:4, 10:4-5.

3. சுவிஷேச படைமுயற்சிக் கூட்டங்களை ஒழுங்கு செய்தனர், தேவனால் அபிஷேகிக்கப்பட்டு, தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைவர்களை தெரிவு செய்து மூன்று குழுக்களாய் அவர்களை பிரித்து, சுவிஷேசக்கூட்டங்களை ஒழுங்கு செய்தனர்.

அ. ஜெபக்குழுக்கள்: ஜெப வீரர்கள் எதிராளியின் சூழ்ச்சிகளை, தந்திரங்களை எதிர்த்து ஜெபிக்கவும், இழந்து போனோரின் இரட்சிப்பிற்காகவும் ;போராடி ஜெபிக்க ஏற்படுத்தப்பட்டனர்.

ஆ. பிரசங்கக் குழுக்கள்: ஜீவனுள்ள தேவனின் வார்த்தைகளை, வல்லமையுடனும், பரிசுத்த ஆவியானவரின் விடுதலையுடனும் பிரசங்கம் செய்தனர்.

இ. போதகக்குழு: கர்த்தருக்கென தங்களது வாழ்வினை அற்பணித்தவர்களுடன் செயல்பட்டு அவர்களை, கர்த்தரது வசனத்திலும், கர்த்தரிலும் பெலப்படச் செய்தனர்.

4. தேவனால் கண்டுகொள்ளப்பட்ட இழந்து போனோருக்கு, தனிப்பட்ட நிலையில் அதிக நேரம் எடுத்து பின் தொடர் ஊழியங்களை மேற்கொண்டனர்.

அ] அவர்களை "ஆட்டுக்குட்டிகளை" பராமரிப்பது போன்று பராமரித்தனர். -- அவர்களுக்கு போதக பராமரிப்பளித்து பாதுகாத்தனர். -- செல் குருப் களில் வைத்து பராமரிப்பு செய்தனர்.

ஆ] அவர்களை இரட்சித்த கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக் குறித்தும், ஜீவனுள்ள தேவனைக் குறித்தும் உள்ள அறிவை அவர்களுக்கு விருத்தி செய்து, அவர்களை சீஷர்களாக்கினர், அவர்களுக்கு முறையான வேதபாடங்களை, அவர்கள் கைக்கொள்ளுமாறு போதித்து, அவர்களை தேவனை அறிகிற அறிவில் விருத்தியடையும்படி செய்தனர்.

இ] ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவர்களுக்கு அவசியமான ஒன்றிலும் அவர்களுக்கு குறைவைக்காது ஜாக்கிரதையாய் இருந்தனர் -- பரிசுத்த வேதாகமம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது, பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் பங்கு கொள்ள அவர்கள் உற்சாகப்படுத்தப்பட்டனர், அவர்களது நிலைத்திருத்தல் உற்சாகப்படுத்தப்பட்டது.

5. முறையான கிறிஸ்தவக் கல்வி அவர்களுக்குப் புகட்டப்பட்டு, அவர்கள் தங்களது அடுத்த தலைமுறையினருக்கு அதை எடுத்துச் செல்ல அவர்களுக்கு நிலையானத் தன்மையானது அளிக்கப்பட்டது. சீஷத்துவ பயிற்சி வகுப்புகள், அவர்களுக்கு ஒரு "பயிற்சி வழிகாட்டியாய்" அமைந்தது, முறையாய் வேதபாடங்களைக் கற்றுக்கொள்ளவும், அவர்களில் வரம் பெற்றவர்களை வேதாகம பள்ளிக்கூடங்களில் ஊக்கப்படுத்தி, அவர்கள் போதிக்கும் வரங்கள், மற்றும் சபையை பராமரிக்கும் வரங்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் அதில் பெருகும்படி செய்து, தாய் சபையானது, அவர்களைப் பொறுப்பெடுத்து, கிளை சபைகளை ஸ்தாபிக்க அவர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

அர்ஜைண்டினா -- 1970 ம் அதைத்தொடர்ந்துள்ள ஆண்டுகளில் -- ARGENTINA - 1970s and following years - OMAR CABRERA and CARLOS ANNACONDIA.

"பரிசுத்த ஆவியானவர் எனக்குப் போதித்தது என்னவெனில், கடினப் பிரயத்தனமின்றி, நாம் கர்த்தரது வேகத்திற்கு அவருடன் செல்லுதல் வேண்டும். தேவன்தாமே எல்லாக் காரியங்களிலும், மெய்யான வளர்ச்சியை அளிக்கிறவர் என்பதை நாம் கட்டாயம் அறிதல் வேண்டும். நமது தனிப்பட்ட திறமைகள், தனிப்பட்ட வழிமுறைகளால் அல்ல, அது விதை போன்றதாய் இருக்கிறது, எவ்வித வாஞ்சை விருப்பங்களின்றி, அதைத் துரிதப்படுத்தும் எவ்வித சுயமான முயற்சியின்றி, அது சமயம் எடுத்து வளருகிறதாய் இருக்கிறது."

1. அவர்களது ஊழியத்திற்கான ஆயத்தம். ஊழிப்பணிக்கான அற்பணிப்பு.

உபவாசம் மற்றும் ஜெபம். யாத்திராகமம் 34:28, தானியேல் 10:3, மத்தேயு 6:17.

கிறிஸ்துவின் உள்ளார்வத்தைக் குறித்த தரிசனம் -- இழந்து போனோரைக் குறித்த உள்ளார்வம், மற்றும் தூக்கநிலையில் உள்ள பரிசுத்தவான்களைக் குறித்த உள்ளார்வம். மத்தேயு 27:45-55.

"தளர்ந்து விடாது செயல்படுவதற்கு, உறுதியான தீர்மானம்" லூக்கா 9:61-62, எபிரெயர் 10:38.

நாம் கொத்தடிமைகளோ, அல்லது கூலிக்கு வேலை செய்யும் வேலையாட்களோ அல்ல. -- நமது முழுமையான இருதயத்துடன் கர்த்தரின் பணியை முழு ஆர்வத்துடன் செய்தல் வேண்டும். யோவான். 10:12-13.

இவ்வுலக காரியங்களில் சிக்கிக்கொள்ளுதல் கூடாது. 2 தீமோத்தேயு 2:1-10.

2. நிலத்தைப் பண்படுத்தி ஆயத்தமாக்குதல் -- ஜெபத்தினால்.

விழுந்து போன மனுக்குலத்திற்கு பரிசுத்த ஆவியானவரது வல்லமை மட்டுமே வெளிச்சத்தைக் கொண்டுவர இயலும். யோவான் 16:8-11.

அபிஷேகிக்கப்பட்ட ஜெபத்தின் வல்லமையால், பரிசுத்தாவியானவர் கட்டுக்களை அவிழ்க்கிறவராய் இருக்கிறார். -- அபிஷேகிக்கப்பட்ட ஜெபத்தின் அனலை ஒரு போதும் தணியவிடக்கூடாது.

"சிலுவையைப் பற்றிய உபதேசத்தின் உள்ளார்வத்தை, தேவரீர், நான் மரிக்கும் பரியந்தம் எனக்குத் தாரும்."

3. நாம் விதையாகிய தேவனது வசனத்தை விதைக்கும் போது, ஜாக்கிரதையுடனும், கவனத்துடனும், ஜெபத்துடனும், பாதுகாப்புடனும் விதைத்தல் வேண்டும்.

4. அறுவடையானது சேர்க்கப்படுதல் வேண்டும். "வேதாகம சுவிஷேச ஊழியமானது" வல்லமையுள்ள சுவிஷேசத் திருச்சபைகளுக்கு வளர்ச்சியை அளிக்கிறதாய் இருக்கிறது. எவ்வித பெருமைக்கும் இடமின்றி, அதன் அங்கத்தினரின் பெருக்கத்திற்கு இடமளிக்கிறதாய் இருக்கிறது.

ஹொண்டுராஸ் -- 1947 ம் ஆண்டைத் தொடர்ந்துள்ள வருடங்களில். HONDURAS - 1974 and following years - RENE PENALBA.

உண்மையான ஒப்புரவாகுதலுக்கு முக்கியம் அளிக்காது, பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவது, சாட்சியை அசுசிப்படுத்துகிறதாய் இருக்கிறது.

விசுவாசிகளிடையே சரியான ஒப்புரவாகுதல் இல்லாதிருப்பது, எழுப்புதலுக்கு முதன்மையான தடைகல்லாய் விளங்கிவருகிறது. பிரிவினைகளைக் கொண்டுவரும் அசுத்த ஆவி, ஜனங்கள் வாக்குவாதம் செய்தல், பரிசுத்தாவியானவர் அதற்கு பொறுப்பல்ல என்பதனைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. 1 கொரிந்தியர் 3:1-23, கலாத்தியர் 5:14-26. புருஷன், மனைவிக்கிடையே, கோபதாபங்கள், கசப்பு இருக்குமேயானால் அவர்களது ஜெபமானது பதில் அளிக்கப்படுவதில்லை என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். 1 பேதுரு 3:7.

நாம் கட்டுதலும், கட்டவிழ்த்தலையும் செய்தல் வேண்டும், இல்லையேல் நாம் கட்டப்பட்டவர்களாய், கட்டவிழ்க்கப்படாது இருப்போம். மத்தேயு 18:18-19.

நமது சகோதரருக்குள் விரோதத்துவம் இருக்குமேயானால், அதை இப்பொழுதே சரிசெய்து கொள்ளுதல் அவசியம். **மத்தேயு 5:23-24**.

டாக்டர் ஜே வெர்னன் மெக் கீ அவர்கள், தென் அமெரிக்கா சபையில் 1920 ல் நிகழ்ந்த ஒரு நிகழ்வினை கூறினார். ஒரு தலைசிறந்த சுவிஷேசகர் பட்டணத்தில் சுவிஷேச படைமுயற்சிக் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து ஒரு வார காலமாய் நடத்திவந்தார், அக்கூட்டத்தினால் எவ்வித தாக்கமும் நிகழாதிருந்தது. ஜனங்கள் வருகிறதும் போகிறதுமாய் இருந்தனர், எவ்வித மாற்றமும் அவர்களில் நிகழவில்லை, ஜெப வீரர்களால் தொடர்ந்து அவர்களுக்கான ஜெபம் சிறப்பான முறையில் ஏறெடுக்கப்பட்டு வந்தன. விரோதத்துவம் ஒப்புரவாகுதல் அவசியம் என்பதன் தலைப்பில் அன்று இரவில் செய்தியானது மிகவும் கருத்தாய் பிரசங்கிக்கப்பட்டது, அப்பட்டணத்தின் பிரசித்திப் பெற்ற தலைவர் ஒருவர் மனந்திரும்பினார், அவர் வாழ்வில் தீர்மானம் எடுத்தார், அவர் தேவனுடன் நல்மனம் பொருந்தியதுடன், தான் விரோதித்த அனைவருடனும் நல்மனம் பொருந்தினார். அன்று இரவில், மனந்திரும்புதலின் கனியானது அப்பட்டணத்தில் பலமாய் கிரியை நடப்பித்தது, விரோதத்துவம் உள்ளவர்கள் நடுவே சமாதானம் நிலவியது. இதைத் தொடர்ந்து அப்பட்டணத்தில் எழுப்புதல் உண்டானது.

எபிரெயர் 12:14, கசப்பின் வேரானது, ஆவிக்குரிய கிரியைகளை தடசெய்கிறதாய் இருக்கிறது, இது ஒழுக்கச்சீர்கேட்டை விளைவிக்கும் பாவத்தின் விளைவைவிட அதிகமாய் ஆவிக்குரிய கிரியைகளைத் தடை செய்கிறதாய் இருக்கிறது. கர்த்தரின் பரிசுத்த பணியை செய்து நிறைவேற்ற சுத்திகரிக்கப்படுதல் அவசியமாய் இருக்கிறது. யாக்கோபு 4:7-8. நமது வேண்டு கோள். - அப்போஸ்தலர் 3:19-20.

சபையிலோ அல்லது குடும்பத்திலோ எவ்வகையான பாவமும் குடிகொண்டிராத வண்ணம் மிகவும் எச்சரிப்புடன் இருப்பது மிகவும் முக்கியமானது -- நம்மிடத்தில் பழைய பாவசுபாவமும், பெலவீனங்களுமுண்டு, அதே சமயம் பிசாசுகளின் தாக்குதல்களை நாம் சாதாரணமாய் எடுத்துக் கொள்ளக்கூடாது, கர்த்தரது வல்லமையானது, வல்லமையுடன் செயல்பட வேண்டியதாய் இருக்கிறது. கடந்த காலத்தில் சமுதாயத்தில் எவ்வகையான பாவமோ, தீமையோ இருந்தது குறித்து நாம் ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம். மரபுப் பகைமை, கொலைகள், அல்லது விபச்சாரம் அல்லது பெருமை போன்றவை குறித்து ஜாக்கிரதையாய் இருத்தல் அவசியம். இவைகளைக் குறித்து கவனமாய் ஜெபித்து, அதற்குப் பரிகாரம் கண்டு கொண்டு, சமுதாய மனந்திரும்புதல் மூலம் பகைமை, மற்றும் மேற்சொன்ன பாவங்களில் இருந்து விடுதலை பெறுதல் வேண்டும்.

நைஜீரியா - NIGERIA - EMEKA NWANKPA.

அபிஷேகிக்கப்பட்ட தலைமைத்துவத்திற்கான தன்மைகள்:

தேவன் தமது பணிக்கென தலைவர்களை தெரிவு செய்கிறவராய் இருக்கிறார். தேவன் கமிட்டிகள் மூலம் செயல்படுகிறவர் அல்லர், தம்மால் அழைக்கப்பட்ட தேவ ஊழியர் மூலம் கிரியை செய்கிறவராய் இருக்கிறார். நாம் அழைக்கப்பட்டவர்களாய் இருப்போமெனில், கடந்த கால பெருந்தலைவர்களிடமிருந்து, பெலனைப் பெற்றுக்கொண்டு அவர்களைப் பின்பற்றுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். ஆபிரகாம் -- சவால்கள் மூலம் வெற்றி பின்தொடர்ந்தது. ஆதியாகமம் 14. பின்னர் பரிந்து பேசி ஏறெடுக்கும் ஜெபம் ஆதியாகமம் 18.

ஆமோஸ் 3:3 -- இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய, ஒருமித்து நடந்து போவார்களோ?

ஜெபத்தின் வல்லமையானது போதகரின் பள்ளியை, கொள்ளைக் காரரின் கரத்திலிருந்து பாதுகாத்தது. அவர், அவர்களுக்கு முன்பாக கீழ்ப்படிதலுடன் நின்றார், அவர்கள் திரும்பிப் போய்விட்டனர். வேதாகம தலைமைத்துவம், உங்களை கீழ்ப்படிதலுக்கு இணங்க வைக்கிறதாய் இருக்கிறது. -- ஒரு வேளை அபாயகரமான சூழலாய் இருந்தாலும், கீழ்ப்படியச் செய்கிறதாய் இருக்கிறது. அவரது பெலனானது, மற்ற விசுவாசிகளையும் பெலனடையச் செய்கிறதாய் இருக்கிறது, இது ஜெபத்தாலும், கீழ்ப்படிதலாலும் சாத்தியமாகிறது.

கர்த்தரின் வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிதலானது, வேதாகம ரீதியிலான பணிக்கு எதிரான தவறான கிரியைகளுக்கு சவால் விட்டு, பரிசுத்தவான்களை பாதுக்காக்கவும், நன்றாய் சத்தியத்திற்குள் வழிநடத்தவும் செய்கிறதாய் இருக்கிறது. யோவான் 21:15-24.

குழுவாய் இழைத்தப் பாவத்துடன் ஈடுபடுதல் -- ப்ரேசில் -- நெயூஜா இட்டியோகா.

DEALING WITH CORPORATE SIN – BRAZIL - NEUZA ITIOKA.

இஸ்ரவேல் முழுமைக்கும் ஆகான் செய்த பாவமானது அபஜெயத்தையும், அழிவையும் கொண்டுவருகிறதாய் இருந்தது, இதற்கு முழு தேசமும் உடன்பட வேண்டியவர்களாய் இருந்தனர். இதைப் போன்றே, விசுவாசிகளும், நமது தேசத்தின் பாவத்தின் திறப்பில் நிற்கவேண்டியவர்களாய் இருக்கின்றனர். தேவனுக்கு முன்பாக, தேசத்தின் பாவத்திற்கான உத்திரவாதத்தை ஏற்றுக்கொண்டவர்களாய், அதை அவருக்கு முன்பாக அறிக்கை செய்து ஜெபிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது, நமது தேசத்தின் மீதுள்ள நமது அன்பை விளங்கப்பண்ணி, கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டு பின்னர் பயன்படுத்த அது ஏதுவுண்டாக்கும்.

யோசுவா 7:1ff, மட்டுமல்லாது நெகேமியா 1:1ff ஐயும் ஒப்பிட்டுப்பார்க்க, பின்னர் தானியேல் 9:1ff, பின்னர் புதிய ஏற்பாட்டில் 1 கொரிந்தியர் 5:1-2. வேத பகுதிகளை ஒப்பிட்டுப்பார்க்க.

தேசிய அளவில் அல்லது சமுதாய ரீதியிலான பாவம் உண்டானால், நமது ஜனங்கள் மீதுள்ள அன்பையும், கரிசனையையும் வெளிக்காட்டுபவர்களாய், அவர்களது பாவத்திற்கான உத்திரவாதத்தினை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

நமது சமுதாயத்தினரின் பாவங்களுக்காக, கர்த்தருக்கு முன் பாவ மன்னிப்பிற்காய் ஜெபித்தல் வேண்டும். இவ்வாறே தேசத்தின் இரட்சிப்பிற்காக ஜெபித்தல் அவசியமான ஒன்றாக இருக்கிறது. 2 கொரிந்தியர் 7:14.

அல்மொலொங்கா பட்டணம் -- (கௌதமாலா) 1975 லிருந்து -- மரியானோ ரிஸ்காஜ்ஜே, ALMOLONGA CITY - (GUATEMALA) 1975 onwards - MARIANO RISCAJCHE.

தலைமைத்துவத்திற்காக அழைக்கப்படல். மரியானோ அவர்களை 1974 ல் தேவன் அழைத்து அபிஷேகம் செய்தார். "எனக்குச் சேவை செய்ய நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்."

பட்டணத்தின் மையத்தில், மரபுவழியாக அதிகபட்ச நிலையில் வழிபட்டுவந்த, கொடிய தீமையை பகுப்பாய்வின் மூலம் கண்டு கொள்ளப்பட்டது -- மாயான் தெய்வம், குடிவெறி மற்றும் மற்ற கொடிய தீமைகளுடன், அப்பட்டண மக்கள் வழிபட்டு வந்தனர். ஜெபத்தின் மூலம், அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள் முலம் தேவன் இடைபட தொடங்கினார், சுவிஷேசப் பிரசங்கம் மூலம் இப்பட்டணத்தில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்படலாயின. தீமை மற்றும் வறுமையிலிருந்து விடுதலை உண்டாகி, நன்மையும், செழிப்பும் உண்டானது. ஆவிக்குரிய யுத்தமோ தொடர்ந்து நீடிக்கிறதாய் இருந்தது -- நாம் யுத்தம் செய்யும்படி அழைக்கப்பட்ட ஆவிக்குரிய யுத்தத்திற்கு ஓய்வோ, தளர்வோ ஒருபோதும் ஏற்படுவதில்லை.

வெதுவெதுப்பான சபை -- 1950 லும், 1970 லும், -- நியூஜிலாந்து. THE LUKE WARM CHURCH - 1950s, 1970s, - NEW ZEALAND.

வெளிப்படுத்தல் 2:4, 3:16, மத்தேயு 9:11-17. சுயத்தை மையமாய்க் கொண்டு வாழ்தலும், செழிப்புப் பிரசங்கமும் ஒழுக்கச்சீர்கேடுகளுக்கு வழிநடத்துகிறதாய் இருக்கிறது. வரங்கள் அளிக்கப்படுவது சேவைக்காக, சுயதிருப்திக்காக அல்ல. 1 கொரிந்தியர் 12:7-21. தங்களது சுய மேட்டிமையைவிட்டு சபையானது வெளியே வந்தபோது, அது உயிர்மீட்சியடைந்தது, ஐசுவரிய திரட்சியினால், சுயதிருப்தியானது இடம் பெற்றபோது, ஆவிக்குரிய வறுமை, மற்றும் ஏழ்மையானது, ஆவிக்குரிய வல்லமையானது அவர்களுக்கு மிகவும் அவசியம் என வலியுறுத்தியது, ஆகையால், அவர்கள் ஆவிக்குரிய எழுப்புதல் அடைய ஜெபத்திற்கும், தேவனது வார்த்தைக்கும், தங்களைத் தாங்களே ஒப்புக்கொடுக்க வேண்டியதாய் இருந்தது.

பேப்டிஸ்ட் சபை விசுவாச சமுதாயம். சிங்கப்பூர் 1986 FF லாரன்ஸ் காங்க். FAITH COMMUNITY BAPTIST CHURCH - SINGAPORE - 1986FF LAWRENCE KHONG.

நாம் ஏற்கனவே கண்டிருந்தபடி, ஜெபமும், தியானமும் சபையின் வளர்ச்சிக்கு அடிப்படையாய் விளங்கிவருகிறது. இந்த சபையானது சில நூறு விசுவாசிகளைக் கொண்டதாய் இருந்து, 10 ஆண்டு காலங்களில், 8000 மாக வளர்ந்து பெருகியது. அடுத்த 10 ஆண்டு காலத்தில் இச்சபையானது, 16,000 விசுவாசிகளைக் கொண்ட

சபையாய் இருக்கும் என கர்த்தரில் விசுவாசமுள்ளவர்களாய் அறிக்கை செய்கின்றனர்.

இவர்களது அறிக்கை நிறைவேறுவதற்கான மூலக்கூறுகள்:

1. துதிப்பாடல்கள், ஜெபம், கொடுத்தல் மற்றும் வேதாகம போதனை இவைகளைக்கொண்டு கர்த்தரின் சமூகத்தில் கொண்டாடி களிகூறுதல்.

2. மற்றவர்களின் உதவியுடன், தேவனால் அபிஷேகம் பெற்றத் தலைவர்கள், சபைக் கமிட்டி போன்றவைகளை எடுத்துவிட்டு, சபை நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்தல்.

3. சபை அலுவல்களில் செயல்படுவோரை புதியதாய் தெரிவு செய்தல்.

4. சீஷத்துவ வகுப்புகளை ஏற்படுத்தி, மனம் மாறி, இயேசுவை ஏற்றுக்கொண்ட இளம் விசுவாசிகளை, வளரும்படி செய்தல்.

5. செல் குருப்களை அமைத்து சபை செயல்படுதல்.

6. பயிற்சி அளித்து, உருவாக்கி, தேவ ஊழியர்களாய், தேவை உள்ள இடங்களுக்கு அனுப்பிக்கொடுத்தல்.

7. தொடர்ச்சியான, ஜெபவீரர் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி, சிங்கப்பூர் மற்றும் அதன் பட்டணங்களுக்காய் ஊக்கமாய் ஜெபிக்க வழிநடத்துதல்.

8. திருமணங்கள் மற்றும் குடும்ப வாழ்வை எல்லா வழிகளிலும் பெலப்படும்படி செய்தல்.

9. உள்ளூர் சமுதாயத்தினரின் அத்தியாவசிய தேவைகளைச் சந்தித்தல்.

10. விஷேசித்த வெளிஊழியக் குழுக்களை ஏற்படுத்துதல்.

ஜனங்களின் இருதயத்தையும் மற்றும் சிந்தையையும் உருமாற்றமடையச் செய்தல் = அவர்கள் ஆவியில் நடந்து கொண்டு, அவர்களது சமுதாயத்தினர் உருமாற்றம் அடையச் செய்கிறவர்களாய் இருப்பர்.

ரோமர் 12:1ff.

கிறிஸ்துவை மையமாய் கொண்டு செயல்படுதல் - வேதாகமத்தை மையமாய் கொண்டு செயல்படுதல் - பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டிற்குள் அமைந்து செயல்படுதல்.

சமுதாய சம்மந்தப்பட்ட செயல்பாடு - தனிப்பட்ட ஒவ்வொரு நபரும், தேவ வசனத்தைக் கைக்கொண்டு அனுதின வாழ்வில் செயல்படுதல்.

அவர்களின் போதகர், சபையின் வளர்ச்சிக்கு கீழ்க்காணும் அம்சங்கள் அவசியம் எனக் கூறுகிறார்.

1. "கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில்" வாழ்தல்.

2. தேசம் மற்றும் பட்டணத்திற்காய், உச்சக்கட்ட உபவாச ஜெபம், மற்றும் போராடி ஜெபித்தல்.

4. கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்கள் மற்றும் வேதாகமப் பயிற்சி பெறும் கல்லூரிகளை ஸ்தாபித்தல்.

5. வலுவான திருமண உறவு மற்றும் குடும்பங்களைக் கட்டி எழுப்புதல்.

NOTES:

அத்தியாயம் 5.

நமது தேசங்கள், உள்ளூர் சபைகள், மற்றும் நாம் எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்?

சபையானது கைக்கொள்ள வேண்டிய பனிரெண்டு திறவுகோள் அடிப்படை அம்சங்களின் சுருக்கம்:

1. எழுப்புதல் மற்றும் சுவிஷேச ஊழியம் போன்றவற்றை மையமாய்க் கொண்டு, முழு சபையும் ஜெபிக்க தங்களை அற்பணித்துக் கொள்ளுதல்.

ஆத்தும் ஆதாயம் என்பது, விசுவாசிகளாகிய நீங்கள் ஒரு அவிசுவாசியுடன் கர்த்தராகிய இயேசுக்கிறிதுவைக் குறித்து கூறுவதன் மூலம் ஆரம்பமாவதில்லை. மரித்துப்போன ஒரு சபையில் எழுப்புதலைக் குறித்து காரசாரமான பிரசங்கங்கள் அச்சபையில் எழுப்புதலுக்கு ஆரம்பமாய் அமைவதில்லை. விசுவாசிகளாகிய நீங்கள் தேவனுடன் பேசி உறவு கொள்வதன் மூலம், அது ஆரம்பமாகிறதாய் இருக்கிறது. நீங்கள் தேவனுடன் நடக்கும் போது வல்லமை வெளிப்படுகிறதாய் இருத்தல் வேண்டும், மனிதர் முன்பாக நடக்கும் போதும், வல்லமை வெளிப்படுகிறதாய் இருத்தல் வேண்டும், தேவனது வார்த்தையின் படியே நடத்தல் அவசியம், கர்த்தருடைய வார்த்தையை பேசும் முன்னர், அவ்வார்த்தையின்படி நீங்கள் நடக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். .

நமது மரணபரியந்தம் தேவன் நமக்கென ஒரு திட்டத்தை வைத்துள்ளார், அதை நாம் உணர்ந்து நடந்து கொள்வது, நமது வாழ்வின் ஒரு பகுதியாய் இருக்கிறது. சுவிஷேச ஊழியம் என்பது நமது பணியல்ல, பரிசுத்த ஆவியானவர் நம்மூலம் செய்யும் அவரது பணியாய் இருக்கிறது. அவரது திட்டத்தின்படியே, அது செயல்பட வேண்டும், நமது சிந்தனையின்படியல்ல. **ஏசாயா 55:7-9.** தேவனைப் பற்றிய காரியங்களை நாம் மனிதருடன் பேசும்போது, கவனிக்க வேண்டிய முக்கியத்துவத்தை, பெரிய தீர்க்கதரிசி என்ன சொல்கிறார் என்பதை இவ்வசனத்தில் வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

தீமையானது பெருகிவரும் கால கட்டத்தில், நீங்கள் கர்த்தருடன் நெருங்கி நடத்தல் அவசியமாய் இருக்கிறது. நீங்கள் கர்த்தருடன் நெருங்கி நடவாத பட்சத்தில், நீங்கள் சறுக்காலான பாதையில் நடந்து, அபாயத்திற்கு உட்படுகிறவர்களாவீர்கள். தேவனைக் குறித்து பேசப்படும் எந்த ஒரு காரியத்தையும், வெறுக்கும் எதிராளியின் முன்பாக, தேவனைக் குறித்து பேசுவதே சுவிஷேமாய் இருக்கிறது. மரித்துப்போன சபைக்கு, எழுப்புதல் என்பது, அவர்களது வல்லமையை திரும்பப் பெற்றுக்கொள்வது என்பது பொருளாகிறது. இது மிகவும் ஜாக்கிரதையாய் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய, "தேவதூதர்களின் முறண்பாடு" குறித்த செயல்பாடாய் இருக்கிறத, தேவனது நோக்கம், மற்றும் அவரது திட்டத்தைவிட்டு வெளியே செயல்படுவது, அபாயத்திற்குரியதும், ஆபத்தைவிளைவிக்கக்கூடியதுமாய் இருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளாக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை நாம் உரிமைபாராட்ட வேண்டியவர்களாய் இருக்கிறோம். **ரோமர் 8:28**, **1 யோவான் 4:4, 17-19**.

சுவிஷேச ஊழியம் மற்றும் எழுப்புதலின் செயல்பாடுகள், உச்சகட்ட உந்து வேகத்தில் ஆவிக்குரிய காரியங்களில், ஆவிக்குரிய விழிப்புணர்ச்சியுடன், செயல்பட வேண்டியதாய் இருக்கிறது. அவிசுவாசி மற்றும் மாம்சீகத்துக்குரிய விசுவாசிகளின் தேவைகளைச் சந்திப்பதற்கு, பரிசுத்த ஆவியானவரின் வழிந்துதலுடன், அவர்களைச் சந்திக்க வேண்டியதாய் இருக்கிறது. இது நமது அனுதின ஜீவியத்தில், ஆவிக்குரிய யுத்தகலமாய் இருந்து, அதில் யுத்தம் செய்ய வேண்டியவகளாய் இருக்கிறோம். இது "சாதாரண கிறிஸ்தவ வாழ்க்கையை" நடத்துவதற்கும், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு தக்கரீதியில் பதில் அளிக்கவும் கடமைபட்டவர்களாய் இருக்கிறோம்.

சுவிஷேச ஊழியம் செய்வதற்கு, நீங்கள் அறிந்த தேவனது வார்த்தைகளை உங்கள் வாழ்வில் கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். முதலாவது உங்கள் வாழ்விலும், மற்றும் உங்களது அன்பானது கர்த்தர்மீது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளுமாறு செய்தல் வேண்டும். உங்களது வாழ்வில், வியாதி, மன அழுத்தம், மற்றும் பிரச்சனைகளோடுள்ள யுத்தமானது நடப்பிக்கப்பட்டு, அதன் மீதான ஜெயத்தை நிரூபணம் செய்தல் வேண்டும். வெற்றியை அறிவித்த போதிலும், இன்னும் தோல்வியைத் தழுவிக்கொண்டு இருப்பீர்களானால், நற்செய்தி என அறிவிப்பதற்கு உங்களிடம் என்ன இருக்கிறது? இப்படிப்பட்ட காரியங்களில், வெற்றியை அறிவிக்காது, தேவனது வல்லமையை இப்படிப்பட்டகாரியங்களில்

அனுபவியாது இருப்பீர்களானால், உங்கள் வார்த்தைகளில் பொய் இருக்கிறது, அது வஞ்சகத்தையும், மாய்மாலத்தையும் அறிவிக்கிறதாய் இருக்கிறது.

நீங்கள் மனந்திரும்புதலைப் பிரசங்கிக்கும் போது, அல்லது சுவிஷேசத்தை அளிக்கும் போது, எதிராளியுடன் அவனது யுத்தகளத்தில் இருந்து கொண்டு, எதிராளியின் சிப்பாய்களில் ஒருவனை நோக்கி, "ஏன் எங்களுடன் சேர்ந்து கொள்ளக் கூடாது?" எனக் கேட்பதைப் போன்றுள்ளது, இதில் என்ன அர்த்தம் இருக்கிறது. இது வேவு பார்த்தல் என அழைக்கப்படுகிறது, இது மிகவும் அபாயகரமானது. இவ்வாறு சுவிஷேச ஊழியம் செய்வது, சாத்தானின் கண்களுக்கெதிரே, சாத்தானின் பட்டாளத்தில் உள்ள அவனது சிப்பாய்களை மனந்திரும்பச் செய்கிறதற்கு ஒப்பாய் இருக்கிறது.

இக்காரணங்களாலே, சுவிஷேச ஊழியம் செய்வது என்பது, அபாயகரமானதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட அபாயம் இருப்பதால், உங்களுக்கு ஆவிக்குரிய பாதுகாப்பானது, பரிசுத்த ஆவியானவரது வல்லமையாலும், மற்றும் தெளிவான கட்டளையானது, தளபதியாம் கிறிஸ்துவிடமிருந்து, கிடைக்க வேண்டியதாய் இருக்கிறது. இல்லையேல், நீங்கள் தோற்கடிக்கப்பட்டு, சிறுமைப் படுத்தப்படுவீர்கள் என்பது நிச்சயம்.

எல்லா எழுப்புதல் பிரசங்கமும், மற்றும் எல்லா சுவிஷேச ஊழியமும், ஆவியின் பட்டயத்தை, பரிசுத்த ஆவியானவரது வல்லமையால், எதிராளிக்கு எதிராய் பயன்படுத்தப்பட வேண்டியதாய் இருக்கிறது. நாம் கண்டபிறகாரம், ஜெபமானது, சுவிஷேச ஊழியத்தில் மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. ஜெபமானது எல்லாவகையான உழியங்களுக்கும் அத்தியாவசியமாய் இருந்த போதிலும், சுவிஷேச ஊழியத்திற்கும், எழுப்புதலுக்கும் இது மிக மிக அவசியமான ஒன்றாய் இருக்கிறது. ஜெயமானது உங்களது, சரீர ரீதியாய், சமூக ரீதியாய், மற்றும் அறிவு அல்லது உங்களது புத்திக்கூர்மையாலோ, சாதூர்யத்தாலோ கிடைப்பது இல்லை, அது ஆவிக்குரிய ரீதியில் உண்டாகிறதாய் இருக்கிறது. தூதர்களின் முறண்பாடுகளில் இருந்து ஜெயம் உண்டாக, ஜெபத்தின் உச்சக்கட்ட நிலை மட்டுமே சாத்தியத்தை அளிப்பதாய் இருக்கிறது, ஜெப ஆவியுடன் நிறைந்து காணப்படுதல் வேண்டும், மற்றவர்களையும் ஜெப ஆவியுடன் சந்தித்தல் வேண்டும்.

நீங்கள் ஒரு குத்துச் சண்டை வீரனைப் போன்று இருக்க அவசியமாய் இருக்கிறது. துரிதமாய் செயல்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்படும் தருணங்களைப் பயன்படுத்திக்கொண்டு, உடனடியாக எழுப்புதலின் ஆரம்பத்திற்காய் அல்லது சுவிஷேசப் பிரசங்கத்திற்கு ஆயத்தமாகிவிடுதல் வேண்டும். நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள்ளான தேவ மனிதராய் இருக்கிறீர்கள், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, மற்ற நபர்களுடன் பேசும்போது, பரிசுத்தாவியானவரால் ஆயத்தம் செய்யப்பட்ட தேவனது வார்த்தைகளை பிரசங்கித்தல் வேண்டும். யோவான் 16:8-11 (தொடர்ந்து கீழே இது குறித்து திரும்ப விவாதிக்கப்பட்டுள்ளது).

இந்த உலகத்தில் இருப்பவனிலும், உங்களோடு இருப்பவர் பெரியவர் என்பதனை தொடர்ந்து நினைவில் இருத்திக்கொள்ளுதல் வேண்டும். 1 யோவான் 4:4.

முறண்பாடுகளில் இது அதிக நம்பிக்கை அளிக்கக்கூடியதாய் இருக்கிறது. **காரணம் தொடர்ந்து நமக்கு முறண்பாடுகள் இருந்து கொண்டே இருக்கிறது.** ஒருவேளை சுவிஷேச ஊழியம் செய்யும் பொருட்டு நீங்கள் விஷேசித்த வரம் பெற்றவர்களாய் இருக்கலாம், அல்லது நீங்கள் விசுவாசிகளாய் இருந்து சுவிஷேச ஊழியத்தை செய்கிறவர்களாய் இருக்கலாம், பரிசுத்தாவியானவர் உங்களை தமது வல்லமையால் நிரப்பி, உங்களை வழிநடத்துதல் சுவிஷேச ஊழியத்திற்கு மிகவும் அத்தியாவசியமாய் இருக்கிறது.

போதகர் மைக்கேல் கொக்கோரிஸ் என்பவர், 1983 ல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: "ஒருவேளை நாம் அதிகம் ஜெபிக்கிறவர்களாய் இருந்தால், நாம் அதிகம் ஜெயம் கொள்கிறவர்களாய் இருப்போம். அப்போஸ்தலர் 1 மற்றும் 2 ம் அதிகாரங்களில், சீஷர்கள் பத்து தினங்கள் காத்திருந்து ஜெபித்தனர், பேதுரு சுமார் 10 நிமிடங்கள் மட்டுமே பிரசங்கம் செய்தார், 3000 பேர் இரட்சிப்படைந்தனர். இன்றைய அளவில் சபையானது பத்து நிமிடங்கள் மட்டுமே ஜெபித்து, பத்து தினங்கள் பிரசங்கம் செய்கிறது, விளவு மூன்று பேர் மட்டுமே இரட்சிப்படைகிறவர்களாய் இருக்கின்றனர். சி எச் ஸ்பர்ஜன் அவர்களது இறுதி வார்த்தைகளை சபைக்கு இவ்வாறு கூறினார்: "அதிகம் ஜெபியுங்கள், அதிகம் விசுவாசியுங்கள், இதினிமித்த கர்த்தரிடமிருந்து அதிகம் பெற்றுக்கொள்ள இயலும்." ஜெபம் மட்டும் காரியங்களில் மாற்றத்தைக் கொண்டு வருகிறதாய் இருக்கிறது.

பிலிப்பியர் 4:4-7.

பிலிப்பியர் 4:4-7 வரையுள்ள வேதபகுதியை வேதாகமத்தைத் திறந்து வாசியுங்கள், மட்டுமின்றி இதைத் தொடர்ந்து எபேசியர் 6:18-20, கொலோசெயர் 4:2-6, 1 தெசலோனிக்கேயர் 5:16-21. போன்ற வேதபகுதிகளையும் வாசியுங்கள். இவ்வேதபகுதிகளில், ஜெபத்தில் சுவிஷேசத்தின் அவசியத்திற்காய் ஜெபிக்கும்படியாய் வலியுறுத்துவதைக் காணலாம். நமது அனுதின ஜெப வாழ்வானது, சுவிஷேச ஊழியத்திற்காய், ஊக்கமாய் ஜெபித்து அதற்காய் ஆயத்தப்பட வேண்டியுள்ளது. நீங்கள் ஜெபத்தைச் சார்ந்து இருக்கும் போது, தேவன் அளிக்கும் வல்லமையைப் பெற்று இவ்வூழியத்தைச் செய்ய ஏதுவுண்டாகும், இல்லையேல், சுயப்பெலனைச் சார்ந்து, மனுஷீகப் பெலனனில் இவ்வூழியத்தை செய்ய நேரிடும். சரித்திரத்தில் இடம் பெற்ற எழுப்புதலும், சுவிஷேசப் படைமுயற்சியும், ஏதோ தற்செயலாய் நடைபெற்றது எனக்கூறுவதிற்கில்லை, தேவப்பிள்ளைகள், தேவனால் வழிநடத்தப்பட்டு, தொடர்ச்சியான ஜெபத்தைத் தங்களது வாழ்க்கையின் அனுதின அனுபவமாக்கிக்கொண்டு, ஒவ்வொரு நாளும் கடின பிரயத்தனம் செய்தவர்களாய் விளங்குகின்றனர்.

1983 ல் போதகர் ஏ சி டிக்ஸன் அவர்கள் கூறும்பொழுது, "நாம் ஸ்தாபனங்களைச் சார்ந்து இருக்கும் போது, ஸ்தாபனத்தால் செய்ய இயலுபவற்றை நாம் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் நமது கல்வித்திறமையை சார்ந்திருப்போமென்றால், கல்வித்திறமையால் செய்ய இயலுபவற்றைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருப்போம். நாம் நமது பேச்சுத்திறமையை சார்ந்திருப்போமென்றால், பேச்சுத்திறமையால் செய்ய இயலுபவற்றை மட்டும்

பெற்றுக்கொள்கிறவர்களாய் இருப்போம். இவைகளை தரக்குறைவாய் மதிப்பிடுகிறவனாய் இவற்றைக் கூறவில்லை, நான் சொல்ல முயலுவது என்னவெனில், நாம் ஜெபத்தை முழுமையாய் சார்ந்திருக்கும் போது, தேவனால் செய்ய இயலுபவற்றை நாம் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருப்போம்."

மறுபடியும் வேதாகமத்தைத் திறந்து, பரிசுத்த ஆவியானவர், அவிசுவாசியினிடத்தில் நடப்பிக்கும் கிரியைகளைக் குறித்து உள்ள மையக்கருத்து அடங்கிய வேதபகுதியை வாசியுங்கள். **யோவான் 16:8-11.** இவ்வேதபகுதியானது பரிசுத்த ஆவியானவர் அவிசுவாசியின் வாழ்விலும், மாம்சீகமான விசுவாசி, ஜீவனுள்ள ஐக்கியத்தைவிட்டு விலகி, கர்த்தரைவிட்டு பின்வாங்கி வாழும் வாழ்க்கை செய்யும் போது, அவரது ஊழியத்தை விவரிக்கிறதாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இங்கு பாவத்தைக் குறித்தும், நீதி மற்றும் நியாத்தீர்ப்பு போன்றவற்றைக் குறித்து கண்டித்து உணர்த்துகிறவராய் இருப்பதைக் காண்கிறோம். கிறிஸ்துவும் இரட்சகருமானவரைப் புறக்கணித்து வாழும் அவிசுவாசியின் பாவத்தை பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்துவதைப் பார்க்கிறோம். ஒரு அவிசுவாசி அடைய வேண்டிய தேவனது நீதியையும், சாத்தானுடன் நியாயந்தீர்க்கப்பட இருக்கும் நியாயத்தீர்ப்பான அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவது குறித்தும் கண்டித்து உணர்த்துவதைப் பார்க்கிறோம். தங்களை இரட்சிப்பிற்குள் வழிநடத்திய கர்த்தரின் இரத்தத்தை அவமதித்து விழுந்து போன விசுவாசிக்குரிய பெரிதான சிட்சைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறவராய் இருக்கிறார்.

நீங்கள் அவிசுவாசிகளுக்காக ஜெபிக்கும் போது, இம்மூன்றுகாரியங்களை மனதில் கொண்டு, ஆவியானவர் அவர்களை உணர்த்துமாறு ஜெபிக்கத் தலைப்படுதல் வேண்டும். நீங்கள் மரித்துப் போன சபைக்காய் மற்றும் தேசத்தின் எழுப்புதலுக்காய் ஜெபிப்பீர்கள் என்றால், மரித்து கிடக்கும் விசுவாசிகளின் வாழ்விலும் இதைப்போன்றே ஆவியானவரின் ஊழியத்திற்காய் ஜெபித்தல் வேண்டும். அவர்கள் தங்களது பாவ வாழ்வினால் உண்டாகும் நித்தியமான விளைவை சந்திக்கும்படி ஜெபித்தல் அவசியம்.

யோவான் 6:44, இவ்வேதபகுதியை மறுபடியும் வேதாகமத்தைத் திறந்து வாசியுங்கள். பரிசுத்த ஆவியானவர், பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துகிறவர் மட்டுமல்லாது, விழுந்து போன மற்றும் இழந்து போன மக்களுக்கு, தேவனது வசனங்கள் மூலம் பிரகாசமளிக்கிறவருமாய் இருக்கிறார, மற்றும் உணர்த்தப்பட்ட தேவனது வசனங்களுக்கு அவர்கள் பிரதிக்கிரியைகள் செய்யுமாறு ஆவியானவர் கிரியை நடப்பிக்கிறவராய் இருக்கிறார். ஒவ்வொரு தனி நபரின் இரட்சிப்பிற்கு அவசியமான அனைத்தையும், தேவன் அளிக்கிறவராய் இருக்கிறார். இதினிமித்தமே தேவ செய்தியை அவர்கள் புறக்கணிப்பதால், அவர்கள் நியாயத்தீர்ப்புக்கு உள்ளாகிறவர்களாய் இருக்கின்றனர். ஒரு தனிநபர் தேவனை மனதார புறக்கணிப்பார் என்றால் அவர் இழந்து போகப்பட்டவராய் விளங்குகிறார். வெளிப்படுத்தல் 20:10-15. ஒருவர் இரட்சிப்படையும் போது, ஒரு விசுவாசி பெரிதான சவாலை எதிர்கொள்கிறவ்ராய் இருக்கிறார், அது அவரது மனம் மற்றும் வாழ்வில் பெரிதளவில் புதிப்பித்தலை அளிப்பதாய் இருக்கிறது. ரோமர் 12:1-2. வாழ்வில்

கர்த்தரது கிரியைக் கேற்ப, கீழ்படிதலுக்கு தடைகள் இருக்குமேயானால், அது எப்பொழுதும் ஆவிக்குரியவைகள் எனக்கூறுவதில்லை, அது சாத்தானின் செயலாய் இருக்கிறது. இவ்வாறு தடைகளுடன் காணப்படுவோர், தீயபழக்கவழக்கங்களுடன் காணப்படுவர், இவர்களை சாத்தான் குறிவைத்து, விழத்தாக்கி, புறம்பாக்குகிறவனாய் இருக்கிறான். இக்கால நவீன உலகில் இவைகள் CBT, or Cognitive Behavioural Technique, என அழக்கப்படுகிறது. இது உண்மையில் பவுலின் தத்துவக் கருத்தாய் விளங்குகிறது.

உபதேசங்கள்:

<u>பவுலின் கருத்துப்படியுள்ள COGNITIVE BEHAVIOURAL THERAPY</u> [cognition = the psychological result of perception and learning and reasoning]

<u>(Study each of the Biblical passages and discuss the concept behind them with the group).</u>

<u>ரோமர் 7:14-25 -</u>THE “WRETCHED MAN” – FACING OUR SINFUL REALITY. - "நிர்பந்தமான மனுஷன்" -- நம் வாழ்வில் பாவத்தன்மையை எதிர்கொள்ளுதல்.

(Unless we face the facts, we live a lie and are open to deception from all sources; human and angelic.) (உண்மையான யதார்த்த வாழ்வை நாம் எதிர்கொள்ளத் தவறும் போது, நாம் பொய்யான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறோம், மற்றும் எல்லா நிலைகளிலும் வஞ்சனைக்குட்பட்டு, மனிதராலும், தூதர்களாலும் வஞ்சிக்கப்படுகிறவர்களாய் இருப்போம்).

<u>ரோமர் 8:1-18 -</u> THE GLORY OF KNOWING THE POWER OF THE INDWELLING CHRIST. நமக்குள் வாசம் பண்ணும் கிறிஸ்துவின் வல்லமையை அறிந்துகொள்ளுதலின் மகிமை:

(There is hope for all who face the facts of their Old Sin Nature and the greater power of the indwelling Lord and Holy Spirit, 1 John 4:4-6, for then we are “plugged into” the power for spiritual victory) (பழைய பாவசுபாவத்தை எதிர்கொள்ளுவோருக்கு, உண்டான நம்பிக்கையானது, நமக்குள் வாசம் பண்னும் கர்த்தர் மற்றும் பரிசுத்த ஆவியானவரது வல்லமையானது, பழைய பாவசுபாவத்தின் வல்லமையைக் காட்டிலும் பெரிதாய் இருக்கிறது. 1 யோவான் 4:4-6, இதனால் நாம் ஆவிக்குரிய ஜெயத்தைப் [“plugged into”] பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்.

<u>எபேசியர் 4:20-32 -</u> PUTTING OFF THE OLD AND PUTTING ON THE NEW: பழைய மனுஷனைக் களைதல், புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுதல்.

கொலோசெயர் 3:8-16 - PUTTING OFF AND PUTTING ON: களைதல் மற்றும் தரித்துக் கொள்ளுதல்.

(Our old behaviours are the result of our early "programming" and the choices we have made later; all of this being laid over our genetic strengths and weaknesses, but in Christ, and through the Holy Spirit's power we can re-program our inner computer.)
(நமது பழைய நடத்தைகள், பூமியில் நாம் வடிவமைக்கப்பட்ட தன்மையின் விளைவாய் இருக்கிறது, இவைகள் நமது மரபு சார்ந்த பெலனாயும் மற்றும் பெலவீனங்களாகவும் நம்மில் கிரியைகளை நடப்பிக்கிறது, இவைகளில், நமக்கு தெரிவு செய்யும் ஆற்றலானது அளிக்கப்பட்டுள்ளது, கிறிஸ்துவுக்குள்ளாகவும், பரிசுத்தாவியானவரின் வல்லமை மூலமாயும், நாம் மறு வடிவமைக்கப்பட்டு வாழுதலை நாம் தெரிவு செய்து வாழுதல் வேண்டும்)

எபேசியர் 5:17-29 - THE RELATIONSHIP OVERFLOW OF THIS CBT TOOL: இந்த CBT உபகரணத்தின், பொங்கி வழியும் உறவு.
கொலோசெயர் 3:17-19 - RELATIONSHIP OVERLFOW OF CBT: CBT யின் பொங்கி வழியும் உறவு.

(If the Holy Spirit is active in our life there will be evidence of it in our daily walk through life, and especially in our relationships with loved ones and others we meet. No change = no Spirit!)
(பரிசுத்த ஆவியானவர் நாம் வாழ்வில் செயல்பட்டுவருவார் எனில், நமது அனுதின வாழ்வில் அதற்கான ஆதாரங்கள் விளங்கும், விஷேசமாக, நமது உறவில் மற்றவர்களை நாம் சந்திக்கும் போதும், நம்மால் அன்பு கூறப்படுகிறவர்களிடத்தில் உள்ள உறவிலும் தெய்வீக அன்பானது விளங்கும். மாற்றங்கள் இல்லையெனில் = ஆவியானவர் இல்லை.)

பிலிப்பியர் 3:10-17 - FORGETTING THE PAST AND FOCUSING FORWARD: பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை கண்ணோக்குதல்.

(It is not a "one shot decision" to make change, for the old patterns are tenacious. They must be identified, understood, targeted, replaced and we must rebuild new patterns through the Holy Spirit's work upon the Word of God, to firmly establish and live and celebrate daily in the new life we now have.)
(இது மாற்றம் ஏற்பட "ஒரு முறை செய்யும் தீர்மானமல்ல" பழையவைகள் எப்பொழுதும் விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டு இருக்கும். அவைகள் கண்டு கொள்ளப்பட்டு, புரிந்து கொள்ளப்பட்டு, அவைகளுக்கு இலக்கு அமைக்கப்பட்டு, மாற்றி அமைக்க முயலுதல் வேண்டும், மற்றும் பரிசுத்த ஆவியானவரது கிரியையின் மூலம், புதிய அமைப்பை தேவனது வசனத்திலிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும், மற்றும் அவைகளை நமது வாழ்வில் உறுதியாய் ஸ்தாபித்துக் கொண்டு, இப்பொழுது நமக்குள்ள புதிய வாழ்வில் அனுதினம் அவற்றைக் கொண்டாடுதல் வேண்டும்)

பிலிப்பியர் 4:4-9 - FILLING THE MIND WITH POSITIVE THOUGHT PROCESSES SQUEEZING OUT THE NEGATIVES FROM LIFE : நேர்மறையான சிந்தனைகளால், மனதை எப்பொழுதும் நிரப்புதல் வேண்டும், எதிர்மறையான சிந்தனைகளை வாழ்வில் கசக்கி பிழிந்து புறம்பாக்கிட வேண்டும்.

(The mind acts like a vacuum; it will suck in all evil around if there is not positive pressure from good working out from the centre of our being. We squeeze evil out by leaving no room within for it to grow.) நமது மனதானது, வெற்றிடத்தை போன்று செயல்படுகிறதாய் இருக்கிறது, அது தன்னைச் சூழ இருக்கும் எல்லாத்தீமைகளையும், எதிர்மறையான காரியங்களையும் தன்னில் இழுத்துக் கொள்கிறதாய் இருக்கிறது. ஆகையால் நமக்குள் உள்ள தீமைகளையும், எதிர்மறையான எண்ணங்களையும் கசக்கி பிழிந்து, அவைகளுக்கு இடமில்லா வண்ணம், மற்றும் அவைகள் தொடர்ந்து நமக்குள் வளர்ச்சியடையா வண்ணம் செய்தல் வேண்டும்.

<u>கொலோசெயர் 2:20-22 - </u>SAYING NO TO THE “EASY FIX” OF LEGALISM: லீகலிஸத்தின் "எளிதாய் பொருத்தப்படும்" காரியங்களுக்கு இல்லை என மறுத்தல் அவசியம்.

(The great “cons” of Satan are initially focused on down playing sin and evil so that believers are neutralized by them uncontrolled within their lives, but if that fails he has an even better plan to neutralize the grace of God within us. This plan is the “super-spiritual” plan of legalism, whereby foolish men get to feel really superior because their sins are more refined than their neighbours! Legalism is false spirituality that feeds of the great sin of pride and arrogance, the very opposite of God’s grace and mercy, and the complete opposite of the servant heart of the Lord Jesus. Matthew 7:15-20.)

(சாத்தானின் பெரிதான "விவாதங்கள்" ஆரம்பத்தில், விசுவாசிகளின் பாவம் மற்றும் தீமையை குறித்த கண்ணோட்டமாய் இருக்கிறது, காரணம் இவைகள் அவர்களது வாழ்வில் கட்டுக்கடங்கா நிலையில் வளர்ந்து அவர்களை நடுநிலைமைக்குத் தள்ளுகிறதாய் இருக்கிறது. மற்றும் அவர்கள் தவறும் போது, இன்னும் சிறப்பான திட்டங்களை தேவனது கிருபையானது, நமக்குள் நடுநிலைபடும்படி சாத்தான் செய்கிறவனாய் இருக்கிறான். இப்படிப்பட்ட திட்டம் "super-spiritual” [சிறப்பான -- ஆவிக்குரிய] லீகலிஸத் திட்டமாய் இருக்கிறது. மதியீன மனிதர் இவைகள் மிகவும் சிறப்பானவை என எண்ணுகிறார்கள், காரணம் அவர்கள் செய்து வரும் பாவமானது, தங்களது அயலகத்தாரின் பாவங்களைவிட, மிகவும் நூதனமானதாய் இருக்கிறது. லீகலிஸத்தின் தவறான ஆவிக்குரிய வாழ்வு, பெரிதான பாவமாகிய, பெருமை, மற்றும் கர்வத்தினை பிறப்பிக்கிறதாய் இருக்கிறது. இது தேவனது கிருபை மற்றும் அவரது இரக்கத்திற்கு முற்றிலும் எதிர்மறையாய் செயல்படுகிறது. இது சேவகம் செய்யும் கிறிஸ்துவின் இருதயத்திற்கு முற்றிலும் எதிரானதாக இருக்கிறது. மத்தேயு 7:15-20.)

<u>COGNITIVE BEHAVIOURAL TOOL FOR THOUGHT STOPPING: சிந்தனையை தடைசெய்வதற்கான, அறிவாற்றலுடன் கூடிய நடத்தைக்குரிய உபகரணம்:</u>

கோபதாபமுள்ள ஒரு நபர் சில காரியங்களைக் கூறும்போது, அல்லது தேவையற்ற சிந்தனைகள் உண்டாகும்போது, அவைகளை நாம் அனுமதித்து, நமது சிந்தனை ஆற்றலால் அவற்றை சிந்திக்க நமது சிந்தனை மண்டலத்தில், இடம் ஒதுக்கிறவர்களாய் இருக்கிறோம். பின்னர் அவைகளை குறித்து எண்ணி நமக்கு நாமே வருத்தப்படுகிறவர்களாய் இருக்கிறோம். இதைப் போன்ற தேவயற்ற குப்பைகூலங்கள் நமது மனதில் சேகரிக்கப்பட்டு, அவைகளால் ஏற்படும் பாரமிகுதியால் அவதிபடுகிறவர்களாய் இருக்கிறோம். இது ஆதாம், ஏவாள்

அவர்களது வீழ்ச்சியினால் ஏற்பட்டதன் விளைவாய் இருக்கிறது. மட்டுமின்றி, நாமும் விழுந்து போன ஜீவிகளாய் இருக்கிறோம் என்பதனை இது நமக்கு நினைவுபடுத்துகிறதாய் இருக்கிறது, மட்டுமின்றி எளிதாய் பாவம் செய்யக்கூடியவர்களாய். இருந்து, வாழ்வில் முக்கியமற்ற காரியங்கள் நிமித்தம் எளிதில் வழிதவறுகிறவர்களாய் இருக்கிறோம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள எளிய வேதாகம மற்றும் பவுலின் வழிமுறைகள், உங்களது குறிப்பிட்ட பிரச்சனையுடன் ஈடுபட, உதவுகிறதாய் இருக்கிறது. உதாரணமாக, சாலையில் மிகவும் இடையூறு அளிக்கக்கூடிய வாகன ஓட்டுனருடன் இடைபடுதல், கோபதாபமுள்ள வாடிக்கையாளருடன் இடைபடுதல், எதற்குமே ஒத்துப்போகாத அயலாகத்தாருடன் ஈடுபடுதல், மட்டுமின்றி எதற்குமே ஒத்துப்போகாத மனநிலையுடன் ஈடுபடுதல், இப்படிப்பட்ட மனநிலையானது, ஆரம்ப கால அனுபவங்களிலிருந்து, வருகிறதாய் இருக்கிறது.

நற்செய்தி என்னவெனில், இப்படிப்பட்ட உபகரணமானது, நமது கோபதாப நடத்தையின்போது, அதை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதை நமக்குக் கூறுகிறதாய் இருக்கிறது, சிறுவயது தொடங்கி செய்து வரும் சில பிழைகளை சரிசெய்வதற்கும் ஏற்ற உபகரணமாய் விளங்குகிறது. மட்டுமின்றி, வயது சென்ற நிலையில் பழைய சுபாவங்களையும் சரிசெய்து கொள்ள பேருதவி அளிக்கக்கூடியதாய் இருக்கிறது. இது நான் அல்ல என்னில் வாசமாயிருக்கும் பாவமே, என உணர்ந்து, அதில் இருந்து விடுபட்டு, புதிய பிறப்பின் அனுபவத்தில் உருவாக வகை செய்கிறதாய் இருக்கிறது.

<u>முதலாவதாக:</u> நீங்கள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் உள்ள, உங்கள் சூழலை இனங்காணுங்கள். இப்படிப்பட்ட சூழலின் தன்மைகளைக் குறித்து எழுதுங்கள், நீங்கள் தவறி விழுந்த நிகழ்வுகளை இனங்காணுங்கள், அதைக் குறித்த உங்கள் எண்ணங்கள், அதைப்பற்றிய உங்கள் உணர்ச்சிகள், மற்றும் உங்களை வெட்கப்படும்படி அல்லது கோபதாபப்படும்படி செய்த காரியங்கள் குறித்து இனங்காணுங்கள். இவ்வாறான சூழலில் நீங்கள் தீய பிரதிக்கிரியைகளில் ஈடுபடுவீர்களானால், அது உங்கள் நேரத்தையும், உங்கள் பெலனையும் வீணடிக்கிறதாய் இருக்கிறது. மற்றும் மூடிமறைத்து, குறுகிய கால வாழ்வை இப்படிச் செய்வதால் அதை வீணடிப்பதாய் இருக்கிறது. தீய பிரதிச்செயல்களானது, நாம் அன்புகூறுகிற ஜனங்களை காயப்படுத்துகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட தீய செயல்களால், நாம் புறம்பாக்கப்படுவதற்கு முன், நாம் அவற்றை நம்மைவிட்டு புறம்பாக்குவது சிறப்பானது!!

பிரச்சனைகளை எதிர்கொள்ளும் சூழல்களில், உங்களது பிரச்சனைகளை பட்டியலிட்டுத் தீர்ந்த பின்னர், கீழ்க்காணும் கருத்துக்களின்படி செயல்பாடுங்கள்.

1. விநோதமான நபர் / சூழல்களுக்கு நான் என்ன தலையங்கத்தைப் பயன்படுத்துவது?

திடீரென கோபப்படும் நிகழ்வுகள் குறித்த சிந்தனை அல்லது நபர் குறித்து, விநோதமான தலையங்கத்தை கண்டு கொள்ள முயற்சியுங்கள், (அது இயல்பானதாய் இருக்கட்டும்). இத்தலையங்கத்தை, இப்படிப்பட்ட நிகழ்வுகள் இடம் பெறும்போது, பயன்படுத்தலாம், அவ்வாறு செய்வது, கோபப்படும் சூழலில் உங்களது ஆத்திரத்தை எடுத்துப்போட வகை செய்கிறதாய் இருக்கும். இதை ஒரு "காரியம்" எனக்கருதி அதற்கு தலைப்பை ஏற்படுத்துதல், அது ஒருங்கிணைக்கப்பட்ட உங்கள் வாழ்வின் ஒரு பகுதியாய் இருக்கிறது என ஏற்றுக்கொள்ளச்செய்கிறதாய் இருக்கிறது. இது கிறிஸ்துவுக்குள்ளாய், மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், விநோதமான குணாதிசயங்கள் என்னைவிட்டு அகல வகை செய்கிறதாய் இருக்கும்.

2. உங்களுக்கு நீங்களே உண்மையைக் கூறிக்கொள்ளுங்கள்:

"உண்மை என்னவெனில்...."உங்கள் சிந்தனையில் கண்டிக்கப்படக்கூடிய அல்லது புத்தியீனமான சிந்தனைக்கு இடமளியாது, கிறிஸ்துவுக்குள் உங்கள் வாழ்க்கைப் பாதையில், தொடர்ந்து செல்வதற்கான காரணத்தைக் குறித்துச் சிந்தித்துப்பாருங்கள்.

3. சத்தியத்திற்கு வலுவூட்டும் எவ்வகையான உடனடி செயல்பாடானாலும், அதைத் தவறாது எடுக்க முயலுங்கள்.

சத்தியத்தை வலுவூட்ட, வாழ்க்கைப் பாதையில் எடுக்கும் எவ்வகையான உடனடி செயல்பாடானாலும் அதை இனங்காணுதல் வேண்டும், சிறுவயது முதற்கொண்டு, உங்கள் வாழ்வில் செயல்பட்டுவரும் கெட்டத் துர்நடக்கைகள் குறித்தும் அவைகளது எதிர்செயல்பாடுகள் குறித்தும் இனங்காணுதல் வேண்டும்.

பரிசோதனை:: இவ்வாறு எடுத்து வைக்கும் படிகளில், எல்லாவித பிரச்சனைகளை அளிக்கும் சூழல்களைக் குறித்துப் பரிசீலனை செய்தல் வேண்டும். இதன் இறுதியில் கர்த்தரை ஆராதிக்க, அவர் சமூகத்தில் கொண்டாட ஏதுவான சத்தியத்தை இணங்கண்டு கொண்டு அவைகளால் தேவனை மகிமைப்படுத்துதல் வேண்டும்.

உங்கள் ஆலோசகர், உங்களை உருவாக்குகிறவர், அல்லது உங்கள் போதகர் இவர்களிடம் இவற்றை மறு பரிசீலனை செய்யவும். நீங்கள் சத்தியத்தை இறுகப்பற்றிக்கொண்டு, உபதேசத்தில் உறுதியாய் இருக்க, மற்றும் அனுதினமும், வேதவசனங்களால், போஷிக்கப்பட்டு, பெலமாய் நீங்கள் கட்டப்படுதல் வேண்டும். தவறான செயல்பாடுகளால், ஏற்படும் குருட்டுத்தன்மையை உருவாக்கும் விளைவுகள், தவறானவற்றிற்கு அளிக்கப்படும் முதலிடம், சாத்தானின் வஞ்சகங்கள், போன்றவற்றிற்கு நீங்கள் நீங்கலாகி இருத்தல் வேண்டும்.

2. அவிசுவாசிகளுக்கான குறிப்பிட்ட ஜெபம் மற்றும் ஆயத்தம் குறித்த இலக்கு அமைத்து, பட்டியல் உருவாக்குதல்:

நீங்கள் சுவிஷேச ஊழியம் செய்யவிருக்கும் அவிசுவாசிகளைக் குறித்த ஒரு பட்டியல் தயார் செய்து, கர்த்தரைக் குறித்து அவர்களுடன் பேசும் தருணத்தை எதிர்பார்த்து அவர்களுக்காய் ஜெபித்து வாருங்கள். ஒரு நாளில் ஓரிரு முறை அவர்களது பெயர்களை உச்சரித்து, அவர்களுக்காய் ஜெபித்தல் வேண்டும். இதைப் போன்றே மரித்துப்போன சபைக்காகவும் செய்தல் வேண்டும், போதகர்கள் மற்றும் சபைமக்கள் போன்றோரைக் குறித்து, கர்த்தர் உங்கள் இருதயத்தில் பாரத்தை அளித்துள்ளபடி அவர்களுக்காக மிகுந்தபாரத்துடன் அவர்களது எழுப்புதலுக்காக ஊக்கமாய் ஜெபித்து வருதல் வேண்டும். பின்னர், பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலுக்கான தருணத்திற்காக காத்திருந்து, எதிர்பார்க்கப்படும் கீழ்ப்படிதலுக்கு அற்பணித்தல் வேண்டும், கர்த்தர் அளிக்கும் தருணத்தை எதிர்நோக்கி காத்திருத்தல் வேண்டும், எந்தவிதத்திலும் அவர்களை கட்டாயப்படுத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும். சுவிஷேச செய்தியை அளித்து மனந்திரும்ப அவர்களை வற்புறுத்திக் கட்டாயப்படுத்தும் போது, சிலுவையை அவமதித்து, பரிசுத்தாவியானவர் கிரியை செய்வதற்கு மிஞ்சி செல்கிறவர்களாய் இருப்பீர்கள். தேவனது நேரத்திற்காய் ஜெபித்தல் வேண்டும், கர்த்தர் செயல்பாட்டிற்காய் காத்திருந்து ஆயத்தப்படல் வேண்டும், கர்த்தர் அவர்கள் நடுவே வாசல்களைத் திறக்கும் போது, ஆவியானவருடன் அவர்கள் நடுவே செயல்பட முற்படுங்கள். சரித்திரத்தில், பரிசுத்த ஆவியானவரது பெரிதான அசைவாடுதல்கள் அனைத்தும், தேவனது நேரத்தில் நிகழ்ந்தவைகளாய் இருக்கின்றன, அவைகளுக்காய் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன, வேதாகமமானது கைக்கொள்ளப்பட்டது, ஆவியானவரால் நிரப்பப்பட்ட ஆயத்தப்படுத்தப்பட்ட விசுவாசிகள், அவர் ஏவுதலுக்காய் காத்திருந்து செயல்படுகிறவர்களாய் இருந்தனர்.

கிறிஸ்துவுக்காய் நீங்கள் சாட்சிபகர வேண்டுமானால், கர்த்தர் அனுப்பித்தந்த பரிசுத்த ஆவியானவருடன் நீங்கள் நடந்துகொள்வது, அவசியமான ஒன்றாய் இருக்கிறது. நீங்கள் உங்கள் வாயைத் திறக்குமுன்னர், பரிசுத்த ஆவியானவர் நீங்கள் சாட்சிபகர இருக்கும் நபருடன், எதைச் செய்துள்ளார் என்பதனைக் கண்டுக்கொள்ளுதல் வேண்டும். இதை நீங்கள் உறுதிசெய்தகொண்ட பின்னர், பரிசுத்த ஆவியானவர், அச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வசனத்தை வெளிப்படுத்துவார். எழுப்புதல் பிரசங்கமும், சுவிஷேச ஊழியமும், ஆவியானவருடன் நடந்துகொண்டு, அவரது வழிநடத்துதலின் படியே செய்தல் வேண்டும், உங்கள் சொந்த பெலனைச் சார்ந்து கொண்டு, உங்கள் இஷ்டப்படி, செய்வது பலனற்றதாய் முடிவடையும்.

லூக்கா 10:1-24 ல் கூறப்பட்டுள்ளபடி, ஜெபமானது, சாட்சிபகரும் முன்னர் இடம் பெற வேண்டியதாய் இருக்கிறது. இவ்வேத பகுதியில், 2 ம் வசனத்தில், ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம், வசனம் 3ல், அவர்களுடன் சாட்சிபகரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம். அப்போஸ்தலர் 4:29 ல் தைரியத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். வசனம் 31 ல் தொடர்ந்து மிகுந்த தைரியத்துடன் அவர்கள் பேசினார்கள் எனப்பார்க்கிறோம்.

கொலோசெயர் 4:2-4 ல், பவுல் சென்ற புரதாணப் பட்டணங்களில் ஒவ்வொருவரோடும் பேசவில்லை, அவர் பட்டணங்கள் ஊடாக கடந்து

சென்றபோது, ஆவியானவர் வழிநடத்துதலின் பேரில், பொதுவாக பேசும்போது, யாரிடம் பேசும்படி அனுமதியளித்தாரோ அவர்களிடம் மட்டுமே பேசினார். ஆவியானவரின் வழிநடத்துதலுக்காக, அவர் ஜெபத்தில் தரித்திருந்தார், ஆவியானவர் வழிநடத்தின பிரகாரம், அவரைப் பின்பற்றி அவருக்குக் கீழ்ப்படிகிறவராய் இருந்தார், அவரது வார்த்தைகள் பரிசுத்தாவியானவர் தந்தருளின / வெளிப்படுத்தின வார்த்தைகளாய் இருந்தன. EBCWA அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகம், முழுமையும் வாசிக்கும்போது, ஒவ்வொரு அதிகாரத்திலும் இவை விவரிக்கப்பட்டுள்ளதை நீங்கள் கண்டு கொள்ள இயலும்.

ஒருவருக்கு சுவிஷேசம் அறிவிக்கப்படுகையில், அதை அவர் நிராகரித்து, ஏற்றுக்கொள்ள மனமற்றவராய் இருப்பார் என்றால், அப்படிப்படிப்பட்டவர்களிடம் வற்புறுத்தி, சுவிஷேசத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். நீங்கள் அவர்களை அணுகும்போது, அவர்களது வாழ்வைக் குறித்த கிறிஸ்துவின் பாரத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வந்துள்ளாதாகச் செல்லுங்கள், அவ்வாறு கூறும்போது, அதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லையானால், அவர்களைவிட்டு அகலுங்கள். அவர்கள் வீடுகளுக்குச் சென்று அவர்கள் கதவைத் தட்டாதிருங்கள், அவர்கள் தொடர்ந்து கேட்க விரும்புவானர்களானால், அவர் எங்கு வர வேண்டும் என்பதை முன்னதாகவே அவர்களுக்குத் தெரிவியுங்கள்.

அநேக மக்கள் எண்ணுகிறபடி, வலியச் சென்று செய்யும் சுவிஷேச ஊழியத்தினால், தேவனுக்கென மகத்தான காரியங்களை செய்து முடித்துவிட்டதாய் எண்ணுகின்றனர். இத்தகைய நடத்தையினால், கிறிஸ்துவின் நாமத்திற்கு, அவகீர்த்தியைக் கொண்டுவருகிறவர்களாய் இருக்கின்றனர். பரிசுத்தாவியானவர், தடைகள் அனைத்தையும் தகர்க்கிறவராய் இருக்கிறார். நாம் எப்பொழுதும், ஆவியின் பட்டயத்தை மட்டுமே பயன்படுத்துகிறவர்களாய் இருத்தல் வேண்டும், இடித்துத் தகர்க்கும் வகையில், கடப்பாரையை ஒரு போதும் பயன்படுத்துதல் கூடாது.

3. யுத்தக் கலத்தில், ஜெப வீரர்களை ஒன்று திரட்டி, பீரங்கி தாக்குதலுக்கு ஆதராவாய் இருக்கும்படி செய்தல் அவசியம்:

ஜெபத்திற்காக, ஜெப வீரர் குழுவை ஏற்படுத்துதல் வேண்டும். இத்தகைய ஜெபவீரர் குழுவில், இளைஞர்களைவிட, முதியோர் சிறப்பாய் ஜெபிக்கிறவர்களாய் இருப்பர். **1 தீமோத்தேயு 5:3-16.** அவர்கள் காலை, மதியம், மற்றும் இரவு எனப் பாராமல், ரேடியோ மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் அமர்ந்து அவைகளைக் கவனிப்பதைவிட, இவ்வாறு ஜெபிப்பதை, எத்துனையோ மடங்கு சிறப்பான வகையில் செய்கிறவர்களாய் இருப்பர்.

ஜெபமானது பதில் அளிக்கப்படுகையில், நாம் அனைவரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம், நாம் அனைவரும் கர்த்தரின் பணியில் பங்கெடுத்தவர்களாய் இருக்கிறோம். சபை அங்கத்தினர் ஒவ்வொருவரின் கரத்திலும், சபை மக்களது பெயர்பட்டியல் இருப்பது அவசியம், காரணம் அவர்கள், அவர்களுக்காய் அனுதினம் ஜெபிக்க கடமைபட்டுள்ளார்கள். அவர்கள்

அனைவருக்கும் சபையின் மூப்பர்கள் யார், டிக்கன்கள் யார் என்பது தெரிந்து இருத்தல் வேண்டும். சபை மூப்பர்களின் கடமையானது, அவர்கள் குறிப்பிட்ட சபைக்குழுவிற்கு உத்திரவாதம் அளிப்பவர்களாய் இருக்கின்றனர். சபைக்காக குழுவாய் ஜெபிக்கும் போது, சபையானது செழித்தோங்குவதை நீங்கள் கண்கூடாய், காண முடியும். மூன்று, வயதான மூதாட்டியரின் ஜெபத்தால், எங்களது EBCWA ன் போதிக்கும் ஊழியம் விரிவாகிக் கொண்டே வருகிறது, மட்டும் இவர்களது ஜெபமானது, இப்பாடங்கள் மூலம் எழுப்புதலுக்கு வழியுண்டாக்குகிறதாய் இருக்கிறது.

4. சுவிஷேச ஊழியம் மற்றும் எழுப்புதலுக்காக வேதாகம ரீதியாலான, தெளிவான ஜெபப்பட்டியலை அமைத்துக்கொள்ளுதல்:

நாம் அனைவரும் கீழ்க்கண்ட ஜெபப்பட்டியலின் படி ஜெபித்தல் அவசியம்:

1. குறிப்பிட்ட மக்களின் மனமாறுதலுக்காய். யோவான் 16:08-11.

2. கர்த்தரது வார்த்தையை கேட்கும் அனைவரும், வல்லமையால் தொடப்பட, வசனத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிய. யோவான் 6 : 44, 63.

3. ஆவியானவரால் ஆயத்தப்படுத்தப்பட்டவர்களுக்கு அவசியமான சாட்சி அளிக்கும் தருணத்திற்காக. கொலோசெயர் 4 : 3.

4. செய்தி அளிப்போர் அனைவரும், மிகுந்த தைரியத்துடன் அதை அளிக்கும்படியாக. அப்போஸ்தலர் 4 : 29, எபேசியர் 6 : 19.

5. சாட்சி அளிக்கும் போது, சமாதானமும், பாதுகாப்பும் இடம் பெற. 1 தீமோத்தேயு 2 : 1- 4.

6. நம்மை எதிர்க்கும் தீமை செய்யும் மக்களிடமிருந்து விடுபட. 2 தெசலோனிக்கேயர் 3 : 1- 2.

7. கர்த்தரது பணியில், அதிகமானவர்கள் இணைந்து செயல்பட லூக்கா 10:2.

8. எல்லா விசுவாசிகளும், கிருபையிலும், கர்த்தரை அறிகிற அறிவில் வளரும்படியாக 2 பேதுரு 3 : 18.

9. பரிசுத்த ஆவியானவரது கனியில் அனைவரும் வளர்ந்து பெருக, அவர்களை அனைவரையும் காண்பவர்கள், தேவனுக்கு துதி செலுத்தும்படியாக கலாத்தியர் 5, எபேசியர் 4, 1 கொரிந்தியர் 12.

10. சுவிஷேச "விதையின்" பாதுகாப்பிற்காக, மத்தேயு 13:18ff.

5. முழு தேவனது வார்த்தையை முழு உலகிற்கும் பிரசங்கிக்க உங்களை அற்பணித்துக் கொள்ளுங்கள்:

அப்போஸ்தலர் 5:42 க்கு உங்கள் வேதாகமத்தைத் திருப்பிக்கொண்டு, அதை வாசியுங்கள் - இவ்வேதபகுதியானது, சாதாரண நாளில் சபையின் செயல்பாடுகள் குறித்து கூறுகிறதாய் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த பிரசங்கங்களும், போதனைகளும் நிகழ்ந்து வந்தன. இது ஆரம்பகால சபையில் ஒவ்வொரு நாள் செயல்படாய் இருந்து வந்தது. நீங்கள் ஒரு சபையைப் பெற்றிருந்து வாரத்தில் ஒரு செஷன் மட்டும் போதனை இருக்குமேயானால், அச்சபையானது வேதாகம அணுகுமுறையினை பின்பற்றுவ்தாய் இல்லை.

பிரசங்கம் என்பது, வேதவாக்கியங்களின் அர்த்தத்தினை விவரித்துக் கூறுவதாகும், மற்றும் ஒவ்வொரு தனிநபரும் அதைக் கைக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும், மற்றும் அதை வாழ்வில் கைக்கொள்ளுமாறு செய்தலாகும். பிரசங்கமானது ஆயத்தம் மற்றும் ஜெபத்தை உள்ளடக்கியுள்ளது.

அப்போஸ்தலர்கள் கர்த்தருடன் இருந்து கற்றுக்கொண்டவர்களாயும், கர்த்தருடன் நடந்து, அவருடன் சேவை செய்து மூன்று நீண்ட ஆண்டு காலம் அவருடனே இருந்தவர்களாய் விளங்குகின்றனர். இப்பொழுது அவர்கள் வெளியே செல்ல ஆயத்தமுடன் காணப்பட்டனர். அவர்கள் வல்லமையுடன் பிரசங்கிக்கிறவர்களாய் காணப்பட்டனர், அவர்கள் யாரைக்குறித்து பேசுகிறோம் என்பதைக் குறித்து மிகத்தெளிவுடன் அறிந்திருந்தனர். தங்களிடம் கேட்போருக்கு அவர்களது செய்தியானது, ஜெபத்துடன் பொருத்தமுள்ளதாய் இருந்தது. அவர்கள் தாங்கள் முழு இருதயத்தோடும் அன்புகூறுகிற ஒருவரைக் குறித்து பேசினர், அவர் அவர்களுக்கு அளித்த வல்லமையைக் கொண்டு செயல்பட்டனர், சத்தியத்தினால் அவர்களது அனுதின வாழ்வானது கொழுந்து எரிகிறதாய் இருந்தது. அநேகர் தாங்கள் ஏன் கர்த்தரால் வல்லமையாய் பயன்படுத்தப்படவில்லை என குழப்பமடைகிறவர்களாய்க் காணப்படுகின்றனர். மேற்சொன்ன காரியங்கள் உங்கள் வாழ்வில் உண்மையாய் இல்லாதபட்சத்தில், எழுப்புதல் நிகழுவது அரிதான ஒன்றாயிருக்கும். உங்களது அனுதின வாழ்வில், உண்மையாய் நிகழுபனவற்றை மட்டுமே, நீங்கள் பிரசங்கம் செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

யோனத்தான் எட்வர்ட் அவர்களின் அற்பணிப்பானது, பத்து ஆண்டுகளை, ஒவ்வொரு நாளும் பதினான்கு மணி நேரம் வீதம் செலவழிப்பதாய் இருந்தது. அவர் எழுப்புதலை வழி நடத்த ஆயத்தமுள்ளவராய் விளங்கினார். புத்தியீன ஜெபத்தால், தேவனைத் துரிதப்படுத்த வேண்டாம், நமது சிருஷ்டிக் கர்த்தரும், இரட்சகருமானவரை துரிதப்படுத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும். அவருடன் நெருங்கிக் கிட்டிச் சேர்ந்து, அவருடன் நெருங்கி நடந்து, அவர் சொல்வதை கவனமாய் நிதானிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

6. கலாச்சார ரீதியாக பொருத்தமான இடங்களில், தனிப்பட்ட மற்றும் பொதுவான போதனை அளித்தல்:

ஆரம்பகால எருசலேம் சபையில்; போதிப்பதும், பிரசங்கிப்பதும் இரு இடங்களில் நிகழ்ந்தன, பொதுவான, தேவாலய மண்டபத்திலும், மற்றும் தனிப்பட்ட வீட்டு சபைகளிலும் நிகழ்ந்து வந்தன. தேவாலய மண்டபம், இது விஸ்தாரமான பெரிய இடமாயிருப்பதால், இங்கு ரபீமார்கள் போதனை செய்து வந்தனர். இது ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் அமைந்திருந்தது (இது சாலமோன் மண்டபம் என அறியப்பட்டது) இந்த இடத்தில் புறஜாதியாரும் கடந்து வந்து, போதனைகளை கவனிக்க இயலும். இந்த மண்டபத்திலே, ஆர்வமிக்க அப்போஸ்தலர்கள், போதனைகள் செய்தனர். ஜனங்கள் கூடி வந்து கேட்கக்கூடிய இடங்களை இவர்கள் தேடிச் செல்கிறவர்களாய் இருந்தனர். அங்கு இவர்கள் தங்களது போதிக்கும் ஊழியத்தினை செய்து வந்தனர், இவர்கள் போதனைகளை மக்கள் இவ்விடங்களில் கூடி வந்து கேட்கலாயினர்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது யாதெனில், நமது சமுதாயத்தில் ஜனங்கள், கடவுளைப் பற்றிய சத்தியத்தினை கண்டுகொள்ள எங்கு செல்கிறார்களோ, அவ்விடங்களில் அவர்களுக்குப் போதனை செய்தல் அவசியம். இவ்வாறு பொதுவான போதனை அமைதல் வேண்டும். எருசலேமில் சாலமோன் மண்டபம் இப்படிப்பட்ட பொதுவான இடமாய் இருந்தது, கிரேக்கப்பட்டணங்களில், சந்தைவெளியாய் இருந்தது அல்லது ஜெப ஆலயமாய் இருந்தது. இப்படிப்பட்ட இடங்களை பவுல் தெரிந்து கொண்டு, ஜாக்கிரதையாய் சத்தியத்தை தேடுபவர்களை நாடிச்சென்று போதனை ஊழியம் செய்கிறவராய் இருந்தார். சில பட்டணங்களில் சந்தை வெளிகளிலும், சிலப் பட்டணங்களில் ஜெப ஆலயங்களிலும் போதிக்கும் ஊழியத்தினை செய்தார். சத்தியத்தை கவனமாய்த் தேடுவோர் எங்கு சென்றனர் என்பதனை பவுல் இனங்கண்டு கொண்டிருந்தார். இப்படிப்பட்ட இடங்களுக்கு பவுல் கடந்து சென்று சத்தியத்தைப் பிரசங்கம் செய்கிறவராய் இருந்தார்.

இன்றைய சமுதாயத்தில், கவனமாய் சத்தியத்தினை நாடி செல்கிறவர்கள் எங்கு செல்கின்றனர்? எனது பரிந்துரையின் படி ஆர்வமிக்க அவிசுவாசிகள் உள்ளூர் சபைக்கு செல்கிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் சத்தியத்தினை கண்டு கொள்ளும் இடங்களை அறிந்துள்ளனர். உலகலாவிய தீவிரவாதங்கள் நிகழ்ந்து வரும் நாட்களில், ஜனங்கள் பதில்களை தேடிக்கொண்டிருக்கின்றனர். சத்தியத்தை தேடிவருவோருக்கு, சபையானது தெளிவான பதிலை அளிக்கும் சவாலை ஏற்று செயல்பட வேண்டியுள்ளது.

சமுதாயத்தில் சாட்சிபகரும் மற்றொரு இடமானது, ஐசுவரியமுள்ள சபை அங்கத்தினரின் தனிப்பட்ட வீடுகள். பாலஸ்தீனத்தில் உள்ள பெரிய வீடுகளில் பொதுவாக அநேகர் கூடும் வகையில், பெரிய மண்டபத்துடன் காணப்படும், இங்கு மக்கள் கூடுவதும், ஐக்கிய விருந்து இங்கு ஆசரிக்கப்படும். மறைவான ஒதுக்கு புறமானது, போதனை அளிப்பதற்கும், ஆராதிப்பதற்கும் முக்கியமானதாய் இருந்து வந்தது. இப்படிப்பட்ட இடத்தில், ஐக்கியம் மற்றும் பரிசுத்தவான்களைப் பெலப்படுத்தி, அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், பிரசங்கங்கள், மற்றும் போதனைகள் அளிக்கப்பட்டு வந்தன, சுவிஷேச ஊழியமானது அதிகமாய் பொது இடங்களில் செய்யப்பட்டு வந்தது.

எருசலேமில், தனிப்பட்ட வீடுகள், விசுவாசிகள் கூடும் இடங்களாய் மாறி வந்தன, காரணம் தேவாலயத்திலும், ஜெப ஆலயங்களிலும் யூதர்கள் மத ரீதியான எதிர்ப்புகளைத் தெரிவித்து, கிறிஸ்தவர்களைப் பயமுறுத்திவந்தனர். கி. பி 63 க்குப் பின்னர், ஜெப வேளையில், தேவாலய வலாகத்தில் யாக்கோபை கொலை செய்தபின்னர், இரட்சிப்படைந்த யூதர்கள் தங்களது வீடுகளை, ஆராதிப்பதற்கும், வேதாகம போதனை மற்றும் ஜெபத்திற்காக திறந்து கொடுத்தனர். நாம் நமது வீடுகளை இவ்வாறு திறந்து கொடுக்கிறவர்களாய் இருக்கிறோமா?

ஆரம்ப கால சபையானது, ஆரம்பத்தில் பெரிய கூட்டங்களை தேவாலயத்தில் நடத்தி, அப்போஸ்தலர் 2 ம் அதிகாரத்தில், 3000 பேர்கள் இரட்சிப்படைந்ததைப் பார்க்கிறோம், அதைத் தொடர்ந்து அப்போஸ்தலர் 4 ம் அதிகாரத்தில், 5000 பேர்கள் இரட்சிப்படைந்ததைப் பார்க்கிறோம். ஒரு வாரக் காலத்தில், 8000 க்கும் அதிகமான புதிய விசுவாசிகளாய் மனமாறியவர்கள், ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் சிதறிச் சென்றவர்களாய் காணப்பட்டனர். எருசலேமுக்கு பஸ்கா பண்டிகை, மற்றும் பெந்தெகொஸ்தே பண்டிகைகளை ஆசரிக்க வந்தவர்கள், சுவிஷேசத்தைத் தங்களுடன் எடுத்துச் செல்கிறவர்களாய் இருந்தனர். ஆரம்ப கால சபையை யூத அதிகாரிகள் துன்புறுத்துவதற்கு முன் ஓரிரு ஆண்டுகள் பெரி அளவிலான கூட்டங்கள் எருசலேமில் நிகழ்ந்து வந்தன. கி.பி. 63 க்குப் பின்னர் தேவாலயத்தில் எப்பொழுதெல்லாம் அவர்களுக்கு கூடும்படி வாய்ப்புகிடைத்ததோ, அப்பொழுதெல்லாம் கூடி போதனை செய்து வந்தனர்.

7. ஆற்றல் மிக்க செல் குரூப்களை, ஜெபத்திற்காகவும், வேதபாடத்திற்காகவும் கட்டி எழுப்புங்கள்:

உபத்திரவத்தின் விளைவாக, ஆரம்ப கால சபையானது வீடுகளில் கூடி, வேதபாடத்தினைக் கற்றுக்கொண்டு வந்தனர், மட்டுமின்றி இப்படிப்பட்ட இடங்களில் சுவிஷேச ஊழியமானது மிகத்தீவிரமாய் செயல்பட்டு வந்தது. இதுவே இதைத்தொடர்ந்துள்ள நூற்றாண்டுகளில், சபையானது தீவிர வளர்ச்சியைக் காண வழிநடத்தினதாய் இருந்தது. சபை ஆரம்பமாகி சுமார் 200+ ஆண்டுகள் வரை சபை கட்டிடமே இல்லாதிருந்தது. 300 ஆண்டுகாலம், சபைக்குச் செல்வது என்பது பொதுவாக பாதுகாப்பற்றதாய் இருந்து வந்தது.

ரோம அதிகாரிகள், சபையைத் துன்பப்படுத்தி வந்த, முதல் முன்னூறு ஆண்டுகாலங்களில், 50 ஆண்டுகாலங்கள் வரை வித்தியாசமான நேரத்தில் மற்றும் இடங்களில் சபையானது கூடிவர சாத்தியமிருந்தது, கிபி 85 லிருந்து 312 வரை ரோம அதிகாரிகள் மிகவும் வன்முறையாய் கிறிஸ்தவர்களை உபதிரவப்படுத்தி வந்தனர். இறுதியான சபைக்குரிய உபத்திரவத்திற்கு முன்பு சில சபைகள், எண்ணிக்கையில் மிகுதியாக வளர்ச்சியடைந்து காணப்பட்டது, இருப்பினும் வீட்டு சபைகள் ஆரம்ப கால சபைக்கு முதுகெழும்பாய்த் திகழ்ந்தன. வீடுகளில் கூடிவருதைத் தவிர, சபையானது காடுகளில் கூடினர், கல்லறைத்தோட்டங்களில் கூடினர், தனிப்பட்ட வீடுகளில் கூடுவதற்கு முதலிடம் அளிக்கப்பட்டது, இங்கு பாதுகாப்பும், போதிய வசதியும் இருந்தது.

8. உள்ளூர் சபையானது ஒரு குடும்பமாய் செயல்படுதல் வேண்டும், தேவனது வழியில் அது வளர்ந்து பெருகுதல் வேண்டும்.

கர்த்தருடைய நாளில் இரு கூடுகைகள் இருந்து வந்தன, முதல் கூடுகையானது அதிகாலையில் இருந்தது, இவ்வேளையில் ஆராதிப்பதற்கும், துதிப்பதற்குமாய் ஒதுக்கப்பட்டது, சூரிய உதயத்திற்கு முன்பு அனைவரும் வேலைக்குச் செல்லும் முன்னர் இவ்வாறு ஆசரிக்கப்பட்டது. நான்காவது நூற்றாண்டின் மத்திய பாகம் வரை, ஞாயிற்றுக்கிழமையானது வேலைநாளாய் அனுசரிக்கப்பட்டு வந்தது என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இரண்டாவது கூடுகையானது, வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டபின்னர், மாலைப்பொழுதில் நிகழ்ந்தது. இப்படிப்பட்ட இரண்டாவது சபை வீட்டுக்கூட்டங்களின் போது, ஒவ்வொருவரும் பகிர்ந்து உண்ணும்படி ஆகாரபதார்த்தங்களை கொண்டுவருவர், அந்த வீட்டில் உள்ளப் பெண்கள், அந்த ஆகாரத்தை ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து அளிப்பதில் ஒருங்கிணைப்பு செய்வர். மாலைப் பொழுதில், வேலைகளை முடித்துக் கொண்டு, விசுவாசிகள் அனைவரும் ஒருமித்து கூடி, அன்பின் ஐக்கிய விருந்தில் பங்கு பெறுவர், (இவ்விருந்தானது, பகிர்ந்தளிக்கப்படும் விருந்தாயிருக்கும்.)

இவ்விருந்தானது தண்ணீர் மற்றும் திராட்சை இரசத்துடன் பரிமாறப்படும். சில பட்டணங்களில், திராட்சை இரசமின்றி வெறும் தண்ணீரை மட்டும், பருகுவீர்களானால், நீங்கள் வியாதிக்குட்பட நேரிடும். தீமோத்தேயு திராட்சை இரசம் பருகாமல், தண்ணீர் மட்டுமே பருகும் விரதத்துவம் உள்ளவராய் இருந்தபடியால், இவர் வியாதிக்குட்பட நேரிட்டது, இதினிமித்தம் பவுல் இவருக்கு, வயிற்றில் ஏற்பட்ட வியாதியினிமித்தம் திராட்சை இரசத்தை ஆகாரத்துடன் கூட்டிக்கொள்ள புத்திமதியளிப்பதை 1 தீமோத்தேயு 5:23 ல் காண்கிறோம். தீமோத்தேயுவின் நாட்களில் எபேசுபட்டணமானது கட்டப்பட்டு வந்தது, இப்பட்டணமானது சதுப்பு நிலத்தில், தண்ணீர் ஊற்றுகள் உள்ள இடத்தில் கட்டப்பட்டபடியால், பூமிக்கடியில் உள்ள தண்ணீர் ஊற்றுக்கள் மாசு அடைந்தது. இது மது பானம் அருந்துவதற்கான அறிவுரையல்ல, அந்த உள்ளூர் சூழலில், வியாதிக்குட்படாமலிருக்க, மருத்துவ அறிவுரையாய் இருந்துவந்தது. இன்றைய அளவில், பத்து நிமிடங்கள் தண்ணீரை கொதிக்க வைத்து, பின்பு குளிரவைத்து பருகவும் என அறிவுரை வழங்குவதற்கு ஒப்பாக இருக்கிறது.

ஆரம்பகால சபையானது, எதிர்ப்புகள் நிறைந்த சூழலில், எப்பொழுதெல்லாம் பொதுவாய் ஓரிடத்தில் கூட இயலுமோ அவ்வாறு கூடி ஒருவரையொருவர் பெலப்படுத்தி வந்தனர். சபையானது வளரும்போது, மற்ற வீட்டு சபைகள், பட்டணப் போதகரின் பராமரிப்பில் அமைக்கப்பட்டது. (பின்னர், பெரிய இடங்களில், பட்டணத்தின் கண்காணி [பிஷப்] பராமரிப்பில் செயல்பட்டது). ஒவ்வொரு வீட்டுக்குழுக்களுக்கும், ஒவ்வொரு மூப்பர் நியமிக்கப்பட்டு இருந்தனர், சபையானது வளர்ச்சியடையும்போது, அவைகள் பிரிக்கப்பட்டு வளர்ந்து பெருகின.

இறுதியாக, ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள சபைகளை மேற்பார்வை செய்ய ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் கண்காணி [பிஷப்] என அழைக்கப்பட்டார், இவர் அப்பட்டணத்தில் உள்ள எல்லா வீட்டுச் சபையின் மூப்பர்களால், கிறிஸ்தவர்களின் தலைவராக அறியப்பட்டு இருந்தார். இப்படிப்பட்ட கண்காணிகள், விசுவாசிகள்

உபத்திரவப்படுத்தப்பட்டு, இரத்த சாட்சிகளாய் மரித்து அவர்கள் விட்டுச் சென்ற பிள்ளைகள், மற்றும் அவர்களது விதவையாக்கப்பட்ட மனைவிகள் போன்றோருக்கு நிவாரணம் அளித்து ஒருங்கிணைப்பு செய்கிறவராய் இருந்தார். ரோமர்கள் சபையை உபத்திரவப்படுத்திய போது, இப்படிப்பட்ட கண்காணிகளையே முதலாவது பிடித்து கொலை செய்கிறவர்களாய் இருந்தனர்.

காலம் சென்ற போது, கண்காணிகள் [பிஷ்ப்புகள்] சபையை ஆளுகிறவர்களானார்கள், ரோமாபுரியில், மூத்த கண்காணிகள் [senior bishop] மற்ற கண்காணிகளை ஆளுகிறவர்களானார்கள். இது ஆரம்பகால அப்போஸ்தல அமைப்பாய் இராதபோதிலும், அப்போஸ்தலர்கள் மரித்த பின்னர், நூறாண்டு காலத்தில், இது தீவிரமாய் வளர்ச்சியைக் கண்டடைந்தது. இதுவே தற்போதுள்ள காலத்தில் நடைமுறையில் செயல்பட்டு வருகிறதாய் இருக்கிறது. தெய்வ பயமுள்ள ஒரு போதகர், தனது பகுதியில் பல சபைகளை ஸ்தாபிக்கும்போது, அவர் தலைமைத்துவம் வகிக்க, எதிர்பார்க்கப்பட்டார். அப்படிப்பட்டவர் கண்காணியாக [பிஷப்] நியமிக்கப்பட்டார். தேவனால் அழைக்கப்பட்ட போதகத் தலைவர்கள் இவ்வாறுள்ள பதங்களால் அழைக்கப்படும்போது, நாம் பயப்பட அவசியமில்லை.

ஆரம்ப கால அப்போஸ்தல சபையில், இரண்டு நோக்கங்களை உடையவர்களாயிருந்தனர். முதலாவதாக, ஒவ்வொரு வீடும், புதியவர்களை தெரிவு செய்வதற்கும், பயிற்சி அளிப்பதற்கும், கிறிஸ்துவை ஆராதிக்கும் ஆராதனை மையமாய் செயல்பட ஏற்படுத்தப்பட்டது. இரண்டாவதாக, "இரட்சிப்படைந்த ஒவ்வொரு நபரும், சாட்சிபகருதல் வேண்டும்." இப்படிப்பட்ட நோக்கங்கள் இன்றும் தேவனது திட்டமாய் இருந்து வருகிறது. இப்படிப்பட்ட நோக்கங்கள் இன்றும் வலியுறுத்தப்பட்ட போதிலும், சிலர் மட்டுமே இவற்றைக் கடைபிடித்து வருகின்றனர் காரணம் ஆவிக்குரிய நிலையில் மரித்துப்போய்க் காணப்படுகின்றனர். இப்படிப்பட்ட தெய்வீக வழிகளை உங்கள் சபையில் ஸ்தாபிக்கப்பட, நீங்கள் உங்களை அற்பணிப்பீர்களானால், ஒவ்வொரு ஆண்டிலும், உங்கள் சபையானது பெருகி விருத்தியடைய கர்த்தர் கிரியை செய்கிறவராய் இருப்பார். ஒவ்வொரு ஆண்டிலும், சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் ஒருவரை கர்த்தருக்குள் வழிநடத்தி, ஆதாயப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். உங்களுக்கு சுவிஷேச ஊழிய இலக்கு இருக்க வாஞ்சை கொள்வீர்களானால், ஒவ்வொரு ஆண்டிலும் கிறிஸ்தவர்களின் வளர்ச்சியானது 100% இருக்க, அப்போஸ்த இலக்குகளை அமைத்துக் கொள்ளுங்கள். இந்த இலக்கானது நிறைவேற்றபடாத பட்சத்தில், எழுப்புதலுக்காய் சபையில் ஜெபிப்பது பிரயோஜனமற்றதாய் இருக்கும்.

ஒரு சபையை நீங்கள் பொறுப்பெடுக்கும் போது, அவர்கள் எங்கு இருக்கிறார்கள் எனக் கண்டறிந்து, அதைக் குறித்து அவர்களுக்குப் போதியுங்கள். இந்த ஆண்டின் இறுதிக்குள், 100% வளர்ச்சியடைய அவர்களுக்கு சவால் கொடுங்கள், கிறிஸ்துவின் ஸ்தானாபதியாய் இருக்க, தொடர்ச்சியாய் நினைவுபடுத்தி, தேவன் அளித்த பணியைக் கிறிஸ்தவர்களாகிய நாம் நிறைவேற்ற ஜாக்கிரதைய் இருக்க நினைவு படுத்திக்கொண்டே இருத்தல் வேண்டும். மாற்கு சுவிஷேசத்தில் 1 ம் அதிகாரத்தில், நாம் மனிதரைப் பிடிக்கிறவர்களாக இருக்கும்படி, நம்மை அவர் அழைக்கிறவராய்

இருக்கிறார், இதன் காரணமாகவே, இங்கு நம்மை விட்டு வைத்திருக்கிறார், சுற்றி அமர்ந்து ஐக்கிய விருந்துண்டு, புசித்து, குடித்து, அவரது வருகைக்காய் காத்திருக்கும்படி அல்ல.

உபதேசம் - கிறிஸ்தவ வாழ்க்கை - சுவிஷேச ஊழியம் - புதிய ஏற்பாட்டு அமைப்பு:

தொகுப்புச் சுருக்கம்:

1. ஸ்தல சபையின் போதகர் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள்ளும், வேதாகம உபதேசத்தில் முழுகி ஜீவிக்கும் வாழ்க்கை கொண்டவராய் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளுதல் அவசியம். வேதாமத்திலிருந்து அவரது முறையான போதனை ஜனங்களை உற்சாகப்படுத்துவதாயும், அவர்கள் வாழ்வில் நடைமுறைப் படுத்தக்கூடியதாயும் இருத்தல் வேண்டும். கர்த்தர் உபயோகப்படுத்தும் பாத்திரம் சுத்தமானதாய் இருத்தல் அவசியம்.

2. சபையில் ஒருங்கிணைக்கப்பட்ட ஜெப வாழ்வை நீங்கள் கொண்டிருத்தல் அவசியம். இப்படிப்பட்ட ஜெபக்கூட்டம், வாரத்தில் மத்தியில் அமைந்து ஜெபவீரர்களை ஒருங்கிணைத்து ஜெபிக்க வேண்டும். குறிப்பிட்ட வாராந்திர ஜெபஒழுங்கு மிகவும் அவசியம்.

3. உங்களது சபையின் மூப்பர் மற்றும் கண்காணிகளுடன் வாராந்திர கூடுகைகள் நடத்தி சபைக்குரிய செயல்பாட்டு வழிமுறைத் திட்டங்களை வகுப்பது அவசியம். அக்கூடுகைகளில் அவ்வாரத்திற்குரிய ஜெபத் திட்டங்களை வகையறுத்தல் அவசியம். இப்படிப்பட்டக் கூடுகை ஞாயிறு காலை, காலை உணவுக்கு மேல் போதகருடன் கூடி, போதகர் ஜெபக்குறிப்புகளை தயார் செய்து, குறிப்பெடுத்து, நகல் எடுத்து காலை ஆராதணையில் எல்லோருக்கும் சமர்ப்பிக்க தயார் செய்து கொள்ள வேண்டும். இது அவ்வப்போதுள்ள ஜெபக்குறிப்புகளை அளிக்கிறதாய் இருக்கிறது. வீடு சந்திப்புகளை ஒழுங்குசெய்தல், செய்தியாளர்களை ஒழுங்கு செய்தல், அவர்களது செய்தி திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்தல் போன்றவற்றை திட்டமிட்டு சபையில் செயல்படுத்துவது அவசியமாய் இருக்கிறது. வீட்டுக்கூட்டங்கள், வேதபாடங்கள், ஞாயிறு பள்ளி போன்றவற்றிற்கான செயல்பாட்டுத் திட்டங்கள் வகையறுக்கப்படுதல் அவசியம்.

4. பிரசங்கம் ஒவ்வொன்றும் சுவிஷேசத்துடன் கட்டப்பட்டதாயும், சபையின் சாட்சி செயல்பாடுகள் நிறைந்ததாயும் இருத்தல் வேண்டும். பிரசிங்கிப்பவர், விசுவாசிகள் ஸ்தானாபதிகளாயும், சுவிஷேசம் அறிவிக்கிறவர்களாய் இருக்கின்றனர் என்பதை வலியுறுத்துகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

5. ஊழியர்கள் விசுவாசிகள் மீன்களைக் கண்டுகொள்ள உற்சாகப்படுத்துதல் வேண்டும். ஒவ்வொரு வாரத்திலும், அவர்களது வட்டாரத்தில் சுவிஷேச வேலை செய்ய ஞாபகப்படுத்துதல் அவசியம்.

6. ஒவ்வொரு விசுவாசியும் தங்களது கரங்களில் அவர்கள் தொடர்ந்து ஜெபிக்கும் மக்களின் பெயர்ப்பட்டியலைப் பெற்றிருத்தல் அவசியம். அவர்கள் குறைந்தபட்சம் பத்து அவிசுவாசிகளின் பெயர்ப்பட்டியலை கொண்டிருத்தல் வேண்டும், அவர்களில் ஒருவர் இரட்சிக்கப்பட்டுவிட்டால், அவர்களது பெயருக்குப் பதிலாக புதிய நபரின் பெயரை அப்பட்டியலில் சேர்த்துக்கொள்வது அவசியம்.

7. சபை சந்திக்கும் நபர்கள் குறித்து செயல்பாட்டு வழிமுறை திட்டத்தில் ஒரு பகுதியாய் வைத்துக்கொள்ளுதல் அவசியம். இது ஞாயிறு பள்ளியில் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. ஞாயிறு பள்ளி சபை அமைந்திருக்கும் பகுதியில் பிரபலமானதாய் இருத்தல் வேண்டும். ஞாயிறு பள்ளிக்கு தங்கள் குழந்தைகளை அனுப்பும் அவிசுவாசிப் பெற்றோர்களை சபை ஊழியர் கண்டுகொண்டு அவர்களுடன் சரியான நட்பை ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். நீங்கள் ஒருவரே அவர்களுடன் கிறிஸ்தவ நட்புகொள்ளும் முதல் மனிதராய் இருக்கலாம்.

8. சபை ஆராதனைக்கு பின்தொடர் ஊழியம் அவசியமாய் இருக்கிறது. சபைக்கு வந்த ஒவ்வொருவருக்கும் அவர்கள் நன்கு வரவேற்கப்பட்டனர் என்ற உணர்வை ஏற்படுத்துதல் அவசியம், அவர்கள் ஒரு போதும் தர்மசங்கடமான உணர்வுகொள்ளுமாறு செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். சபைக்கு புதியதாய் வரும் நபர்களை எழுந்து நிற்க கூறாதிருங்கள். சபை ஆராதனைக்குப் பின்னர் தேனீர் நேரத்தில், புதிதாய் வந்தவர்களுக்காய் தனிப்பட்ட அறை ஒதுக்கப்பட்டு அங்கு அவர்கள் பராமறிக்கப்படுதல் அவசியம். வழக்கமாய் ஆராதனை முடியும் நேரத்திற்கு சற்று முன்பதாகவே முடிவது இதற்கு அனுகூலமாய் இருக்கும். ஊழியர் புதிதாய் வந்தவர்களைக் கண்டு கொண்டு, தொடர் ஊழியம் செய்வது அவசியம், மூப்பர்கள் அவர்களை வரவேற்பதிலும், அவர்கள் ஆராதணை முடிந்து செல்லும்போதும் அவர்களை கவனித்து அவர்களுக்கு வேண்டிய, பராமரிப்புகளைச் செய்வதில் கவனம் செலுத்துதல் அவசியம்.

9. உங்கள் வீடு சந்திப்புகளை ஒழுங்குபடுத்திக்கொண்டு அவற்றை ஒழுங்கும் கிரமுமாய் செய்தல் அவசியம். உங்களது மனைவி பிள்ளைகளுடன் மதிய உணவை அருந்திய பின்னர், அந்நாளில் நீங்கள் சந்திக்க வேண்டி இரண்டு அல்லது மூன்று வட்டாரங்களை தெரிவு செய்து கொள்ளுங்கள். ஒரு வேளை நீங்கள் உங்களது வாகனத்தில் சென்றிருப்பீர்களானால் அதை சந்திக்கச்செல்லும் தெருவின் ஒரு ஓரத்தில் நிறுத்தி வைத்துவிட்டு, சந்திக்கும் நபரின் வீட்டிற்கு, வீதியில் உள்ளவர்கள் காணும் வண்ணம் நடந்து செல்லுங்கள். சபையில் நீங்கள் சந்தித்த நபர்களைக் குறித்த விபரம் மற்றும் அவர்களுக்காய் ஒரு விளக்கப்பட்டியல் தயார் செய்து வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் வீதியிலும், சுற்று வட்டாரங்களிலும் நீங்கள் நன்கு அறியப்பட்டவராய் இருத்தல் அவசியம், எப்பொழுதும் கோட் சூட்டுடன் இராது, நன்கு சுத்தமான ஆடை அணிந்து ஜனங்கள் முன்னிலையில் ஏற்றுக்கொள்ளும் வகையில் காணப்படுங்கள்.

9. நான்கு சுவிஷேசப் பகுதிகளையும் பயன்படுத்துதல் / எழுப்புதல் செய்திக்கான தருணங்களைப் பயன்படுத்துதல்.

சுவிஷேச ஊழியத்தின் நான்கு பகுதிகள்:

சுவிஷேச ஊழியத்தில் நான்கு பகுதிகள் அமைந்துள்ளன; கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட வாழ்வும், அவர்களது அருட்பணியும். வீட்டுச்சபைக் கூடுகை, சுவிஷேச ஆராதனை மற்றும் சுவிஷேச ஊழிய வெளி ஊழியங்கள். சுவிஷேச ஊழியமானது, சபை வாழ்வில் முக்கிய இடம் வகிப்பதால், சுவிஷேச வேண்டுகோளுக்காய், ஒரு முழு ஆராதனை வாரந்தோறும் நடத்துவது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு வாரமும், சுவிஷேசமானது அளிக்கப்படுதல் வேண்டும், புதிதாய் சபைக்கு வருவோர், கிறிஸ்துவின்றி, நம்பிக்கையின்றி, நித்திய ஜீவனின்றி சபையை விட்டு வெளியே செல்லுதல் கூடாது, அவர்கள் நற்செய்தியைக் கேட்ட பின்னரே சபையை விட்டு வெளியேறச் செய்தல் வேண்டும்.

வசனம் பிரதி வசனமாக முறையாய் ஒழுங்குபடுத்தப்பட்ட போதனை அளிப்பது, மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. இதுவே பல நூற்றாண்டுகளாக, எழுப்புதலுக்கு உயிர்நாடியாய் விளங்கிவருகிறது. ஞாயிற்றுக் கிழமையில் இரு கூடுகைகளும், வார மத்தியில் ஒரு கூடுகையும் இருக்குமேயானால், வாரத்தில் மூன்று முறை வேதாகமத்தை முறையாய் போதிக்கும் தருணத்தை பெறுகிறவர்களாய் இருப்பீர்கள். சுவிஷேசத்தைத் திரும்ப, திரும்பக் கேட்கிறவர்களாய்க் கிறிஸ்தவர்கள், முழுமையான தேவனது ஆலோசனையை மற்றும் வேதாகம உபதேசங்களாய் கேட்பது மிகவும் அவசியம் வாய்ந்தது. ஒவ்வொரு ஆராதனை இறுதியிலும், சுவிஷேச வேண்டுகோள்களை விடுத்தல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது, அவிசுவாசியானவர்கள் இக்கூட்டங்கள் ஒருவேளை வந்திருக்கக் கூடும், அவர்கள் இரட்சிப்படைய இது ஏதுவுண்டாக்குகிறதாய் இருக்கும். இதைப்போன்றே மாம்சீகமாய் வாழ்கின்ற விசுவாசிகள், அவர்களது வாழ்வில் பாவம் மற்றும் தீமைகள் போன்றவைகள் இடம் பெறாது, அவற்றை எச்சரித்து சவாலாய் ஜீவிக்க அவர்களை வழிநடத்துவதும் மிகவும் அவசியமானதாய் இருக்கிறது, இதினிமித்தம் கர்த்தருக்கு முன்பாக ஒருவரும் போக்குச் சொல்லாதிருக்க ஏதுவுண்டாகும்.

ஆராதனையில் சுவிஷேசம்:

சபைக் கூடுகையின் போது, அவிசுவாசிகளை மூன்று வழிகளில் சந்தித்தல்.

[அ] ஒவ்வொரு ஆராதனையின் முடிவு நேரத்திலும், அவிசுவாசிகளுக்கு இரட்சிப்பின் செய்தியைக் கூறி, அற்பணிப்புக்கு வழிநடத்தலாம், மற்றும் மாம்சீகத்தின்படி நடந்து கர்த்தருடன் ஐக்கியமின்றி காணப்படுவோருக்கும் இதைப் போன்றே செய்து, அவர்களை ஐக்கியத்திற்குட்படுத்தலாம்.

[ஆ] வசனம் பிரதி வசனமாய் வேதாகமத்தைப் போதிக்கும் போது, சுவிஷேசம் குறித்த சத்தியம் அதில் வருமென்றால், அதைக்குறித்து விரிவாக முழுவதுமாய்

போதனை அளியுங்கள். ஞாயிறு மாலை ஆராதனையை சுவிஷேச ஆராதனையாய் அறிவித்து, நான்கு சுவிஷேசங்களையும் ஒவ்வொரு வசனமாய் பகுப்பாய்வு செய்து போதிக்கலாம். சுவிஷேசங்களில் இரட்சிப்பிற்கு ஏதுவான வேதபகுதிகள் தாராளமாய் இருக்கின்றன. இப்படிப்பட்ட வேதபாடம், போதிப்பதற்கு ஆறிலிருந்து ஏழு ஆண்டுகால அவகாசம் எடுக்கும்.

[இ] மூன்றாவது வழியானது, பாரம்பரிய ரீதியில் "பெரிய எழுப்புதல்" கூடுகைகளை ஏற்படுத்தி, சுவிஷேச ஆராதனை நடத்துதல்.

இம்மூன்று வழிகளையும் கலந்து செயல்படுத்துவது சிறப்பாய் இருக்கும். ஜனங்கள் நீங்கள் என்ன போதிக்க இருக்கிறீர்கள் என்பதனை அவர்கள் முன் கூட்டியே, அறியும்படி அவர்கள் போதனையின் சில அம்சங்களை முன் கூட்டியே வாசித்து அறிந்து கொண்டால், அது அவர்களுக்கு நலம் பயப்பதாய் இருக்கும், மற்றும் நீங்கள் போதிக்க இருக்கும் தலைப்பையாவது அவர்கள் முன்கூட்டியே அறிந்திருக்க வேண்டும். நீங்கள் வசனம் வசனமாய் போதிக்க வேண்டும், இவ்வாறு போதிப்பது சிறப்பான விளைவுகளைக் கொண்டுவரும். பரிசுத்த ஆவியானவர் முறையாக சத்தியத்தை வெளிப்படுத்திக் கொடுக்கிறவராய் இருக்கிறார், நீங்கள் வசனம், வசனமாய் போதிக்கும் அணுகுமுறையினை கையாளும் போது, தலையங்க பிரசங்கத்தைவிட சத்தியத்தை முழுமையாய், முறையாக அறிந்து கொள்ள அது ஏதுவுண்டாகிறது.

விஷேசித்த சுவிஷேச படைமுயற்சி கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுமானால், முன்கூட்டியே ஜனங்கள் அவிசுவாசிகளின் இரட்சிப்பிற்காகவும், நித்திரையில் இருக்கும் பரிசுத்தவான்கள் மனந்திரும்பும்படியாகவும், ஊக்கமாய் ஜெபித்தல் மிகவும் அவசியமானதாய் இருக்கிறது. நீங்கள் சுவிஷேச ஆராதனை செய்யும்போது, அதன் பின் தொடர் ஊழியம் முக்கியமானது, ஐக்கியப்படுவதற்கான நேரத்தை ஒதுக்கி, மனந்திருந்தியவர்களை கூட்டிச் சேர்த்தல் அவசியமானது. மக்களில் சிலர் சபையில் வைத்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடும், அதில் அதிகமானோர், கூட்டங்கள் முடிந்த பின்னர், விசுவாசிகளின் இனிய ஐக்கியம் மற்றும் அவர்களது சவால் நிறைந்த சாட்சிகள் இவற்றைக் கேட்டு இரட்சிப்படைவது சாத்தியமாய் இருக்கிறது. ஒவ்வொரு ஆராதனை இறுதியிலும், தேனீர் வழங்குமிடத்து, சுவிஷேசமானது அறிவிப்பதற்கு பெரிய சந்தர்ப்பம் உண்டாயிருக்கிறது, இவ்வேளையில் சுவிஷேசம் அறிவித்து, கர்த்தருக்குள் வழிநடத்த ஏற்ற சந்தர்ப்பமாய் இருக்கிறது. ஐக்கிய நேரமானது ஒதுக்கப்பட்டு, அவிசுவாசிகளை அதில் அனுமதிப்பது, அவர்களது சூழல்களை அவர்கள் பிரதிபலிக்கவும், அவர்களை சரிவர புரிந்து கொண்டு அவர்களை கர்த்தருக்குள் முறையாய் வழிநடத்த ஏதுவுண்டாக்கும்.

இதோடு கூட, பரிசுத்த ஆவியானவரால் வரம் பெற்ற சுவிஷேசகர்கள் / எழுப்புதல் பிரசங்கிமார்கள் சபையில் பிரசங்கம் செய்து, உள்ளூர் சமுதாயத்தினருக்கு சுவிஷேசம் அறிவிப்பது மற்றொரு தருணமாய் இருக்கிறது. 20 ம் நூற்றாண்டில் மிகச் சிறப்பான முறையில் சுவிஷேசம் அறிவித்தவர், பில்லி கிரகாம் அவர்கள், நமக்கு முன்மாதிரியாய் திகழ்கிறார்கள், இவர் தனது உள்ளூர் சபையுடன்

இணைந்து இத்தகைய சுவிஷேச முயற்சியில் ஈடுபட்டார். சுவிஷேச ஊழியம் செய்வதற்கான வேதாகம அமைப்பு, இப்படிப்பட்ட சுவிஷேச ஊழியத்தில் சமார்த்தியசாலிகளை கொண்டு வந்து, சுவிஷேசக் கூட்டங்களை நடத்துவதாக இல்லாதிருந்த போதிலும், ஆவிக்குரிய வரம் பெற்ற நபர்களை கர்த்தர் பயன்படுத்துவார் எனில் அவர்களைக் கொண்டு உள்ளூர் சமுதாயத்தினருக்கு, அவர்களது கலாச்சார அமைப்புக்கு ஏற்றவாறு சுவிஷேசம் அவர்களுக்கு அறிவிப்பது அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாய் இருக்கும்.

வரம் பெற்ற தேவ மனிதர்களை கொண்டுவந்து, கர்த்தர் அனுகூலமான வாசல்களைத் திறக்கும் போது அவர்களைப் பயன்படுத்துங்கள். உள்ளூர் சபையானது, மற்ற காரியங்களைச் செய்வதைக் குறித்த நிச்சயத்துடன் இருத்தல் அவசியம். அவர்கள் ஜெபிப்பது, பின்தொடர் ஊழியம், பின்தொடர் ஐக்கியம் போன்றவற்றை செய்வது, இம்முயற்சியானது தொடர்ந்து ஆசீர்வாதத்தை அளிப்பதாய் இருக்கும். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுடன், மற்றும் அவரது ஒத்தாசையுடன், கர்த்தரது திட்டம் நிறைவேற உங்களது சூழலில் நீங்கள் செயல்படுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து ஜெபித்து வரும் ஜெபக்குழுக்கள், மற்றும் வசனம் வசனமாய் போதிக்கும் முறைமை, தொடர்ந்து செயல்படும் சுவிஷேச ஊழிய முயற்சிகள், போன்றவற்றின் அவசியத்தை உணர்ந்து சபையானது செயல்படுதல் மிகவும் அவசியம். மற்றும் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஜெபத்தின் மேன்மையை உணர்த்தி, அவர்கள் தங்கள் வீடுகளை சுவிஷேச மையங்களாய் திறந்து கொடுக்க ஊக்கமளித்தல் வேண்டும். உங்களது சபையானது, ஆவிக்குரிய ரீதியில் செயல்பட மிகவும் கவனமாய் இருத்தல் அவசியம். உங்கள் சபையானது ஆவிக்குரிய நிலையில் மரித்துப்போய் காணப்படுமேயானால், சுவிஷேச ஊழியமானது மிகவும் கடினமான ஒன்றாய் அவர்களுக்கு இருக்கும். நீங்கள் அழைக்கப்பட்ட போதகராய் இருந்து, சுவிஷேச வேலையைச் சிறப்பாய் செய்ய நீங்களும் உங்களது சபையினரும் ஒருமனப்படுங்கள்.

விஷேச சுவிஷேசப் படைமுயற்சிக் கூட்டங்கள் -- சபையானது கைக்கொள்ள வேண்டிய அடிப்படைக் கருத்துக்கள்:

விஷேசித்த சுவிஷேசப் படைமுயற்சிக் கூட்டங்களின் போது, கைக்கொள்ள வேண்டிய அஸ்திபார அடிப்படைக் கருத்துக்களை நாம் நினைவில் கொள்வோமாக.

[1] பாவிகளுடன் மல்யுத்தம் செய்ய முயலும் முன்னர், பரிசுத்தவான்களை சரிவர கையாளுவது அவசியமாய் இருக்கிறது. சபையானது, சுவிஷேச வெளி ஊழியங்களை செய்யத்தலைப்படும் முன்னர், இழந்து போனோரை சந்திக்கும்படி தங்களை அதற்காய் அற்பணித்துக் கொண்டு ஆயத்தபட வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

[2] சுவிஷேச ஊழியருக்காய் கருத்தாய் ஜெபிக்கும் ஜெப வீரர்கள் குழு இருத்தல் மிகவும் அவசியம். அவர்களது ஜெபப்பணியானது, இழந்து போனோர், மற்றும்

மாம்சீகப்பிரகாரமாய் வாழ்ந்து வரும், விசுவாசிகளுக்காய் இருத்தல் அவசியம். சபையில் உள்ள ஒவ்வொரு விசுவாசியும், குறைந்த பட்சம், பத்து அவிசுவாசிகளை அவர்களது தேவைகளுடன் கொண்டு நிறுத்துதலும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்பட்டு இரட்சிப்பை அடைந்து கொள்ள அவர்களை முறையாய் வழிநடத்துதல் இன்றியமையாதது. அவர்கள் முதலாவது, தங்களில் ஆவிக்குரிய உயிர்மீட்சி உண்டாக, தங்களை முழுமையாய் அற்பணித்துக் கொள்ளுதல் அவசியமாய் இருக்கிறது. இவ்வகையான ஆயத்தம், சுவிஷேசப் படைமுயற்சிக் கூட்டம் நிகழுவதற்கு முன் சுமார் 3-6 மாதங்கள் முன்னிருந்தே செய்துகொள்ளுதல் அவசியமானதாய் இருக்கிறது.. இவர்கள் தங்களது நண்பர்கள், ஒவ்வொரு நாளும், தாங்கள் சந்திக்கும் நபர்கள் இவர்களிடம் என்ன நிகழப்போகிறது என்பது குறித்து முன்கூட்டியே சொல்லி வருவது மிகவும் அவசியம்.

சபையானது இக்கூட்டங்களுக்காய் ஊக்கமாய் ஜெபித்துவருதல் வேண்டும், தனிப்பட்டோர் இக்கூட்டங்களுக்காய் ஜெபித்தல் அவசியம். அவர்கள் தங்களது சொந்த வட்டாரங்களில் இவைகளைக் குறித்து அறிவித்து வருதல் மிகவும் அவசியம். "கர்த்தாவே, எங்களுக்குள் எழுப்புதலை அனுப்பும்" என ஜெபிக்கத் தலைப்படுதல் வேண்டும். இது பொதுவாய் ஜெபிப்பதாய் இருக்கிறது, கர்த்தர் உங்களுக்கு வெளிப்படுத்தி, எந்த ஒரு காரியத்திற்காக குறிப்பிட்டு ஜெபித்தல் வேண்டும் என உங்களுக்குக் காட்டுகிறாரோ அவற்றிற்காக ஊக்கமாய் ஜெபித்து வாருங்கள். தேவன் குறிப்பிட்டு ஜெபிக்கும் காரியங்களுக்கு பதில் அளிக்க வாஞ்சையுடன் இருக்கிறார், சபையானது அற்பணிப்புள்ளதாயும், தெய்வீக கண்ணோட்டமுடையதாயும், ஆயத்தமுள்ளதாயும் இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் சபையானது ஆறுமாதங்களுக்கு முன்னிருந்தே, ஆவிக்குரிய தேவைகளுக்காக ஜெபிக்கத் துவங்கியிருத்தல் வேண்டும்.

குறிப்பு: சபை திட்டமிட்டு செயல்படுதல் மிகவும் அவசியமான ஒன்று. நீங்கள் ஒரு போதகராய் இருப்பீர்களானால், திட்டமிடுதலுக்கான கூட்டத்தை ஒழுங்கு செய்தல் வேண்டும். மற்றும் ஜெபக் கருத்தரங்கை ஒழுங்கு செய்தல் வேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் கர்த்தர் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை அறிந்து, அதற்காக ஊக்கமாய் ஜெபித்து, அவற்றை செயல்படுத்தி கர்த்தரைப் பிரியப்படுத்துதல் வேண்டும். ஜெபவீரர், வீராங்கனைகளுக்கு முறையாய் பயிற்சி அளித்தல் வேண்டும். அவர்களுக்கு ஜெபப்பட்டியலை அளித்து முறையாய் ஜெபிக்க ஊக்கமளித்தல் வேண்டும். இப்படிப்பட்ட ஊழியங்களை மனமுவந்து செய்ய முன்வருவோருடன் ஞானமாய் பேசி, அவர்களை ஊக்கப்படுத்துதல் அவசியம். இப்படிப்பட்டவர்கள் சிறப்பாக தங்களது பணிகளை செய்து நிறைவேற்றும் போது, இன்னும் உன்னத காரியங்களில் அவர்கள் எதிர்காலத்தில் பயன் படுத்தப் போவதைக் குறித்து அவர்களுக்கு தெரிவித்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஏனோதானோவென்று அமர்ந்து கொண்டு, சுவிஷேசக்கூட்டங்களை ஆயத்தப்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். ஆரம்பகால சபையில், திட்டமிட்டு ஜெபித்து, அவற்றை செயல்படுத்துவதற்கான நபர்களை நியமித்து, தேவப்பணியை நிறைவேற்றி வந்தனர்.

[3] விஷேச வெளி ஊழியங்கள் எவ்வளவு காலம் இருத்தல் வேண்டும்? மூடிப் பிரசங்கியாரும், பில்லிகிரகாம் அவர்களும் ஞாயிற்றுகிழமையில் விஷேசித்த வெளிக்கூட்டம் நடத்தினர், பின்னி அவர்களது சுவிஷேசக் கூட்டங்கள் அநேக மாதங்கள் நடைபெறுவதாய் இருந்தன. குறைந்தபட்சம் இருவாரங்கள் முகாமிடுவது சிறப்பாய் இருக்கும். விசுவாசிகள், ஒரு டஜனுக்கும் அதிகமான அவிசுவாசிகள் அவர்களது ஜெபப் பட்டியலில் இருப்பார்களானால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் இரவு உணவு வழங்கிய பின்னர், அவர்களை கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வது, நற்பயனை அளிப்பதாய் இருக்கும்.

அவர்களைக் குறித்து உங்களுக்குள்ள கரிசனையை அவர்களுக்குக் காட்டுங்கள், அவர்களுக்கு ஐக்கியத்தின் மேன்மையை விளங்கும்படி செய்யுங்கள். அவர்களுடன் உணவு அருந்தும்போது, உங்கள் அன்பை அதிகமாய் அவர்களுக்கு விளங்கப்பண்ணுங்கள், அப்பொழுது அவர்களது மனநிலையானது, கூட்டத்தில் பிரசங்கிக்கப்படும் செய்திக்கு அவர்கள் செவிசாய்க்க ஏதுவுண்டாக்கும். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் வாழ்வில் கிரியை செய்ய ஒரு தருணம் உண்டாகும், பரிசுத்தாவியானவரது கனியானது உங்களில் முதலாவது கிரியை செய்வதாக.

ஒவ்வொரு நபரும் கூட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பங்கேற்கும் மனநிலையுடன் இருப்பார்களாக. அவர்களது முழுமையான அற்பணம் என்பது, அத்தியாவசியமான ஒன்றாய் இருக்கிறது.

[4] சுவிஷேசகரைத் தெரிவு செய்தல். பரிசுத்த ஆவியானவராகிய தேவன், எல்லா தரப்பட்டவர்களையும் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். இருப்பினும் சுவிஷேசகர் ஆவியானவரின் வரம் பெற்ற நபராய் இருந்து, அதை அவர் ஊழிய செயல்பாடுகளில் விளங்கச் செய்கிறவராய் இருத்தல் அவசியம். அவரது வாழ்வில் பரிசுத்தம் இருத்தல் வேண்டும், வேதவசனங்களை துள்ளியமாய் பிரசங்கம் செய்ய அறிந்தவராய் இருத்தல் வேண்டும். சுவிஷேசகர் யாராய் இருத்தல் வேண்டும் என நாம் தேவனுக்கு கட்டளையிடுதல் கூடாது. நாம் ஜெபத்துடன் இவ்விஷயத்தில் கர்த்தரை அணுகி, அவர் வழிநடத்துகிற பிரகாரம் சுவிஷேசகரைத் தெரிவு செய்தல் வேண்டும். ஆணோ அல்லது பெண்ணோ பிரசங்க பீடத்தில் நிற்பது ஒரு பொருட்டல்ல, அவர்கள் அளிக்கும் செய்தியே மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. சுவிஷேசகர் அவர்கள் ஆணோ அல்லது பெண்ணோ ஒரு பொருட்டல்ல, அவர்களது அற்பணிப்பு, மற்றும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு செயல்படுவது அதிக முக்கியமானதாய் இருக்கிறது. பெரிய பெயர்களைக் கொண்டு அறியப்படுகிறவர்களைவிட, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட, பரிசுத்த வாழ்க்கை செய்கிற சுவிஷேசகரை தெரிவு செய்தல் அவசியமானதாய் இருக்கிறது. வேதவசனங்களின் எச்சரிப்பை நாம் நினைவுகூற வேண்டியது அவசியமான ஒன்றாய் இருக்கிறது, போலியான பிரசங்கிமார்களையும், தீர்க்கதரிசிகளையும் தெரிவு செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும், போலியான, தெய்வீக பண்புகளற்ற பிரசங்கியார்கள், மாம்சீகப்பிரகாரமாய் நடந்து, அவர்கள் போதனைகள் தவறாய் இருந்து, அவற்றின் விளைவாய் தீமைகள் பெருக வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது.

[5] உபகரணங்கள் - சுவிஷேசக் கூட்டம் நடத்த தேவையான இடம் மற்றும் உபகரணங்கள் [இருக்கைகள், மற்றும் இதர உபகரணங்கள்] உங்களுக்கு அவசியமான ஒன்றாய் இருக்கிறது. இதைக் குறித்து முன்கூட்டியே சிந்தித்து செயல்பட வேண்டியது அவசியம். ஆலோசனை அளிப்பதற்கான அறைகள் அல்லது இட ஒழுங்கு செய்வது குறித்து கவனமாய் இருத்தல் வேண்டும். கூட்டம் நடத்த தேவையான அனைத்து உபகரணங்களையும் பெட்டிகளில் வைக்கப்பட்டு, அவைகள் ஒரு நாள் முன்னதாகவே, கூட்டம் நடத்தப்படும் இடத்திற்குச் சென்றடைவது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. ஒலி, ஒளி அமைப்புகள் குறித்து முன்கூட்டியே பரிசீலனை செய்து இருத்தல் அவசியம். அங்கு திருட்டுக்கு இடமளியா வண்ணம், பாதுகாப்பு ஒழுங்கு செய்தல் அவசியம். இதற்கான திட்டமும் ஒழுங்கு நடவடிக்கைகளும் சரியாய் எடுக்காத நிலையில் சத்துருவுக்கு, தேவ நோக்கம் நிறைவேறா வண்ணம், தருணங்களை அளிக்கிறவர்களாய்க் காணப்படுவோம். ஒரு வேளை உங்களது பாதுகாப்பு கவனக்குறைவால், ஒலிபெருக்கி அமைப்புச் சாதனங்கள் திருட்டு போக நேரிட்டால், சுவிஷேச செய்தியை அறிவிக்க தடை உண்டாகி சத்துருவை அனுமதித்தற்கு நீங்கள் உடந்தையாய் காணப்படுவீர்கள்.

[6] நிர்வாகம் - இசை மற்றும் பாடல்கள், செய்திக்கு ஒத்துப்போகுமாறு ஒருங்கிணைப்பு செய்தல் குறித்த நிச்சயம் இருத்தல் வேண்டும். பாடல்கள் மிகக்கவனமாய்த் தெரிவு செய்தல் அவசியம், அல்லது வரம் பெற்ற, மற்றும் ஆவியானவரால் நடத்தப்படுகிற துதி ஆராதனை செய்யும் தலைவர்களை தெரிவு செய்து அவர்கள் பாடல் ஆராதனையை நடத்த ஏற்படுத்துவது நல்லது. ஆவியானவருக்கு முற்றிலும் இடமளித்து சகலமும் நல்லொழுக்கமும் கிரமுமாய் செய்யப்படுதல் மிகவும் அவசியம், இப்படிப்பட்ட கூட்டங்களில், எவ்வித ஒழுங்கீனமோ, குழப்பமோ இருக்க அனுமதித்தல் கூடாது. இசைக் குழுவினர் எப்பொழுதும் சபையில், கலகம் செய்வதற்கு மையமானவர்களாய் காணப்படுவர், அவர்கள் கர்த்தருக்காய் செயல்பட வைராக்கியமுள்ளவர்களாய் இருக்கப் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். சுயநல வாதியாக, தங்களையே மையமாய்க் கொண்டுள்ள பெருமை நிறைந்த இசை வல்லுநர்கள், மற்றும் பிரசங்கியார்கள் போன்றோரே, தேவனது திட்டத்திற்கு விரோதமான கலகத்திற்கு காரணமாய் அமைவர், இவர்கள் தங்களை மையமாய் கருதாது, கிறிஸ்துவை மையமாய்க் கொண்டு செயல்பட இவர்களை புதிப்பித்தல் மிகவும் அவசியமாய் இருக்கிறது. ஆவியானவரால் நிரப்பப்பட்ட இசை வல்லுநர்கள், மற்றும் பிரசங்கிமார்கள், மிகவும் வல்லமையாய் பயன்படுத்தப்படுகிறவர்களாய் இருக்கின்றனர், சுயத்தால் நிரப்பட்ட இசை வல்லுநர்கள் மற்றும் பிரசங்கிமார்கள் தங்களில் தாங்களே பிசாசாய் செயல்படுகிறவர்களாய் இருக்கின்றனர்!

சில வேளைகளில் பாடற்குழுவானது, தவறான உபதேசங்களைத் தழுவிய பாடல்களைப் பாடக்கூடும், ஆகையால், பாடப்போகிற பாடல்களின் கருத்து வேதாகம சத்தியத்தினை சார்ந்து இருக்கிறதா, அவைகள் பாடும் போது வல்லமை வெளிப்படுகிறதா எனப்பரிசீலனை செய்து, பாடற்குழுவை பாட ஊக்கமளித்தல் வேண்டும். இக்காலமானது "இசைக்கு முக்கியத்தும் அளித்து அவற்றை ரசித்து மகிழ்கிறகாலமாய் இருக்கிறது" ஒரு நபர் பாடக்கூடிய குரல் இல்லையேல்

அவரைப் பாட அனுமதியளித்தல் கூடாது. கர்த்தர் அவசியமான திறமைகளையும், வரங்களையும், தாலந்துகளையும் அளிக்கிறவராய் இருக்கிறார், ஜெபித்து சரியான காரியங்களுக்குப் பயன்படுத்த, சரியானவர்களை தெரிவு செய்யுங்கள். மக்களுக்கு பயிற்சி அவசியமானால் அதைக் குறித்து அவர்களுக்கு கூறுங்கள்! தெய்வீகக் குணம் படைத்தவர்கள், சரிசெய்தலை ஏற்றுக்கொள்வர், திமிர் பிடித்தவர்கள் விட்டு விலகிச் செல்வர். அப்படி செல்கிறவர்கள் செல்லட்டும்! சபையில் தன்னையே மையமாய் கொண்டு வாழும் சுயநலவாதிகள் நறுக்கப்படுவார்களாக, சபையின் வல்லமையானது காக்கப்பட இவர்கள் சபையில் இருந்து அகற்றப்படுவது அவசியம்.

ஞானப்பாட்டுக்கள் கவிதையாய் இருந்து, வேதாகம சத்திய உபதேசத்திற்கு ஆதரவாய் எழுதப்பட்டுள்ளன, இவைகள் வேதாகமப் போதனைக்கு ஆதரவளிக்கக்கூடிய வகையில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.. சபை ஆராதனையில் திறவுகோள் உபகரணம் என்பது தேவனது வார்த்தையைப் போதிப்பதாய் இருக்கிறது, பாடல்கள் அல்ல என்பதனைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். ஆராதனையில் இசைக்கான நோக்கம் என்னவெனில், கவர்ந்து இழுத்து, கருத்தை உணரச் செய்வதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட இசையானது சுவிஷேச ஊழியம் செய்பவர் மற்றும் பிரசங்கிப்பவர் போன்றொருக்கு, அறிவிக்க இருக்க இருக்கும் சத்தியத்திற்கு நேராக வழி உண்டாக்கிக் கொடுப்பதாய் இருக்கிறது. இசையானது எழுப்புதலுக்கு அற்புதமானவிதத்தில் வழியுண்டாக்கிக் கொடுக்கிறதாய் இருக்கிறது. ஆகையால் இசையை முறையாய்க் கையாளுதல் வேண்டும், இல்லையேல் முழுமையையும் அது பாழாக்கி நாசப்படுத்திவிடும். இசையின் இயக்குநராய் இருப்பவர், முதிர்ச்சியடைந்த ஆவிக்குரிய நபராய் இருப்பது மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது. சார்லஸ் வெஸ்லி அவர்களது ஊழியத்தில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்திய இசை இயக்குநரை நினைவில் கொள்வது அவசியம்.

கைப்பிரதிகள் அச்சிடப்படுதல் வேண்டும். இக்கூட்டங்களில் வேதாமத்தை வழங்க இருக்கிறீர்களா அல்லது கைப்பிரதிகளை வழங்க இருக்கிறீர்களா? என்பதை முன்கூட்டியே தீர்மானித்தல் அவசியம்.

கூட்டங்களுக்கான விளம்பரப் பலகைகளை, மக்கள் காணும்படியான இடங்களில் வைத்தல் வேண்டும், அவைகளில் மக்களைக் கவரக்கூடிய வாசகங்கள் இருத்தல் வேண்டும். நமது குறிக்கோள் சந்திக்கப்பட, அவ்விளம்பரங்கள் கவர்ச்சிகரமாய் இருத்தல் அவசியம். விளம்பரப்படுத்துதல், அவிசுவாசிகள் மனசாட்சியில் தங்கியிருந்து, அவர்களது ஆர்வத்தைத் தூண்டுவதாயும், ஆவர்களைச் சிந்திக்க வைப்பதாயும் இருத்தல் வேண்டும். இது மட்டுமின்றி இக்கூட்ட வெற்றிக்காக எதையெல்லாம் செய்ய இயலுமோ அவற்றையெல்லாம் செய்தல் வேண்டும்.

[7] வேண்டுகோள். - சபையின் கொள்கைகளைக் குறித்து சுவிஷேசகர் முன்கூட்டியே அறிந்திடச் செய்தல் வேண்டும், இதன்பின்னர் அதற்கேற்ப அவர் எத்தகைய வேண்டுகோள் விடுக்க வேண்டும் என அறிந்து செயல்படுதல் அவசியம். தனிப்பட்ட வேண்டுகோள், மற்றும் பொதுவான வேண்டுகோள்கள் கொடுக்கும்போது, சபையோருக்கு ஸ்பர்ஜன் அவர்கள் விடுத்த வேண்டுகோள்களைப்போன்று மிகவும்

பயனுள்ள வேண்டுகோள்களைக் கொடுத்தல் மிகுந்த பலனை அளிப்பதாய் இருக்கும். அவர் வாரத்தின் எல்லா நாட்களிலும் சுவிஷேச செய்தி அளித்துவந்தார். அவர் ஒரு வேண்டுகோளையும் அவர்களுக்கு அளிக்கவில்லை. மாறாக சபையினர் சுற்றுச் சூழலை கவனித்துக் கொள்ள அவர் எதிர்பார்த்தார். கூடுகையில் எந்த ஒரு நபர் பரிசுத்த ஆவியானவரால் தொடப்படுகிறார், எனப் பார்த்திருந்து அப்படிப்பட்ட நபர்களை அணுகி, அவர்களுடன் ஜெபித்து, பின்னர் அவர்களைக் கர்த்தருக்குள் வழிநடத்தினர். அவர் தேவனது வார்த்தையை வாரத்தில் ஐந்து அல்லது ஆறுமுறை பிரசங்கித்து வந்தார், இவ்வாறு பல ஆண்டுகள் செய்து வந்தார், தனது சபையாரை மேற்சொன்னவாறு கூட்டத்தில் செயல்பட பயிற்றுவித்திருந்தார். அதைப் போன்றே போதகர்களாகிய நாமும் செய்தல் சிறப்பாய் இருக்கும்!

[8] பிரசங்கம் செய்தல்: - "புதிய ஏற்பாட்டு சுவிஷேசகர்கள் உறுதியான ஊழியத்தினைப் பெற்றிருந்தனர்" பின்னி அவர்கள் இவ்வாறு கூறுகிறவராய் இருக்கிறார். "ஆரம்ப கால சுவிஷேசகர்கள், மற்றும் பிரசங்கிமார்கள் போன்றே, நவீன கால சுவிஷேசகர்களது பிரசங்கம், நடைமுறையானது, நேரடியானது, பாவிகளைக் கிறிஸ்துவுக்காக வேட்டையாடி, அவர்களைக் குற்றமனசாட்சி அடையச் செய்தல், அவ்வாறு அவர்கள் உணரும்போது, தாங்கள் துரதிஷ்டசாலிகள் என உணராதிருக்க செய்கிறவர்களாய் இருந்தனர்." பாவிகள் செய்ய வேண்டிய சில காரியங்கள் உண்டு, என அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும், அது மனந்திரும்புதல், மற்றும் கிறிஸ்துவின் பாதத்தில் விழுதல் அதுவே அவர்களுக்கிருக்கும் ஒரே நம்பிக்கை. பாவிகளின் சாக்குப்போக்குகள், துடைத்தெறியப்படுதல் வேண்டும், சுவிஷேசத்திற்கான மறுப்பும் அவ்வாறே செய்யப்படுதல் வேண்டும், மனந்திரும்புதல் பிரசங்கத்திற்குள்ளாய் நிகழுதல் வேண்டும்.

சுவிஷேச பிரசங்கியார் தனது பிரசங்க கருத்துக்களை சுருக்கமாய் முதல் ஐந்து நிமிடங்களுக்குள் சொல்லி முடித்தல் மிகவும் அவசியம். இந்த சந்தர்ப்பத்தில், நீங்கள் ஜனங்களைது ஆத்துமாவைக் குறித்து கரிசனை உள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவர்கள் விமர்சனங்கள் மற்றும் தவறான எண்ணங்கள் திசைதிருப்பப்படுதல் வேண்டும். எபிரெயர் 4:12 ல் தேவனது வார்த்தையானது, இருபுறமும் கருக்குள்ள பட்டம் என கூறப்பட்டுள்ளது. ஒரு பிரசங்கியார் தேவனது வார்த்தையை அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்துதல் வேண்டும். பெரிய பெரிய வார்த்தைக் கூறி மக்கள் புரிந்து கொள்ள இயலாதவாறு செய்தல் கூடாது. ஜனங்கள் கூட்டத்தை விட்டு களைந்து செல்லும் போது, கர்த்தர் எவ்வளவு பெரியவர் எனக் கூறிக்கொண்டு செல்ல வேண்டும், நீங்கள் எவ்வளவு பெரிய சொற்பொழிவாளர் என கூறிக்கொண்டு செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். 1 கொரிந்தியர் 2:1-4. வேதபகுதியை வாசிக்கவும். பரிசுத்தாவியானவர் ஜனங்களைக் கட்டவிழ்த்து விடட்டும். ஜெபத்தின் மூலமும், வேதாகமப் போதனைகள் மூலமும்; கர்த்தரை உயர்த்துவதன் மூலம், ஜனங்கள் கிறிஸ்துவண்டை இழுத்துக்கொள்ளப்பட்டு, இரட்சிப்படைதல் வேண்டும். யோவான் 3:14, 8:28-32, 12:31-33. இவ்வசனங்களைக் கருத்தாய் வாசித்து, இவ்வசனங்கள் உங்கள் சுவிஷேச ஊழியத்தின் இருதயமாய் [மையமாய்] திகழட்டும்.

தூங்கிக்கொண்டிருக்கும் பாவிகளைக் கர்த்தர் எழுப்பும்போது, அவர்கள் விழித்துக் கொள்கிறவர்களாய் இருக்கின்றனர் என்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும். நீங்கள் அவர்களுக்கு நற்செய்தியை அளித்ததினால், அவர்கள் எல்லோரும் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் என எதிர்பாராதிருங்கள். பாவத்தைக் குறித்தும், அதன் தண்டனைக் குறித்தும் பேசி, சிலுவையில் இரட்சிப்படைய செலுத்தப்பட்ட தியாக பலியை மிகைப்படுத்திக் கூறுங்கள், மற்றும் திறந்து வைக்கப்பட்டக் கல்லறையின் வல்லமை குறித்து பிரசங்கம் செய்யுங்கள், காரணம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் மட்டுமே ஜனங்களை இரட்சிப்பிற்குள் வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

10. போதகர் மற்றும் சுவிஷேச ஊழியர் வாழ்க்கையும், சாட்சியும்:

நாம் தேவ ஊழியராய் இருப்பதால், நமது வார்த்தை மற்றும் செயல்கள் உன்னதத்தன்மை நிறைந்து விளங்குதல் வேண்டும், நமது பழக்கவழங்கள், நடத்தை சுத்தமாய் இருத்தல் வேண்டும், கிருபை மற்றும் தயைப் பொருந்திய வாழ்க்கையினால் நாம் அறியப்படுதல் வேண்டும். பரிசுத்தாவியானவரது கட்டுப்பாட்டிற்குள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நமது வாழ்வில் பதிலைக் கண்டுகொள்வதாய் அமைதல் வேண்டும். இப்பகுதியில் உங்களை சோதித்து அறிந்து கொள்ள சிறிய பரீட்சையை உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன். எந்த குறிப்பிட்ட சூழலிலும் நீங்கள் பேசும் முன்னர், என்ன சொல்லப்போகிறீர்கள், நீங்கள் சொல்வது மெய்தானா, அது அவசியம்தானா, அது கிறிஸ்துவைக் கனப்படுத்தக்கூடியதாய் இருக்கிறதா? எனக் கேள்விகளைக் கேட்டு உறுதி செய்து கொண்டு கூறுதல் வேண்டும். அதற்கு நீங்கள் "இல்லை" என்கிற மறுமொழி அளிப்பீர்களானால், அதைக் குறித்து நீங்கள் பேசுதல் தவிர்க்கப்பட்டு அமைதியாய் இருத்தல் வேண்டும். **மத்தேயு** 12:33-37 வரையுள்ள வேதபகுதியை வாசித்தறியவும். உங்கள் வாழ்வின் ஜீவியம் மற்றும் சாட்சி எத்தகையது என அறிந்து கொள்ளவும்.

நாம் செய்வதிலும், சொல்வதிலும் கட்டுப்பாடு இல்லையேல், நாம் கர்த்தரை அவமதிக்கிறவர்களாய் இருப்போம். நாம் பேசுவது, ஏதோ விலைமதிப்பற்ற காரியமல்ல, விலையேறப்பட்ட இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்படுவதைக் குறித்து பேசுகிறவர்களாய் இருக்கிறோம். இராஜாதி இராஜாவின் அறிவிப்பாளராய் இருக்கிறோம், ஆகையால், நாம் வாயிலிருந்து சத்திய வார்த்தைகள் புறப்பட்டு வருதல் வேண்டும், அவமரியாதைக்குரிய வார்த்தைகள் எதுவும் புறப்பட்டு வரலாகாது. நாம் எப்பொழுதும், எல்லா சூழலிலும் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாய் இருக்கிறோம், நாம் பேசுவதும், நடந்து கொள்ளுதலும் அதற்கிசைய இருப்பது அவசியம்.

கட்டுப்பாட்டை இழந்து, புறஜாதியாரைப் போன்று வாழ்தல் எளிதான காரியம், ஆனால் ஒரு சுவிஷேசப் போதகராகிய நீங்கள் எல்லாவித கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். உங்களுக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் படியே, சத்தியத்தின் வெளிச்சத்தில், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் என்பது குறித்து, ஒவ்வொரு சூழ்நிலையிலும் சிந்தனையுடன் காணப்பட வேண்டியது மிகவும் அவசியம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு, சுதந்திரம்

என்பது அளிக்கப்பட்டிருக்கிறது, இருப்பினும் நமது முழுமையான சுதந்திரம் என்பது மற்றவர்களை அடிமைத் தனத்திற்குள் கொண்டு செல்கிறதாய் இருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். நாம் நமது சுதந்திரத்தை பயன்படுத்துதல் வேண்டும், அதே சமயம் மற்றவர்களது சுதந்திரமானது மீறப்படுகிற அளவுக்கு, நமது சுதந்திரத்தைப் பயன்படுத்துவது குறித்து எச்சரிக்கையுடன் இருப்பது, நமது கடமையாய் இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் கடமை உணர்வுடன் செயல்படுதல் வேண்டும். (எபேசியர் 5:15), நமது கடமையின் மையமானது, நமது கர்த்தராய் இருக்கிறது, அவருக்காக பிசாசுகள் நிறைந்த இவ்வுலகில், நிலை நிற்பது என்பது நமது கடமையின் மையமாய் இருக்கிறது. இருள் சூழ்ந்த இடங்களில் நாம் வழிகாட்டும் ஒளியாய் இருக்கிறோம் என்பதை இதற்குமுன்னதாக பார்த்திருக்கிறோம். மத்தேயு 5:14-16.

11. எழுப்புதல் பணிக்கான அற்பணம் முழுமையாய் இருத்தல் அவசியம்:

1 கொரிந்தியர் 10:22-33 வரையுள்ள வேத வசனங்களை வாசியுங்கள்: ஒரு போதகர் மற்றும் சுவிஷேசகரின் தராதரம் குறித்து இங்கு நாம் காண்கிறோம், இரட்சிக்கும் கிறிஸ்துவுக்கு முன்பாக, எல்லாவற்றையும் இரண்டாம் இடத்தில் வைத்தல் வேண்டும். உங்களது முழுக்கவனமும் அவர் மீது இருத்தல் வேண்டும், இதினிமித்தம் நீங்கள் பேசுகிறவர்களிடத்தில், எவ்வித எதிர்ப்புமின்றி, கிறிஸ்துவைக் குறித்து தங்கு தடையின்றி அறிவிப்பதற்கு ஏதுவுண்டாக்கும். நீங்கள் உங்களது சொந்த காரியங்களைக் குறித்து பேசுவதை நிறுத்திவிட்டு, அவர்களை கர்த்தருக்குள் வழிநடத்த முயலுதல் வேண்டும். நீங்கள் இங்கிருப்பது அவருக்குப் பணிவிடை செய்யும்படியாய், இருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுதல் அவசியம்.

பவுல் கூறும்போது, புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் அவற்றைக் கர்த்தருக்கென்றும், அவரது நாம மகிமைக்கென்றும், ஆத்துமாக்கள் கிறிஸ்துவுக்காய் ஆதாயப்படுத்தப்படும் தருணத்தை எதிர்பார்த்து, அதைச் செய்யுங்கள் என்கிறார். கிறிஸ்துவில் எல்லாவற்றையும் செய்ய நமக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது, எந்த ஒரு காரியமும் தேவனால் நமக்கு ஒதுக்கி வைக்கப்படவில்லை, இருப்பினும் நாம் செய்வது நமது சாட்சியினை பாதிக்கும் எனில், அவைகளைச் செய்யும்படி துணிதல் கூடாது.

ஸ்பர்ஜன் அவர்கள் கூறும்போது, சட்டரீதியான ஒரு காரியத்தை நீங்கள் ஒருவருக்குச் செய்து அதனால் பிரச்சனை உருவாகும் என்றால், அத்தகைய காரியத்தை செய்வதை நிறுத்திவிடுதல் வேண்டும், அவ்வாறு செய்வதன் மூலம், சுவிஷேசம் அறிவிக்க அவர்களை அணுகுதல் சாத்தியமாகும். நீங்கள் உங்கள் வாழ்வில் செய்யும் எந்த ஒரு காரியமானாலும், அது மற்றவர்களுக்கு தடைகற்களாய் விளங்குமேயானால், அதைக் கிறிஸ்துவின் நிமித்தம் விட்டு விடுங்கள் என்கிறார். . கலாத்தியர் 5 11, ரோமர் 9: 33, 1 பேதுரு 2 : 8.

குன்றின் மீது ஒரு விளக்கை வைத்துவிட்டு, அதை மறைத்து வைக்கமாட்டீர்கள். நாம் இவ்வுலகிற்கு ஒளியாய் இருக்கிறோம், சுவிஷேசமானது, நம்மிலிருந்து ஒளிர்விடுதல் வேண்டும். நாம் பரிசுத்த வாழ்வைக் குறித்துப் பேசுகிறவர்களாய்

இருக்கிறோம். கர்த்தர் தமது சேவகர்கள் எரிந்து பிரகாசிக்கும் விளக்காய் இருக்க விரும்புகிறார். விளக்கில் உள்ள கருந்திரிகள் அகற்றப்பெற்று, புகையின்றி எரிகின்ற சுடராய் இருத்தல் வேண்டும்.

கர்த்தருக்காக எரிந்து பிரகாசிக்க தடையான எந்த ஒரு காரியமானாலும் அவற்றை அகற்றி விடுவது இதன் பொருளாகும். ஆவியானவராகிய தேவனது பிரமாணத்தின் கீழ் நிலைத்திருந்து, பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும். 2 கொரிந்தியர் 4:3-4. நம்மில் எந்த ஒரு காரியமும், அவிசுவாசியை சத்தியத்தை அறியவிடாதக் குருட்டுத் தன்மைக்கு வழிநடத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும், அல்லது நமது வாழ்வானது அவர்கள் தீர்மானம் எடுக்க எவ்வித குழப்பத்தையும் அவர்களுக்கு அளித்தல் கூடாது.

12. பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் செய்கிறார் என்பதற்கு நம்மிலிருந்து வெளிப்படும் அன்பு ஆதாரமாய் இருக்கிறது.

1 கொரிந்தியர் 10 ம் அதிகாரத்தில் வசனம் 31 முதல் 33 வரையுள்ள வேதபகுதியில், இப்படிப்பட்ட சத்தியமானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு விசுவாசியின் செயல்பாடானது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை மகிமைப் படுத்த வேண்டும். அகாப்பே அன்பின் அடிப்படையானது, மற்றவர்களைக் குறித்த கரிசனையாய் இருக்கிறது, அது உங்களைக் குறித்த கரிசனை அல்ல என்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும். நமக்குரிய "உரிமைகள்" அனைத்தும் இரண்டாம் இடத்தை வகித்தல் வேண்டும், உண்மையான கர்த்தருடைய சேவகர், "தனது உரிமைகளுக்காய்" ஒரு போதும் போராட மாட்டார்கள், அவர்கள் தேவனது வசனத்திற்காய் உறுதியாய் நின்று, அதை அளித்தவருக்கு பணிவிடை செய்ய முன்வருகிறவர்களாய் இருப்பர்.

அகாப்பே அன்பானது அமைதிமிக்கதும், கர்த்தருடைய பணியில் கண்ணோக்கமாய் இருந்து, அதை நிறைவேற்றச் செய்வதுமாய் இருக்கிறது. ஒருவர் உங்களை நிந்திக்கும் போது, அவர்களை நீங்கள் திரும்ப நிந்தித்தல் கூடாது, மாறாக அவர்களுக்கு சத்தியத்தை அளியுங்கள். திரும்பவும் அவர்களுக்கு உபதேசத்தை அளியுங்கள். அவர்கள் உங்களுக்கு வெறுப்பை அளித்து இருக்க, அவர்களுக்கு அன்பை அளியுங்கள். நீங்கள் எதைச் செய்தாலும், அதைக் கர்த்தருக்கென செய்யுங்கள். கர்த்தருடைய ஊழியத்தில், எப்பொழுதும் உங்கள் முதுகில் தட்டிக்கொடுத்துக்கொண்டே இருப்பார்கள் என எதிர்பார்த்தல் கூடாது. மனிதரிடத்தில் அதற்காய் காத்திருத்தலும் கூடாது. நமது வேலை அவிசுவாசிகளை இரட்சிப்பிற்கும், மாம்சீகமாய் ஜீவிக்கும் விசுவாசிகளை பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் வழிநடத்துதலாய் இருக்கிறது. அன்புடன் சத்தியத்தை அறிவித்து, அதற்காய் போராட வேண்டியிருக்கிறது, கசப்புணர்வுடன் அல்லது பலிக்கு பலிவாங்கும் உணர்வுடன் சத்தியத்தை பிரசங்கித்தல் கூடாது.

இது 1 **கொரிந்தியர்** 13:1-13 வரையுள்ள வேதபகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வேதபகுதியை எடுத்து வாசியுங்கள். இது நமது நோக்கம் அனைத்தும் அன்புடன் இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறது. இது உங்களது சாட்சியாய் இருக்கிறதா? இல்லையெனில், உங்கள் குறைகளை அறிக்கை செய்தல் மூலம், மற்றும் உங்களது

அற்பணத்தினால் சரிசெய்து கொள்ளுங்கள். அவிசுவாசிகளுக்காய் செலுத்தப்படும் பணயம் மிகவும் உயர்ந்ததாய் இருக்கிறது, அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில், அவர்கள் தங்களது நித்தியத்தை நரகத்தில் கழிக்க நேரிடும், அவர்கள் உங்களுக்கு செய்த தீங்கிற்காய், அவர்களுக்கு இத்தகைய தண்டனை வேண்டும் என அவர்களை புறக்கணித்தல் கூடாது.

"நல்லொழுக்கம்" என்பதற்கு வேதாகம விளக்கமானது, உலகத்தின் தராதரத்தைவிட, எவ்வளவோ உயர்ந்ததாய் விளங்குகிறது, உலகத்தில் உள்ள புத்தகங்கள், இதைக் குறித்து போதிப்பதெல்லாம் நீங்கள் மாய்மாலக்காரனாய், மாய்மாலம் செய்வதற்கு ஏதுவாய் இருக்கிறது. அவிசுவாசியையும், மாம்சீகமாய் ஜீவிக்கிற விசுவாசிகளையும் நேசித்து, அவர்களில் போதிய அளவில் அன்புகூர்ந்து, சுவிஷேச செய்தியை அவர்களுக்கு அளித்தல் வேண்டும், அவர்களது இரட்சிப்பிற்காய், ஆத்தும ஈடேற்றத்திற்கு எத்தகைய கிரயமானாலும் நீங்கள் கொடுக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். தேவ ஊழியராகிய உங்களுக்கு, இதுவே உங்களது வாழ்வின் நோக்கமாய் இருத்தல் வேண்டும். உங்களது சபையில், "அருவருப்பான" தீமைவிளைவிக்கக்கூடிய பரிசுத்தவான்களை காண நேரிடும், அப்படிப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைதோறும், தேவனது வார்த்தையை சாந்தமாய் உபதேசித்தல் வேண்டும்.

தேவ ஊழியராகிய நீங்கள் இப்படிப்பட்டவர்களுக்கு தெய்வீக அன்பை அளித்தல் வேண்டும். இறுதி மூச்சுவரை அவர்களை மன்னித்து, அவர்களில் அன்புகூறுதல் வேண்டும். மத்தேயு 18:22. ஜனங்கள் உங்களை எதிர்க்கும் போது, அதைத் தனிப்பட்ட விதத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது, அதை கர்த்தரிடத்தில் எடுத்துச் சென்று அவரிடத்தில் அவற்றை அற்பணித்துவிடுதல் வேண்டும். 1 பேதுரு 5:6-11.

2 கொரிந்தியர் 6:1-10 வரையுள்ள பவுலின் வார்த்தைகளை வாசியுங்கள். பவுல் மனப்பூர்வமாய் எல்லாவற்றையும் நன்கு சகித்தார், அதைக் குறித்து எவ்வித எதிரிடையான கருத்தையும் தெரிவிக்கவில்லை. பட்டை, பட்டையான வாரடிகளும், சவுக்கும் பல தடவைகள் அவரது முதுகை ஆழமாய்க் கிழித்தன. அவர் அடிக்கப்பட்டு சிறைச்சாலைக்குட்படுத்தப்பட்டார். பிலிப்பி சிறைச் சாலையில், அவர் பாடிக் கர்த்தரை மகிமைபடுத்தினார், அவரது சாட்சியாலும், அவரது பாடுகளாலும், அநேகரை கர்த்தரிடம் வழிநடத்தினார், அவரது கண்கள் கர்த்தர் மீதே பதிந்து இருந்தது, தனது காயங்களை அவர் பொருட்படுத்தவில்லை. இதைப்போன்றே நமது சாட்சியும் அமைதல் வேண்டும்.

கர்த்தரது சேவகனாய் இருக்கும் போதகர் சுத்தமான, தகுதியான ஆடை அணிதல் அவசியம், நீங்கள் சாட்சி பகரும் கலாச்சார சூழலுக்குத் தக்கவாறு, ஆடை அணிந்து, அதில் அக்கரை செலுத்துகிறவராய் இருக்கிறீர்கள் என்பதை ஜனங்கள் காணவேண்டும், ஜனங்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு சென்று அவர்களைச் சந்தித்தல் வேண்டும்.

நீங்கள் எப்பொழுதும் பண்பாடு நிறைந்தவராய் இருத்தல் வேண்டும், ஒரு நபர் தலைப்பைக் கொண்டு அறியப்பட்டு அழைக்கப்பட்டுவரானால், அத்தலைப்பை நீங்களும் பயன்படுத்துதல் வேண்டும். உங்கள் பேச்சு சுத்தமானதாயும்,

முழுமையானதுமாய் இருத்தல் வேண்டும், ஜனங்களை கட்டி எழுப்பி உயர்ந்த அந்தஸ்துக்கு கொண்டு செல்லுதல் வேண்டும், அவர்களை தகர்த்து தரைமட்டமாக்கி, கீழ் நிலைக்குக் கொண்டு செல்லுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

நகைச் சுவையான காரியங்களைக் குறித்து சொல்வதில் மிகவும் கவனம் தேவை, இது மனிதரது யுத்தியாய் இருக்கிறது, வேத வசனங்களுக்குள் நகைச் சுவையைக் கண்டுகொள்ளுதல் கூடாது. நீங்கள் இடைபடும் நபர் அவர்களது கலாச்சாரத்தில் எப்படிப்பட்ட ஸ்தானத்தில் இருக்கிறார் என்பதை அறிந்து, அவர்களைப் புண்படுத்திவிடாது, சத்தியத்தை ஜாக்கிரதையாய் அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

உதாரணமாக நீங்கள் சாமோவான் தீவில் உள்ள ஒரு வீட்டை சந்திக்கச் செல்வீர்களானால், நீங்கள் உங்கள் கரத்தில் உணவு பதார்த்தங்கள், மற்றும் அவர்களுக்கு பரிசுப்பொருட்களுடன் சென்று அவர்களைச் சந்தித்தல் வேண்டும். நீங்கள் வெறும் வேதாகமத்துடன் சென்று அவர்களைச் சந்திப்பீர்களானால், அவர்கள் பண்பாட்டுடன் உங்களுக்கு வரவேற்பு அளிப்பர், நீங்கள் அவர்களது கலாச்சாரத்தை அவமதித்து அதை மீறுகிறவராய் அவர்கள் கருத்தில் இடம் பெறுவீர்கள், அவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணம், அவர்களுக்கு வெகுமதிகள் மற்றும் உணவுபதார்த்தங்கள் அவர்களிடம் மரியாதையையும், நன்மதிப்பையும் உங்களுக்கு தேடித்தருகிறதாய் இருக்கிறது. உங்கள் நடத்தையினால், சுவிஷேசத்திற்கு எவ்வித பங்கமும் வராது பார்த்துக்கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. அவர்களுடன் பாவத்திற்கோ, கீழ்ப்படியாமைக்கோ, ஏதுவாக, வேதவசனங்களை அவர்களுடன் ஒத்துபோகுமாறு செய்தலுக்கோ இடமளியாது இருத்தல் வேண்டும்.

சுவிஷேச பிரசங்கியாருக்கு / எழுப்புதல் பிரசங்கியாருக்கு அளிக்கப்படும் வசதிகள்:

1. இவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுத்தல் மிகவும் அவசியம். இப்படிப்பட்டவர்களை வீட்டில் இடமளித்து, அவர்கள் தங்களது பணியை செய்வதற்கு போதிய இடமில்லாது செய்தல் கூடாது. வீட்டில் அவர்கள் தங்க போதிய இடமிருந்தால் தங்க வைப்பது நல்லது. தீர்க்கதரிசியை தங்க வைக்கும் அறை போன்று, படுக்கை, மேஜை நாற்காலி, போதிய வெளிச்சம், மற்றும் தனிப்பட்ட நிலையில் மற்றவர்களது நடமாட்டமில்லாது, எல்லா வசதிகளும் நிறைந்த, அறையாக இவர்களுக்கு அளிக்கப்படுவது மிகவும் சிறப்பான ஒன்றாய் இருக்கும். அது ஐந்து நட்சத்திர அறையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை, தேவ மனிதர்கள் தாழ்மையுடன் கடந்த காலங்களில் தங்கி ஊழியம் செய்த தங்கும் அறையாக இருத்தல் வேண்டும். **பிலிப்பியர் 4:11-12**. ஒரு மனிதன் தான் தங்கும் கூடாரத்தைக் குறித்து தேவனுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளான், அவன் தங்குமிடத்தை அவர்கள் வசதி நிறைந்த தங்கும் இடமாகிய ஹில்டன் ஹோட்டலாய்க் கருதுதல் வேண்டும். கோரிக்கைகளை எதிர்பார்க்கும் தேவனது சேவகர்கள், தங்களது பேச்சில் முறண்படுகிறவர்களாய் இருப்பர்.

2. அவர்களுக்கு அளிக்கப்படும் உணவு பதார்த்தங்கள், அவர் விரும்பி உண்ணக்கூடியதாய் இருத்தல் வேண்டும். அநேகக் கர்த்தருடைய பிள்ளைகள்,

அன்பின் உபசரிப்பால் தேவ ஊழியரைக் கொலை செய்கிறவர்களாய் இருக்கின்றனர். நீங்கள் அவர்களுக்கு ஒரு சோதனையாய் அமைதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

3. அவர்களை மோட்டல் அல்லது ஹோட்டல்களில் எல்லா வசதியுடனும் இருக்கும் அறைகளில் தங்க வைப்பது தகுதியாய் இருக்கும், இருப்பினும் இது வேதாகம முறையல்ல என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

4. சுவிஷேச ஊழியரது செலவினங்கள் குறித்து, நீங்கள் மிகவும் கவனமுள்ளவர்களாய் இருத்தல் அவசியம். அவரைக் கர்த்தருக்குள் ஆசீர்வதிக்கும் முகாந்திரமாய் அவருக்கு அன்பின் காணிக்கை கொடுத்தல் மிகவும் அவசியம். அவர்களுக்கு வேதனை அளிக்க இடமில்லாது அது ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும். ஆரம்பகால சபையில் அடிப்படை சட்டம் இவ்வாறு வைத்திருந்தனர், அவர்கள் பணத்தை வாய்விட்டு கேட்பார்களானால், அவர்கள் போலியான தேவ ஊழியர் என மதிப்பிட்டனர்.

5. விசுவாசிகளிடமிருந்து மட்டுமே காணிக்கைகள் சேகரித்தல் வேண்டும், கர்த்தர் அவிசுவாசிகளை விரும்புகிறார், அவர்கள் பணத்தை விரும்பவில்லை. கர்த்தருக்கு கொடுக்கப்படுவது மறைவான நிலையில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

6. ஒரு சுவிஷேச ஊழியருக்கு அளிக்கப்படும் சம்பளமானது, வேதாகம ரீதியிலும், மிகவும் மரியாதைக்குரிய நிலையில் கொடுக்கப்படுதல் வேண்டும். எல்லாக் காரியங்களும் மரியாதையுடனும், ஒழுக்கரீதியாகவும் செய்யப்படக்கடவது. கர்த்தரது பிரசங்கியாரும் / தீர்க்கதரிசியும் எப்பொழுதும் ஒருவரால் கண்கானிக்கப்பட்டு வருதல் மிகவும் அவசியம், அவர்களை ஒருவரும் ஒழுக்கரீதியான காரியங்களில் குற்றம்சாட்ட இடமளித்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

7. எழுப்புதல் முகாமின் பணத்திலிருந்து சபைக்காக பணத்தை ஒரு போதும் எடுத்தல் கூடாது, ஆவிக்குரிய ரீதியில் தேவையுடன் இருப்போருக்கு, பணம் ஒரு தடைகல்லாய் இருக்கிறது.

சுவிஷேச முகாம் நிகழும் என்றால், சபையின் அங்கத்தினர் அனைவரும் அதில் பங்கெடுத்தல் அவசியம். ஒரு குறிப்பிட்ட பகுதியில் சுவிஷேசகருக்கு ஆதரவு அவசியமானால், சபையானது அதைச் சந்திக்க ஆயத்தமாய் இருத்தல் வேண்டும். அவர்கள் ஆத்துமாக்களை இரட்சிப்பிற்கு வழிநடத்துவார்களெனில், அவர்களுக்கு உதவியாய் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்தல் வேண்டும்.

சுவிஷேசகர்களின் நடத்தை:

விருந்தினராய் அழைக்கப்படும் பேச்சாளர்களின் வாழ்வில் நன்னடத்தையானது காணப்படுதல் வேண்டும். நீங்கள் ஒரு பிரசங்கியாராய் இருப்பீர்களானால், கீழ்க்கண்ட காரியங்களை அனுசரித்து நடந்து கொள்ளுதல் வேண்டும்.

1. போதகர்கள் மற்றும் சபையைக் குறித்து அவர்களது கூட்டங்களில் விமர்சித்தல் கூடாது. அவர்கள் செயல்படும் விதம் ஒருவேளை உங்களுக்கு ஒத்துப்போகாது இருக்கலாம், அது உங்கள் கரிசனையாய் இருத்தல் கூடாது.

2. உங்கள் தங்குமிடத்தைக் குறித்து எவ்விதக் குறையும் கூறக்கூடாது. பிலிப்பியர் 4:11-13. உங்கள் நன்னடத்தையை எல்லா விதத்திலும் விளங்கச் செய்தல் அவசியம்.
.

3. அன்பின் காணிக்கை குறித்து, மிகவும் வாஞ்சையுள்ளவர்களாய் இருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். மற்றும் உங்களுக்கு எவ்வளவு தேவை என்பதைக் குறித்து, எவ்வித முன் அறிவிப்பைக் கூறுதல் தவிர்க்கப்படல் வேண்டும். நீங்கள் எக்காரணம் கொண்டும் பணத்தை கேட்பது தவிர்க்கப்படல் வேண்டும். தமது ஜனங்கள் மூலமாய் கர்த்தர் உங்கள் தேவைகளைச் சந்திக்க அவர் மீது நீங்கள் நம்பிக்கையுடையவராய் இருத்தல் வேண்டும். கர்த்தர் நம்பிக்கைக்குப் பாத்திரராய் இருக்கிறார். இதை நீங்கள் விசுவாசியாத பட்சத்தில், கர்த்தருக்காய் நீங்கள் பணிசெய்வது, தவிர்க்கப்பட்டு, உங்களுக்கு பணிவிடை செய்தல் அவசியமாய் மாறிவிடும்.

4. நீங்கள் கர்த்தருக்காய் பணிசெய்வீர்களானால், உங்களுக்கு அனைத்து உரிமைகளும் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது, உங்களுக்கு அவசியமான பணத்தை அவர் உங்களுக்களிக்கிறவராய் இருக்கிறார். உங்கள் தேவைகள் சந்திக்கப்படுவதில் குறைவைக் காண்பீர்களானால், உங்களது ஆவிக்குரிய ஜீவியத்தில் குறைவுபட்டு காணப்படுகிறவர்களாய் இருக்கிறீர்கள். பிலிப்பியர் 4:19.

5. சபை அங்கத்தினருக்கு பணசகாயம் வேண்டி திரும்ப அவர்களுக்கு கடிதம் எழுதாதிருங்கள், எப்பொழுதும் சபைப் போதகர் மூலமாக விசுவாசிகளுடன் தொடர்புகொள்ள முயலுங்கள்.

6. எப்பொழுதும் சபைப் போதகரைக் கனம்பண்ணுங்கள், அவர் தேவனால் நியமிக்கப்பட்டத் தலைமைத்துவம் வகிப்பவராய் இருக்கிறார், இதை உணர்ந்து அவரைக் கனப்படுத்துதல் அவசியம்.

7. சில வேளைகளில் சுவிஷேசகர்கள் சபையில் பிளவுண்டாக்கி, அதன் வருமானத்தை தனக்காய் எடுத்துக் கொள்கிறவராய் இருக்கிறார். இது தீமையாய்க் கருதப்படுகிறது, கர்த்தரின் நியாயத்தீர்ப்பு அப்படிப்பட்டவர்கள் மீது கடந்து வருகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்டவர்களுடன் நீங்கள் உடன் படாதபடிக்கு அவர்களைவிட்டு விலகியிருங்கள், அவர்களுக்களிக்கப்படும் தண்டனையானது உங்கள் மீதும் வருவதற்கு வாய்ப்புகள் உண்டு.

8. ஊழியர்கள் சமுதாயத்தில் உள்ளவர்கள் எழும்பும் முன்னர், அதிகாலையில் எழுந்திருத்தல் வேண்டும். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ப்யூரிட்டன் இவ்வாறு சொல்கின்றனர், அதிகாலை இருட்டில், தனது ஜன்னல் வழியாக, பாதையில் உதிக்கும் வெளிச்சத்தில் கடந்து சென்று சுரங்க வேலைக்குச் செல்கிறவராய் இருக்கிறார்கள் தனது சபையைச் சார்ந்தவர்கள் என்கின்றனர். கர்த்தருடைய

ஊழியக்காரன் ஜனங்கள் யாவரும் எழுந்த பின்னர் எழுந்திருப்பாரானால், கர்த்தருக்கும், தனது மக்களுக்கும் கர்த்தர் எதிரபார்க்கும் வண்ணம் சேவை செய்ய இயலாது.

உபதேசங்கள்:

கிறிஸ்தவ வாழ்க்கை: ஸ்தானாபதி.

1. ஓர் ஸ்தானதிபதி தன்னைத்தானே நியமித்துக்கொள்ள இயலாது, அவன் ஓர் தேசத்தை பிரதிபலிக்க அத்தேசத்தால் நியமிக்கப்படுகிறான், அத்தேசத்தின் அரசனை, மற்றும் அத்தேசத்தின் பிரஜையாக தன்னை பிரதிபலிக்கிறான். நாம் ஸ்தானாதிபதித்துவத்திற்காக தேவனால் நியமிக்கப்பட்டுள்ளோம். (2 கொரிந்தியர் 5:20)

2. ஓர் ஸ்தானாதிபதி தனக்குத்தானே தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இயலாது. நமது தேவைகள் அனைத்தும் தேவனால் சந்திக்கப்பட்டு, அவரால் நாம் பாதுகாக்கப்பட்டு மற்றும் பராமரிக்கப்பட்டு வருகிறோம். (பிலிப்பியர் 4:19)

3. ஓர் ஸ்தானாதிபதி தன்னைத்தான் பிரதிபலிக்கிறவன் அல்ல. நாம் இப்பூமியில் தேவனைப் பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கிறோம். (மத்தேயு 28:19-20)

4. ஓர் ஸ்தானாதிபதி அனுப்பப்பட்டத்தேசத்திற்கு சொந்தமானவன் அல்ல. அனுபவப்பூர்வமாய் நாம் பூமியில் வாழ்ந்தபோதும் நாம் பரலோக பிரஜைகளாய் இருக்கிறோம்.. (பிலிப்பியர் 3:20, யோவான் 15:19)

5. ஒவ்வொரு ஸ்தானாபதிக்கும் கட்டளைகள், எழுதப்பட்டுக் கொடுக்கப்படும். தேவன் நமக்கு தமது கட்டளைகள் அனைத்தையும் எழுதப்பட்ட வேதாகமத்தில் கொடுத்துள்ளார். (1 தெசாலோனிக்கேயர் 4:1-2)

6. ஓர் ஸ்தானாபதி தனது சொந்த தேசத்தை பிரதிபலித்து வாழ்வதால், அவனுக்கு ஏற்படும் அவமானங்கள் அவனுக்கு சொந்தமானது அல்ல (மத்தேயு 5:11-12)

7. ஓர் ஸ்தானாபதி தான் நியமிக்கப்பட்டுள்ள தேசத்திலிருந்து, தனது சொந்த தேசத்திற்கு அழைக்கப்படுவார் என்றால் அது அவர் நியமிக்கப்பட்ட தேசத்துடன் யுத்தத்தை அறிவிப்பதற்கு சமமாய் இருக்கிறது. சபை மத்தியவானுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின் இப்பூமியில் கொடிய யுத்தங்கள் நிகழ இருக்கின்றன. புத்தியுள்ள கன்னிகைகள் அனைவரும் மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவர். (1தெசலோனிக்கேயர் 4:13-17)

கிறிஸ்தவ வாழ்க்கை -- சுயாதீனப் பிரமாணங்களும் மற்றும் பொறுப்புகளும்:

1. நாம் இப்பொழுது மோசேயின் - நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக இல்லை:

மோசேயின் நியாயப்பிரமாணம் எதிர்பார்த்த அனைத்தையும் கிறிஸ்து நிறைவேற்றித் தீர்த்துவிட்டார். (மத்தேயு 5:17). பரிசுத்த ஆவியானவர், நம்மீது ஆதிக்கம் செய்வார் எனில், நாம் தானாகவே நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறவர்களாய் இருப்போம்.

2. சுயாதீனப்பிரமாணம்:

நியாயப்பிரமாணமானது தன்னில்தானே வழிநடத்திக் கொள்வதாய் இருக்கிறது. வேதாகம ரீதியில் கூறுவோமெனில், நீங்கள் சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்ய உரிமையுள்ளவர்களாய் இருக்கிறீர்கள். அவைகள் தனிப்பட்ட நிலையில் கர்த்தருக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை. (1 கொரிந்தியர் 8:8).

3. அன்பின் பிரமாணம்:

இவ்வகையான பிரமாணம், மற்றவிசுவாசிகளை குறித்த கரிசனையை நமக்களிக்கிறதாய் இருக்கிறது. இப்பிரமாணத்தின்படி, நீங்கள் பெலவீனமான உங்கள் சகோதரரிடத்தில் அன்புகூறும்போது, அவர்கள் இடறும்படியான அல்லது அவர்களுக்கு மனமுறிவுண்டாகும் எந்த ஒரு காரியத்தையும், உங்களுக்குச் சுயாதீனம் இருந்தும், அதை அவர்களுக்காக செய்யாமல் இருக்க வற்புறுத்துகிறது. நீங்கள் அவைகளுக்கு விலகியிருப்பது அவைகள் தவறு என்பதற்காக அல்ல, மற்ற பெலவீனமான விசுவாசிகளுக்கு அவைகள் இடறலாய் இருக்கிறபடியால் அவர்கள் நிமித்தம் அவைகளுக்கு விலகியிருக்கிறீர்கள். (1 கொரிந்தியர் 8:9).

4. சமய சந்தர்ப்பத்திற்கேற்ற பிரமாணம்:

இவ்வகையான பிரமாணம் அவிசுவாசிகளைக் குறித்த கரிசனையைக் கொண்டதாய் இருக்கிறது. இது சமய சந்தர்ப்பத்திற்கேற்ப கிறிஸ்துவின் உலகில், உங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்வது. அவிசுவாசிகள் கிறிஸ்தவர்களுக்காய் நடந்து கொள்ள, தராதரத்தை அமைத்துக் கொள்ளுதல்.

இதினிமித்தம் சில காரியங்களுக்கு விலகியிருத்தல் அல்லது சில குறிப்பிட்ட சட்டப்பூர்வமான காரியங்களை நடப்பித்தல் -- இதன் காரணம் அவர்கள் தவறிழைக்கிறவர்களாய் இருக்கிறார்கள், இருப்பினும் அவர்கள் ஒரு அவிசுவாசியை இடறலுக்கு வழிநடத்துகிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் கிறிஸ்து அவரது பாவத்திற்காய் மரித்துள்ளார் என்பதைக் கண்டுகொள்ளத் தடை செய்கிறவர்களாய் இருக்கின்றனர். (1 கொரிந்தியர் 9, 20-23)

5. எல்லாவற்றையும் விட உன்னத தியாக பலி குறித்த பிரமாணம்:

இவ்வகையான பிரமாணம் தேவனிடமாய் வழிநடத்துகிறதாய் இருக்கிறது. ஒரு விசுவாசி தனது வாழ்வில் சட்டப்பூர்வமான செயல்பாடுகளை முற்றிலும் நிராகரித்துவிட்டு, கர்த்த்ரைச் சார்ந்து முற்றிலுமாய் சேவிப்பதற்கு தன்னையே

அற்பணித்துக் கொள்ளும் செயல்பாட்டினை உள்ளடக்கியதாய் இருக்கிறது. மிஷனரிமார்கள் இவ்வகையான பிரமாணத்தின் கீழ் செயல்படுகிறவர்களாய் இருக்கின்றனர், இது நாகரிகமற்ற சூழலில் தங்கள் வாழ்க்கைத் தரத்தினை அமைத்துக்கொண்டு தங்களது பணித்தளத்தில் வாழும் வாழ்க்கையினைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட பிரமாணத்தின்படி அமைந்த வாழ்க்கைதரமானது ஆஸ்திரேலியவில் கடைபிடித்து வாழப்படுகிறது. (மத்தேயு 3:1-6)

6. கோட்பாடுகள்:

கிறிஸ்தவர்களாகிய நாம் சுயாதீனத்தைப் பெற்றவர்களாய் இருக்கிறோம். இருப்பினும் முழுமையான சுதந்திரமானது, மற்றவர்களை அடிமைப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. நமது சுயாதீனத்தை கடமை உணர்வோடு பயன்படுத்த வேண்டியர்களாய் இருக்கிறோம், நமது சுயாதீனம் மற்றவர்கள் தங்களது சுயாதீனத்தை மீறி அடிமைத்தனத்திற்குள் செல்லாதவாறு பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் கடமை உணர்வுடன் நடந்து கொள்வது அவசியம். (எபேசியர் 5:15). விசுவாசி தனது வாழ்க்கையின் முழுமையான நோக்கம், கிறிஸ்துவைப் போல மாறுவது மற்றும் வேதாகம ரீதியிலான சுவிஷேச ஊழியம் செய்வது, நமது வாழ்வின் நடுநாயகமாய் இருக்கிறது. நாம் இப்பூமியில் வாழும்படி விட்டுவைக்கப்பட்டதன் நோக்கம், இழந்து போனோரைச் சந்திக்கும்படியாகவும், மற்றும் மாம்சீகப்படி வாழும் பரிசுத்தவான்களை உயிரடையச் செய்யும்படியாகவும் ஆகும். இவ்விரு செயல்பாடுகளும் கர்த்தருக்கு மகிமை கொண்டுவருதல் வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை - அன்பு

1. தேவன் செய்தவகளுக்காக, அவரது எல்லா நன்மைகளுக்காகவும் அவரில் அன்புகூறுவது முழுமையான பாராட்டுதலுக்குரியதாய் இருக்கிறது.

2. கிரேக்க மொழியில் அன்பு என்ற சொல்லுக்குரிய வார்த்தைகள்.
    - **a)** எறாஸ்(eros) (பாலுணர்வு சார்ந்த அன்பு) இப்பதம் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை.
    - **b)** ஸ்டார்கே (storge) (நட்பு சார்ந்த அன்பு) இப்பதம் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை.
    - **c)** அகாப்பே (agape) (மற்றவர்களிடம் கூறும் அன்பு, அளவுக்கதிகமாய் ஒருவரில் பாராட்டப்படும் அன்பு, பயபக்திக்குரிய அன்பு, பணிந்து கொள்ளுவதற்கும், மரியாதை செலுத்துவதற்கும் பொங்கி எழும் அன்பு. அன்பு கூறப்படுகிறவரிடத்தில், மனதுருக்கத்துடனும், தன்னலம் காருதாமல் செலுத்தப்படும் தியாக அன்பு.)

d) பிலயோ (phileo) (தழுவுதல் மற்றும் முத்தமிடும் அன்பு. இவ்வன்பு சிநேகம்பாராட்டுதலை குறிக்கிறது மற்றும் தன் சிநேகிதருக்காக செய்யப்படும் காரியங்களையும், சிநேகிதரிடத்தில் காட்டப்படும் அன்பு எனக்கூறப்படுகிறது.)

3. நமது ஆண்டவர், யோவான் 21:15-19 ல் அகாப்பே அன்பினால் தன்னுடன் உறவுகொள்ளவேண்டும் என்கிற உண்மையை பேதுருவுக்கு தெளிவுபடுத்தினார். அகாப்பே அன்பின் மூலம் கர்த்தருக்கு சேவை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தினார், மற்றும் விசுவாசிகள் மற்ற விசுவாசிகளிடம் அகாப்பே அன்பை வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதும் இதில் அடங்கியுள்ள பாடம் ஆகும்.

4. இவ்வுலகம் அளிக்கும் பொருட்கள் மீது அன்பு கூறாதிருங்கள் 1 யோவான்2:15-17.

5. உண்மையான தேவ அன்பு எப்பொழுதும் சகோதர அன்புக்கு வழிநடத்தும் 1 யோவான் 1:3 -11, 1 யோவான் 3:1-3, 10, 4:7 -12, 19,

6. மெய் அன்பு ஆராதணையிலும், சேவையிலும் வெளிப்படுத்தப்படுகிறது 1யோவான் 5:1-5.

7. தேவனிடத்தில் கொள்ளும் அன்பு அவரது வார்த்தையின் அறிவினால் பெருக்கெடுக்கிறது மற்றும் வளருகிறது
1 கொரிந்தியர்2:9.

8. இந்த ஆழமான அன்பு கர்த்தரைக் குறித்து மற்றவர்களிடம் சாட்சி பகருவதில் வெளிப்படுகிறது. 2 கொரிந்தியர் 5:14.

9. தேவன் பூரணமான, மாற்றமில்லாத அன்பினால் ஒவ்வொரு விசுவாசியையும் நேசிக்கிறார், காரணம் அவரது நேசக்குமாரனுடன் நாம் இணைக்கப்பட்டுள்ளோம்.

சபை கைக்கொள்ள வேண்டிய பனிரெண்டு திறவுகோள் கருத்துகளின் சுருக்கம்:

1. சபையின் முழுமையான மையச் செயல்பாடு, சுவிஷேச ஊழியம் மற்றும் எழுப்புதல் இவற்றிற்குத் தன்னை முற்றிலுமாக அற்பணித்துக் கொள்ளுதல் வேண்டும்.

2. அவிசுவாசிகளைச் சந்திக்கும் இலக்குப் பட்டியலை உருவாக்கி, குறிப்பிட்டு ஜெபித்து, ஆயத்தப்படுவது.

3. ஆவிக்குரிய யுத்தக் களத்தில், ஏவுகனைகளை பயன்படுத்தி ஜெயம் காண, ஜெப வீரர்களை ஒன்று திரட்டிச் சேர்ப்பது.

4. வேதாகம ரீதியில் சுவிஷேசம் மற்றும் எழுப்புதலுக்கு தெளிவான ஜெபப்பட்டியலை அமைத்தல்.

5. முழு உலகிற்கும், தேவனது முழுமையான வார்த்தையை பிரசங்கம் செய்யும்படிக்கு, உங்களை முற்றிலுமாய் அற்பணித்துக் கொள்ளுதல்.

6. தனிப்பட்டவிதத்திலும், பொதுவான நிலையிலும், கலாச்சார ரீதியில் தகுதியான இடங்களில் போதனை அளிப்பது.

7. வல்லமை, மற்றும் ஆற்றல் நிறைந்த செல் குருப்களை, ஜெபத்திற்காகவும், வேத பாடத்திற்கெனவும் கட்டி எழுப்புதல்.

8. உள்ளூர் சபையானது ஒரு பரிசுத்த குடும்பமாய் செயல்பட்டு, தேவனுடைய வழியில் வளர்ந்து பெருகுதல்.

9. நான்கு சுவிஷேசங்களையும், எழுப்புதல் செய்தியளிக்கும் தருணங்களுக்காக பயன்படுத்துதல்.

10. போதகர் மற்றும் சுவிஷேச ஊழியருக்கான வாழ்க்கையும் மற்றும் சாட்சியும்.

11. சபையின் முழுமையான பணியானது, எழுப்புதல் பணிக்காக, தன்னை முற்றிலுமாக அற்பணித்துக் கொள்ளுதல்.

12. ஆவியானவர் வாசம் பண்ணுகிறார் என்பதற்கு அன்பானது (ஆவியின் கனி) ஆதாரமாய் இருக்கிறது.

<u>இறுதிச் சவால்:</u>

இன்றைய அளவில் எல்லா சபைத்தலைவர்களுக்கும், சவாலாய் அமைவது என்னவெனில், நமது சொந்த தாயகத்தின் தேவைகளை ஆய்வு செய்து, தொடர்ந்து அதற்கு சுவிஷேசம் அறிவித்து, அதன் எழுப்புதலுக்காய் சபையை எழுப்பிவிட்டு, அதை ஆயத்தம் செய்வதாய் இருக்கிறது. இத்தகைய செயல்பாடுகளில் பரிசுத்த ஆவியானவருடன் இணைந்து வல்லமையாய் செயல்பட நீங்கள் ஆயத்தமாய் இருக்கிறீர்களா?

இதைப் போன்ற கருத்தரங்கு, நீங்கள் மிகுந்த சௌகரியத்துடன் வாழும் இடத்தைவிட்டு, தேவன் விரும்பும் வண்ணம் நீங்கள் பணியாற்ற வடிவமைக்கப்பட்டுள்ளது. தமது சபையானது புதுப்பிக்கப்படுவதற்கும், மற்றும் அதன் மக்கள் எழுப்புதல் அடைந்து, உறக்க நிலையை விட்டு எழுந்திருக்கவும், அவசியமான பணிகளை செய்ய வேண்டியது நமது கடமையாய் இருக்கிறது. கர்த்தருக்கு முன்பாக இத்தகைய அறைகூவலுக்கு உங்களது பணி என்ன என்பதனை உறுதி செய்து கொள்ளுங்கள்? நாம் இங்கிருப்பதன் நோக்கம் பிரதாண

தெய்வீகக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு ஆகும் என்பதனை மனதில் கொள்ளவும். மத்தேயு 28:18-20.

இத்தகைய கண்ணோட்டத்தின் வாயிலாக, நான் சில குறிப்பிட்ட காரியங்களை உங்களுக்குச் சுட்டிக்காட்டி சவால் விடுகிறவனாய் இருக்கிறேன்.

1. உங்களது உள்ளூர் சபை மக்களது, ஆவிக்குரிய கனிகொடுக்கும் வாழ்க்கையினைப் பரிசீலனை செய்யுங்கள், வரங்களைக் குறித்து அவர்களுடன் பேசுவதைப் போன்று இரண்டு மடங்கிற்கும் அதிகமாய் ஆவியின் கனிகுறித்து அவர்களுடன் பேசி, தேவனது தராதரத்தின் படி வாழும்படியான உணர்வை தட்டி எழுப்பிவிடுங்கள்.

2. நீங்கள் உங்களைத்தானே கேட்டுக்கொள்ளுங்கள், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்க்கையை, இவ்வுலகம் காணும்படியான ஆதாரம் உங்களில் காணப்படுகிறதாய் இருக்கிறதா?

3. உங்கள் தேசத்தை பரிசீலனை செய்து பாருங்கள். இஸ்ரவேல் தேசத்தின் மீதான தேவனது நியாயத்தீர்ப்பின் அடையாளங்களை லேவியராகமம் 26 ம் அதிகாரம், மற்றும் உபாகமம் 28-31, வரையுள்ள அதிகாரங்களில் வாசித்தறிந்து கொள்ளுங்கள். இவ்வதிகாரத்தின்படி நமது தேசம் எந்த நிலையில் இருக்கிறது? என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள்.

4. எழுப்புதலுக்கான ஜெபக்கூட்டங்களைத் துவங்குங்கள். பாவத்தைக் குறித்தும், இரட்சிப்பு குறித்தும், மனந்திரும்புதல் குறித்தும், வாழ்வதற்கான தேவ வல்லமை குறித்தும் பேசுங்கள்.

5. தேவனது பரிசுத்த வார்த்தையில் அடங்கியுள்ள, முழுமையான தேவ ஆலோசனையைப் போதித்து, எழுப்புதல் அக்கினியைப் பற்றியெறியச் செய்யுங்கள்.

Auckland 25 November 2012